தமிழ்ப் பேரவைச் செம்மல்

# வெள்ளைவாரணனார்

**நூல் வரிசை – 15**

## *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*

### *கற்பியல்*

*ஆசிரியர்*

பேராசிரியர் **க. வெள்ளைவாரணனார்**

மாணவர் பதிப்பகம்

<u>*நூற்குறிப்பு*</u>

| | | |
|---|---|---|
| *நூற்பெயர்* | : | **வெள்ளைவாரணனார் நூல் வரிசை : 15 தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கற்பியல்** |
| *ஆசிரியர்* | : | **பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்** |
| *பதிப்பாளர்* | : | **இ. தமிழமுது** |
| *மறு பதிப்பு* | : | 2014 |
| *தாள்* | : | 16.0 கி. மேப்லித்தோ |
| *அளவு* | : | 1/8 தெம்மி |
| *பக்கம்* | : | 8 + 224 = 232 |
| *படிகள்* | : | 1000 |
| *விலை* | : | **உரு. 220/-** |
| *நூலாக்கம்* | : | டெலிபாய்ண்ட்<br>சென்னை -5. |
| *அட்டை வடிவமைப்பு* | : | வி. சித்ரா |
| *அச்சு* | : | வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| *கட்டமைப்பு* | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | **மாணவர் பதிப்பகம்**<br>பி-11, குல்மோகர் அடுக்ககம்,<br>35, செவாலிய சிவாசி கணேசன் சாலை,<br>தியாகராயர் நகர், சென்னை -600 017<br>தொ.பே: 2433 9030 |
| *நூல் கிடைக்கும் இடம்* | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>தொ.பே. : 044 2433 3390 |



தமிழ்ப்பேரவைச் செம்மல்

# க.வெள்ளைவாரணனார்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 14.01.1917 | 13.06.1988 |

# பதிப்புரை

*19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியும் தமிழ்ப்புலமையும் தமிழாய்வும் மேலோங்கி வளர்ந்த பொற்காலமாகும். இப் பொற்காலப் பகுதியில்தான்* ***தமிழ்ப்பேரவைச் செம்மல்*** *பெருந்தமிழறிஞர்* ***க. வெள்ளைவாரணனார்*** *தோன்றி வளர்ந்து வாழ்ந்து தாய்மொழித் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்த்தார்.*

*இப்பெரும்பேரறிஞர் எழுதிய நூல்கள் அனைத்தையும் வெளியிட முடிவுசெய்து* ***க.வெள்ளைவாரணனார் நூல் வரிசை*** *எனும் தலைப்பில் 21 தொகுதிகள் முதல் கட்டமாக வெளியிட்டுள்ளோம். கைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களைத் தேடியெடுத்து இனிவரும் காலங்களில் வெளியிட முயல்வோம்.*

***தமிழ் இசை, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், சைவ சித்தாந்தம்*** *ஆகிய நால்வகைத் துறைகளை மையமாகக் கொண்டு இவர் எழுதிய நூல்கள் தமிழுக்கும் தமிழருக்கும் பெரும் பயன்தரக் கூடிய அறிவுச் செல்வங்களாகும். ஆழ்ந்த சமயப்பற்றாளர், பதவிக்கும் புகழுக்கும் காசுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாது தமிழ்ப்பணி ஒன்றையே தம் வாழ்வின் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர், நடுவணரசு தமிழகத்தில் கலவைமொழியாம் இந்தியைக் (1938) கட்டாயப் பாடமாகத் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் புகுத்தியபோது அதனை எதிர்த்துப் போர்ப்பரணி பாடிய தமிழ்ச் சான்றோர்களில் இவரும் ஒருவர்.* ***காக்கை விடுதூது*** *எனும் இந்தி எதிர்ப்பு*

நூலை எழுதி அன்று தமிழ்நாட்டு ஆட்சிக் கட்டிலில் முதல்வராக அமர்ந்திருந்த இராசாசிக்கு அனுப்பித் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தவர்.

தம்முடைய தமிழாய்வுப்பணி மூலம் தமிழ் வரலாற்றில் நிலைத்து நிற்பவர், தமிழையும் சைவத்தையும் இரு கண்களெனக் கொண்டவர். தமிழிலக்கணத் தொன்னூலாம் **தொல்காப்பியத்தை யும்**, பின்னூலாம் **நன்னூலையும்** ஆழ்ந்தகன்று கற்று ஒப்பாய்வு செய்தவர், தம் கருத்துகளும் வாழ்க்கை முறையும் முரண்படாமல் எண்ணியதைச் சொல்லி, சொல்லியபடி நடைமுறையில் வாழ்ந்து காட்டிய பெருந்தமிழறிஞர்.

**தொல்காப்பியன்** என்ற பெயர் இயற்பெயரே என்று நிறுவியவர், தொல்காப்பியர் காலத்தில் வடக்கே **வேங்கடமலைத்தொடரும்**, தெற்கே **குமரியாறும்** தமிழக எல்லைகளாக அமைந்திருந்தனவென்றும், கடல்கோளுக்குப் பிறகு **குமரிக்கடல்** தென் எல்லை ஆனது என்பதையும், தொல்காப்பியர் இடைச்சங்கக் காலத்தவர், தொல்காப்பியம் இடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்டது என்பதையும், முச்சங்க வரலாற்றை முதன்முதலில் கூறியது இறையனார் களவியல் உரைதான் என்பதையும், தொல்காப்பியம், சங்கச் செய்யுளுக்கும் திருக்குறளுக்கும் நெடுங்காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டது என்பதையும், திருமூலர் தம் **திருமந்திரமே** சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கும் முதல் நூலாக திகழ்வது என்பதையும், திருமுறை கண்ட சோழன் **முதலாம் இராசராசன்** அல்ல **முதலாம் ஆதித்தனே** திருமுறை கண்ட சோழன் என்பதையும், **வள்ளலாரின் திருவருட்பா** தமிழின் சொல்வளமும், பொருள் நுட்பமும், ஒப்பற்றப் பேரருளின் இன்பமும் நிறைந்தது என்பதையும், சைவ சமயம் ஆரியர்க்கு முற்பட்டது என்பதையும், பழந்தமிழ் நாகரிகத்தின் ஊற்றுக்கண் தமிழும் சைவமும் என்பதையும் தம்

நூல்களின் வழி உறுதி செய்தவர். தம் ஆய்வுப் புலமையால் பல புதிய செய்திகளையும் தமிழ் உலகுக்கு அளித்தவர்.

இவர் எழுதிய நூல்கள் தமிழ்உலகிற்குப் பெருமை சேர்ப்பன. தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு கூடுதல் வரவாக அமைவன. இவருடைய அறிவுச் செல்வங்கள னைத்தையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் தொகுத்து தமிழ் உலகிற்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம். இதனை வெளிக்கொணர எமக்குத் துணையாயிருந்த எம் பதிப்பகப் பணியாளர்கள், நூல்கள் கொடுத்து உதவியவர்கள், கணினி, மெய்ப்பு, அச்சு, நூல் கட்டமைப்பு செய்து இந்நூல்வரிசை செப்பமுடன் வெளிவரத் துணைநின்ற அனைவருக்கும் நன்றி. எம் தமிழ்க் காப்புப் பணிக்கு துணை நிற்க வேண்டுகிறோம்.

*2010* **பதிப்பகத்தார்**

## தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்!

"தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர் களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய, இலக்கணப்பெருஞ் செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களே ஆவர்.

மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சியந்திர வசதிகளும், கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழி வகுத்தன. ஆறுமுக நாவலர் (1822-1879) சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901), உ.வே. சாமிநாதையர் (1855-1942) ஆகியோர் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்" என்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர், இ. சுந்தரமூர்த்தி தனது 'பதிப்பியல் சிந்தனைகள்' எனும் நூலில் பதிவு செய்துள்ளார். இந்நூல் தொகுதிகளை வெளியிடுவதன் மூலம் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்.

## சுருக்க விளக்கம்

***1. ஆசிரியர்கள்***

| | | |
|---|---|---|
| இளம். | — | இளம்பூரணர் |
| நச்சி. | — | நச்சினார்க்கினியர் |

***2. நூல்கள்***

| | | |
|---|---|---|
| அகம். | — | அகநானூறு |
| இறையனார். | — | இறையனார் களவியல் |
| ஐங்குறு. | — | ஐங்குறுநூறு |
| ஐந். எழு. | — | ஐந்திணை எழுபது |
| கலி. | — | கலித்தொகை. |
| திணை.நூற். | — | திணைமாலை நூற்றைம்பது |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நாலடி. | — | நாலடியார் |

***3. பிற***

| | | |
|---|---|---|
| பா.வே. | — | பாட வேறுபாடு |

* * *

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

### கற்பியல்

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

### கற்பியல்

1. **கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.**

*என்பது சூத்திரம்.*

***இளம்பூரணம் :*** *இவ்வோத்து என்னபெயர்த்தோ வெனின், கற்பியல் என்னும் பெயர்த்து. கற்புக்கு இலக்கணம் உணர்த்தினமை யாற் பெற்ற பெயர். கற்பென்பது யாதோவெனின், அஃ்தாமாறு இச்சூத்திரத்தில் விளங்கும்.*

*இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் கற்பிலக்கணம் கூறுதல் நுதலிற்று.*

*(இதன் பொருள்) கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தோடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற் குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினை யுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு.*

*'கொளற்குரி மரபின்' என்பதனைக் 'கிழத்தி' என்பதனோடுங் கூட்டியுரைக்க.*

*களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற் கூடி ஒழுகியவழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின், அஃ்தாகாதென்றற்குக் 'கரணமொடு புணர' என்றார். கரணம் என்பது வதுவைச் சடங்கு. 'கொளற்குரி மரபிற் கிழவோன்' என்றதனால் ஒத்தகுலத்தானும் (உயர்ந்த குலத்தானும்) என்று*

*கொள்க. 'கொளற்குரிய மரபிற் கிழத்தி' யென்றதனால், ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளும் என்று கொள்க. 'கொடைக்குரிய மரபினோர்' என்றதனால். தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் இவரில்லாதவழிச் சான்றோரும் தெய்வமும் என்று கொள்க. கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால், அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும், களவு வெளிப்படாத வழியும், மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியான் உரிமை பூண்ட வழியும் கொள்ளப்பெறும் எனக்கொள்க. களவியற் சூத்திரத்துள்,*

**'இன்பமும் பொருளு மறனு மென்றாங்**
**கன்பொடு புணர்ந்த'** **(களவியல். 1)**

*என்பதனைத் தந்துரைத்து, ஐந்திணை மருங்கிற் கற்பெனப்படுவது எனக் கூட்டுக.*[1]

*அஃதேல், கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண் வகையும் கொள்க. 'கொடுப்போ ரின்றியும் கரண முண்டே– புணர்ந்துடன் போகிய காலை யான' என்னும் இது கற்பாகுமோ எனின், அவையும் கற்பாதல் ஒக்குமேனும் கந்திருவம்போல ஒத்த அன்புடையார் ஆதல் ஒருதலையன்மையின் கைக்கிளை பெருந் திணைப்பாற்படும். ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையையே களவு கற்பு எனப் பகுத்தார் என்று கொள்க.*[2]

1. 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்' என முன்னர்த் தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்ட களவியற் சூத்திரத் தொடரை ஈண்டுந்தந்துரைத்து, 'ஐந்திணை மருங்கிற் கற்பெனப்படுவது' எனக்கூட்டிப் பொருள் கொண்டு, 'ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையே களவுகற்பு எனப் பகுத்தார்' தொல்காப்பியனார் என இளம்பூரணர் தரும் விளக்கம்,

**' முற்படப் புணராத சொல்லின் மையிற்**
**கற்பெனப் படுவது களவின் வழித்தே'**

எனவரும் இறையனார் களவியலை அடியொற்றியமைத்ததாகும்.

2. 'அஃதேல் கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண்வகையும் கொள்க. இவை கற்பாகுமோ எனின், அவையும் கற்பாதல் ஒக்குமேனும் கந்திருவம் போல ஒத்த அன்புடையார் ஆதல் ஒருதலை யன்மையின் கைக்கிளை பெருந்திணைப்பாற்படும். ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையே களவுகற்பு எனப் பகுத்தார் என்று கொள்க' என இவ்வுரைப் பகுதியை இயைத்துப் பொருள் காண்க. இதன் நடுவே 'கொடுப்போரின்றியும் கரணமுண்டே, புணர்ந்துடன் போகிய காலையான' என அடுத்துவரும் நூற்பா தொடர்பின்றி இடம்பெற்றிருப்பது ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழையாகும்.

***நச்சினார்க்கினியம் :*** *என்பது சூத்திரம். இவ்வோத்துக் களவு கற்பென்னுங் கைகோளிரண்டினுட் கற்புணர்த்தினமையிற் கற்பியலென்னும் பெயர்த்தாயிற்று. கற்பியல் கற்பினது இயலென விரிக்க. இயல், இலக்கணம். அஃது ஆகுபெயரான் ஓத்திற்குப் பெயராயிற்று. அது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும். அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும், 'அந்தணர்திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்' 'ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்' (தொல். பொ. 146) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலானுங் கற்பாயிற்று. இனித் தலைவனுங் களவின்கண் ஓரையும் நாளுந் தீதென்று அதனைத் துறந்தொழுகினாற் போல ஒழுகாது ஓத்தினுங் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று. களவு வெளிப்பட்ட பின்னராயினும் அது வெளிப்படாமையாயினும் உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்த வழியாயினும் வரைதல் அக் களவின் வழி யாதலின் மேலதனோடு இயைபுடைத்தாயிற்று. இச்சூத்திரம் கற்பிற்கெல்லாம் பொது விலக்கணங் கூறுகின்றது.*

***(இ-ள்.)*** *கற்பு எனப்படுவது—கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது; கரணமொடு புணர—வேள்விச் சடங்கோடே[1] கூட; கொளற்கு உரி மரபிற் கிழவன்— ஒத்த குலத்தோனும் மிக்க குலத் தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன்;*

1. கரணம் என்பதற்கு வேள்விச் சடங்கு என நச்சினார்க்கினியர் தரும் விளக்கம், நான்மறை வழியே வேள்விபுரிந்தொழுகுந் தொழிலினராகிய வேதியர்க் கன்றித் தமிழக மக்கள் அனைவர்க்கும் பொருந்துவதாகாது. கரணம் என்பது திருமணச் சடங்கு என்னும் பொதுப் பொருளிலேயே இங்கு வழங்கப் பெறுகின்றது. பண்டைத் தமிழக மக்கள் மேற்கொண்ட திருமணமுறையில் இடம்பெற்ற கரணங்கள் இவையென்பது தம்காலத்து மக்கள் அனைவர்க்கும் நன்கு தெரியுமாதலால் ஆசிரியர் தொல்காப்பியனார் தாம் இயற்றிய இலக்கண நூலில் அவற்றை விரித்துக் கூறவேண்டிய இன்றியமையாமை நேர்ந்திலது.

தொன்றுதொட்டுத் தமிழ் மக்கள் கொண்டொழுகிய திருமணச் சடங்குகள் சிலவற்றை அகநானூற்றில் **66–**ஆம் பாடலிலும் **86–**ஆம் பாடலிலும் கூறப்படும் திருமண நிகழ்ச்சிகளால் ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

நச்சினார்க்கினியர் கருதுமாறு வேள்வியாசான் காட்டிய முறையே அங்கி சான்றாக நிகழும் வதுவைச் சடங்குகள் தொல்காப்பியத்திலும் சங்கச் செய்யுட்களிலும் நானில மக்களுக்குரியவாகக் கூறப்படாமையால் ஆரிய வேதங்களிற் கூறப்படும் வேள்விச் சடங்கிற்கும் பண்டைத் தமிழர் மேற்கொண்டொழுகிய திருமணச் சடங்காகிய கரணத்திற்கும் பெரிதும்

கிழத்தியை—ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியை; கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப-கொடுத்தற் குரிய முறைமையினையுடைய இருமுதுகுரவர் முதலாயினார் கொடுப்ப; கொள்வது—கோடற்றொழில் (எ-று.)

'எனப்படுவது' என்னும் பெயர் 'கொள்வது' என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது: இது சிறப்புணர்த்துதல் 'அவ்வச் சொல்லிற்கு' (தொல். சொல். இடை. 47) என்னுஞ் சூத்திரத்துட் கூறினான். 'கொடுப்போரின்றியும்'(தொல். பொ. 143) என மேல் வருகின்றதாகலின் இக் கற்புச் சிறத்தலிற் சிறந்த தென்றார். இஃது 'என' என்கின்ற எச்சமாதலிற் சொல்லளவே எஞ்சிநின்றது. இதனாற் கரணம் பிழைக்கில் மரணம் பயக்கு மென்றார்.[1] அத் தொழிலின் நிகழுங்கால் இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும், இவற்கு இன்னவாறே நீ குற்றேவல் செய்தொழுகெனவும் அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திர வகையாற் கற்பிக்கப்படுதலின் அத் தொழிலைக் கற்பென்றார். தலைவன் பாதுகாவாது பரத்தைமை செய்து ஒழுகினும் பின்னர் அது கைவிட்டு இல்லறமே நிகழ்த்தித் துறவறத்தே செல்வனென் றுணர்க. இக் கற்புக்காரணமாகவே பின்னர் நிகழ்ந்த ஒழுகலாறெல்லாம் நிகழவேண்டுதலின் அவற்றையுங் கற்பென்று அடக்கினார். இருவரும் எதிர்ப்பட்ட ஞான்று தொடங்கி உழுவலன் பால் உரிமை செய்து ஒழுகலிற் கிழவனுங் கிழத்தியும் என்றார். தாயொடு பிறந்தாருந் தன்னையருந் தாயத்தாரும் ஆசானும் முதலியோர் கொடைக்குரியர் என்றற்கு மரபினோர் என்றார்.[2]

---

வேறுபாடுண்டெனத் தெளிதல் எளிது. கலித்தொகையில், 'ஓத்துடை யந்தணன் எரிவலங் கொள்வான்போல்' எனவரும் தொடரிற் புரிநூ லந்தணராகிய வேதியரது வேள்விச் சடங்கு உவமையாக எடுத்துரைக்கப் பெற்றிருத்தல் காணலாம். இத்தொடர்ப்பெருளை ஊன்றி நோக்குங்கால், திருமணத்தில் எரிவலம் வருதலாகிய சடங்கு ஓத்துடையந்தணராகிய வேதியவர் களாலன்றி எனைய தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படாத சடங்கென்பது நன்கு புலனாகும்.

1. 'கரணம் பிழைக்கில் மரணம் பயக்கும்' என நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டும் இப்பழமொழி, கற்பியல் வாழ்வில் கரணத்தில் இன்றியமை யாமையை வற்புறுத்துவதாகும்.

2. தாயொடு பிறந்தார்—தலைவியைப் பெற்ற தாயொடு உடன்பிறந்த மாமன்மார். தன்னையர்—தலைவியொடு உடன் பிறந்த தமையன்மார். தாயத்தார்—தலைவியின் தந்தையொடு தொடர்ந்த பங்காளிகள். இவர்கள் தலைவியைத் தக்க தலைவனொருவனுக்கு மணஞ் செய்து கொடுத்தற்கு உரிமையுடையவரென்பது தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவிவரும் மகட்கொடையுரிமை முறையாகும்.

**உ.ம் : உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை (அகம்.86)**

*இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்தவாறும் காண்க. சுற்றஞ் சூழ்ந்து நிற்றலானுந் தமர் அறிய மணவறைச் சேறலானுங் களவாற் சுருங்கிநின்ற நாண் சிறந்தமையைப் பின்னர்த் தலைவன் வினாவ அவள் மறுமொழி கொடாது நின்றமையைத் தலைவன் தோழிக்குக் கூறியவாறு காண்க. இதனானே இது களவின்வழி நிகழ்ந்த கற்பாயிற்று[1].*

***ஆய்வுரை :*** *கற்பினது இலக்கணம் உணர்த்தினமையால் இது கற்பியல் என்னும் பெயர்த்தாயிற்று. அன்புரிமை பூண்டு கள வொழுக்கம் ஒழுகிய தலைவன். தன்பால் அன்புடைய தலைவியை மணஞ்செய்து கொடுத்தற்கு உரிமையுடைய சுற்றத்தார் கொடுப்ப உலகறிய மணந்து வாழும் மனைவாழ்க்கையே கற்பென்னும் ஒழுகலாறாகும். முன்னர்க் களவியலிற் கூறிய வண்ணம் ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் நல்லூழின் ஆணையால் ஓரிடத் தெதிர்ப்பட்டுக் கூடியொழுகினாராயினும் இருமுதுகுரவர் உடன்பாடின்றி அவ்விருவரும் உலகறிய மனைவாழ்க்கையை மேற்கொள்ளுதல் இயலாது. எனவே காதலர் இருவரும் ஒருவரை யொருவர் பிரியாது வாழ்தற்குரிய தமது உள்ளத்துறுதியினை உலகத்தாரறிய வெளிப் படுத்தும் நியதியாகிய திருமணச் சடங்குடன் தலைவன் தலைவியை மணந்துகொள்ளுதல் மனைவாழ்க்கைக்கு இன்றியமையாத சிறப்புடைய நிகழ்ச்சியாயிற்று.*

*களவொழுக்கத்தில் உரிமைபூண்டொழுகிய தலைவனும் தலைவியும் உலகத்தார் அறிய மனையறம் நிகழ்த்துதற்கு உரிமை செய்தளிக்கும் செயல்முறைகளே பண்டைத்தமிழர் கொண்டொழுகிய திருமணச் சடங்காகும். இதனைக் கரணம் என்ற சொல்லால் வழங்குவர் தொல்காப்பியனார்.*

*கணவனிற் சிறந்த தெய்வம் இல்லையெனவும் அவனை இன்னவாறு வழிபடுதல் வேண்டுமெனவும் தலைமகளுக்குப் பெற்றோர் கற்பித்தலானும். அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர்*

1. அகநானூறு **86–**ஆம் பாடலிற் கூறப்பட்டுள்ள கரணமாகிய திருமணச் சடங்கு களவின் வழிவந்த கற்பாகும் என நச்சினார்க்கினியர் கூறும் இவ்விளக்கம் மிகவும் பொருத்தமுடையதாகும்.

விருந்தினர் முதலியோர்பால் இன்னவாறு நடந்து கொள்ளுதல் வேண்டுமெனத் தலைவன் தலைவிக்குக் கற்பித்தலானும், நின்மனைவியை இன்னவாறு பாதுகாப்பாயாக' எனத் தலைவனுக்கும், 'நின்கணவனுக்கு இவ்வாறு பணிசெய்தொழுகுவாயாக' எனத் தலைவிக்கும் சான்றோர் கற்பித்தலானும், இனித் தலைவனும் களவின்கண் ஓரையும் நாளுந் தீதென்ற எண்ணத்தினைத் துறந்தொழுகினாற்போல ஒழுகாது ஓத்தினும் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கொண்டு இல்லறம் நிகழ்த்துதலானும் இத்திருமணச் சடங்காகிய கரணமும் கற்பெனப்படுவதாயிற்று என்பர் நச்சினார்க்கினியர்.

தலைவன் தலைவி இருவரும் ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் மணந்து வாழுங்கால் தலைமகளது மனத்தின் கண் அமைந்த கலங்காநிலைமையாகிய திண்மையே கற்பெனப்படும் என்பது தமிழ் முன்னோர் துணிபாகும்.

> **' பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்**
> **திண்மையுண் டாகப் பெறின்'** **(திருக்குறள்-54)**

என்றார் திருவள்ளுவர். இத்தகைய மனத்திண்மையினையும் தலைவனது நிறையினையும் உலகத்தார் அறியப் புலப்படுத்துவதே திருமணச் சடங்காகிய கரணமாகும். காதலர் இருவரும் ஈருடற்கு ஓருயிரெனப் பிரிவின்றியியைந்த நட்புடையார் என்பதனை வலியுறுத்துவது இத்தகைய திருமணச்சடங்காகிய கரணமேயாதலின், இந்நியதி பிழை படுமேல் அவ்விருவரது வாழ்க்கையிலும் சாதலையொத்த பெருந்துன்பம் நேரும் என்பது திண்ணம். "கரணம் பிழைக்கில் மரணம் பயக்கும்" என நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய பழமொழி கரணத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தல் காண்க.

இது, கற்பென்னும் ஒழுகலாற்றின் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) கற்பென்று சொல்லப்படும் ஒழுகலாறாவது, கரணத் தொடு பொருந்தி, மணந்து கொள்ளுதற்குரிய இயல்பினை யுடைய தலைவன் தனக்கு உரிமையுடைய தலைவியைக் கொடுத்தற்குரிய சுற்றத்தார் கொடுப்ப ஏற்று மணஞ்செய்து கொள்ளும் முறைமையாகும் எ-று.

கற்பெனப்படுவது என்னும் எழுவாய், 'கொள்வது' என்னும் பெயர்ப்பயனிலை கொண்டது. கொள்ளுதற்குரிய மரபாவது, காதலர் இருவர்க்கிடையே அமைய வேண்டிய பிறப்பு முதலிய பண்புகளாற் பொருந்தித் தலைமகளாற் காதலிக்கப் பெறும் கெழுதகைமையாகிய உரிமையுடையனாதல். இத்தகைய வுரிமையுடைய தலைவனே தலைவியை மணந்து கொள்ளுதற்குரிய தகுதியுடையான் என விதிக்கும் முறையில் 'கொளற்குரிமரபிற் கிழவன்' என அடைபுணர்த்தோதினார். 'கிழத்தியை' என்பது இடைநிலை விளக்காக நின்று 'கிழத்தியைக் கொளற்குரி மரபிற் கிழவன்' எனவும், 'கிழத்தியைக் கொடைக்குரி மரபினோர் கொடுப்ப' எனவும் ஈரிடத்துஞ் சென்றியைந்தது. மனையறத்தினை நிகழ்த்தற்குரிய ஒருவன் ஒருத்தி யென்னும் இருவரும் ஒருவரை யொருவர் அன்பினால் இன்றியமையாதவராக உள்ளம் ஒத்து ஒழுகும் கெழுதகைமையாகிய உணர்வுரிமையே அவ்விருவரும் உலகத்தாரறியத் திருமணம் புரிந்து கொள்ளுதற்குரிய தகுதியாம் என வற்புறுத்தும் நிலையில் அவ்விருவரையும் கிழவன் கிழத்தி என்ற பெயராற் கிளந்து ஓதினார் தொல்காப்பியனார். எனவே ஒருவன் ஒருத்தியென்னும் இருவரும் தம்முள் ஒத்த காதற்கிழமை யுடையராயினன்றித் திருமணம் செய்துகோடற் குரியரல்லர் என்பதும், காதலர் இருவர் இசைவுடன் மகட்கொடைக்குரியராகிய தலைவியின் பெற்றோரது இசைவும் ஒருங்கே கிடைப்பின் உலகத்தார் அத் திருமணத்தினை ஐயத்திற்கிடனின்றித் தெளிந்து உடன்படுவர் என்பதும் இதனாற் புலனாதல் காணலாம். (1)

**2. கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான.**[1]

**இளம்பூரணம்** : இது மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) கொடுப்போரின்றியும், கரண நிகழ்ச்சி உண்டு; புணர்ந்துடன் போகிய காலத்து என்றவாறு.

எனவே கற்பிற்குக் கரண நிகழ்ச்சி ஒருதலையாயிற்று, இதனானே கொடுப்போ ரில்வழியும் கரணநிகழ்ச்சி யுண்மையும் ஒழுக்கக் குறைபாடு இன்மையும் கொள்க.

1. புணர்ந்து உடன் போகிய காலை. தலைவனும் தலைவியும் பெற்றோர் அறியாது உடன் போக்கிற் போகிய காலம்.

**பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு**
**தொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய**
**நாலூர்க் கோசர் நன்மொழி போல**
**வாயா கின்றே தோழி யாய்கழற்**
**சேயிலை வெள்வேல் விடலையொடு**
**தொகுவளை முன்கை மடந்தை நட்பே. (குறுந். 15)**

*இதனுள் விடலையொடு மடந்தைநட்பு பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாயிற்று எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறின மையானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு காண்க.*

***நச்சினார்க்கினியம் :*** *இஃது எய்தியதன்மேற் சிறப்பு விதி.*

*(இ-ள்.) கொடுப்போர்[1] இன்றியும் கரணம் உண்டே— முற்கூறிய கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கோடலின்றியுங் கரணம் உண்டாகும்; புணர்ந்து உடன் போகிய காலையான— புணர்ந்து உடன் போகிய காலத்திடத்து (எ.று).*

*இது புணர்ந்து உடன்போயினார் ஆண்டுக் கொடுப் போரின்றியும் வேள்வி யாசான் காட்டிய சடங்கின் வழியாற் கற்புப் பூண்டு வருவதும் ஆமென்றவாறு. இனி ஆண்டு வரையாது மீண்டுவந்து கொடுப்பக் கோடல் உளதேல் அது மேற்கூறிய தன்கண் அடங்கும் இனிப் போயவழிக்[2] கற்புப் பூண்டலே கரணம் என்பாருமுளர். எனவே கற்பிற்குக் கரணம் ஒருதலையாயிற்று.*

---

1. கொடுப்போர் என்றது. மகட்கொடைக்கு உரிமையுடைய தாய் தந்தையாகிய இருமுதுகுரவர், தாயுடன் பிறந்த மாமன்மார், தலைவியின் தமையன்மார் தாயத்தாராகிய பங்காளிகள் ஆகிய தலைவியின் சுற்றத்தாரை. களவொழுக்கத்தில் தலைவி சுற்றத்தார் அறியாது தன் ஆருயிர்த் தலைவனோடு உடன்போயின காலத்து அவ்விருவரும் சென்று தங்கிய ஊரின் கண்வாழும் சான்றோர்களே காதலர் இருவரது அன்பின் கேண்மையினை நன்குணர்ந்து தாமே இருமுதுகுரவர் நிலையில் இருந்து திருமணச் சடங்கினை இனிது நிறைவேற்றி வைப்பராதலால் 'புணர்ந்துடன் போகியகாலை, கொடுப்போரின்றியும் கரணம் உண்டு' என்றார். எனவே காதலர் இருவரது கற்பியல் வாழ்வாகிய மனைவாழ்க்கைக்குக் கரணம் எவ்விடத்தும் இன்றியமையாததென வற்புறுத்தவா றாம்.

2. போயவழி—-புணர்ந்துடன் போயவழி.

**பறைபடப் பணிலம் ஆர்ப்ப ... ... மடந்தை நட்பே** [1] **(குறுந். 15)**

*இதனுள் 'வாயாகின்று' எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமை யானும் 'விடலை' யெனப் பாலை நிலத்துத் தலைவன் பெயர் கூறினமையானும் இது கொடுப்போரினறிக் கரணம் நிகழ்ந்தது. "அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமகள்" (அகம் 195) என்பதும் அது.*

**ஆய்வுரை :** இது, மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

*(இ.ள்) மகட்கொடைக்குரிய பெற்றோரது உடன்பாடு இல்லாத நிலையிலும் திருமண நிகழ்ச்சியாகிய கரணம் நிகழ்தல் உண்டு. (அஃது எப்பொழுது எனின்) களவொழுக்கத்தில் தலைவி தன் காதலனாகிய தலைவனொடு பெற்றோர் அறியாதவாறு உடன் போக்கினை மேற்கொண்டு சென்ற காலத்து எ-று.*

*கற்பியல் வாழ்வுக்குத் திருமணச் சடங்காகிய கரணம் இன்றியமையாததென்பதும். மகட்கொடைக்குரிய பெற்றோரது உடன்பாடு பெறாத நிலையிலும் தம்முள் ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் திருமணம் புரிந்து மனையறம் நிகழ்த்துவதில் தடையில்லையென்பதும். ஒத்த அன்பினராகிய இருவரும் திருமணம் செய்து கொள்ளுதற்கு உலகத்துச் சான்றோர் அனைவரும் துணைசெய்வர் என்பதும் இதனாற் புலனாதல் காண்க. காலையான-காலத்து. காலை-காலம். ஆன் என்னும் மூன்றாமுருபு அகரம் பெற்று ஆனஎனத் திரிந்து இடப்பொருள் தந்து நின்றது.* [2]

**3. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்**
**கீழோர்க் காகிய காலமும் உண்டே.**

**இளம்பூரணம் :** இதுவுமது.

*(இ - ள்.) மேற்குலத்தாராகிய அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று வருணர்த்தார்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண்மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு எ - று.*

---

1. கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்ந்ததற்கு எடுத்துக்காட்டாகக் குறுந் தொகை 15–ஆம் பாடலை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒருங்கே எடுத்துக்காட்டியுள்ளமை தொல்காப்பியமாகிய இயற்றமிழ் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்வன சங்கச் செய்யுட்களே என்பதனைத் தெளிவுபடுத்துவதாகும்.

*இதனாற் சொல்லியது, முற்காலத்துக்கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்ததெனவுங் கூறியவாறு போலும்*[1]*. அஃதாமாறு தருமசாத்திரம் வல்லாரைக்கொண் டுணர்க.*

***நச்சினார்க்கினியம் :*** *இது முதலூழியில் வேளாளர்க்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ - ள்.) மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்- வேதநூல்தான் அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம்: கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டு- அந்தணர் முதலியோர்க்கும் மகட் கொடைக்குரிய வேளாண் மாந்தர்க்குந் தந்திர மந்திர வகையான் உரித்தாகிய காலமும் உள. (எ - று.)*

*எனவே, முதற்காலத்து நான்கு வருணத்தார்க்குங் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது என்பதாம். அஃது இரண்டாம் ஊழி தொடங்கி*

1. இந்நூற்பாவில் 'மேலோர் மூவர்' என்றது, அந்தணர், அரசர், வணிகர் என்னும் மேற்குலத்தார் மூவரையும் குறித்தது எனவும், 'கீழோர்' என்றது நாலாம் வருணத்தவராகிய வேளாண் மாந்தரைக் குறித்ததெனவும் கொண்டு உரைவரைந்த இளம்பூரண அடிகள், "இதனாற் சொல்லியது, முற்காலத்துக்கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்தது எனவும் கூறியவாறு போலும்" என விளக்கந்தருவர். இவ்விளக்கத்தினைக் கூர்ந்து நோக்குங்கால் 'எல்லார்க்குங் கரணம் பொதுப்பட நிகழ்ந்த முற்காலம்' என்றது, தமிழகத்தில் நால்வகை வருணப்பாகுபாடு இடம்பெறாத தொன்மைக் காலத்தினையும் அக்காலத்தில் எல்லா மாந்தர்க்கும் வதுவைச் சடங்காகிய கரணம் பொதுவாக அமைந்த திறத்தினையும் 'பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்தது' என்றது, பிற்காலத்தில் ஒரு குலத்துக்கு ஒரு நீதியாக வருண வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு தருமசாத்திரத்தில் வகுக்கப்பட்ட வதுவைச் சடங்கினை வேளாண் மாந்தர் ஏற்றுக் கொள்ளாமையால் அவர்க்கு அது தவிர்ந்தது என்னும் உண்மையினையும் உய்த்துணரவைத்தல் அறியத்தகுவதாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் தமிழ் மக்களை நிலவகையாற் பகுத்துரைத்த தல்லது குலவகையாற்பகுத்துரையாமையாலும், இந்நூற்பாவில் 'மேலோர் மூவர்' என இன்றிவர் என்னும் எண்ணியற் பெயராற் குறிக்கப் பெற்றோர் தமிழகத்தை ஆட்சி புரியும் முடியுடை வேந்தர் மூவருமே என்பதனை 'வண் புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல்–செய்யுளியல்–79) எனப் பின்வரும் நூற்பாவில் ஆசிரியர் தெளிவாகக் குறித்துள்ளமையாலும் நன்குணரலாம். இனி ஈண்டுக் 'கீழோர்' என்றது அம்மூவேந்தரது ஆட்சியின்கீழ் வாழும் குடிமக்கள் எல்லோரையுங் குறிப்பதாகும். கீழோர்க்கு ஆகியகாலமும்' என்புழி 'ஆகிய' என்பதற்கு மாறாகத் தவிர்ந்த எனக் கருத்துரை வரைதல் உரைநெறிக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

*வேளாளர்க்குத் தவிர்ந்தது என்பதூஉந் தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூஉங் கூறியவாறாயிற்று. உதாரணம் இக் காலத்திலின்று[1].*

***ஆய்வுரை :*** *இது, பண்டைத்தமிழகத்தில் முதன்முதற் கரணம் வகுக்கப்பெற்றோர் இன்னார் எனவும் அவர்க்குரிய கரணம் ஏனையோர்க்கும் உரித்தாகிய காலம் இதுவெனவும் கூறுகின்றது.*

*(இ-ள்) நாடாளும் மேன்மையுடையோராகிய முடிவேந்தர் மூவர்க்கும் முதன்முதல் வகுக்கப்பெற்ற திருமண நியதியாகிய கரணம் அவர்கீழ்வாழும் குடிமக்களுக்கும் உரியதாய் அமைந்த காலமும் உண்டு. எ-று.*

*இதன்கண் 'மேலோர்மூவர்' எனக் குறிக்கப்பட்டோர். 'போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மா பெருந்தனையர்' எனப் புறத்திணையியலிலும் 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'*

1. இவ்வுரையும் விளக்கமும் முற்குறித்த இளம்பூரணர் உரையினை அடியொற்றி யமைந்தன. இளம்பூரணர் 'பிற்காலம்' எனக்குறித்ததனை 'இரண்டாம் ஊழி' என நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

மேலோர் மூவர் அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூவர் என்பதும் கீழோர் வேளாளர் என்பதும் இருவருரைகளிலும் பொதுவாக அமைந்தனவே. 'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்' என்பதற்கு 'வேதநூல் அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூவகை வருணத்தார்க்கும் வகுத்துக்கூறிய வேதநூற்கரணம்' எனக் கரணத்தை வேதத்தொடு தொடர்புடையதாகக் கொள்கின்றார் நச்சினார்க்கினியர். 'கீழோர்க்கு ஆகிய காலம்' என்பதற்கு, 'மூவகை வருணத்தார்க்கும் மகட்கொடைக்குரிய வேளாண்மாந்தர்க்குந் தந்திரமந்திர வகையால் உரித்தாகிய ஆதியூழியாகிய காலம் எனவும், அக்காலத்தில் தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே நால்வகை வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தாராதலின், அக்காலத்தினைக் 'கீழோர்க்கு ஆகிய காலம்' என்றார் எனவும், 'ஆகிய காலம்' என இறந்தகாலச் சொல்லால் தொல்காப்பியனார் குறிப்பிடுதலால் ஆசிரியர் இந்நூல் செய்கின்ற ஆதியூழியின் அந்தமாகிய இரண்டாம் ஊழி தொடங்கி வேதநூற்கரணம் வேளாளர்க்குத் தவிர்ந்தது எனவும் விளக்கும் முறையில் அமைந்தது நச்சினார்க்கினியர் எழுதிய இவ்வுரைப் பகுதியாகும்.

மேலோர் மூவர்க்கும் அக்காலச் சான்றோர்களால் வகுத்துரைக்கப்பட்ட திருமணச் சடங்கு என்ற கருத்திற் 'புணர்த்தகரணம்' எனப் பொதுப்படக் கூறிய தன்றி 'அருமறையுணர்த்தகரணம்' என ஆசிரியர் சிறப்பு முறையில் தெரித்து ஓதாமையானும், 'ஆகிய

*எனச் செய்யுளியலிலும் சிறப்பித்துரைக்கப்பட்ட சேரசோழ பாண்டியர்களாகிய முடிவேந்தர் மூவருமே எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். கரணம் எனப்படும் திருமணச் சடங்குமுறை மிகப் பழைய காலத்தில் நாட்டில் எல்லா மக்களுக்கும் விதிக்கப் பெறவில்லை; படைப்புக்காலந் தொட்டுப் பண்புடன் நிலைபெற்று வரும் தமிழ்மூவேந்தர் குடும்பத்திற்கே முதன்முதல் வகுக்கப் பெற்றது. நாடாள்வேந்தராகிய அவர்தம் ஆட்சியுரிமையில் மன்ன னுக்குப்பின் அவன் மைந்தர் அரசுரிமை பெறும் முறையில் அம்மன்னனது பட்டத்தரசி முதன்மை பெறுதல் காரணமாகவே முடிவேந்தர் மூவர்க்கும் முதன்முதற் கரணம் வகுக்கப்பெற்றது.*

*ஒருவன் ஒருத்தி யிடையேயமைந்த காதற்கேண்மை நாளடைவிற் குறைந்து வழுவாமை கருதியும், பெற்றோர் ஈட்டிய பொருட்கு உரியராம் தாயமுறை அவர்தம் மக்கட்கேயுரியதெனத் துணிதற் பொருட்டும் முற்காலத்தில் முடிவேந்தர் மூவர்க்கும் வகுக்கப்பெற்ற திருமண நியதியாகிய கரணம் அவர்கீழ்வாழும் குடிமக்களுக்கும் பிற்காலத்தில் உரியதாயிற்று என ஆசிரியர் தொல்காப்பியனார் தம்காலச் சமுதாய ஒழுகலாற்றினை இந்-நூற்பாவாற் புலப்படுத்திய திறம் கூர்ந்துணரத்தகுவதாகும். (3)*

**4. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப.**

***இளம்பூரணம் :*** *என்றது, கரணமாகியவாறு உணர்த்துதல் நுதலிற்று.*

*(இ-ள்.) பொய்கூறலும் வழூஉப்பட வொழுகலும் தோன்றிய பின்னர் முனைவர் கரணத்தைக் கட்டினார் என்று சொல்வர் எ - று.*

*இரண்டுந் தோன்றுவது இரண்டாம் ஊழியின்கண்ணாதலின். முதலூழியிற் கரணமின்றியே இவ்வாழ்க்கை நடந்ததென்பதூஉம் இவை தோன்றிய பின்னர்க் கரணந் தோன்றின தென்பதூஉம் கூறியவாறாயிற்று. பொய்யாவது செய்ததனை மறைத்தல் வழுவாவது*

காலமும் உண்டு' என்புழி 'ஆகிய' என்னும் ஆக்கச்சொல் 'தவிர்ந்த (போகிய)' என எதிர்மறைப் பொருள்படாமையானும் இச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளும் விளக்கமும் ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கு முற்றிலும் முரணாதல் புலனாம்.

*செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி யொழுகுதல். கரணத்தொடு முடிந்த காலையில் அவை யிரண்டும் நிகழாவா மாதலாற் கரணம் வேண்டுவதாயிற்று.*[1]

***நச்சினார்க்கினியம் :*** *இது வேதத்திற் கரணம் ஒழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமுங் கூறுகின்றது.*[2]

*(இ-ள்.) பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர் - ஆதி ஊழி கழிந்த முறையே அக்காலத்தந்தந் தொடங்கி இரண்டாம் ஊழி முதலாகப் பொய்யும் வழுவுஞ் சிறந்து தோன்றிய பிற்காலத்தே; ஐயர் யாத்தனர் கரணம் என்ப - இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் கட்டினாரென்று கூறுவர். (எ - று).*

*ஈண்டு 'என்ப' (249) என்றது முதனூலாசிரியரையன்று, வட நூலோரைக் கருதியது. பொய்யாவது செய்த ஒன்றனைச் செய்திலேனென்றல்; வழுவாவது சொல்லுதலே அன்றி ஒழுக்கத்து*

---

1. மக்கள் வாழ்க்கையிற் பொய்யும் வழுவும் தோன்றாத தூய காலமாகிய முதலூழியில் கரணம் எனப்படும் சடங்குமுறை வகுக்கப்படாமலே மக்களது கற்பியல் வாழ்க்கை தடையின்றி நிகழ்ந்ததென்பதும், தான் செய்ததனை மறைத்துப் பொய் கூறலும், செய்ததன்கண் உறைத்து நில்லாது வழுவிச் செல்லுதலும் ஆகிய குற்றங்கள் தோன்றிய பிற்காலத்திலேயே தமிழ்ச் சான்றோராகிய முனைவர்கள் திருமண ஒழுங்குமுறையாகிய கரணத்தினை அமைத்தனர் என்பதும் கரணத்துடன் திருமணம் நிகழ்ந்த நிலையில் பொய்யும் வழுவும் நிகழ்தற்கு இடமில்லா தொழிதலின் கற்பியல் வாழ்வுக்குக் கரணம் இன்றியமையாததாயிற்று என்பதும் இந்நூற்பாவிற்கு இளம்பூரணம் தரும் விளக்கமாகும்.

2. முன்னுள்ள நூற்பாவிற் குறிக்கப்பட்ட கரணம் வேதம் கூறிய கரணம் என்றும், இச்சூத்திரத்திற் கூறப்படும் கரணம் இருடிகள்யாத்த ஆரிடமாகிய கரணம் என்றும் இருவகைக் கரணங்களாகப் பகுத்து அவற்றுள் ஒருவர் கட்டாமல் தாமே தோன்றிய வேதநூற்கரணம் நால்வகை வருணத்தார்க்கும் ஒன்றாய் அமைந்ததென்றும், பிற்காலத்தே இருடிகள் வகுத்த ஆரிடமாகிய கரணம் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் ஆக வேறுபட அமைந்தனவென்றும் நச்சினார்க்கினியர் கூறும் கரணவேறுபாட்டுக்கு இவ்விரு சூத்திரங்களிலும் இடமில்லை. 'ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்ற தொடரில் மேலோர்க்குரிய கரணம் வேறு, கீழோர்க்குரிய கரணம் வேறு எனக் கரண வேற்றுமை பற்றிய குறிப்பு இடம் பெறாமையும் கருதற்குரியதாகும். இதன்கள் "என்ப" என்றது முதனூலாசிரியரையன்று, வடநூலோரைக் கருதியது" என நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் ஆதியூழியின் அந்தத்தே தமிழுக்கேயுரிய பொருளிலக்கணம் கூறிய தொல்காப்பியனார், பிற்காலத்தே வடமொழியில் தருமசாத்திரம் செய்த வட நூலாசிரியர் கூற்றினை மேற்கோளாக எடுத்துரைத்தார் என்பது ஏற்பட்டுக் காலமயக்கம் இடமயக்கம் பொருள்மயக்கம் ஆகியவற்றுக்கு இடம்தந்து வழூஉப்படுதல் காண்க.

இழுக்கி ஒழுகல். அஃது அரசரும் வாணிகருந் தத்தம் வகையாற் செய்யத்தகுவன செய்யாது சடங்கொப்புமை கருதித் தாமும் அந்தணரோடு தலைமை செய்தொழுகுதலுங் களவொழுக்கத்தின் இழுக்குதல் போல்வனவும் அவர்க்கிழுக்கம். ஏனை வேளாளரும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்ப் பொய்யும் வழுவுந் தோன்றி வழுவுதல் அவர்க்கிழுக்கம். இவற்றைக் கண்டு இருடிகள்[1] மேலோர் மூவர்க்கும் வேறு வேறு சடங்கினைக் கட்டிக் கீழோர்க்குங் களவின்றியும் கற்பு நிகழுமெனவுஞ் சடங்கு வேறு வேறு கட்டினார் எனவே, ஒருவர் கட்டாமல் தாமே தோன்றிய கரணம் வேதநூற்கே உளதென்பது பெற்றாம். ஆயின் கந்தருவ வழக்கத்திற்குச் சிறந்த களவு விலக்குண்டதன்றோ எனின், ஒருவனையும் ஒருத்தியையும் எதிர்நிறீஇ 'இவளைக் கொள்ள இயைதியோ நீ' எனவும், 'இவற்குக்

1. 'ஐயர்' என்னுஞ்சொல், தலைமைச் சிறப்புடைய பெரியோர்களைக் குறித்து வழங்கும் தனித்தமிழ்ச் சொல்லாகும். இதற்கு 'முனைவர்' என இளம்பூரணரும் 'இருடிகள்' என நச்சினார்க்கினியரும் பொருள் வரைந்தனர். ஐயர் என்னும் இச்சொல் இங்குத் தமிழின முதல்வராகிய முன்னோரைக் குறித்து வழங்கப்பெற்றதாகும். ஐயர் என்னும் இத்தமிழ்ச்சொல்லினை 'ஆர்ய' என்னும் வடசொல்லின் திரிபாகக் கொண்டு இக்காலத்து ஆராய்ச்சியாளரொருவர் இத்தொல்காப்பிய நூற்பாவுக்கு மாறுபடப் பொருள்கூறியதும் உண்டு. 'என்ஐ முன் நில்லன் மின் தெவ்விர், பலர் என்ஐ முன் நின்று கல்நின்றவர்' (திருக்குறள் ––771) எனவும், 'என்ஐ புற்கை உண்டும் பெருந்தோளன்' (புறநா––84) எனவும் வரும் தொடர்களில் என்–ஐ' என்பது 'என்னுடைய தலைவன்' என்ற பொருளின் வழங்குவதனை அறிஞர் பலரும் நன்குணர்வர். இத்தகைய 'ஐ' என்பதன் அடியாக அர்விகுதி பெற்ற பலர்பாற் பெயர் 'ஐயர்' என்னும் தமிழ்ச்சொல்லாகும். 'ஐ வியப்பாகும்' (உரியியல்–88) என்பது தொல்காப்பியம். மக்களைத் தீநெறியினின்றும் விலக்கி நன்னெறியிற் செலுத்தவல்ல பேரறிவும் பேராற்றலும் நல்லொழுக்கமும் உடைமையால் யாவரும் வியந்து பாராட்டுந் தலைமைச் சிறப்புடைய சான்றோர்களை 'ஐயர்' எனப் போற்றும் மரபுண்மை இதனாற்புலனாம்.

> ''புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்
> நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
> ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
> செய்பெருஞ்சிறப்போடு சேர்தற் கண்ணும்'' (கற்பியல்–5)

என அடுத்துவரும் நூற்பாவில், ''புதல்வனைப் பெற்று எண்ணெய் தேய்த்து நீராடித் தூய்மை பெற்ற தலைவியின் நலனைக் கருதிய தலைவன், அறனாற்றி மூத்த அறிவுடையோர்களாகிய தன்குல முதியோர்களைத் துணையாகக்கொண்டும் அமரகத்து அஞ்சாமறவர்களாய்த் துறக்கம்புக்க தன் குடியின் வீரர்களை எண்ணியும் குழந்தைக்குச் சிறப்புச் செய்தல் உண்டு'' என்பதனைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களை 'ஆசறுகாட்சி ஐயர், (குறிஞ்சிப்பாட்டு–17) எனப் போற்றுவர் பொய்யா வாய்மொழிக் கபிலர். பற்றற்றான்பற்றினையே பற்றாகப் பற்றி முற்றத்

*கொடுப்ப இயைதியோ நீ' எனவும் இருமுதுகுரவரும் கேட்டவழி அவர் கரந்த உள்ளத்தான் இயைந்த வழிக் கொடுப்ப வாகலின் அதுதானே ஒருவகையாற் கந்தருவ வழக்கமாம், களவொழுக்கம் நிகழாதாயினும் என்பது, கரணம் யாத்தோர் கருத்தென்பது பெற்றாம். இதனானே இயற்கைப் புணர்ச்சிக்கண் மெய்யுறு புணர்ச்சியையும் உள்ளப்புணர்ச்சியென்று கூறி அதன் வழிக் கற்பு நிகழ்ந்ததென்றுங் கூறவும்படும். இவ்வாசிரியர் ஆதி ஊழியின் அந்தத்தே*[1] *இந் நூல் செய்தலின் முதனூலாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்தபின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறுங் கூறினார்; அக் களவின் வழி நிகழ்ந்த கற்புங் கோடற்கென்று உணர்க.*

துறந்த தவச் செல்வர்களாய் உலகவுயிர்கள் கதிரவன் வெம்மையால் தாக்குண்டு தளராவண்ணம் கதிரவனது வெப்பத்தினைத் தம் சடைக் கற்றைகளால் தடுத்து நிறுத்திப் பயிர்கட்கும் உயிர்கட்கும் வேண்டிய அளவு கொடுத்தற் பொருட்டு விண்ணகத்தே சுடரொடு திரிதரும் முனிவர்களை 'விண்செலல்மரபின் ஐயர்' (திருமுருகாற்றுப்படை–107) என்றார் தக்கோர்புகழும் நக்கீரர். சமணரில் இல்லறத்தாராகிய உலக நோன்பிகளைப் 'பெரும் பெயர் ஐயர்' (சிலப்—ய.160) என்பர் சேரமுனிவர் இளங்கோவடிகள். அகத்திணையொழுகலாற்றில் தலைவியின் தமையன்மார்களை ஐயர் என வழங்கும் மரபு சங்கச் செய்யுட்களில் பயின்றுள்ளமை பலரும் அறிந்ததே. "இளமா எயிற்றி இவைகாண் நின்ஐயர், தலைநாளை வேட்டத்துத் தந்த நல் ஆனிரைகள், (வேட்டுவ வரி) என்பது சிலப்பதிகாரம். திருத்தொண்டர்புராண ஆசிரியராகிய சேக்கிழாரடிகள் திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலிய தலைமைப் பண்புடைய சிவனடியார்களைப் பிறப்பு முறையானன்றிச் சிறப்பு முறையால் ஐயர் என அழைத்துப் போற்றுகின்றார். எனவே 'ஐயர்' என்னுஞ் சொல் இக் காலத்திற்போல முற்காலத்திற் சாதிப் பெயராய் வழங்கியதில்லையென்பது நன்கு துணியப்படும். எண்ணூறாண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் ஐயர் என்பது சாதிப் பெயராக வழங்கப் பெறவில்லை. அங்ஙனமாகவும் மிகப்பழைய தமிழ்நூலாகிய தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள 'ஐயர்' என்னுஞ் சொல்லுக்கு இக்காலச் சாதிப் பெயர் வழக்கினையுளத்துட்கொண்டு 'ஐயர்–ஆரிய மேலோர்' எனப் பொருள்கூறுதல் வரலாற்று முறைக்கு ஒவ்வாத பிழையுரையாதல் திண்ணம்.

1. ஆதியூழியின் அந்தம் என்றது, "தலைச்சங்க காலத்துத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னும் யாற்றிற்கும் குமரியென்னும் யாற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவதம் பரவியிருந்த நாற்பத்தொன்பது நாடுகளும் குமரிகொல்லம் முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிந்த ஊழியிறுதியாகிய காலப்பகுதியினை. தலைச்சங்கத்து இறுதியிலும் இடைச்சங்கத் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் தொல்காப்பியனார் என்பது, இறையனார் களவியலுரையாலும் தொல்காப்பியம் பேராசிரியர் உரையாலும் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையாலும் நன்கு தெளியப்படும்.

இருடிகள் — முனிவர்கள்

மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வென்சோறு
வரையா வண்மையோடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்
சகட மண்டிய துகளர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்
பூக்கணுமிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற் கீன்ற
மண்ணு மணியன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்ணூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்தர்
இழையணி சிறப்பிற் பெயர் வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்
உவர் நீங்கு கற்பினெம் உயிருடம் படுவி
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇப்
பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளி யாற்றச் சிறுவரை திறவென
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்
உறைகழி வாளின் உருவுபெயர்ந் திமைப்ப
மறைதிறன் அறியா ளாகி ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை யாம்பற் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பால் கூந்தல் இருண்மறை யொளித்தே (அகம்.136)[1]

*என வரும்.*

1. கரணமொடு புணர்ந்த வதுவைக்கு மேற்கோளாக நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டிய அகநானூறு 136–ஆம் பாடலில் வடமொழியாளர்க்குரிய வேள்விச் சடங்கு எதுவும் இடம் பெறாமையால், தொல்காப்பியனாரால் கரணம் எனக் குறிக்கப்படும் திருமணச் சடங்கு, வடமொழியில் தருமசாத்திரத்திற் கூறப்படும் வருணமுறைப்படியமைந்த வேள்விச் சடங்கன்றென்பது நன்கு வலியுறுதல் காண்க.

***ஆய்வுரை :*** *இது, கரணத் தோற்றத்திற்குரிய காரணம் கூறுகின்றது. (இ-ள்) ஒருவன் ஒருத்தியை அன்பினாற் கூடியொழுகிப் பின் 'அவளை அறியேன்' எனப் பொய் கூறுதலும், 'நின்னைப்பிரியேன்' எனத் தெய்வத்தின் முன்னிலையில் உறுதிகூறிப் பின்னர் அவ்வுறுதியின் வழுவி நடத்தலும் ஆகிய தீய வழக்கங்கள் நாட்டில் தோன்றிய பின்னரே சான்றோராகிய தலைவர்கள் காதலர் இருவரும் கணவனும் மனைவியுமாகப் பிரிவின்றி வாழ்தற்கு இன்றியமையாத திருமணச் சடங்காகிய கரணத்தினை வகுத்தமைத்தனர் எ-று.*

*பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் கரணம் யாத்தனர் எனவே. அவை தோன்றாத காலம் மிக முந்தியதென்பதும், அத்தொன்மைக் காலத்தில் இத்தகைய திருமண நியதியாகிய கரணத்திற்கு இன்றியமையாமை நேர்ந்ததில்லையென்பதும், 'ஐயர் யாத்தனர் கரணம் என்ப' எனத்தொல்காப்பியனார் தம் முன்னோர் கூற்றாக வைத்துரைத்தலால் இத்தகைய கரணமாகிய நியதி ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னரே தமிழ் முன்னோராகிய தலைவர்களால் விதிக்கப் பெற்று வழங்கி வந்த தென்பதும் நன்கு துணியப்படும்.* *(4)*

5. **கரணத்தின் அமைந்து முடிந்த காலை**
**நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்**
**எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்**
**அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்**
**நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்**
**பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்**
**குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்**
**நாமக் காலத் துண்டெனத் தோழி**
**ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்**
**அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்**
**சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென**
**ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது**
**வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென**

அடிசிலும் பூவுந் தொடுத்தற் கண்ணும்[1]
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமர லுள்ளமொ டளவிய இடத்தும்
அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப்[2]
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற்[3] பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது[4]
உயங்கவனள்[5] கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல்[6] முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின்[7] ஊடன்மிகுத் தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்

1. 'தொடுதற்கண்ணும்'

2. 'மெய்கொளவருளிய' எனப் பாடங்கொள்வர் நச்சினார்க்கினியர்

**பா.வேஃ 3. புதல்வர்ப்பயந்த புனிறு சேர். 4. துணையணைபுல்லிய புல்லாது. 5. உயங்கவள். 6. புல்கென. 7. குண்மையின்.**

**பரிவு நீக்கிய[1] பகுதிக் கண்ணும்**
**நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளுஞ்**
**சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியுங்**
**காமத்தின் வலியுங் கைவிடின் அச்சமுந்**
**தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்**
**உடன்சேறற் செய்கையொ டன்னவை பிறவும்**
**மடம்பட வந்த தோழி கண்ணும்[2]**
**வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்**
**மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்**
**அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்**
**பேரிசை யூர்திப் பாகர் பாங்கினுங்**
**காமக் கிழத்தி மனையோள் என்றிவர்**
**ஏமுறு கிளவி சொல்லிய எதிருஞ்**
**சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி**
**இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்**
**அருந்தொழில் முடித்த செம்மற் காலை**
**விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்**
**மாலை யேந்திய பெண்டிரும் மக்களுங்**
**கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்**
**ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇப்***
**பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்றும்**
**எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.**

*இது தலைவற்கு உரிய கிளவியெல்லாந் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.*

*இளம்பூரணம் :*

*(இ-ள்.) கரணத்தினமைந்து முடிந்த பின்பு. நெஞ்சுதளைய விழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனைய வாயிலோரெதிரொடு கூடிப்*

---

**1. பிரிவின் நீக்கிய 2. தோழிக்கண்ணும்.**

**(பா.வே) *ஏனை வாயில் எதிரொடு தொகை இயப்**

*பண்ணுத லமைந்த பகுதியினையுடைய முப்பத்தின்மூன்றிடத்தினும் கூறல் எண்ணுதற்கரிய சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றவாறு.*

*இடம் என்பது வகையிற் கூறியவதனால்*[1] *உரைக்கப்பட்டது. கூற்றென்பது வருகின்ற சூத்திரத்தினும் கொணர்ந்துரைக்கப் பட்டது.*[2]

*கரணத்தி னமைந்து முடிந்தகாலை என்பது — ஆசான்*[3] *புணர்த்த கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்றவாறு.*

*நெஞ்சு தளையவிழ்த லாவது—தலைவியைத் தலைவன் கண்ணுற்றஞான்று தலைவன் மாட்டு உளதாகிய பெருமையும் உரனும் தலைவிமாட்டு உளதாகிய அச்சமும் நாணும் மடனும் ஏதுவாக இயற்கைப்புணர்ச்சி இடையீடுபட்டுழி வேட்கை தணியாது வரைந் தெய்துங்காறும் இருவர்மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டு விடப்படுதல்*[4]*. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் அலர் அறிவுறுக்கப்பட்டு நீங்கி வரைந்தெய்துங்காறும் புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கை தோற்றாமல் தளைக்கப்பட்டதனைத் தளை என்றலும் ஒன்று. இவை யிரண்டினும் மிகுதி பொருளாகக் கொள்க.*

**உழுந்து தலைப் பெய்த கொழுங்களி மிதவை**
**..................மாயோளே (அகம். 86)**

1. வகையிற் கூறுதலாவது, தனித்துறைகளாக விரித்துக்கூறாமல் துறை வகைகள் தோன்றுதற்குரிய இடங்களாக முப்பத்து மூன்றிடங்களை வகுத்துக் கூறுதல்.

2. ‘கிழவோன்மேன’ எனப் பொதுப்படக் கூறப்படினும் கிழவோன் கூற்று என்பது, அடுத்துவரும் நூற்பாவில் ‘கிழவோள் செப்பல்’ (கற்பியல் —சா) என்பதனாற் கொணர்ந்துரைக்கப் பட்டது என்பதாம்.

3. ஆசான்—வதுவைச் சடங்கினை நிகழ்த்தும் ஆசிரியன்,

4. தளை—கட்டு. நெஞ்சத்திற்கு அமைந்த தளையாவது, தலைவன் தலைவியிருவர்மாட்டும் கிளர்ந்து மீதூர்ந்த வேட்கை தலைவனுக்குரிய பெருமையும் உரனும் காரணமாகவும் தலைவிக்கு உரிய அச்சமும் நாணும் மடனுங்காரணமாகவும் இருவரும் வரைந்து எய்துமளவும் புறத்தேவெளிப்படாமல் இருவருள்ளத்தும் கட்டுப்பட்டு அடங்குதல். நெஞ்சு தளை அவிழ்தலாவது, இருவரும் உலகத் தாரறிய மணந்து கொண்டு கூடும் நிலையில் நெஞ்சம் கட்டவிழ்ந்து வேட்கை வெளிப்படுதல்.

*இதனுள் 'முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்தகாலை' என்பதனால் இயற்கைப் புணர்ச்சி யின்மையும், 'அகமலியுவகையளாகி முகனிகுத்து ஒய்யென விறைஞ்சி' என்பதனால் உள்ளப் புணர்ச்சி யுண்மையும் அறிக. பிறவும் அன்ன.*

*எஞ்சா மகிழ்ச்சி யிறந்துவரு பருவத்தும் என்பது*[1] *—ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன்கட் கூற்று நிகழும் என்றவாறு.*

**குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டலொடு**
**பனிவார் ஆவிரைப் பன்மலர் சேர்த்தித்**
**தாருங் கண்ணியுந் ததைஇத் தன்னிட்டு**
**ஊரும் மடவோன் உலர்வன் கொல்லென**
**நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந் திரங்கினும்**
**உணரா ளூர்தோ**
**றணிமடற் கலிமா மன்றத் தேறித்தன்**
**அணிநலம் பாடினும் அறியா ளென்றியான்**
**பெருமலை நெடுங்கோ டேறிப் பெறுகென்று**
**உருமிடித் தீயின் உடம்புசுடர் வைத்த**
**என்னுறு விழுமம் நோக்கிப் பொன்னொடு**
**திருமணி இமைக்குங் கோடுயர் நனந்தலை**
**இரவுடைப் பெண்டி ரிடும்பை நோக்கித்**
**தெளிவுமனங் கொண்ட தீதறு காட்சி**
**வெளியன் வேண்மான் விளங்குகரி போல**
**மலிகடல் உடுத்த மணங்கெழு நனந்தலைப்**
**பலபா ராட்டவும் படுவ மாதோ**
**கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட்**
**புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக்**
**காமர் நுழைநுண் நுசுப்பின்**
**தாமரை முகத்தியைத் தந்த பாலே. (குணநாற்பது)**

*எனவரும்.*

1. எஞ்சாமை—ஒழியாமை, இறந்துவருதல்—மிக்குத்தோன்றுதல்.

அஞ்சவந்த உரிமைக்கண்ணும்[1] என்றது— தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவிமாட்டு உளதாகிய கற்பாகிய உரிமைக்கண்ணும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

நன்னெறிப்படரும் தொன்னலப் பொருளினும் என்றது — நன்னெறிக்கட் செல்லாநின்ற தொன்னலப் பொருண்மைக் கண்ணும்[2] என்றவாறு.

நன்னெறியாவது அறம்பொருளின்பம் வழுவாத நெறி. தலைமகன் சிறப்புத் தொன்றுதொட்டு வருதலிற் குடிநலத்தைத் தொன்னலமென்றார். இதனாற் சொல்லியது அறம் பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கையைத் தலைமகள் நடத்துதற்கண்ணும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

**தடமருப் பெருமை ...காண்டும்மே —நற்றிணை (ளஉய)**

இதனுள் ஊடற்குறிப்பின ளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தரும மாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப் படர்தல் ஆயிற்று.

பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைப்பினும் என்றது-வரைந்து பெற்றவழித் தலைவியைப் பெருமையின் கண்ணே நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றஞ்சான்ற பொருளை யெடுத்துக் கூறியவழியும் என்றவாறு.

**அதிரிசை யருளிய பெருவரைத் தொடுத்த**
**பஃறேன் இறாஅல் அல்குநர்க் குதவு**
**நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென**
**நின்னோய்க் கியற்றிய வெறிநின் தோழி**

1. அஞ்ச வந்த உரிமையாவது, தலைமகள் அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்கள் உடனே விளையும் நிலையுணர்ந்து அயலார் அஞ்சி யொழுகுமாறு தலைவி மாட்டுளதாகிய நெஞ்சத்திண்மையாகிய மனைவாழ்க்கையுரிமை.

2. தொன்னலம் என்றது, தொன்று தொட்டு உளதாய்த் தொடர்ந்து நிலை பெற்றுவரும் தலைவனது குடிப்பிறப்பின் நலத்தினை.

**என்வயி னோக்கலிற் போலும் பன்னாள்**
**வருந்திய வருத்தந் தீரநின்**
**திருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே.**

இதனுள் 'நுந்தை நன்னாட்டு' என்றதனால் தலைவி பெருமையும், 'நின்னோய்க்கியற்றிய வெறி நின்தோழி யென்வயி னோக்கலிற் போலும்' என்றதனால் குற்றஞ்சான்ற பொருள் என்பதும் அறிந்து கொள்க.

நாமக் காலத் துண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்[1] என்பது – அச்சக்காலத்து நமக்குத் துணையாயிற் றெனத் தோழிஏமுறுகடவுளை ஏத்துதற்கண்ணும் தலைவன்கட் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

அல்லல்தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும்[2] என்பது — தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக்கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு. என்றது, களவுக்காலத்து வருந்திய வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின் கண்ணும் என்றவாறு.

**யாயும் ஞாயும் யாரா கியரோ... கலந்தனவே (குறுந்.40)**

எனவரும்.

சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந்தொடுத்தற்

---

1. நாமக் காலம்—தலைவன் வரும் வழியின் இடையூறுகளை யெண்ணித் தோழியும் தலைவியும் தலைவனுக்கு என்னநேருமோ என அஞ்சுதற்குரிய களவுக்காலம்.

உண்டு என—நமக்குத் துணையாய் நின்ற தொரு தெய்வம் உண்டு எனத் தெளிந்து.

ஏம் உறு கடவுள்—தன்னை நினைந்தார்க்குப் பாதுகாவலை உறும்படி தோன்றாத் துணையாய் நின்று உதவும் கடவுள்: நாமம்— அச்சம்; நாம் என்னும் உரிச்சொல் அம்முப்பெற்று நாமம் என்றாகியது, ஏம்—பாதுகாவல்; ஏமம்ஏம் எனக்குறைந்து நின்றது. ஏமம்—பாதுகாப்பு.

2. அல்லல்தீர ஆர்வமோடுஅளைஇச் சொல்லுறுபொருளாவது, களவுக் காலத்துத் தான் உற்ற துன்பமெல்லாம் நீங்கத் தலைமகன்பால், அன்பீனும் ஆர்வத்துடன் கலந்து தலைமகள்கூறும் இன்சொற்பொருண்மை.

கண்ணும் என்பது- யாதானும் ஒன்றை நுகரினும் நீ கையால் தொட்டது வானோர் அமிழ்தம் புரையும், இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுதற்கண்ணும் பூத்தொடுத்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், சாந்து முதலியனவும் கொள்க. உதாரணம் வந்த வழிக்காண்க.

**வேம்பின் பைங்காயென் தோழி தரினே**
**தேம்பூங் கட்டி** **(குறுந்.196)**

எனத் தலைவன் கூறினமை தோழி கூறுதலானும் அறிக.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் என்பது — பார்ப்பார்கண்ணும் சான்றோர்கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் குறிப்பினால் காட்டிய இடத்தினும் என்றவாறு.

உதாரணம் வந்த வழிக் கண்டுகொள்க.

ஒழுக்கத்துக் களவினுள்[1] நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமர லுள்ளமோ டளவியவிடத்தும் என்பது — ஒழுக்கத்தினுங் களவுக்காலத்துநிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழன்ற உள்ளத்தோடே உசாவிய விடத்தும் [2] என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான வந்த குற்றம் வழிகெட ஒழுகலும் என்பது — களவுக்காலத்தொழுகிய ஒழுக்கக் குறைப்

1. 'ஒழுக்கத்துக்களவினுள்' என்பதனைக் களவொழுக்கத்தினள் என விகுதி பிரித்துக்கூட்டுக.

2. களவினுள் நிகழ்ந்த அருமையை உள்ளமொடு அளவிய அலமரல் இடத்தும் என இயைத்துப் பொருள் கொள்க.

புலம்பு—தனிமை. அலமரல்—சுழற்சி. இதுகாறும் தானுற்ற துன்பங்கட்கு உசாத்துணைபெறாது தனித்துச் சுழன்ற உள்ளம் என்பார், புலம்பி அலமரல் உள்ளம் என அடைபுணர்த்தோதினார். அளவுதல்—இருவருள்ளமுங் கலந்து ஒன்றும் நிலையில் கலந்து உரையாடல்.

பாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்தெழுத்துப்போல வழிகெட ஒழுகுதற்கண்ணும் என்றவாறு.[1]

உதாரணம் வந்தவழிக் காண்க.

அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினுந் தானவட்பிழைத்த பருவத்தானும் என்பது- அழியல், அஞ்சல் என[2] இயற்கைப் புணர்ச்சிக்கட் கூறிய அவ்விருபொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது, புறப்பெண்டிர் மாட்டுப் பிரிதல்.

**‘நகுகம் வாராய்.......நின்றதுவே (நற்றிணை.250)**

எனவரும்.

நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப் பன்னன் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னினாகிய தகுதிக்கண்ணும் என்பது- பொறைமையும் பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆராய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னான் ஆகிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

அருளிப் பொருந்திக் கூறும் எனக் கூட்டுக. எனவே தலைமகன் என்பதூஉந் தலைமகள் என்பதூஉம் எஞ்சிநின்றன. கூற்று என்றது அதிகாரத்தான் வந்தது. அஃதாவது, பொறுத்தல் வேண்டும் எனவும் சிறுமைசெய்தல் குற்றம் எனவும் கூறுதலும், தலைமகள் தன்னால் வந்ததனை என்னால் வந்தது எனவும் இவ்வாறு கூறுதல். பன்னல் சான்ற வாயிலாவது, நீ என் செய்தனை? இவள் வெகுடற்குக் காரணம் என்னை? என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்க. பொருந்துதலாவது வேறுபடாது உடம்படுதல்.

---

1. உருவுடைய நீர்மேல் எழுதும் எழுத்து எழுதும் அவ்வளவிலாவது வடிவு பெற்றுத் தோன்றுதல் உண்டு. அருவாகிய ஆகாயத்தில் எழுதப்படும் எழுத்து எழுதப்படும் அந்நிலையிற்கூட வடிவுபெறாது அழிந்தொழியும் என்பார், ‘அந்தரத்து எழுதிய எழுத்தின்மான’ என்றார். அந்தரம்—ஆகாயம். மான—ஒப்ப; உவமவுருபு. ஆகாயத்தில் எழுதப்படும் எழுத்து வடிவுபெறா தொழிவதுடன் அதற்கிடமாகிய ஆகாயமும் புலனாகாது மறைதல்போல, களவுக்காலத்தில் தம்மிடையே நேர்ந்த குற்றங்கள் உருவற மறக்கப்படுவதோடு அவை நிகழ்தற்கு வழியாகிய சூழ்நிலைகளும் மறக்கப்பட்டுக்கெடுமாறு காதலர் இருவரும் அன்புமீதூர ஒழுகுதல் என்பார், ‘அந்தரத்து எழுதிய எழுத்தின்மான வந்த குற்றம் வழிகெட ஒழுகல்’ என்றார்.

2. அழியல், அஞ்சல் என்புழி, அல் வியங்கோள்விகுதி; எதிர்மறைக்கண் வந்தது.

*அவை வருமாறு: (திருக்குறள் 1314, 1318, 1315, 1319,1313 ) எனவரும். பிறவும் அன்ன.*

*புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ் செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்ணும்[1] என்பது- புதல்வனைப் பயந்த ஈன்றணிமை நீங்கின பொழுதின்கண் நெய்யணிமயக்கம் புரிந்தவளைக் குறித்து முனிவர்மாட்டும் அமரரைக் குறித்தும் செய்யாநிற்கும் பெரிய சிறப்பொடு சேர்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

*நெய்யணி மயக்கமாவது வாலாமை நீங்கி நெய்யணிதன் நோக்கிச் சேர்தல் எனக் கூட்டுக.*

**'வாராய் பாண நகுகம்.........புதைத்ததுவே' (நற்றிணை-970)**

*எனவரும்.*

*பயங்கெழு துணையணைப் புல்லிப்புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்[2] மெல்லென் சீறடி புல்லிய இரவினும் என்பது-தலைவன் பரத்தையிற் பிரிந்துழி ஊடற் கருத்தினளாய்ப் பயங்கெழுதுணை அணையைப் புல்லிப் புல்லாது வருந்திக் கிடந்த தலைவியைக் கிட்டித் தங்குதலைக் குறித்த நிறையழிபொழுதில் தலைவியது மெல்லென்ற சீறடியைப் புல்லிய இரத்தற்கண்ணும் (தலைவன் கூற்று நிகழும்) என்றவாறு.*

---

1. புனிறுதீர்பொழுது—புதல்வனைப் பெற்ற தலைவி ஈன்றணிமை நீங்கி உடல் தூய்மை பெறுதற்குரிய காலம். புனிறு—ஈன்றணிமை.

நெய்யணி மயக்கம் புரிந்தோள்—நெய்யணிதலாகிய கலப்பினைப் பெற்று நீராடி வாலாமை நீங்கி உடல்தூய்மை பெற்ற தலைவி, வாலாமை—மகவீன்று நீராடாமை யாலுளதாகிய தூய்தன்மை; தீட்டு.

ஐயர்—முனிவர். 'விண்செலல்மரபின் ஐயர்க்கேந்திய தொருகை' எனத் திரு முருகாற்றுப்படையில் ஐயர் என்னும் சொல் வியக்கத்தக்க முனிவர்களைக்குறித்து வழங்கியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தகுவதாகும். அமரர்—தேவர்.

2. அல்கல் முன்னிய பொழுது—(தலைவன் தலைவியுடன் நெருங்கித்) தங்குதலைக்கருதிய காலம்; இங்ஙனம் தலைவன் தலைவியுடன் தங்குதல் வேண்டும் எனக்கருதுதற்குத் தலைவியைத் தான் நீண்டநாட்கள் மெய்யுறாமையை எண்ணி ஆற்றா நிலைமைக்கண் தோன்றிய அவனது நிறையழிவே காரணம் என்பார், 'அல்கல் முன்னிய நிறையழிபொழுது' என்றார். அல்கல்—தங்குதல், முன்னுதல்—கருதுதல்.

**ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது**
**நீடுவ தன்றுகொல் என்று (குறள். 1307)**

**ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா (குறள். 1326)**

**ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி**
**வாடினும் பாடு பெறும் (குறள் 1322)**

*என வரும்.*

*உறலருங்குரைமையி [1]னூடன் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற்கண்ணும் என்பது-ஊடல் மிகுத்தோளை உறுதற்கருமையாற் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்தற் கண்ணும் என்றவாறு.*

**'புனவளர் பூங்கொடி யன்னாய்' என்னும் மருதக் கலியுள்,**
**ஒருத்தி புலவியாற் புல்லா திருந்தாள் அலவுற்று**
**வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக் காதலன்**
**தண்தார் அகலம் புகும். (கலி, 92)**

*எனப் பிறபிற பெண்டிரைக் காட்டித் தலைவன் ஊடலுணர்த்தியவாறு அறிந்து கொள்க.*

*பிரிவினெச்சத்துப் புலம்பிய விருவரைப் பரிவு நீக்கிய பகுதிக்கண்ணும் [2] என்பது. பிரிவு நிமித்தமாக வருந்திய மனை யாளையும் காமக்கிழத்தியையும் அவ் வருத்தத்து நின்று நீக்கிய பகுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு; அஃதாவது பிரியேன் என்றல்.*

**பொன்னும் மணியும்......பெரிதே (நற்றிணை 166)**

*இக்கூற்று இருவர்மாட்டும் ஒக்கும்.*

1. 'உறலருமையின்' எனற்பாலது, 'குரை' என்னும் அசைபெற்று உறலருங் குரைமையின்' என்றாயிற்று.

2. பிரிவின் எச்சத்து––பிரிவுகாரணமாக. எச்சம் என்றது, 'நிமித்தம்' என்ற பொருளில் ஆளப்பெற்றது.

புலம்புதல்—தனிமையுற்று வருந்துதல். இருவர் என்றது, தலைவி, காமக்கிழத்தி என்னும் இருவரை.

*நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்*[1] என்பது—நிலைநிற்க மிகப்பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோயின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

**'ஆள் வழக்கற்ற.....மறந்தே' (அகம்.51)** எனவரும்.

சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழியும் என்பது—மேற்கூறியவாறினைக் கையிகந்து[2] முன்னொருகாற் சென்று மீட்டும் அந்நெறியினைப் போக நினைந்தவழியும் கூற்று நிகழும் என்றவாறு.

**'இருங்கழி முதலை.....ஞான்றே.' (அகம்.3)** எனவரும்.

காமத்தின் வலியும் என்பது- பொருளினுங் காமம் வலியுடைந்து என உட்கொண்ட வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

**'விரிதிரைப் பெருங்கடல் ......வைகலோடெமக்கே'. (குறுந். 101)** எனவரும்.

கைவிடின் அச்சமும் என்பது- தலைவியைக் கைவிட்டவழி அவளது உயிர்ப்பொருட்டு அஞ்சுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

**'அளிநிலை பொறாஅது....... பிரிது நாமெனினே' (அகம்.5)** என வரும்

தானவட்பிழைத்த நிலையின்கண்ணும் என்பது-தலைவன் தலைவியை நின்னிற் பிரியேன் என்ற சொல்லிற் பிழைத்த நிலையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. பிழைத்தலாவது பிரிதல்.

**'வயங்குமணி'.......பொதியிலானே' (அகம்.167)** எனவரும்.

உடன் சேறற் செய்கையொடு என்பது-உடன்போகவேண்டு மெனச் சொல்லியவழியும் என்றவாறு. ஒடு எண்ணின்கண் வந்தது.

'செருமிகுசினவேந்தன்' என்னும் பாலைக் கலியுள்.

---

1. நின்று நனி பிரிவு——புணர்வின்றி நிற்க நெடுநாட் பிரிந்துறைதலாகிய பிரிவு பையுள்—வருத்தம்; நோய்.

2. மேற்கூறிய ஆறினைக் கையிகந்து—மேற்குறித்த நடத்தற்கரிய வழியினைக் கடந்து.

**“எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத் தோய்ந்தவைபோலக்
கல்லுறின் அவ்வடி சறுக்குந அல்லவோ” (கலித்.13)**

என வரும்.

அன்னவை பிறவும் மடம்பட வந்த தோழிகண்ணும் என்பது— மேற்சொல்லப்பட்டவையிற்றினும் மடமைபட வந்த தோழி மாட்டும் கூற்று நிகழும் என்றவாறு.
அவையாவன:

**“இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ”
(கலித்; 2)**

எனவரும்.

இந்நிகரன கூறியவழித் தலைவன் கூற்று நிகழும். இவ்வழிக் கூறுங் கூற்றுக் காமமாகத் தோன்றாது பொருளாகத் தோன்றும்; காமத்திற்கு மாறாகக் கூறல் வேண்டுதலின்,

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண் (குறள். 615)**

என வரும்.

வேற்றுநாட் டகல்வயின் விழுமத்தானும் என்பது- வேற்று நாட்டு அகலும்வழி வரும் நோயின்கண்ணும் என்றவாறு.

அஃதாவது, பிரிவு ஒருப்பட்ட பின்பு போவேமோ தவிர்வேமோ எனச் சொல்லும் மனநிகழ்ச்சி.

**“உண்ணாமையின்.......பொருட்கே” (அகம். 123)**

என வரும்,

மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும் என்பது- பிரிந்த தலைவன் மீட்டு வரவு வாய்ந்த வகையின் கண்ணும் என்றவாறு.

‘வரவு’ என்பது கடைகுறைந்தது.

**“தாழிருள்.....மெல்லணையேமே. (குறுந் 270)**

இது வந்து புகுந்த தலைவன் கூற்று.

*அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும் என்பது- தலைவன் பிரிந்துழிப்* [1] *பெருகிய சிறப்பினும் கூற்று நிகழும் என்றவாறு.*

**கோடல் எதிர்.....இனியே** **(குறுந்.62)**

*எனவரும்.*

*காமக் கிழத்தி மனையோ ளென்றிவ ரேமுறு கிளவி சொல்லிய வெதிரும் என்பது- காமக்கிழத்தியும் மனையாளும் என்று சொல்லுமிருவரும் பாதுகாவலாகக் கூறிய கூற்றினெதிரும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.*

*இவ்விருவரும் இல்லுறை மகளிராதலின், தலைவன்மாட்டு நிகழுமவை இருவருக்கும் ஒக்கும் என்க.*

*அஃதாவது வழிவந்தவா றென்னை யெனவும் வருத்தமுற்றீ ரெனவும் இந்நிகரன பல கூறுதல்.*

**எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை**
**அரிய வாயினும் எளிய அன்றே**
**அவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்**
**கடுமான் திண்டேர் கடைஇ**
**நெடுமா னோக்கிநின் உள்ளியாம் வரவே.** **(ஐங்குறு.960)**

*என வரும்.*

*சென்ற தேஎத் துழப்பு நனிவிளக்கி யின்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும் என்பது—தான் சென்ற தேயத்து வருத்தத்தை மிகவும் விளக்கித் தலைவியை யொழித்துச் சென்ற தன்னிலைமை கிளப்பினும் கூற்று நிகழும் என்றவாறு.*

**“ஒழித்தது பழித்த....... புலத்தியால் எம்மே”** **(அகம். 39)**

*எனவரும்.*

*அருந்தொழின் முடித்த செம்மற் காலை விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும் என்பது—அரிய வினையை முடித்து*

1. ‘பிரிந்துழி’ என்பது ‘பிரிந்துவந்துழி’ என்றிருத்தலே பொருட்பொருத்த முடையதாகும்.

வந்த தலைமைக்காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் கிளத்தி விருப்பமுறுதற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

மாலை ஏந்திய பெண்டிரு மக்களுங் கேளி ரொழுக்கத்துப் புகற்சிக்கண்ணும் என்பது—தலைவனை எதிர்கொண்டு மங்கலமாக மாலையேந்தி நின்ற பெண்டிரும் மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

கேளிரும் என்னும் உம்மை எஞ்சி நின்றது. ஈண்டு ஒழுக்க மாவது—சொல்லாது பெயர்ந்தீர் என்றானும், இளமையும் காமமும் நோக்காது பெயர்ந்தீர் என்றானும் கூறி இதற்குக் காரணம் என்னை எனத் தலைவன் வந்துழி அவர் நிகழ்த்தும் நிகழ்ச்சி

**உள்ளினெ னல்லனோ .......கொளவே (குறுந். 99)**

ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇ என்பது — பெண்டிரு மல்லாத வாயில்களாயினார் எதிர் கூறும் கூற்றும் தலைவன் மாட்டு நிகழும் என்றவாறு.

இவை யெல்லாம் காமப்பொருளாகத் தோன்றா; அவர் செயல் பொருளாகத் தோன்றும்.

உதாரணம் வந்த வழிக் காண்க.

பண்ணமை பகுதிப் பதினொரு மூன்றும்[1] எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன என்பது- செய்தலமைந்த பகுதியினை யுடைய முப்பத்துமூன் றிடத்தினும் நிகழும் கூற்று மிக்க சிறப்பினை யுடைய கிழவோன் மேலன என்றவாறு.

மிக்க சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றமையால், மிகாத சிறப்பினையுடையார் மாட்டு இவையெல்லாம் ஒருங்கு நிகழ்தலில் என்று கொள்க. செயலமை பகுதி என்றதனான். இவ் விடங்களின் வரும் பொருள் வேறுபாடுகட்கும் இவையே இடமாகக் கொள்க. (5)

1. பண்ணமை பகுதி—செயல்வகைக் கூறுபாடுபற்றிய பகுதி. 'முப்பதினொரு மூன்றும்' எனத்திருத்திக்கொள்க. 'முப்பதினொருமூன்று' என்னுந் தொகை தலைவன் கூற்று நிகழ்த்தற்குரிய இடங்களை எண்ணித் தொகுத்த தொகையாகும்.

***நச்சினார்க்கினியம் :*** *இது, பார்ப்பார் முதலிய பன்னிரு வருங் (501-2) கற்பிடத்துக் கூற்றிற்கு உரியராயினும் அவருள் தலைவன் சிறந்தமையில் அவன் கூற்றெல்லாம் தொகுத்துக் களவிற் கூறியாங்கு முற்கூறுகின்றது.*

*(இ—ள்) கரணத்தின் அமைந்து முடிந்த காலை—ஆதிக் கரணமும் ஐயர் யாத்த கரணமுமென்னும் இருவகைச் சடங்கானும்[1] ஓர் குறைபாடின்றாய் மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளிசெய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்தகாலத்து:*

*ஆன்றோராவார், மதியுங் கந்தருவரும் அங்கியும்.*

*நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும் — களவிற் புணர்ச்சிபோலுங் கற்பினும் மூன்று நாளுங் கூட்டமின்மை யானும் நிகழ்ந்த மனக்குறை தீரக்கூடிய கூட்டத்தின் கண்ணும்.[2]*

---

1. 'ஆதிக்கரணம்' என்றது, வேதநூல் மேலோர் மூவர்க்கும் வகுத்த கரணம் எனவும், 'ஐயர் யாத்தகரணம்' என்பது, பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் இருடிகள் வகுத்த ஆரிடமாகிய கரணம் எனவும் நச்சினார்க்கினியர் பகுத்துரைக்கும் இப்பகுப்புக்குத் தொல்காப்பிய நூற்பாக்களில் ஆதாரமில்லை. இப்பகுப்பு வடநூல் கூறும் நால்வகை வருணவேறுபாடுகளை யுளங்கொண்டு நச்சினார்க்கினியர் தாமே வகுத்தமைத்துக்கொண்ட புதுப்படைப்பாகும் என்பது, இப்பகுதிக்கு அமைந்த இளம்பூரணருரையுடன் நச்சினார்க்கினியர் உரையினை ஒப்பிட்டு ஆராய்வார்க்கு எளிதிற் புலனாகும்.

'கரணத்தின் அமைந்து முடிந்தகாலை' எனவரும் தொல்காப்பிய அடிக்கு, "ஆதிக்கரணமும் ஐயர் யாத்த கரணமும் என்னும் இருவகைச்சடங்கானும் குறைபாடின்றாய் மூன்றிரவின் முயக்கம் இன்றி மதியும் கந்தருவரும் அங்கியும் ஆகிய ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்தொழுகி நான்காம் பகலெல்லை முடிந்த காலத்து" என நச்சினார்க்கினியர் தாம் வேண்டிய சொற்களையும் நிகழ்ச்சிகளையும் புகுத்தி எழுதிய உரை, அவரது உள்ளத்தில் ஊறிய வைதிகச் சடங்கினை வெளிப்படுத்தியதாகுமேயன்றி அவர்க்குப் பன்னூறாண்டு முற்பட்ட தொல்காப்பியனார் கருத்தை வெளிப்படுத்தியதாகாமை எல்லார்க்கும் புலனாவதொன்றாம். 'கரணத்தின் அமைந்து முடிந்த காலை' எனவரும் தொல்காப்பியத்தொடர், 'ஆன்றோர் வகுத்த கரணத்தினால் திருமணம் நிறைவேறிய பின்பு' என்ற அளவிலேயே பொருள்தரும் என்பது, 'ஆசான்புணர்த்த சுரணத்தினால் வதுவை முடிந்த பின்' எனவரும் இளம்பூரணருரையால் இனிது புலனாம்.

2. "களவிற்புணர்ச்சி போலுங் கற்பினும் மூன்று நாளுங்கூட்ட மின்மை யானும்" எனவரும் இவ்வுரைத்தொடர் களவில் பூப்புத் தோன்றிய மூன்று நாட்களும் கூட்டமில்லாதவாறு போலக் கற்பினும் அம்மூன்றுநாளும் கூட்டமின்மையையுணர்த்தப் பயன்படுமேயன்றித் தேவர் மூவர் காரணமாகக் கற்பின் தொடக்கத்து மூன்று நாட்கள் கூட்டமில்லாதிருந்து அம்மனக்குறை தீர

*அது நாலாம் நாளை யிரவின் கண்ணதாம்.*

**விரிதிரை......வைகலொ டெமக்கே.** (குறுந் 101)

*இது நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சி.*

**"முகனிகுத் தொய்யென விறைஞ்சி யோளே"** (அகம். 86)

*என முற்காட்டியது கரணத்தின் அமைந்து முடிந்தது.*

*எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும் - அதன் பின்னர் ஒழியாத மகிழ்ச்சி பலவேறு வகையவாகிய நுகர்ச்சிக்கட் புதிதாக வந்த காலத்தினிடத்தும்:*

**அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்**
**செறிதோறுஞ் சேயிழை மாட்டு.** (குறள்.1110)

*என்றது பொருள்களை உண்மையாக உணர்ந்த இன்பத்தை அறியுந்தோறும் அவற்றை முன்னர் இவ்வாறு விளங்க உணராத அறிவின்மையை வேறுபடுத்துக் கண்டாற்போலுஞ் சேயிழை மாட்டுச் செறியுந்தொறுந் தலைத்தலை சிறப்பப் பெறுகின்ற காமத்தை முன்னர் அறியப்பெற்றிலேமென்று வேறுபடுத்த லென்றவாறு*[1]

*அஞ்ச வந்த உரிமைக்கண்ணும் - தலைவனும் பிறரும் அஞ்சும்படி தலைவிக்கட் டோன்றிய உரிமைகளிடத்தும்.*

*அவை இல்லறம் நிகழ்த்துமாறு தன் மனத்தாற் பலவகையாகக் காணலும் பிறர்க்குத் தான் கொடுத்தலுங் கற்புச் சிறத்தலுமாம்.*

**உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்**
**வள்ளன்மை பூண்டான்க ணொண்பொருள்—தெள்ளிய**
**ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ**
**நாணுடையாள் பெற்ற நலம்.** (நாலடி. 38-6)

---

நாலாம் நாளையிர வின்கண் கூடுதல் வேண்டும் என்னும் வைதிகச் சடங்கிற்குக் காரணமாதல் பொருந்தாது; கற்பினும் இம்மூன்று நாட்கள் விலக்கப்படுதல் இயல்பாதலின் என்க.

1. 'அறிதோறறியாமை' (1110) எனவரும் இத்திருக்குறளுக்கு அமைந்த இவ்வுரை, நச்சினார்க்கினியரால் எழுதப்பெற்று இதுவரை கிடைக்கப்பெறாத திருக்குறளுரையின் சிறப்பினைப் புலப்படுத்துவதாகும்.

*இதனுள் நலமென்றது இம்மூன்றினையும்.[1] தலைவி இல்லறப் பகுதியை நிகழ்த்துமாறு பலவகையாகக் காணும் தன்மை உணர்வுடையோன் ஓதிய நூல் விரியுமாறுபோல விரியா நின்றதெனவும், இவள் கொடைநலம் வள்ளன்மை பூண்டான் பொருளனைத்தெனவும், இவளது கற்புச்சிறப்புப் பிறர்க்கு அச்சஞ் செய்தலின் வாளனைத்தெனவுந் தலைவன் அவளுரிமைகளை வியந்து கூறியவாறு காண்க.*

*நன்னெறிப் படரும் தொல் நலப் பொருளினும் - இல்லறத்திற்கு ஓதிய நெறியின்கண்[2] தலைவி கல்லாமற் பாகம்பட ஒழுகுந்*

*தொன்னலஞ் சான்ற பொருளின் கண்ணும்:*

*பொருள்வருவாய் இல்லாத காலமும் இல்லற நிகழ்த்துதல் இயல்பாயிருத்தற்குத் தொன்னலமென்றார்.*

**குடநீரட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்**
**கடல் நீர் அறவுண்ணுங் கேளிர் வரினுங்**
**கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள். (நாலடி 382)**

*இஃது ஒரு குடம் நீராற் சோறமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் மனைக்கு மாட்சிமையுடையாள் கடல் நீரைவற்ற உண்ணுங் கேளிர் வரினும் இல்லற நிகழ்த்துதலைக் கைக்கு நெறியாகக் கொள்ளுமெனத் தலைவன் வியந்து கூறினான்.*

*பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்து உரைப்பினும்-தலைவி அங்ஙனம் உரிமை சான்ற இடத்து அவளைப் பெருமையின்கண்ணே நிறுத்திக் குற்றமமைந்த களவொழுக்கத்தை வழுவியமைந்த பொருளாகக் கேளிர்க்காயினும் பிறர்க்காயினும் உரைப்பினும்;*

1. இங்கு மூன்று என்றது, இல்லறம் நிகழ்த்துமாறு தன்மனத்தாற் பல வகையாகக் காணல், பிறர்க்குத் தான் கொடுத்தல், கற்புச் சிறத்தல் என மேற்குறித்த மூவகை நலங்களையும். நாலடியார் **386 –** ஆம் பாடலின் பொருள் நயத்தினை விளக்கும் முறையில் இவ்வுரைப்பகுதியமைந்துளது.

2. 'நன்னெறி' என்றது, நல்லறங்கள் எல்லாவற்றுக்கும் வழியாக அமைந்த இல்லறத்தினை. 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை'' **(49)** என்பது திருக்குறள். படர்தல் – பற்றிப்பணிந்தொழுகுதல்.

'தொன்னலம்' –என்றது, பிறர்கற்பித்தலின்றியே தலைமகள்பால் இயல்பாகத் தேசன்றி நிகழும் மனையுரிமை ஒழுகலாற்றினை.

*அது களவொழுக்கத்தையும் தீய ஓரையுள்ளுந் துறவாது ஒழுகிய குற்றத்தையும் உட்கொண்டும் அதனைத் தீதென்னாமற் கூறுதலாம்.*

**நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்**
**மேலாறு மேலுறை சோரினும்—மேலாய**
**வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்**
**இல்லாள் அமைந்ததே இல். (நாலடி.38-3)**

*இதனுள் மனைவி அமைந்துநின்ற இல்நிலையே[1] இல்லற மாவதெனவே யாம் முன்னரொழுகிய ஒழுக்கமும் இத்துணை நன்மையாயிற்று என்றானாயிற்று. இது குறிப்பெச்சம்.*

*நாமக்காலத்து உண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் (தோழி நாமக்காலத்து ஏமுறு கடவுள் உண்டென ஏத்தி மருங்கினும்) - தோழி இன்னது விளையுமென்று அறியாது அஞ்சுதலையுடைய களவுக்காலத்தே யாம் வருத்தாதிருத்தற்குக் காரணமாயதோர் கடவுள் உண்டு எனக்கூறி அதனைப்பெரிதும் ஏத்திய இடத்துத் தலைவன் வதுவைகாறும் ஏதமின்றாகக் காத்த தெய்வம் இன்னும் காக்குமென்று ஏத்துதலும்;*

*அது,*

**"குனிகா யெருக்கின் குவிமுகிழ்......**
**தாமரை முகத்தியைத் தந்த பாலே."**

*என்னுங் குணநாற்பதில்[2] ஏமுறு கடவுளைத் தலைவன் தானே ஏத்தியது போலாது,*

**"நேரிழாய் நீயும்நின் கேளும் புணர**
**வரையுறை தெய்வம் உவப்பஉவந்து**
**குரவை தழீஇயாம் ஆடக் குரவையுள்**
**கொண்டு நிலைபாடிக் காண்" (கலி.39)**

1. இந்நிலையே. பா. வே.

2. இங்கு மேற்கோளாகக் காட்டப்பெறும் குணநாற்பது என்னும் நூல் கணவன் மனைவி என்னும் இருவரது அன்பின் வழிப்பட்ட இல்லறப்பண்பினை எடுத்துரைக்கும் நாற்பது பாடல்களைத் தன்னகத்தேகொண்ட இலக்கியம் எனக்கருத வேண்டியுளது.

*எனத் தான் பராய தெய்வத்தினைத் தோழி கற்புக்காலத்துப் பரவுக்கடன் கொடுத்தற்கு ஏத்தியவழித் தலைவனும் ஏத்துதலாம்.*

**அதிரிசை அருவி அருவரைத் தொடுத்த**
**பஃறேன் இறாஅல் அல்குநர்க் குதவும்**
**நுந்தைநன் னாட்டு வெந்திறன் முருகென**
**நின்னோய்க் கியற்றிய வெறிநின் தோழி**
**என்வயின் நோக்கலின் போலும் பன்னாள்**
**வருந்திய வருத்தந் தீரநின்**
**திருந்திழைப் பனணத்தோள் புணர்ந்துவந் ததுவே.**

*தேன் இறாலை அல்குநர்க்கு*[1] *உதவும் நாடாதலின் நின் நோய்க்கு இயற்றிய வெறி நுமக்குப் பயன்படாது எமக்குப் பயன்றருமென்றோன் என்வயின் நோக்கலின் என்றது, எனக்குப் பயன் கொடுக்கவேண்டுமென்று பராவுதலிற் றோளைப் புணர்ந்து உவந்தது என்றான்*[2]*. இது கற்புக்காலத்துப் பரவுக்கடன் கொடுக்கின்ற காலத்துத் தலைவன் கூறியது.*

*அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும் - வரைந்த காலத்து மூன்றுநாட் கூட்டமின்மைக்குக் காரண மென்னென்று தலைவி மனத்து நிகழாநின்ற வருத்தந் தீரும்படி மிக்க வேட்கையோடு கூடியிருந்து வேதஞ்சொல்லுதலுற்ற பொருளின்கண்ணும்; தலைவன் விரித்து விளங்கக் கூறும்*

*அது, முதனாள் தண்கதிர்ச் செல்வற்கும், இடைநாள் கந்தருவர்க்கும், பின்னாள் அங்கியங் கடவுட்கும் அளித்து, நான்காநாள் அங்கியங் கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர வேண்டிற்று, அங்ஙனம் வேதங் கூறுதலால் எனத் தலைவிக்கு விளங்கக் கூறுதல். உதாரணம் இக்காலத்தின்று.*[3]

---

1. அல்குநர்–விருந்தினராய் வந்து தங்குவோர்.

2. ''தேன் இறாலை அல்குநர்க்கு உதவும் நாடாதலின் நின்நோய்க்கு இயற்றிய வெறி நுமக்குப் பயன்படாது எமக்குப் பயன்தரும் என்றான். என் வயின் நோக்கலின் என்றது, எனக்குப் பயன் கொடுக்க வேண்டுமென்று பராவுதலிற் றோளைப் புணர்ந்து உவந்தது என்றான்.'' என்றிருத்தல் வேண்டும்.

3. ''அல்லல்தீர ......சொல்லுறு பொருளின் கண்ணும்'' என்பதற்கு வைதிக வதுவைச் சடங்கினையுளங்கொண்டு உரை வரைந்த நச்சினார்க்கினியர், தாம் கூறும்

*சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கைதொட்டது வானோர் அமுதம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந் தொடுதற் கண்ணும் அமுதிற்கு மாறாகிய நஞ்சை நுகரினும்*[1] *நீ கையால் தீண்டின பொருள் எமக்கு உறுதியைத் தருதலின் தேவர்களுடைய அமிர்தத்தை ஒக்கும் எமக்கெனப் புனைந்துரைத்து இதற்குக் காரணங் கூறென்று அடிசிலும் பூவுந் தலைவி தொடுதலிடத்தும்; கூற்று நிகழும்.*

*உம்மை இழிவு சிறப்பு.*

**வேம்பின் பைங்காயென் றோழி தரினே**
**தேம்பூங் கட்டி யென்றனிர்** **(குறுந். 196)**

*எனத் தலைவன் கூற்றினைத் தோழி கொண்டு கூறியவாறு காண்க.*

*அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும் ஒழுக்கங் காட்டிய குறிப்பினும். வேட்பித்த ஆசிரியனுங் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப்பார் கண்ணும், முற்ற உணர்ந்து ஐம்பொறியையும் அடக்கியோர் கண்ணும், முடிவில்லாச் சிறப்பினையுடைய தேவர்கள் கண்ணும்*[2] *ஒழுகும் ஒழுக்கத்தினைத் தான் தொழுதுகாட்டிய குறிப்பின் கண்ணும்:*

*'பிறர்பிற' ரென்றார் தேவர் மூவரென்பதுபற்றி. தன்னையன்றித் தெய்வந் தொழாதாளை இத் தன்மையோரைத் தொழல் வேண்டுமென்று தொழுது காட்டினான். குறிக்கொளுங் கூற்றால் உரைத்தலிற் குறிப்பினுமென்றார். உதாரணம் வந்துழிக் காண்க.*

---

பொருட்குத் தமிழில் இலக்கியங் காணாமையின், ''உதாரணம் இக்காலத்து இன்று'' என்றார். இளம்பூரணர் கூறும் உரைக்கு இலக்கியம் உண்மையின் அதுவே தொல்காப்பியனார் கருத்தாதல் நன்கு துணியப்படும்.

1. ஏனது – ஏனையது; யாதாயினும் ஒன்று என்பது பொருள். 'வானோரமுதம்' என்னும் சொற்குறிப்பினால் 'ஏனது' என்பதற்கு 'அமுதிற்கு மாறாகியநஞ்சு' எனப் பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர்.

2. ''அந்தணர் என்போர் அறவோர்'' (திருக்குறள் – 30) என்னும்பொது மறைப்படி, 'எல்லாவுயிர்களிடத்தும் அழகிய தண்ணளியுடையராகிய அறவோர் எனப் பொருளுரைத்தலே பொருத்தமுடையதாகும்.

சான்றோராவார், முற்றவுணர்ந்து ஐம்பொறிகளையடக்கியொழுகும் சால்புடைய பெருமக்கள்.

அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் ஆவார், முடிவில்லாத சிறப்பினைடைய தேவர்கள் மூவர் என்பர் நச்சினார்க்கினியர்.

ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும். வணக்கஞ்செய்தும் எதிர் மொழியாது வினாயவழிப் பிறராற் கூற்று நிகழ்த்தியும் எதிர்ப்பட்டுழி எழுந்தொடுக்கியும் தான் அக்காலத்து ஒழுகும் ஒழுக்கத்திடத்து முன்னர்க் களவுக்காலத்து நிகழ்ந்த கூட்டத் தருமையைத் தனித்துச் சுழலுதலையுடைய உள்ளத்தோடே உசாவிய இடத்தும் தலைவற்குக் கூற்று நிகழும்.

உதாரணம் வந்துழிக் காண்க. "கவவுக் கடுங்குரையள்" (குறுந். 132) என்பது காட்டுவாரும் உளர்.[1]

அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வந்த குற்றம் வழி கெட ஒழுகலும் (வந்த குற்றம் அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வழிகெட ஒழுகுதலும்) - களவுக்காலத்து உண்டாகிய பாவம் ஆகாயத்தெழிய எழுத்து வழிகெடுமாறு போல வழி கெடும்படி பிராயச்சித்தஞ் செய்து ஒழுகுதற்கண்ணும்:

அது முன்புபோலக் குற்றஞ்சான்ற பொருளை வழுவமைத்துக் கொள்ளாது குற்றமென்றே கருதிக் கடிதலாம்.

**"பொய்யற்ற கேள்வியால் புரையோரைப் படர்ந்துநீ**
**மையற்ற படிவத்தால்"** **(கலி. 15)**

என்றவழி 'மையற்ற படிவம்'[2] எனத் தலைவன் கூறியதனைத் தோழி கூறியவாறு காண்க.

அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்[3] - வந்த குற்றம் நினக்கு உளதென்று அழியலெனவும் எனக்குளதென்று அஞ்சலெனவுஞ் சொல்லப்படும் அவ்விருபொருண்மைக்கண்ணும்:

---

1. இளம்பூரணர் உரையில் 'கவவுக்கடுங்குரையள்' (குறுந் – 132) என்ற பாடல் உதாரணமாகக் காட்டப் பெறாமையின், இதனை உதாரணமாகக் காட்டிய வேறோர் உரை இக்கற்பியலுக்கு இருந்ததெனத் தெரிகிறது.

2. மையற்றபடிவம் – மாசற்றவிரதம்.

3. 'அழியல் அஞ்சலென் றாயிருபொருளினுந், தானவட்பிழைத்த பருவத்தானும்' என்பதனை ஒரு தொடராகவே கொண்டார் இளம்பூரணர். இதனை 'அழியல் அஞ்சல் என்று ஆயிருபொருளினும்' எனவும், 'தான் அவட்பிழைத்த பருவத்தானும்' எனவும் இருதொடராகக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

*இவை இரண்டாகக்கொள்ளின் முப்பத்துநான் காமாதலின் இருவர் குற்றமுங் குற்றமென ஒன்றாக்கியது. தெய்வத்தினாதலின் ஏதம் பயவாதென்றான்*

**யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சந் தாங்கலத் தனவே. குறுந். (40)**

*இது நம்மானன்றி நெஞ்சந் தம்மில் தாங் கலத்தலின் தெய்வத்தான் ஆயிற்றெனத் தெருட்டியது.*

*தான் அவட் பிழைத்த பருவத்தானும் - அங்ஙனந் தெய்வத்தினான் ஆயிற்றேனுங் குற்றமேயன்றோ என உட்கொண்ட அவட்கு யான் காதன்மிகுதியாற் புணர்ச்சி வேண்ட என் குறிப்பிற் கேற்ப ஒழுகினையாகலின் நினக்கோர் குற்றமின்றென்று தான் பிழைத்த பருவமுணர்த்தும் இடத்தும்; கூற்று நிகழும்.*[1]

**நகைநீ கேளாய் தோழி தகைபெற**
**நன்னாட் படராத் தொன்னிலை முயக்கமொடு**
**நாணிழுக் குற்றமை யறிகுநர் போல**
**நாங்கண் டனையநங் கேள்வர்**
**தாங்கண் டனைய நாமென் றோரே.**

*இதனுள் நன்னாள் வேண்டுமென்னாது கூடிய கூட்டத்துள் தங்கி நாணுச் சுருங்கி வேட்கை பெருகிய நம்மினும் ஆற்றாராயினார் போல நாங் குறித்துழி வந்தொழுகிய தலைவர் தாங் குறித்தனவே செய்தனமென நமக்குத் தவறின்மை கூறினாரெனத் தோழிக்குத் தலைவி கூறியவழித் தலைவன் பிழைப்புக் கூறியவாறு காண்க.*

1. 'தான் அவட்பிழைத்த பருவத்தானும்' என்பதற்குப் புதுப்பொருள் கூறிய நச்சினார்க்கினியர் தம் பொருளுக்கு உதாரணமாகக்காட்டிய 'நகை நீ கேளாய், என்ற பாடல் எந்த நூலில் உள்ளது என இடஞ்சுட்டவில்லை.

*நோன்மையும் பெருமையும்மெய்கொள[1] அருளிய பன்னல் சான்ற வாயிலொடு[2] பொருந்தித் தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்:* தன்னின் ஆகிய நோன்மையும் பெருமையும் மெய் கொள - தலைவனான் உளதாகிய பொறையையுங் கல்வி முதலிய பெருமையையும் உடைய மகவைத் தலைவி தன் வயிற்றகத்தே கொள்கையினாலே; பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தி அருளிய தகுதிக்கண்ணும் - வேதத்தை ஆராய்தல் அமைந்த அந்தணரோடு கூடி இருத்தற்குச் செய்யத்தகுஞ் சடங்குகளைச் செய்த தகுதிப்பாட்டின்கண்ணும்:

'தன்னினாகிய மெய்' - கருப்பம். அவிப்பலிகொள்ளும் அங்கியங்கடவுட்கும் அது கொடுக்குந் தலைவற்கும் இடையே நின்று கொடுப்பித்தலின் அந்தணரை வாயிலென்றார்.

**ஆற்றல் சான்ற தாமே யன்றியும்**
**நோற்றோர் மன்றநங் கேளிரவர் தகைமை**
**வட்டிகைப் படூஉந் திட்ட மேய்ப்ப**
**வரிமயி ரொழுகுநின் அவ்வயி றருளி**
**மறைநவில் ஒழுக்கஞ் செய்தும் என்றனர்**
**துனிதீர் கிளவிநம் தவத்தினும்**
**நனிவாய்த் தனவால் முனிவர்தஞ் சொல்லே.**

இதனுள், நந்தலைவரேயன்றிச் சுற்றத்தாரும் நோற்று ஒரு கருப்பந் தங்கிய நினது வயிற்றைக்கண்டு உவந்தெனவும்[3]

1. மெய் – மகவு. கொள்ளுதல் – வயிற்றகத்தேகருவாக ஏற்றுக் கொள்ளுதல். 'மெய்கொளவருளி' என்பதே இளம்பூரணர்கொண்ட பாடம்.' 'மெய்கொளவருளிய' என நச்சினார்க்கினியருரையிற் காணப்படும் பாடம் பொருத்த முடையதாகத் தோன்றவில்லை.

2. 'பன்னல் சான்றவாயில்' என்பதற்கு 'வேதத்தை ஆராய்தல் அமைந்த அந்தணர்' எனப்பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். கற்பியலிற் கூறப்படும் வாயில்களுள் பார்ப்பார் குறிக்கப்பட்டனரேயன்றி அந்தணர் என்போர் குறிக்கப்பெற்றிலர். தலைவி கருப்பமுற்ற காலத்துத் தலைவன் அந்தணருடன் கூடிச் சடங்கு செய்தான் என்பதற்கு நச்சினார்க்கினியர் காட்டிய பாடல் சங்கத்தொகை நூல்களில் இல்லாத புதிய பாடலாகும். எனவே "பன்னல் சான்றவாயில் ஆவது, நீ என் செய்தனை? என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்க" என இளம்பூரணர் கூறிய பொருளே தொல்காப்பியனார் கருத்துக்குப் பொருத்தமுடையதாதல் நன்கு துணியப்படும்.

3. உவந்தனரெனவும் என்றிருத்தல் பொருந்தும்,

*அதற்கேற்ற சடங்கு செய்துமென்றா ரெனவும், முற்காலத்து நாங் கேட்ப நமக்குக் கூறிய முனிவர் சொல்லும் உண்மையாயிற்றெனவுங் கூறியவாறு காண்க. தலைவன் கூற்று வந்துழிக் காண்க.*

*புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதின் - அங்ஙனஞ் சிறப் பெய்திய புதல்வனைப் பெற்ற ஈன்றணுமை சேர்ந்த காலத்தே:*

*நெய் அணி மயக்கம் புரிந்தோள் நோக்கி - சுற்றக் குழாத்துடனே வாலாமை வரைதலின்றி எண்ணெயாடும் மயக்கத்தை விரும்பிய தலைவியை முகமனாகக் கூறுதலைக் குறித்து :*

*ஐயர் பாங்கினும் - முனிவர் மாட்டும்:*

*அமரர்ச் சுட்டியும் - தேவர்கள் புதல்வனைப் பாதுகாத்தலைக் கருதியும்:*

*செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும் - அக்காலத்துச் செய்யும் பெரிய சிறப்புக்களைக் குறித்த மனத்தோடே சென்று சார்தற்கண்ணும் :*

*சிறப்பாவன: பிறந்த புதல்வன் முகங்காண்டலும் ஐம்படை பூட்டலும் பெயரிடுதலும் முதலியனவும், எல்லா முனிவர்க்குந் தேவர்க்கும் அந்தணர்க்குங் கொடுத்தலும். சேர்தல் கூறவே, கருப்பம் முதிர்ந்த காலத்துத் தலைவன் பிறரொடு கூட்டமுண்மையுங் கூறிற்றாம். ஆண்டுத் தோழி கூறுவனவும் 'ஒன்றென முடித்த' லாற் கொள்க.*

**"வாராய் பாண........கைபுதைத் ததுவே." (நற்றிணை.370)**

*இது நெய்யணி மயக்கம் பற்றித் தலைவன் கூறியது.*

**"நெடுநா வொண்மணி கடிமனை இரட்டக்**
**குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்**
**பெரும்பாண் காவல் பூண்டென வொருசார்த்**
**திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப**
**வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்**
**புனிறுநாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச**
**ஐயவி அணிந்த நெய்யாட் டீரணிப்**
**பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்**

**சீர்கெழு மடந்தை ஈரிமை பொருந்த**
**நள்ளென் கங்குல் கள்வன் போல**
**அகன்றுறை யூரனும் வந்தனன்**
**சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே. (நற்றிணை. 40)**

*இது, முன் வருங்காலத்து வாராது, சிறந்தோன் பெயரன் பிறத்தலான் வந்தானெனத் தோழி கூறினாள்.*

**குவளை மேய்ந்த குறுந்தாள் எருமை**
**குடநிறை தீம்பால் படூஉ மூர**
**புதல்வனை ஈன்றிவ ளெய்யா டினளே.**

*இதுவும் அது.*

*பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப் புல்கு என முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென் சீறடி புல்லிய இரவினும்- தலைவி தனது ஆற்றாமை மிகுதியால் தழுவி ஆற்றுதற்குக் குளிர்ந்த பயன் கொடுத்தல் பொருந்திய பல அணைகளைத் தழுவித் தன்னைப் புல்லுதல் பெறாதே வருந்திக் கிடந்த தலைவியை அணுகித் தான் கூடுதலைக் கருதின நிறையழிந்த காலத்தே அவளது மெத்தென்ற சிறிய அடியைத் தீண்டிய இரத்தற்கண்ணும்:*

*இதனானே மகப்பெறுதற்கு முன்னர் அத்துணை யாற்றாமை எய்திற்றில ளென்றார். இப் பிரிவு காரணத்தால் தலைவனும் நிறையழிவனென்றார்.*

*"அகன்றுறை யணிபெற" என்னும் மருதக்கலியுள்,*

**என்னைநீ செய்யினும்உணர்ந்தீவார் இல்வழி**
**முன்னடிப் பணிந்தெம்மை உணர்த்திய வருதிமன்**
**நிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக்**
**கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்.**
**(கலி. 73)**

*என இதனுட் சீறடிப் புல்லிய இரவினைத் தலைவி கூறியவாறு காண்க. தலைவன் கூற்று வந்துழிக் காண்க.*

*உறலருங்கு உண்மையின் ஊடல் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற்கண்ணும்—தலைவற்குச் சாந்தழி பெருங்குறி பெற்றார் கூந்தல் துகளும் உண்மையின் அவனைக் கூடுதல் அருமையினாலே[1] ஊடன் மிகுத்த தலைவியைப் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்துதலிடத்தும்:*

*என்றது, உலகத்துத் தலைவரொடு கூடுந் தலைவியர் மனையறத்து இவ்வாறொழுகுவரென அவர் ஒழுக்கம் காட்டி அறத்துறைப் படுத்தலாம். மறைவெளிப்படுத்தலுந் தமரிற் பெறுதலும் மலிவும் முறையே கூறிப் பின்னர்ப் புலவி நிகழ்ந்து ஊடலாய் மிகுதலின் 'ஊடல்மிகுத்தோள்' என்றார், [2] இரத்தற்பாலினும் பெண்பால் காட்டிப் பெயர்த்தலிற் 'பிறபிற பெண்டிர்' என்றார்.*

*"புனம்வளர் பூங்கொடி" என்னும் மருதக்கலியுள்,*

**ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தாள் அலவுற்று**
**வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக் காதலன்**
**தண்டா ரகலம் புகும்"** **(கலி. 92)**

*எனக் கூறி,*

**"அனவகை யால்யான் கண்ட கனவுதான்**
**நனவாகக் காண்டை நறுநுதால் பன்மாணுங்**
**கூடிப் புணர்ந்தீர் பிரியன்மின் நீடிப்**
**பிரிந்தீர் புணர்தம்மின் என்பன போல**
**அரும்பவிழ் பூஞ்சினை தோறும் இருங்குயில்**
**ஆனா தகவும் பொழுதினால் மேவர**
**நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்**
**தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமார்**
**ஆனா விருப்போ டணியயர் காமற்கு**
**வேனில் விருந்தெதிர் கொண்டு.** **(கலி. 92)**

---

1. "உறவருங்குரைமையின்" என இளம்பூரணருரையிற் காணப்படும் பாடமே நச்சினார்க்கினியர் உரைக்கும் ஏற்புடையதென்பதும் 'உறல் அருங்கு உண்மையின்' என்பது பிழைபட்ட பாடம் என்பதும் "அவனைக் கூடுதல் அருமையினாலே" எனவரும் இவ்வுரைப் பகுதியால் இனிது புலனாம்.

2. புலவியின் நீட்சியே ஊடல் என்பதாம்.

*எனவே, புல்லாதிருந்தாளென்றதனான் ஊடன்மிகுதி தோன்றுவித்து மகளிரும் மைந்தரும் வேனில்விழாச் செய்கின்றார். நாமும் அது செய்யவேண்டுமென்று கூறியவாறு காண்க.*

*பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் பிரிவின் நீக்கிய பகுதிக்கண்ணும் - பரத்தையிற் பிரிவினது தவிர்ச்சிக்கண்ணே தனிமையுற்றிருந்த தலைமகனையுந் தலைமகளையுந் தன தருளினாலே தானும் பிரிவினெச்சத்துப் புலம்பி நின்றான் ஒருவன் தலைவிதனைக் கண்டருளுதற்கு அப் பிரிவினின்று நீக்கிய கூறுபாட்டின் கண்ணும்.* [1]

*பிரிந்து வந்துழியல்லது புலத்தல் பிறவாமையின் 'எச்சத்து' என்றார். உதாரணம் வந்துழிக் காண்க. இதுவும் ஊடற்பகுதியாம்.*

*நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும் முன்னில்லா தொரு சிறைப் போய் நின்று நீட்டித்துப் பிரிவினால் தலைவன் அஞ்சிய நோயின்கண்ணும் : இது துனி.* [2]

*"மையற விளங்கிய" என்னும் மருதக்கலியுள்,*

**ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்**
**களவரைக் காணாது கண்டேமென் பார்போலச்**
**சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்**
**ஆணை கடக்கிற்பார் யார்** **(கலி. 81)**

*எனச் சேய்நின்றென்றதனால் துனித்து நின்றவாறுஞ் சினவலென்றதனாற் பிரிவு நீட்டித்தவாறும், நின்னாணை கடக்கிற்பார் யாரென அஞ்சியவாறுங் கூறியவாறு காண்க.*

**"பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து**
**கையொடு கண்டாய் பிழைத்தேன் அருளினி"**

**(கலி. 95)**

*என்பதும் அச்சமாதலின் இதன்கண் அடங்கும்.*

1. பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவராவார், பரத்தையிற் பிரிவு காரணமாகத் தம்மைப் போன்று புலவியால் 'தனிமையுற்று வருந்தும் தலைவன் தலைவியாகிய காதலர் வேறிருவர் என்பதும், பிரிவின் நீக்கிய பகுதியாவது, ஊடல் மிகுந்த தலைவியைக் கூடப்பெறாது புலம்பி நின்றான் ஒருவன், தன்னுடைய தலைவி தன்னைக்கண்டு ஊடல் தீர்ந்து கூடுமாறு அக்காதலர் இருவரையும் அப்பிரிவினின்றும் நீக்கிய கூறுபாடு என்பதும் நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாகும்.

2. பையுள் – நோய், துனியாவது, ஊடலின்முதிர்ச்சியாகிய வருத்தம்.

*சென்று கை இகந்து பெயர்ந்து உள்ளிய வழியும் சென்று — தலைவன் ஆற்றானாய்த துனியைத் தீர்த்தற்கு அவனை அணுகச் சென்று ; கையிகந்து - அவன் மெய்க்கட் கிடந்த தவறு கண்டு தலைவி ஆற்றாளாய் நீக்கி நிறுத்தலானே : பெயர்த்து — அவன் ஒருவாற்றான் அவளாற்றாமையைச் சிறிது மீட்கையினாலே' உள்ளிய வழியும் - அவள் கூடக் கருதியவிடத்தும்: தலைவன் கூற்று நிகழும்.*

*இதுவுந் துனிதீர்ப்பதொரு முறைமை கூறிற்று.*

*முற்கூறிய பாட்டுள்,*

**அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேல்**
**முதிர்பூண் முலைபொருத ஏதிலாள் முச்சி**
**உதிர்துகள் உக்கநின் ஆடை ஒலிப்ப**
**எதிர்வளி நின்றாய்நீ செல்:**
**இனி எல்லாயாந் தீதிலேம் என்று தெளிப்பவுங் கைந்நீவி**
**யாதொன்றும் எங்கண் மறுத்தர வில்லாயின்**
**மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்**
**தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும்**
**ஆபோற் படர்தக நாம்** **(கலி. 81)**

*எனத் தலைவன் கூறியவாறு காண்க.*

*காமத்தின் வலியும் - அவள் அது நீத்து நீங்கியவழி முற் கூறியவாறன்றிக் காமஞ் சிறத்தலின் ஆற்றாமைவாயிலாகச் சென்று வலித்துப் புக்கு நெருங்கிக் கூடுமிடத்தும்: தலைவன் கூற்று நிகழும்.*

*இதுவுந் துனி தீர்ப்பதொரு முறைமை கூறிற்று.*

**"யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோர்**
**ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை**
**வாரல்நீ வந்தாங்கே மாறு"** **(கலி. 89)**

*என வலிந்து சென்றதனைத் தலைவி கூறியவழி,*

**"ஏஎ, இவை, ஒருயிர்ப் புள்ளின் இருதலை யுள்ளொன்று**
**போரெதிர்ந் தற்றாப் புலவல்நீ கூறினென்**
**ஆருயிர் நிற்குமா றியாது"** **(கலி. 89)**

*என ஆற்றாமை மிகுதியாற் சென்றமை கூறியவாறு காண்க.*

*கைவிடின் அச்சமும் - தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப் பிரியில் தான்அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின்கண்ணும் : தலைவற்குக் கூற்று நிகழும்.*

*அஃது உணர்ப்புவயின் வாரா வூடலாம்.*

**"எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்**
**பூவில் வறுந்தலை போலப் புல்லென்று**
**இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்**
**தெல்லுறு மௌவல் நாறும்**
**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே."** **(குறுந். 19)**

*இதனுள் அவளையின்றி வருந்துகின்ற நெஞ்சே அவள் நமக்கு யாரெனப் புலத்தலன்றி ஆண்டுநின்றும் பெயர்தல் கூறாமையிற் கைவிடின் அச்சமாயிற்று.*

*தான் அவட் பிழைத்த நிலையின்கண்ணும் - தலைவன் தலைவியைப் பிழைத்த பிரிவின்கண்ணும் :*

*'பிழைத்த' வென்றார் ஆசிரியர், இயற்கைப்புணர்ச்சி தொடங்கிப் பலகாலும் பிரியேனெனத் தெளிவித்ததனைத் தப்பிலின்.*

**"அன்புமடனுஞ் ..................நினைந்தே.',** **(அகம். 225)**

*இது நெஞ்சினாற் பிரியக் கருதி வருந்திக் கூறியது.*

**"வயங்கு மணிபொருத" என்பதும் அது.** **(அகம். 166)**

*உடன்சேறல் செய்கையொடு அன்ன பிறவும் மடம்பட வந்த தோழிக்கண்ணும்: அன்னவும் பிற-நீ களவில் தேற்றிய தெளிவகப் படுத்தலுந் தீராத் தேற்றமும் பொய்யாம்; செய்கையொடு உடன் சேறல் - அவை பொய்யாகாதபடி செய்கை களோடே இவளை உடன் கொண்டு செல்க; மடம்பட வந்த தோழிக்கண்ணும் - தன்னறியாமை தோன்றக் கூறிவந்த தோழிக் கண்ணும்;[1] கூற்று நிகழும்.*

1. 'உடன்சேறல் செய்கையோடு அன்னபிறவும் மடம் படவந்த தோழிக் கண்ணும்' எனத் தலைவனுக்குரிய திறங்களை எண்ணுதற்பொருளில் அமைந்த இத் தொடரை, 'அன்னவும் பிற; செய்கையொடு உடன் சேறல்; மடம்பட வந்த தோழிக் கண்ணும்' எனச் சொற்களைச் சிதர்த்துப்பொருள் வரைதல் உரைமுறையாகாது. தலைவியை உடன்கொண்டு போதல் முறைமையன்று என்று அறியாமல் 'இவளை உடன்கொண்டு செல்க' எனத் தொழி பிரிந்து செல்லுந் தலைவனை நோக்கிக் கூறுதலால் 'மடம்பட வந்த தோழி' என்றார் என்பது, நச்சினார்க்கினியர் கூறும் விளக்கமாகும்.

*உடன் கொண்டுபோதன் முறைமையன்றென்று அறியாமற் கூறலின் 'மடம்பட' வென்றார். செய்கைகளாவன: தலைவன் 'கைபுனை வல்வில்' நாண் ஊர்ந்தவழி இவள் 'மையில் வாண்முகம் பசப்பூர்' தலும் அவன் 'புனைமாண் மரீஇய அம்பு' தெரிந்தவழி இவள் *'இனைநோக் குண்கண்ணீர் நில்லா' மையும் பிறவுமாம்.*

*"பா அலஞ்செவி" என்னும் பாலைக்கலியுள்,*

**"ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையுள்**
**நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ"**
**..................................................................**
**அந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே" (கலி.5)**

*என உடன்கொண்டு சென்மினெனத் தோழி கூறியது கேட்ட தலைவன் இவளை உடன்கொண்டு போதல் எல்லாவாற்றானும் முறைமையன்றென்று தோழிக்குக் கூறுவனவும் நெஞ்சிற்குக் கூறுவனவும் பிறவுங் கொள்க.*

**"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்**
**குளவி மொய்த்த அழுகற் சின்னீர்**
**வளையுடைக் கையள் எம்மோ டுணீஇய**
**வருகதில் லம்ம தானே**
**யளியளோ வளியளென் னெஞ்சமர்ந் தோளே."**

**(குறுந். 56)**

*இது தோழி கேட்பக் கூறியது.*

**"நாம்நகை யுடையம் நெஞ்சே கடுந்தெறல்**
**வேனி னீடிய வானுயர் வழிநாள்**
**வறுமை கூறிய மன்னீர்ச் சிறுகுளத்**
**தொடுகுழி மருங்கிற் றுவ்வாக் கலங்கல்**
**கன்றுடை மடப்பிடி கயந்தலை மண்ணிச்**
**சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு**
**செங்கோல் வாலிணர் தயங்கத் தீண்டிச்**
**சொறிபுற முரிஞிய நெறியயன் மராஅத்**
**தல்குறு வரிநிழ லசைஇய நம்மொடு**
**தான்வரு மென்ப தடமென் றோளி**

**யுறுகணை மழவர் உருள்கீண் டிட்ட**
**ஆறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்**
**கணைவிசைக் கடுவளி யெடுத்தலில் துணைசெத்து**
**வெருளேறு பயிரும் ஆங்கண்**
**கருமுக முசுவின் கானத் தானே.” (அகம். 121)**

*இது நெஞ்சிற்குக் கூறியது.*

*வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும் - அங்ஙனம் வேற்றுநாட்டிற் பிரியுங்காலத்துத் தானுறும் இடும்பையிடத்து; தலைவற்குக் கூற்று நிகழும்.*

*விழுமமாவன:—பிரியக் கருதியவன் பள்ளியிடத்துக் கனவிற் கூறுவனவும், போவேமோ தவிர்வேமோ என வருந்திக் கூறுவனவும், இவள் நலன்திரியுமென்றலும், பிரியுங்கொலென்று ஐயுற்ற தலைவியை ஐயந்தீரக் கூறலும், நெஞ்சிற்குச் சொல்லி அழுங்குதலும் பிறவுமாம்.*

*“நெஞ்சு நடுக்குற” (கலி. 24) என்னும் பாலைக்கலியுள் கனவிற் கூறியவாறு காண்க.*

**“உண்ணாமையின்...சென்று தரு பொருட்கே.” (அகம். 123)**

*இது போவேமோ தவிர்வேமோ என்றது.*

**“அருவியார்க்கும்......மாமைக் கவினே.” (நற்றிணை. 205)**

*இஃது இவள் நலனழியுமென்று செலவழுங்கியது.*

**“தேர்செல அழுங்கத் திருவிற் கோலி**
**ஆர்கலி எழிலி சோர்தொடங் கின்றே**
**வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய**
**யான்றொடங் கினெனா னிற்புறந் தரவே,” (ஐங்குறு. 428)**

*இஃது ஐயந் தீர்த்தது.*

**“ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்**
**செய்வினை கைம்மிக வெண்ணுதி அவ்வினைக்**
**கம்மா வரிவையும் வருமோ**
**எம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே.” (குறுந். 63)**

*இது தலைவியை வருகின்றாளன்றே எனக் கூறிச் செல வழுங்கியது.*

*மீட்டு வரவு ஆய்ந்த வகையின்கண்ணும் - பிரிந்த தலைவன் இடைச்சுரத்து உருவு வெளிப்பட்டுழியும் மனம் வேறுபட்டுழியும் மீண்டு வருதலை ஆராய்ந்த கூறுபாட்டின் கண்ணும் :*

**"உழையணந்துண்ட......புலம்புகொள் நோக்கே."**
**(நற்றிணை. 113)**

*இஃது உருவு வெளிப்பட்டுக் கூறியது.*

**"ஒன்று ...... நீ துணிந் ததுவே".** **(நற்றிணை. 103)**

*இது வேறுபட்டு மீட்டுவரவு ஆய்ந்தது.*

**"ஆள் வழக் கற்ற பாழ்படு நனந்தலை**
**வெம்முனை யருஞ்சுரம் நீந்தி நம்மொடு**
**மறுதரு வதுகொல் தானே செறிதொடி**
**கழிந்துகு நிலைய வாக**
**ஒழிந்தோள் கொண்டவென் உரங்கெழு நெஞ்சே."**
**(ஐங்குறு. 329)**

*இது மீளலுறும் நெஞ்சினை நொந்து தலைவன் உழையர்க்கு உரைத்தது.*

**"நெடுங்கழை முளிய வேனில் நீடிக்**
**கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்**
**வெய்ய வாயின முன்னே யினியே**
**யொண்ணுத லரிவையை யுள்ளுதொறுந்**
**தண்ணிய வாயின சுரத்திடை யாறே."** **(ஐங்குறு 322)**

*இஃது இடைச்சுரத்துத் தலைவி குணம் நினைந்து இரங்கியது இன்னும் 'இரட்டுறமொழித' லென்பதனாற் செய்வினை முற்றி மீண்டு வருங்கால் வருந்தி நெஞ்சொடு கூறுவனவும்[1] பிறவுங் கொள்க. அது,*

1. 'மீட்டு வரவு ஆய்ந்தவகை' என்பதற்கு 'மீண்டும் வருதலை ஆராய்ந்த கூறுபாடு' எனமுதற்கண் உரைவரைந்த நச்சினார்க்கினியர், இரட்டுற மொழிதலால் 'செய்வினைமுற்றி மீண்டு வருங்கால் வருந்தி நெஞ்சொடு கூறுவன' என மற்றொரு பொருள் கொண்டார். இப்பொருளக்கு 'ஆய்ந்த – வருந்திய' எனப் பொருளுரைக்க.

**"என்று கொல் எய்தும் ஞான்றே சென்ற**
**வளமலை நாடன் மடமகள்**
**இளமுலை ஆகத் தின்னுயிர்ப் புணர்ப்பே"**
**"கொல்வினைப் ......சென்றவெ னெஞ்சே"** **(அகம். 9)**

*என வரும். இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக.*

*அவ்வழிப் பெருகிய சிறப்பின்கண்ணும் - பிரிந்தவிடத்துத் தான் பெற்ற பெருக்கம் எய்திய சிறப்பின்கண்ணும்: மன மகிழ்ந்து கூறும்.*

*சிறப்பாவன:- பகைவென்று திறை முதலியன கோடலும் பொருண் முடித்தலுந் துறைபோகிய ஒத்தும் பிறவுமாம்.*

*உதாரணம் :* **"கேள்கே** *டூன்றவுங் கிளைஞ ராரவும்" (அகம்.93) எனவும், "தாழிருள் துமிய"(குறுந். 270) என்பதனுட் "செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு" எனவும், மனமகிழ்ந்து கூறியவாறு காண்க. "முன்னியது முடித்தனமாயின்" என்னும் (169) நற்றிணையுட் பொதுப்படச் சிறப்புக் கூறியவாறு காண்க.*

*பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்- அச் சிறப்புக்களை எய்திய தலைவன் பெரிய புகழையுடைத்தாகிய தேரையுடைய பாகரிடத்தும்: கூற்று நிகழ்த்தும்.*

*அவரது சிறப்பு உணர்த்துதற்குப் பாகரெனப் பன்மையாற் கூறினார்.*

**"இருந்த வேந்தன் அருந்தொழின் முடித்தெனப்**
**... ... ... ... ...**
**விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே."** **(அகம். 384)**

*இதனாற் பாகன் சிறப்புச் கூறியவாறு காண்க.*

**"மறத்தற் கரிதாற் பாக ................**
**மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே."** **(நற்றிணை,42)**

*இது தானுற்ற இன்பத்தினைப் பாகற்குக் கூறியது.*

**"ஊர்க பாக வொருவினை சுழீஇய"** **(அகம்.44)**

**"செல்க தேரே நல்வலம் பெறுந"** **(அகம்;34;374)**

*எனவும் வரும்.*

**"தயங்கிய களிற்றின்மேல் தகைகாண விடுவதோ**
**... ... ... ... ...**
**தாள்வளம் பட வென்ற தகைநன்மா மேல்கொண்டு"**

**(கலி.31)**

*என வருவன தலைவி கூற்றாதலின் தலைவன் மீண்டு வருங்காற் பாகற்கே கூறுவனென்றார்.*[1]

*காமக்கிழத்தி மனையோள் என்ற இவர் ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்: காமக்கிழத்தி மனையோளென்றிவர் சொல்லிய ஏமுறு கிளவி எதிரும்-இற்பரத்தை தலைவியென்று கூறிய இருவர் சொல்லிய வருத்தமுற்ற கிளவியின் எதிரிடத்தும்; கூற்று நிகழ்த்தும்.*[2]

*அவை 'அருஞ்சுரத்து வருத்தம் உற்றீரே' எனவும், 'எம்மை மறந்தீரே'எனவுங் கூறுவனவும் பிறவுமாம்.*

**"எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை**
**அரிய ஆயினும் எளிய அன்றே**
**அவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்**
**கடுமான் றிண்டேர் கடைஇ**
**நெடுமா னோக்கிநின் உள்ளியாம் வரவே."**

**(ஐங்குறு. 360)**

*இது வருத்தம் உற்றீரே என்பதற்குக் கூறியது.*

**"தொடங்குவினை தவிரா.........................**
**உடம்பாண் டொழிந்தமை யல்லதை**
**மடங்கெழு நெஞ்ச நின்னுழை யதுவே"** **(அகம்.29)**

*இது மறந்தீர் போலும் என்றதற்குக் கூறியது.*

1. களிற்றின் மேலும், தகை நன்மாமேலும் ஊர்ந்து வருவோன் தலைவனே யாதலின், அவன் பொருட்டு ஊர்தியைச் செலுத்தும் பேரிசையூர்திப்பாகனாவான் தேர்ப்பாகனே எனவும் தலைவன் வினைமுற்றி மீண்டுவருங்கால் தேர்ப்பாகற்கே கூறுவன் எனவும் கொள்க என்பதாம்.

2. சொல்லிய கிளவி, ஏமுறுகிளவி எனத்தனித்தனி இயையும், ஏமுறுகிளவி பிரிவாற்றாமை வருத்தத்தைப் புலப்படுத்துஞ்சொல். எதிர்—எதிர்மாற்றம்; மறுமொழி.

**"உள்ளினெ னல்லெனோ யானே யுள்ளி**
**நினைத்தனெ னல்லெனோ பெரிதே நினைத்து**
**மருண்டனெ னல்லெனோ வுலகத்துப் பண்பே**
**நீடிய மரா அத்த கோடுதோய் மலிர்நிறை**
**இறைத்துணச் சென்றற் றாஅங்கு**
**அனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே."** (குறுந், 99)

*'பிறவு' மென்றதனான் இத்தன்மையனவுங் கொள்க. இவை இருவர்க்கும் பொது. இவற்றைக் காமக்கிழத்தி விரைந்து கூறுமென்றற்கு அவளை முற்கூறினார்.*

*சென்ற தேஎத்து உழப்பு நனி விளக்கி இன்றிச் சென்ற தம் நிலை கிளப்பினும்* [1]*-அங்ஙனம் கூறிய இருவர்க்குந் தான் சென்ற தேயத்தில் நேர்ந்த வருத்தத்தை மிகவும் விளங்கக்கூறி நனவினாற் சேறலின்றிக் கனவினாற் கடத்திடைச் சென்ற தம்முடைய நிலையைத் தலைவன் கூறினும்:*

**ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்......**
**துள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்**
**முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க**
**நோய்முந் துறுத்து நொதுமல் மொழியல்நின்**
**ஆய்நல மறப்பெனோ மற்றே சேணிகந்**
**தொலிகழை பிசைந்த ஞெலிசொரி ஒண்பொறி**
**படுஞமல் புதையப் பொத்தி நெடுநிலை**
**முளிபுல் மீமிசை வளிசுழற் றுறாஅக்**
**காடுகவர் பெருந்தீ யோடுவயின் ஓடலின்**
**அதர்கெடுத் தலறிய சாத்தொ டொராங்கு**
**மதர்புலி வெரீஇய மையல் வேழத்**
**தினந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு**

---

1. உழப்பு – வருத்தம். நனிவிளக்குதல் – மிகவும் விளக்கிக் கூறுதல். 'இன்றிச் சென்ற தம் நிலை' என்றது, கடத்திடைகனவிற் செல்கின்றோம் என்னும் உணர்வின்றிக் கனவிற் செல்வது போன்று தம் உணர்விழந்து சென்ற நிலையினை.

'இன்றிச் சென்ற தந்நிலை' என்பதற்குத் 'தலைவியையின்றித்தான் தனித்துச் சென்றமையால் உண்டாகிய தலைவனது துயர்நிலை' எனப்பொருளுரைத்தலே பொருத்த முடையதாகும்.

**ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றாற் பட்டெனக்**
**கட்பட ரோதி நிற்படர்ந் துள்ளி**
**யருஞ்செல வாற்றா ஆரிடை ஞெரேரெனெப்**
**பரந்துபடு பாயல் நவ்வி பட்டென**
**இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு**
**நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்**
**டின்னகை இனையம் ஆகவும் எம்வயின்**
**ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்**
**கோடேந்து புருவமொடு குவவுநுத னீவி**
**நறுங்கதுப் புள்ளிய நன்னர் அமயத்து**
**வறுங்கை காட்டிய வாயல் கனவின்**
**ஏற்றேக் கற்ற அலமரல்**
**போற்றா யாகலிற் புலத்தியால் எம்மே"** **(அகம்.)**

*இதனுள் வறுங்கை காட்டிய வாயல் கனவினென நனவின்றிச் சென்றவற்றைத் தலைவன் கூறியவாறு காண்க. இதுவும் இருவர்க்குமாம்.*

*அருந்தொழின் முடித்த செம்மற் காலை விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும்-செயற்கு அரிதாகிய வினையை முடித்த தலைமையை எய்திய காலத்தே தலைவி விருந்தெதிர் கோடலோடே நீராடிக் கோலஞ்செய்தல் முதலியவற்றைக் காண்டல் வேண்டிய இடத்தும்: தலைவன் கூற்று நிகழ்த்தும்.*

**"முரம்புதலை மணந்த நிரம்பா இயவின்.....**
**விருந்தயர் விருப்பினள் வருந்துந்**
**திருந்திழை யரிவைத் தேமொழி நிலையே."** **(நற்றிணை,374)**

*என இதனுள் விருந்தயர் விருப்பினளென விருந்தொடு நல்லவை வேட்டுக் கூறியவாறு காண்க.*

*மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும் கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்-வினைமுற்றிப் புகுந்த தலைமகனை எதிரேற்றுக் கொள்ளும் மங்கலமரபினர் மாலையேந்திய பெண்டிரும் புதல்வருங் கேளிரும் ஆகலான் அக் கேளிர் செய்யும் எதிர்கோட லொழுக்கத்துக் கண்ணும்: தலைமகன் உள்ளமகிழ்ந் துரைக்கும்.*

*உம்மை விரிக்க.*[1] *பெண்டிரும் மக்களுமாகிய கேளி ரென்றுமாம்.*

**திருந்துங் காட்சிப் பெரும்பெயர்க் கற்பின்**
**நாணுடை அரிவை மாண்நகர் நெடுந்தேர்**
**எய்த வந்தன்றாற் பாக நல்வரவு**
**இளையர் இசைத்தலின் கிளையோ ரெல்லாஞ்**
**சேயுயர் நெடுங்கடைத் துவன்றினர் எதிர்மார்**
**தாயரும் புதல்வருந் தம்முன் பறியாக்**
**கழிபே ருவகை வழிவழி சிறப்ப**
**அறம்புரி யொழுக்கங் காண்கம்**
**வருந்தின காண்கநின் திருந்துநடை மாவே"**

*எனவரும்.*

*ஏனை வாயில் எதிரொடு தொகைஇ*[2] *சிறந்த மொழியை ஒழிந்துநின்ற வாயில்கட்கு எதிரே கூறுங் கூற்றோடே முற்கூறிய வற்றைத் தொகுத்து:*

**"நகுகம்.................... நின்றதுவே."** **(நற்றிணை,250)**

*இஃது ஏனைவாயிலாகிய பாணற்கு உரைத்தது.*

*பண்ணமை பகுதி முப்பதினொரு மூன்றும்- ஓதுப்பட்ட இவையே இடமாக நல்லறிவுடையோர் ஆண்டாண்டு வேறுவேறாகச் செய்யுள் செய்து கோடற்கு அமைந்துநின்ற கூறுபாட்டை உடையவாகிய முப்பத்துமூன்று துறையும்:*[3]

---

1. கேளிர் என்புழிக் கேளிரும் என உம்மை விரிக்க.

2. 'ஏனைவாயில் எதிர்' என்பதற்குச் 'சிறந்த மொழியை ஒழிந்துநின்ற வாயில்கட்கு எதிரிலே கூறுங்கூற்று' எனவரும் இவ்வுரைப்பகுதியில் 'சிறந்த மொழியை' என்னுந் தொடர் 'சிறந்த தோழியை' என்றிருத்தல் வேண்டும்.

3. இந்நூற்பாவிற் கூறப்பட்ட முப்பத்து மூன்றிடங்களும் நல்லறிவுடையோர் ஆண்டாண்டு வேறு வேறாகச் செய்யுள் செய்து கோடற்குப் பொருந்தி நின்ற கூறு பாட்டினையுடைய கூற்றுவகைகளின் நிலைக்களம் என்பதும் புலப்படப் 'பண்ணமைபகுதி முப்பதினொரு மூன்றும்' என்றார் ஆசிரியர்.

*எண்ணஞ் சிறப்பிற் கிழவோன் மேன -களவுபோல இழிதொழிலின்றி ஆராய்தற்கரிய சிறப்போடுகூடிய தலைவன் கண்ண என்றவாறு.* [1]

*சிறப்பாவன:- வந்த குற்றம் வழிகெட ஒழுகலும், இல்லறம் நிகழ்த்தலும், பிரிவாற்றுதலும், பிறவுமாம். இன்னவிடத்தும் இன்னவிடத்தும் நிகழுங் கூற்றுக்களை வாயிலெதிர் கூறுங் கூற்றோடே தொகுத்துப் பண்ணுதற்கமைந்த பகுதியுடையவாகிய முப்பத்துமூன்று துறையுந் தலைவன்கண் நிகழ்வன என்று முடிக்க. எடுத்துரைப்பினுந் தந்நிலைகிளப்பினும் அக் கூற்றுக்களையும் வாயிலெதிரொடு தொகைஇ யென முடிக்க. இவற்றுட் பண்ணிக் கொள்ளும் பகுதியாவன, யாம் மறைந்து சென்று இவனைக் கண்ணைப் புதைத்தால் தலைநின்றொழுகும் பரத்தையர் பெயர் கூறுவனென்று உட்கொண்டு காமக்கிழத்தியாதல் தலைவியாதல் சென்று கண்புதைத்துழித் தலைவன் கூறுவனவும், பள்ளியிடத்து வந்திருந்து கூறுவனவும், இவள் ஊடற்குக் காரணம் என்னென்று தோழி வினாயவழிக் கூறுவனவும், பிரிந்தகாலத்து இவளை மறந்தவாறென்னென்ற தோழிக்குக் கூறுவனவும்,பிறவுமாம்.* [2]

**“சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன**
**நலம்பெறு கையினெங் கண்புதைத் தோயே**
**பாயல் இன்றுணை யாகிய பணைத்தோள்**
**தோகை மாட்சிய மடந்தை**
**நீயலது உளரோஎன் நெஞ்சமர்ந் தோரே”** **(ஐங்குறு. 293)**

1. “எண்ணருஞ்சிறப்பிற் கிழவோன்” என்றது, களவொழுக்கத்திற் போலத் தலைமகள் துன்புறுதற்கேதுவாய குற்றம் நேர்தற்கிடந்தராது தலைவியின் மனைவாழ்க்கை மாண்புறுதற்கு ஏதுவாகிய நற்செயல்களை எண்ணி மேற்கொள்ளும் அரிய ஆராய்ச்சியாகிய சிறப்பினையுடைய தலைவன் என்பதாம்.

2. ‘பண்ணிக்கொள்ளும் பகுதியாவன, இத்துறைகளை இடமாகக் கொண்டு பிற்காலத்துச் செய்யுள் செய்யும் சான்றோர் காலந்தோறும் புதியனவாக வகுத்துக்கூறும் துறைப்பகுதிகளாகும். இங்ஙனம் அமைந்த புதிய துறைகள் சிலவற்றைக் குறித்து இவற்றுக்குச் சங்க இலக்கியங்களிலிருந்தும், திருக்குறளிலிருந்தும் நச்சினார்க்கினியர் மேற்கோள்காட்டி விளக்கியுள்ளமை இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பும் அவர்தம் நுண்மாண் நுழை புலனைப் புலப்படுத்துவதாகும்.

"தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி ஊழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி இடித்திடித்துப்
பெய்கினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொ
டிவளின் மேவினம் ஆகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே" (குறுந். 270)

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" (குறள். 1315)

"தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீர ராகுதி ரென்று" (குறள்.1319)

"எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடைச்
சிறிதுகண் படுப்பினுங் காண்குவென் மன்ற
நள்ளென் கங்குல் நளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற கணங்கில்
தேம்பாய் கூந்தன் மாஅ யோளே" (ஐங்குறு. 324)

*எனவும் வரும். இன்னும் அதனானே ஊடலை விரும்பிக் கூறுவனவுங் கொள்க.*

"ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று" (குறள்.1307)

"ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா" (குறள். 1329)

*எனவரும். இன்னுங் கற்பியற்கண் தலைவன்கூற்றாய் வேறுபட வருஞ் சான்றோர் செய்யுட்களெல்லாம் இதனான் அமைத்துக் கொள்க.*

***ஆய்வுரை :*** *இது, மனைவாழ்க்கையில் தலைவனுக்குரிய கிளவிகள் எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகின்றது.*

(இ-ள்) மனைவாழ்க்கைக்கு இன்றியாமையாத கரணத்துடன் திருமணம் நிறைவேறிய காலத்து, அச்சமும் நாணும் மடனும் பெருமையும் உரனும் காரணமாகத் தம்முள்ளத்து வேட்கை தோற்றாதவாறு முன்னர்க் கட்டுண்டிருந்த இருவர் நெஞ்சமும் கட்டவிழ்ந்து மலர்ந்து கூடிய வரைந்தெய்துங் கூட்டத்தின்கண்ணும், தன்னுள்ளத்து நீங்காத மகிழ்ச்சி மிக்குத் தோன்றுங் காலத்தினும், அஞ்சும் வண்ணம் தலைமகளிடத்தே உளதாகிய கற்புரிமையாகிய நலத்தின் கண்ணும், இல்லறமாகிய நன்னெறிக் கண்ணே ஒழுகுதற்கு ஏதுவாகிய தொன்மை வாய்ந்த நற்பண்புகளாகிய பொருளின் கண்ணும், தலைமகளை வரைந்து பெற்றவிடத்துத் தலைவியை மனைமாட்சியாகிய பெருமையின்கண் நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றம் பொருந்திய பொருண்மையை எடுத்துக்கூறும் நிலைமையினும், 'வழியில் நிகழும் பல்வேறு இடையூறுகளையெண்ணி அஞ்சுதற்கேதுவாகிய களவுக் காலத்து (தோன்றாத்துணையாய் உதவிய தெய்வம்) உண்டு' என்று தோழி தமக்குப் பாதுகாவலாயுள்ள கடவுளை ஏத்திய இடத்தும், (தலைவி தன்) துன்பந்தீர ஆர்வத்துடன் கலந்து சொல்லுதலுற்ற பொருளிலும், (தலைவியாற் கிடைக்கப்பெற்ற) யாதாயினும் ஒருணவினை நுகருமிடத்து 'நின்கையால் அமைக்கப் பெற்ற இது எமக்குத் தேவர் அமிழ்தத்தினை ஒத்து அண்ணிக்கின்றது, அதற்குரிய காரணம் கூறுவாயாக' என அடிசிலையும் பூவையும் தொடுதற்கண்ணும், அறவோராகிய அந்தணரிடத்தும் சான்றோரிடத்தும் கெடாத சிறப்பினையுடைய ஏனையோர் பிறரிடத்தும் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் எனத் தலைவிக்குக் குறிப்பினால் அறிவுறுத்துமிடத்தும், களவொழுக்கத்தினுள் ஒருவரை யொருவர் எளிதிற் கண்டு அளவளாவுதற்கியலாதவாறு நிகழ்ந்த அருமைப்பாட்டினை நினைந்து தனித்துச் சுழன்றவுள்ளத்தோடு கலந்துரையாடுமிடத்தும், களவுக்காலத்துத் தம்பால் நிகழ்ந்த குற்றங்கள் ஆகாயத்தில் எழுதிய எழுத்துப்போன்று அவைநிகழ்ந்த இடமும் தோன்றாது மறக்கப் பட்டுக் கெட்டொழியுமாறு ஒருவர்க்கொருவர் அன்பு மீதூர ஒழுகுதற்கண்ணும், தனது பிரிவாற்றாது வருந்துதலும் தான் வரும் வழியின் இடையூறு நினைந்து அஞ்சுதலும் என அவ்விரு நிலைமைக்கண் தான் தலைவிக்குக் குறித்த வண்ணம் வாராது தப்பியொழுகிய காலத்தும், பொறையும் பெருமையும் ஒருவடிவு

கொண்டாற்போன்று தண்ணளியுடையளாய்ப் புகழ் நிறைந்த தோழிமுதலிய வாயிலொடுபொருந்தித் தன் போன்ற புதல்வனை யீன்றெடுத்த தலைமகளது தகுதிக் கண்ணும், புதல்வனைப்பெற்று ஈன்றணிமை நீங்கிய பொழுதின்கண் நெய்யாடல் புரிந்த தலைவியை நோக்கி அவளுடைய தமையன்மார் பக்கத்தாராக அவர்களைக் குறித்தும் அமர்புரிந்து தெய்வநிலை பெற்ற தன் குடிமுதல்வராகிய வீரர்களைக்குறித்தும் செய்யப்படும் சிறப்புடைய நிகழ்ச்சியிற் கலந்து கொள்ளுமிடத்தும், புறத்தொழுக்கம் காரணமாகத் தன்னைக்கூடும் விருப்பின்றிப் பயன் பொருந்திய அணையினைப் புல்லி வருந்திக்கிடந்த தலைவியை அணுகி அவளொடு தங்குதலைக் கருதிய நிறைகடந்த நிலையில் தலைவியின்மென்மை பொருந்திய சிறிய அடிகளைப் பற்றிக் கொண்டு இரத்தற்கண்ணும், தான் நெருங்குதற்கியலாதவாறு ஊடல்முதிர்ந்த தலைவியை அவளொடு பழகிய வெவ்வேறு பெண்டிர் மூலமாக ஊடலை நீக்குதற் கண்ணும், தன்போன்று பிரிவுகாரணமாகத் தனிமையுற்று வருந்திய காதலர் இருவரையும் அவ்வருத்தத்தினின்று நீக்கிய திறத்தின்கண்ணும், நாடிடையிட்டுப் பிரியும் நெடுவழிப் பிரிவின்கண் அஞ்சிய வருத்தத்தின்கண்ணும். மேற்கூறிய நெடுவழியினைக் கடந்து சென்று மீண்டும் அவ்வழியின்கண் திரும்ப நினைத்தவிடத்தும், பொருளைவிடக் காமம் வலியுடைத்தாகிய தன்மையை உளங்கொண்டநிலையிலும், தலைவியைப்பிரிந்தவழி அவட்கு நேரும் துயர்கருதி அஞ்சிய நிலையிலும், 'நின்னிற்பிரியேன்' எனத் தலைமகட்குச் சொல்லிய சொல்லைத் தான் தப்பிய நிலையிலும், தலைவியை உடனழைத்துச் செல்லுதல் வேண்டும் என்னும் செய்தியுடன் அவைபோல்வன பிறவற்றையும் தன் மடமைக் குணந்தோன்றக் கூறிய தோழியினிடத்தும், தான் தலைவியைப் பிரிந்து வேற்று நாட்டுக்குச்செல்லுதலால் ஆய வருத்தத்தின்கண்ணும், தலைவியைப் பிரிந்து செல்லும் தான் மேலும் செல்லுதலை விரும்பாது மீண்டு திரும்பி வருதலைத் தன்னெஞ்சத்துடன் ஆராயும் பகுதிக்கண்ணும், பிரிந்து சென்று வினைமுற்றி மீண்டுவந்துழிப் பெருகத் தோன்றிய சிறப்பின் கண்ணும், பெரும்புகழமைந்த ஊர்தியாகிய தேரினைச் செலுத்தும் பாகற்குக் கூறுதற்கண்ணும், காமக்கிழத்தி மனைவி என்னும் இவர்கள் பாதுகாவலாகக் கூறிய கூற்றிற்கு எதிர்மொழி பகருமிடத்தும், பிரிந்து சென்றவிடத்துத் தான்

*உற்ற வருத்தத்தினை மிகவும் விளக்கித் தலைவியையின்றிச் சென்ற தனது தனிமையை எடுத்துரைக்குமிடத்தும், அரிய செயலைச் செய்து நிறைவேற்றிய தனது தலைமைத்தன்மை விளங்கிய காலத்து விருந்தினருடன் நல்லனவற்றை விரும்பிய நிலையிலும், தன்னை எதிர்கொண்டு வரவேற்கும் முறையில் மாலை முதலிய மங்கலப் பொருள்களை ஏந்திய மனைவியரும் மக்களும் சுற்றத்தாரும் மேற்கொண்ட செயல்முறைகளை விரும்பியேற்கும் நிலையிலும், தன்னொடு பழகும் பாணன் முதலிய ஏனைய வாயில்களாயினார் கூறும் கூற்றுக்கு எதிர்மொழிகூறும் கிளவியொடு தொகுத்துப் பண்ணுதலமைந்த கிளவிப்பகுதிகள் முப்பத்து மூன்றும் எண்ணுதற்கு அரிய சிறப்பினையுடைய தலைமகன் கூறுதற்குரியனவாம் எ-று.*

*இங்குக்கூறப்பட்ட முப்பத்துமூன்று பகுதிகளும் எண்ணு தற்கரிய பெருஞ்சிறப்பினையுடைய தலைவன் செயல்களாகவும் கூற்றுக்களாகவும் வருவனஎல்லாவற்றிற்கும் நிலைக்களமாக அமைந்தன என்பார் 'பண்அமைபகுதி முப்பதினொருமூன்றும் எண்ணருஞ்சிறப்பின் கிழவோன்மேன' என்றார். முப்பதினொரு மூன்று - முப்பத்துமூன்று,* *(5)*

**6. அவனறி வாற்ற அறியும் ஆகலின்**
**ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்**
**உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்**
**பெருமையிற் றிரியா வன்பின் கண்ணும்**
**கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்**
**அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்**
**இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்துங்**
**கயந்தலைதோன்றிய காமர் நெய்யணி**
**நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ**
**நளியி னீக்கிய விளிவரு நிலையும்**
**புகன்ற வுள்ளமொடு புதுவோர் சாயற்**
**ககன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி**
**இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி**
**எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினுந்**

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணுஞ்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணுஞ்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு[1] தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானுந்
தந்தையர் ஒப்பர் மக்களென் பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினுங்[2]
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணுங்
கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின் கண்ணுந்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியுந்
தன்வயிற் சிறப்பினு[3] மவன்வயிற் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணுங்
காமக் கிழத்தி[2] நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை யொழுக்கத்துத்[3] தோழிக் குரியவை
வடுவறு சிறப்பிற் கற்பிற் றிரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்

1. யுள்ளமொடு பா. வே.
2. நெருங்கலும் பா. வே.
3. சிறைப்பினும். பா. வே. 2. கிழத்தியர். பா. வே. 3. ஒழுக்கம். பா. வே.

**ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்**
**வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்**
**கிழவோள் செப்பல் கிழவ தென்ப.**

***இளம்பூரணம் :-*** *என் -எனின், கற்பின்கண் தலைவிகூற்று நிகழும் இடம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.*

**(இ - ள்.)** *ஏற்றல் முதலாக வாயிலின் வரூஉம் வகையோடு கூடத் தலைவி கூறல் உரியதாகும் என்றவாறு.*

*அவனறி வாற்ற அறியு மாகலின்[1] ஏற்றற் கண்ணும் என்பது—தலைவனது நினைவைத் தலைவி மிக அறியுமாகலின் அவனை யுயர்த்துக் கூறுதற்கண்ணும் தலைவி கூற்று நிகழும்,*

**"நின்ற சொல்லர்......செய்பறி யலரே."** **(நற்றிணை.1)**

*என வரும்.*

*நிறுத்தற்கண்ணும்[2] என்பது தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்றால் தான் நிறுத்துக் கூறுதற்கண்ணும் என்றவாறு.*

**"முடவுமுதிர்...... இனியனால் எமக்கே"** **(அகம். 352)**

*என வரும்.*

*உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா அன்பின் கண்ணும் என்பது—தலைவிக்கு உரிமையைக் கொடுத்த கிழவோன்மாட்டுப் பெருமையிற் றிரியா அன்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரற்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே'** **(குறுந். 3)**

*என வரும்.*

---

1. ஆற்ற அறிதல்—மிகவும் நன்றாக அறிதல். ஏற்றல்—எதிரேற்றல்; உயர்த்துக் கூறல் என்னும் பொருளில் இங்கு ஆளப்பெற்றது.

2. நிறுத்தல் — தடுத்துநிறுத்துதல்; அஃதாவது தோழி உயர்த்துக் கூறியதனை மறுத்துரைத்தல்.

*கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும் என்பது—தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதியின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"நீர் நீடாடிற் கண்ணும் சிவக்கும்**
**ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்**
**தணந்தனி ராயின்எம் இல்லுய்த்துக் கொடுமோ**
**அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்**
**கடும்பாம்பு வழங்குந் தெருவில்**
**நடுங்கஞர் எவ்வங் களைந்த எம்மே"** **(குறுந் 354)**

*எனவும்,*

**"என்கைக் கொண்டு தன் கண் ஒற்றியுந்**
**தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்**
**அன்னை போல இனிய கூறியும்**
**கள்வர் போலக் கொடியன் மாதோ......**
**கோடுயர் பிறங்கல் மலைகிழவோனே"** **(நற்றிணை. 28)**

*எனவும்,*

**"மனைநடு வயலை வேழம் சுற்றும்**
**துறைகேழ் ஊரன் கொடுமை நாணி**
**நல்லன் என்றும் யாமே**
**அல்ல னென்னும் என் தடமென் தோளே"** **(ஐங்குறு. 11)**

*எனவும்,*

**"வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே**
**வாழுநம் என்னுஞ் செருக்கு"** **(குறள். 1152)**

*எனவும் வரும்.*

*இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும் என்பது—தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழியும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
**புன்கண் உடைத்தால் புணர்வு"** **(குறள். 1152)**

*எனவும்,*

**"குக்கூ என்றது கோழி அதனெதிர்**
**துட்கென் றற்றென் தூஉ நெஞ்சம்**
**தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்**
**வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே"** **(குறுந். 157)**

*எனவும் வரும்.*

*கயந்தலை[1] தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய[2] இளிவரு நிலையம் என்பது– புதல்வன் றோன்றிய நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறுமாறு பண்ணிச் செறிவு நீக்கிய இளிவந்த நிலையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

*இளிவந்த நிலையாவது தன்னை அவமதித்தான் என்னுங் குறிப்பு.*

**"கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல்**
**சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர**
**புதல்வனை யீன்றவெம் மேனி**
**முயங்கல்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே"**
**(ஐங்குறு 65)**

*என வரும்.*

*புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி எதிர் பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்[3] என்பது– விருப்பமுடைய*

---

1. கயந்தலை—மெல்லிய தலையினையுடைய இளங்குழந்தை. 'மூவிருகயந் தலை' என்னும் பரிபாடற்றொடர்க்குப் பரிமேலழகர் கூறிய விளக்கம் இங்கு ஒப்பு நோக்கத்தகுவதாகும். காமர்—விருப்பம். நளி—செறிவு; 'விழாவிற்கலத்தல் என்ற பொருளில் இங்கு ஆளப் பெற்றது.

2. நளியின் நீக்கிய––செறிதலினின்றும் நீக்கிய, இளிவருநிலை—தாழ்வுளதாம் நிலை.

3. புகற்சி—விருப்பம். புதுவோர்—இளமைப்பருவமாகிய புதுநலமுடைய பரத்தையர். சாயல்—மென்மை; ஈண்டு அவரொடுநுகரும் நுகர்ச்சியாகிய நலத்தினைக் குறித்தது. புலம்பு—

*உள்ளத்தோடே புதுவோரது நலத்தின்பொருட்டு அகன்ற கிழவனைத் தனது தனிமை மிகவுங்காட்டி அவன் மாட்டுச் செல்கின்ற நெஞ்சத்தை மீட்டு அருகப்பண்ணி அவன் காதலித்தாளை எதிர் பெய்துகொண்டு புணர்ச்சியை மறுத்த ஈரத்தின் கண்ணும் கூற்று நிகழும். ஈரமாவது முற்றும் மறாமை.*

**“கடல்கண் டன்ன............................**
**ஊர்முழுது நுவலுநிற் காணிய சென்மே”** **(அகம். 176)**

*என வரும்.*

*தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற்கண்ணும்* [1] *என்பது-பிறள்மாட்டுத் தங்கிய ஒழுக்கத்துக் கிழவனைத் தாழ்ந்து எங்கையர்க்கு உரையென வேண்டிக்கோடற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.*

*‘அகன்றுறை’ என்னுங் கலியுள்,*

**“நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்**
**தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்**
**ஞெகிழ்தொடி இளையவ ரிடைமுலைத் தாதுசோர்ந்து**
**இதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்**

---

தனிமை; தலைவன்பிரியத் தனித்துறைதலால் நேர்ந்த வருத்தம். இயன்றநெஞ்சம்—தலைவன்பால் விரும்பிச் சென்ற நெஞ்சம். தலைப் பெயர்த்தல்—அவனிடத்தினின்றும் மீட்டல். அருக்குதல்; அருகும்படி செய்தல்; அஃதாவது தலைவன்பால் வைத்த வேட்கையைச் சுருங்கச் செய்தல். எதிர் பெய்தலாவது, தன்னாற்குறிக்கப்படுவோரை அவர்தம் உருவுஞ்செயலும் புலனாகும் படி புனைந்துரைவகையால் முன்னிறுத்திக் காட்டுதல்.

இங்ஙனம் தலைவி தலைவனை மறுத்துரைத்தற்கு அவன்பால் அவள் கொண்டுள்ள அன்புடைமையே காரணமாம் என்பார். ‘மறுத்த ஈரத்த மருங்கினும்’ என்றார் ஈரத்து மருங்கு. அன்புடைமைப்பகுதி.

1. தங்கிய ஒழுக்கமாவது, பரத்தையர்பால் தங்கிவந்த தலைவனது புறத்தொழுக்கம். தன்கணவனாற்காதலிக்கப்படும் உணர்வுரிமையும் இளமைப்பருவமும் உடையராதல் பற்றிப் பரத்தையரை எங்கையர் (என் தங்கைமார்) எனக்குறித்தாள் தலைவி.

‘அன்பில்லாத பொருட்பெண்டிராகிய பரத்தையரை அன்பிற்சிறந்த மனைக் கிழத்தியர் என மாறுபடக்கொண்டு மயங்கிய நீ அவர்பாற்சென்று நின்குறையினைக் கூறுவாயாக’ எனத் தலைவனை வணங்கி அவன்பால் ஒன்றனை இரந்து வேண்டுவதுபோல் அவனது பரத்தமையொழுக்கத்தின் பொல்லாங்கினை எடுத்துக்கூறி இடித்துரைக்கும் முறையில் அமைவது தலைவியின்கூற்று என்னும் நயந்தோன்ற, “தாங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரை’ என இரத்தற் கண்ணும்” என்றார் தொல்காப்பியனார்.

**..................................................................**

**.........................................................................**

**மண்டுநீர் ஆரா மலிகடல் போலுநின்**
**தண்டாப் பரத்தை தலைக்கொள நாளும்**
**புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமெனில்**
**தோலாமோ நின்பொய் மருண்டு" (கலித். 79)**

*எனக் கூறுதலால் தான் தாழ்ந்தவாறும் எங்கையர்க்கு உரை இற்றெனக் கூறியவாறும் காண்க.*

**"நினக்கே அன்றஃ தெமக்குமார் இனிதே**
**நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை**
**வேண்டிய குறிப்பினை ஆகி**
**ஈண்டுநீ யருளாது ஆண்டுறை தல்லே." (ஐங்குறு. 49)**

*இதுவும் அது.*

*செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும் என்பது - தலைவன் போகாத காலத்துப் போவெனக் கூறுதலும் என்றவாறு.*

**"பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி**
**நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி**
**ஆங்கே அவர்வயிற் சென்றீ அணிசிதைப்பான்**
**ஈங்கெம் புதல்வனைத் தந்து" (கலித். 79)**

*என வரும்.*

*காமக் கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதிக்கண்ணும் என்பது—காமக்கிழத்தி தலைவி மகவைத் தழீஇ ஏமுற்ற விளையாட்டின் இறுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"நாயுடை முதுநீர்..........................................**
**மகன்தா யாதல் புரைவதாங் கெனவே" (அகம்.16)**

*என வரும்.*

*சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி யறம்புரி நெஞ்ச மொடு தன் வரவறியாமை புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்*

*என்பது–சிறந்த செய்கையினையுடைய அவ்விடத்துத் தலைவன் தோன்றி அறம்புரி நெஞ்சத்தோடே தனது வரவைத் தலைவி யறியாளாக நின்று தலைவியைப் புறஞ்செய்து அவள் மாட்டுளதாகிய ஊடலைப் பெயர்த்தல் வேண்டின இடத்தும் தலைவிமாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு.*

*அவ்வழி என்றது– தலைவியுங் காமக்கிழத்தியைப் போலத் தன் மகனைக் கொண்டு விளையாடிய வழியும் என்றவாறு.*

**"மையற விளங்கிய" என்னும் மருதக்கலியுள்,**

**"பெரும விருந்தொடு கைதூவா வெம்மையும் உள்ளாய்
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாங்கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்தமயின் றற்றாப்
பெருந்தகாய் கூறு சில"**

*எனவும்,*

**"எல்லிழாய்,
சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந் தாங்கே
வாயோடி ஏனாதிப் பாடியம் என்றற்றால்
நோய்நாந் தணிக்கும் மருந்தெனப் பாராட்ட
ஓவா தடுத்தடுத் தத்தத்தா என் பான்மாண
வேய்மென்தோள் வேய்த்திறஞ் சேர்த்தலும் மற்றிவன்
வாயுள்ளிப் போகான் அரோ"**

*எனவும்,*

**"உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்
கள்வர் படர்தந் ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு" (கலித். 81)**

*எனவும் இவ்வாறு வரும்.*

*தந்தையார் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும் [1] என்பது–தந்தையரை மக்கள் ஒப்பர்*

1. "தந்தையர் ஒப்பர் மக்கள்" என்பது, தொல்காப்பியனார் காலத்தில் நாட்டுமக்கள் எல்லார்க்கும் பொருள்புலனாக வழங்கிய பழமொழியாகும். 'புதல்வர்கள் தத்தமக்குரிய

*என்பதனால் அந்தமில்லாத சிறப்பினையுடைய மக்களைப் பழித்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

*"மைபடுசென்னி மழகளிற் றோடை" என்னும் மருதக்கலியுள்'*

**"வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு**
**ஈதன் மாட் டொத்தி பெருமமற் றொவ்வாதி**
**மாதர்மெல் நோக்கின் மகளிரை நுந்தைபோல்**
**நோய்கூர நோக்காய் விடல்"** **(கலித். 89)**

*என வரும்.*

*கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும் என்பது-கொடியாரது கொடுமை சுடாநின்றதெனப் புணர்ச்சியை ஒடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே ஒருப்பட்டு வேறுபடுதலின் நீங்கிய தகுதிக்கண்ணும் என்றவாறு.*[1]

---

குணஞ்செயல்களால் தம் தந்தையையொத்துக் காணப்படுவர்' என்பது இப்பழமொழியாற் குறிக்கப்படும் செய்தியாகும். 'தாயைப்போலப் பெண், நூலைப் போலச் சேலை' என இக்காலத்து வழங்கும் பழமொழியும் இதனோடு ஒத்த கருத்தில் தோன்றியதாகும். 'தந்தையரொப்பர் மக்கள்' என்னும் இப்பழமொழிப் பொருளை வற்புறுத்தும் முறையில் அமைந்ததே, "தக்கார் தகவிலர் என்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்" எனவரும் திருக்குறளாகும். தாய்தந்தையாகிய பெற்றோர்களால் தீதொரீஇ நன்றின்பாற் செலுத்தும் நல்ல அறிவுரைகள் தந்து வளர்க்கப் பெற்று ஈறில்லாப் பெருஞ் சிறப்பினைப் பெறுதற்குரியோர் அவர்தம் மக்கள் என்பது புலப்பட 'அந்தமில்சிறப்பின் மக' எனச் சிறப்பித்தார். தன் கணவன்பாலுள்ள குற்றங்களைப் பெற்றகுழந்தைகள்மேல் ஏற்றிக் கண்டிக்கும் மகளிரது உலகியல்பு புலப்பட மகப்பழித்து நெருங்கல்' என்றார். நெருங்கல்—தவறுகளை எடுத்துக்கூறிக் கண்டித்தல்.

1. 'கொடியோர்' என்றது, பரத்தமையொழுக்கமாகிய கொடுமையை மேற் கொண்ட தலைவரை. சுடும்—சுடா நின்றது; செய்யுமென்னும் வாய்பாட்டு நிகழ் காலத்தெரிநிலைவினை முற்று. ஒடிதல்—தளர்தல்; சோர்வடைதல்.

நல்லிசை நயந்தோர் சொல்—நல்லபுகழை விரும்பிய சான்றோர் கூறும் அறிவுரை. அவ்வறிவுரையோடு ஒருப்படுதலாவது பிறர்க்குத் தீங்கிலா நன்னெறிக் கண்ஒழுகுதல்.

பகுதியின் நீங்குதலாவது, தலைவி தன் கணவனாகிய தலைவன்வேறு தான்வேறு எனப் பகுத்துக்காணும் வேறுபாட்டுணர்வின் நீங்கி, அவனுடைய குற்றங்குறைகளைப் பொருட்படுத்தாமல் அவனொடு ஒன்றுபட்டொழுகுதல். இங்ஙனம் மனையறத்திற்குத் தகுவதறிந்து ஒழுகுதலே தலைமகளுக்குரிய தகுதியாம் என வற்புறுத்துவார் 'பகுதியினீங்கிய தகுதிக்கண்ணும்' என்றார்.

*அஃதாவது, அக்காலத்துத் தக்கதறிதல் புகழை விரும்பினோர் சொல்லும் சொல்லாவது, காமம் விரும்பும் பரத்தையரைப்போலாது அறத்தை விரும்புதல்.*

*'யாரிவனெங் கூந்தல்' என்னும் மருதத்கலியுள்,*

**"மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்**
**புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்**
**பொய்ப்ப விடேஎ மென நெருங்கில் தப்பினேன்.**
**என்றடி சேர்தலு முண்டு"** (கலித். 89)

*என்பது ஆற்றாமை வாயிலாகப் பகுதியி னீங்கிய தகுதி.*

*பாணன் முதலானோர்க்கு வாயில் நேர்ந்தது வந்தவழிக் காண்க.*

*கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி[1] யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காத லெங்கையர் காணின் நன்றென் மாதர் சான்ற வகையின்கண்ணும் என்பது–தலைவனது கொடுமை யொழுக்கத்தினைத் தலைவியே பொறுக்கவேண்டி அவளடிமேல் வீழ்ந்தவனை நெருங்கி நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர் காணின் இப்பணிதல் நன்றா மெனக்[2] காதலமைந்த வகையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

*'நில்லாங்கு நில்லா' என்னும் மருதக்கலியுள்,*

**"நல்லாய், பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து**
**கையொடு கண்டாய் பிழைத்தேன்; அருளினி;**
**அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள**
**அளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்**
**விளித்துநின் பாணனோ டாடி யளித்தி**
**விடலை நீ நீத்தலின் நோய்பெரி தேய்க்கும்**
**நடலைப்பட் டெல்லா நின்பூழ்."** (கலித். 95)

1. கோடல் வேண்டி — பொறுத்துக் கொள்ளுதல் வேண்டி.

2. 'என் தங்கையர் நிலையில் வைத்து நின்னாற் காதலிக்கப்படும் பரத்தையர்கள் நீ என்னை வணங்குதலாகிய இந்நிகழ்ச்சியைக் காண நேர்ந்தால் இது நினக்கு நன்மையைத் தராது' என்பாள், 'காதல் எங்கையர் காணின் நன்று' என்றாள். இத்தொடரில் 'நன்று' என்பது 'நன்றாகாது' எனக்குறிப்பிற் பொருள்தந்து நின்றது.

*இதனுள் 'கையொடு கண்டை பிழைத்தேனருள்' என அடிமேல் வீழ்ந்தவாறும், 'அருளுகம் யாம் யாரேம்' எனக் காதலமைந்தவாறும் 'நீ நீக்கலின் நின் பூழெல்லாம் நடலைப்பட்டு நோய்பெரிதேய்க்கும்' அவற்றை யின்னும் விளித்து நின் பாணனோடாடி யளித்துவிடும் எனவும், இப் பணிதல் நின் பெண்டிர்க்கு நன்றாகுமே எனவும் கூறியவாறு காண்க. ஈண்டுப் பூழ் என்றது குறிப்பினாற் பரத்தையரை.*

*தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழியும் என்பது–தாயரைக் கிட்டிய நல்ல அணியையுடைய புதல்வனை மாயப் பரத்தை குறித்த வழியுங் கூற்று நிகழும் என்றவாறு.*

*புதல்வனைப் பரத்தைமை குறித்தலாவது. 'தலைவன் புறப் பெண்டிர் மாட்டுப் போகியவழி வெகுளுமாறு போலப் புதல்வனையும் அவரிடைச் சென்றவழி வெகுளல். கண்ணிய நல்லணி யெனவே அவர் கொடுத்த நல்லணி யென்பது பெறுதும். பரத்தைமை உள்ளாதவழி இவள் மாட்டுக் குறிப்பு நிகழாதாம். மாயமென்பது பரத்தைக்குப் பண்பாகி இனஞ் சுட்டாது வந்தது.*[1]

**"உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்**

**... ... ... ... ...**

**யானே தவறுடையேன்" (கலித். 84)**

*எனவரும்.*

*தன்வயிற் சிறப்பினும் அவன்வயிற் பிரிப்பினும் இன்னாத் தொல்சூள் எடுத்தற்கண்ணும்*[2] *என்பது–தன்மாட்டு நின்ற*

1. 'செஞ்ஞாயிறு' என்புழிச் செம்மை என்னும் அடைமொழி ஞாயிற்றின் இயல்பான பண்பினைச் சுட்டுவதாய் நின்று இனஞ்சுட்டாதவாறு போல, 'மாயப் பரத்தை' என்புழி மாயம் என்னும் அடைமொழி பரத்தையர்க்கெல்லாம் இயல்பாகியமைந்த பண்பினைச் சுட்டுவதாய் இனஞ்சுட்டாது வந்தது என்பதாம். மாயம்—பொய்ம்மை

2. 'தன் வயிற்சிறப்பு' என்றது, தலைவி தலைவன்பாற் கொண்டுள்ள அன்பின் மிகுதியினையும், 'அவன் வயிற்பிரிப்பு' என்றது, தலைவியைவிட்டுப் பிரிதற்குக் காரணமாகிய தலைவனது அன்புக்குறைபாட்டினையும் குறிப்பன.

இன்னாத் தொல்சூள்—தான் சொல்லிய சொல்லினின்றும் வழுவினாரைத் துன்புறுத்தும் இயல்பினதாகத் தெய்வத்தின் முன்னிலையில் 'நின்னிற் பிரியேன்' எனத் தலை மகளிடத்திற் செய்த சூளுறவாகிய சபதம்.

எடுத்தலாவது, அச்சூளுறவினின்றும் தலைவன் தவறினமையால் தலை மகனுக்கு என்னதீங்கு விளையுமோ எனத் தலைவி தன்மனத்துட்கொண்டு சிந்தித்தல்.

*மிகுதியானும் அவன்மாட்டு நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவி யெடுத்தவழியும் கூற்று நிகழும் என்றவாறு.*

*தலைமகள் மாட்டு மிகுதி யாதோ வெனின்.*

**"மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய" (பொருளியல். 32)**

*என்றாராகலான், அக்காலத்து மிகுதியுளதாம்.*

**"தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்**
**தார் மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி**
**நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி**
**யார்மேல் விளியுமோ கூறு" (கலித். 88)**

*எனவரும்.*

*காமக்கிழத்தி நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் என்பது-காமக் கிழத்தி நலத்தினைப் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்* [1] *கூற்று நிகழும் என்றவாறு.*

*நலம்பாராட்டுவாள் தலைவி: அவள் பாராட்டுதல் தீமை பற்றி வருதலான், அதனாற் சொல்லிமுடிப்பது பிறபொருளாயிற்று.*

**"கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே**
**ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென**
**வெள்ளாங் குருகை வினவு வோளே." (ஐங்குறு. 122)**

*இதனான், அவள் மிக்க இளமைகூறித் தலைவனைப் பழித்தாளாம்; ஒருமுகத்தாற் புலந்தவாறு. இன்னுந் தலைமகள் நலம் பாராட்டியவழிக் கூறவும் பெறும்.*

**அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப**

---

1. தலைவனாற் காமுறப்பட்ட காமக்கிழத்தியின் நலத்தினைப் பாராட்டும் நிலையில் தலைமகளால் தொடங்கப் பெற்ற பாராட்டு தலைவனது புறத்தொழுக்கமாகிய தீமையினைச் சுட்டும் நிலையில் முடிவுபெறுதலின், 'காமக்கிழத்திநலம் பாராட்டிய, தீமையின் முடிக்கும் பொருள்' என்றார் ஆசிரியர். நலம்பாராட்டிய பொருள், தீமையின் முடிக்கும் பொருள் எனப் பொருள் என்பது ஈரிடத்தும் சென்றியைந்தது.

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியர்எம் கணவனை**
**யான் ஆகியர்நின் நெஞ்சுநேர் பவளே"** **(குறுந். 49)**

*என வரும்.*

*கொடுமை ஒழுக்கத்துத் தோழிக் குரியவை வடுவறு சிறப்பின் கற்பின் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பிரித்துலும் பெட்டலும்*[1] *ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும் என்பது– தலைவி கொடுமை யொழுக்கத்துத் தோழிக்குக் கூறுதற் குரியவை குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின்கண் திரியாது தலைவனைக் காய்தலும் உவத்தலும் நீக்கி நிறுத்தலும் பேணிக்கோடலும் அவ்விடத்து வரும்பலவாய் வேறுபட்டு வரு நிலையினும் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.*

*தோழிக்குரியவை என்றதனால் தோழிக்குக் கூறத்தகாதனவும் உள என்று கொள்க.*

**"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்**
**கன்னையும் அத்தனும் அல்லரோ தோழி**
**புலவிய தெவனோ அன்பிலங் கடையே."** **(குறுந். 93)**

*இது காய்தல் பற்றி வந்தது.*

**"நாமவர் திருந்தெயி றுண்ணவும் அவர்நம**
**தேந்துமுலை யாகத்துச் சாந்துகண் படுப்பவங்**
**கண்சுடு பரத்தையின் வந்தோற் கண்டும்**
**ஊடுதல் பெருந்திரு உறுகெனப்**
**பீடுபெறல் அருமையின் முயங்கி யேனே"**

*எனவும்,*

**"காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்**
**காணேன் தவறல் லவை"** **(குறள். 1286)**

*எனவும் இவை உவத்தல் பற்றி வந்தன.*

---

1. காய்தல்—வெகுளுதல், உவத்தல்—உவந்துபாராட்டுதல். பிரித்தல்— அன்பின்றி நீக்கி நிறுத்தல், பெட்டல்—விரும்பிப்பேணிக் கொள்ளுதல்.

**"அடும்பவிழ் அணிமலர் சிதைஇ மீன் அருந்துந்
தடந்தாள் நாரை யிருக்கும் எக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நன்னலங் கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டக்
கொடுத்தவை தாஎனக் கூறலின்
இன்னா தோநம் மன்னுயிர் இழவே."**

*இது பிரித்தல் பற்றி வந்தது.*

**"நீரார் செறுவில் நெய்தலொடு...
... ... ... ... ...
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் தோழி கடன்நமக் கெனவே."** (கலித். 75)

*இதுபெட்பின் கண் வந்தது.*

**"நகையா கின்றே தோழி...
மம்மர் நெஞ்சினன் தொழுது நின்றதுவே."** (அகம். 56)

*இது மேற்கூறியவாற்றா னன்றிப் பிறவாற்றான் வந்தது.*

**"ஒலிபுனல் ஊரனை ஒருதலை யாக
வலிநமக் காவது வலியென் றொழியப்
பந்தர் மாட்டிய பரூஉச்சுடர் விளக்கத்துக்
கந்த முனித்தலைத் தும்பி ஆர்ப்பக்
காலை கொட்டிய கவர்தோற் சிறுபறை
மாலை யாமத்து மதிதர விடாது
பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வனைக்
காண்டலுங் காணான்தன் கடிமனை யானே"**

*எனவரும்,*

*வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக் கிழவோள் செப்பல் கிழவதென்ப என்பது— வாயில்கள்மாட்டு வரூஉங் கூற்றுவகை யுளப்படத் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.*

*வாயில்களாவார் :—பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர்.*

*இவருள் தோழி வாயிலாதல் மேற்கூறுதலின் ஒழிந்த வாயில்கள் ஈண்டுக் கொள்ளப்படும்.*

**“அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்**
**தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ**
**இரந்தூண் நிரம்பா மேனியொடு**
**விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.”** **(குறுந். 33)**

*இது பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது.*

**“நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ**
**ஒன்று தெளிய நசையின மொழிமோ**
**வெண்கோட் டியானை சோணை படியும்**
**பொன்மலி பாடலி பெறீஇயர்**
**யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.”** **(குறுந். 75)**

*இது வருகின்றான் என்ற உழையர்க்குக் கூறியது.*

**“ஆடியல் விழவின்... ... ...**
**பயனின் றம்மவிவ் வேந்துடை அவையே’** **(நற்றிணை. 90)**

*இது பாங்கனைக் குறித்துக் கூறியது.*

**“நெய்யுங் குய்யும்... ... ...**
**விரகில மொழியல்யாம் வேட்டதில் வழியே.”**
**(நற்றிணை. 380)**

*‘வாயிலின் வரூஉம் வகை’ என்றமையான், தன் ஆற்றாமையும் வாயில்களாக் கொள்ளப்படும் என்பது பெற்றாம்*

**“புல்லேன் மகிழ்ந புலத்தலுமிலனே...**
**கோல்நேர் எல்வளை நெகிழ்த்த நும்மே.”** **(நற்றிணை. 340)**

*இஃது ஆற்றாமை வாயிலாகச் சென்றாற்குக் கூறியது.*

*‘புள்ளிமி ழகல்வயின்’ என்ற மருதக்கலியுள்,*

**“பூங்கட் புதல்வனைப் பொய்பா ராட்டி**
**நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி**
**ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்**
**ஈங்கெம் புதல்வனைத் தந்து”** **(கலித். 79)**

*என்று புதல்வன் வாயிலாகக் கூறியது காண்க.* *(6)*

***நச்சினார்க்கினியம் :***

*இது, முறையானே தலைவிகூற்று நிகழும் இடங் கூறுகின்றது.*

*(இ-ள்) அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றற் கண்ணும் நிறுத்தற்கண்ணும் உரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற் பெருமையிற் றிரியா அன்பின்கண்ணும்; அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்[1] வேதத்தையுந் தரும நூலையுந் தலைவன் அறிந்த அறிவைத் தலைவி மிக அறியுமாதலின்; ஏற்றற்கண்ணும் - அந்தணர் முதலிய மூவருந் தத்தமக்குரிய வேள்வி செய்யுங்கால் தம் மனைவியர் பலருள்ளுந் தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமை வகையான் ஏனை மகளிரின் உயர்த்தல் செய்யுமிடத்தும்; நிறுத்தற் கண்ணும். தத்தங் குலத்திற்கேற்ப நிறுத்துதலைச் செய்யுமிடத்தும்; உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில் - அவர் குலத்திற்கேற்ற உரிமைகளைக் கொடுத்த தலைவனிடத்து; பெருமையில் திரியா அன்பின்கண்ணும் - தத்தங் குலத்திற்கேற்ற பெருமையினின்றும் நீங்காத அன்பு செய்து ஒழுகுதற்கண்ணும் : அறியுமாகலின் அன்புசெய்து ஒழுகுமெனக் கூட்டுக.*

*என்றது, அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவருந் தலைவியராகியவழித் தங்குலத்திற் கொண்டவரே வேள்விக்கு உரியர்; ஏனையோர் வேள்விக்கு உரியரல்ல ரென்பதூஉம்[2] அவர்க்குத் தங்குலங்கட்கு ஏற்றவகையின் உரிமை கொடுப்பரென்பதூஉம் அவர்களும் இது கருமமே செய்தானென்று அன்பில் திரியாரென்பதூஉங் கூறியவாறு.*

**"நின்ற சொல்லர்......செய்பறியலரே" (நற்றிணை. 1)**

*இதனுள், தாமரைத்தாதையும் ஊதிச் சந்தனத்தாதையும் ஊதி வைத்த தேன்போலப் புரைய என்றதனான் ஏற்றற்கண் தலைவி கூறினாள். பிரிவறியலரென்றதும் அன்னதொரு குணக்குறையில ரென்பதாம். பிரிவுணர்ந்து புலந்துரைப்பின் நாணழிவாம்.*

1. ஆற்ற அறிதல் – மிகவும் அறிதல். ஏற்றல் – உயர்த்துதல். நிறுத்தல் தத்தமக்குரிய ஒழுக்கத்தில் நின்று ஒழுகும்படி செய்தல்.

2. மனைக்கிழத்தியாகிய தலைவியொருத்தியின் கூற்றுவகையினை விரித் துரைக்கும் இந்நூற்பாவுக்கு, அந்தணர்க்கு நால்வர், அரசர்க்கு மூவர், வணிகர்க்கு இருவர் என்றமுறையில் வேள்விக்குரியராக மனைக்கிழத்தியர் பலர் உளர் எனக் கொண்டு நச்சினார்க்கினியர் கூறும் பொருள் தொல்காப்பியனார் கருத்துக்கு ஒத்ததன்று என உணர்தல் வேண்டும்.

**"நிலத்தினும் பெரிதே......நட்பே"** **(குறுந். 3**

இது, நிறுத்தற்கட் கூறியது.

*கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்[1] அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்* - அறமும் பொருளுஞ் செய்வதனாற் புறத்துறைதலில் தலைவனைத் தலைவி நீங்குங்காலம் பெரிதாகலின் அதற்குச் சுழற்சிமிக்க வேட்கைமிகுதி நிகழ்ந்த விடத்தும்:

**"காமந் தாங்குமதி......இல்லாகுதுமே"** **(குறுந். 290)**

இது, தெருட்டுந் தோழிக்குத் தலைவி காமத்து மிகுதிக்கட் கூறியது.

*இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்* - அங்ஙனம் அலமரல் பெருகியவழித் தலைவனை எதிர்ப்பட்டஞான்று இன்பமுந் தனிப்பட்டஞான்று துன்பமும் உளவாகிய இடத்தும்:

**"வாரல் மென்தினைப்......விறலோன் மார்பே"**
**(நற்றிணை, 304)**

**"இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்**
**புன்க ணுடைத்தாற் புணர்வு"** **(குறள். 1152)**

எனவரும்.

*கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய இளிவரு நிலையும்[2]* – யானைக் கன்று போலும் புதல்வன் பிறத்தலான் உளதாகிய விருப்பத்தை யுடைய நெய்யணிக்கு விரும்பிய தலைவனை நெஞ்சை வருத்தித் தன்னைச் செறிதலினின்று நீக்கிய இளிவந்த நிலைமைக்கண்ணும்;

தன்னை அவமதித்தானென்றது இளிவரு நிலையென்றார்.

**"கரும்புநடு பாத்தியிற் கலித்த ஆம்பல்"** **(ஐங்குறு. 65)**
இது, புதல்வற் பயந்தகாலத்துப் பிரிவுபற்றிக் கூறியது.

---

1. புலம்பு பெரிது – தனிமை பெரிது; நீங்கும் காலம் பெரிது.

2. கயந்தலை என்பதற்கு 'யானைக்கன்று போலும் புதல்வன்' எனப் பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர். நளி – செறிவு, நளியின் நீக்குதலாவது, தன்னைச் செறிதலினின்றும் நீக்குதல். இளிவரு நிலை – தாழ்வுளதாந்தன்மை.

*புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனை - புதல்வனை விளையாட்டை விரும்பின உள்ளத்தோடே புதுவது புணர்ந்த பரத்தையர் தன்மாட்டு மனநெகிழ்ந்த மென்மையின் பொருட்டு அவர்க்கு அருள்செய்யப் பிரிந்து வந்தோனை; புலம்பு நனி காட்டி - தனது தனிமை மிகவும் அறிவித்து; இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த்து அருக்கி[1] -அவன் மேற் சென்ற நெஞ்சினைச் செல்லாமல் அவனிடத்தினின்றும் மீட்டு அருகப்பண்ணி; எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்[2] - பிறருள் ஒருத்தியைக் காணாளாயினுங் கண்டாள்போலத் தன்முன்னர்ப் பெய்துகொண்டு வாயின் மறுத்ததனால் தோற்றிய நயனுடைமைக்கண்ணும் :*

*எனவே, மறுப்பாள்போல் நயந்தாளாயிற்று. கிழவனை மறுத்தவெனக் கூட்டுக.*

**"கடல்கண் டன்ன .................. ...................**
**ஊர்முழுது நுவலுநிற் காணிய சென்மே"** **(அகம். 176)**

*எனவரும்.*

*எதிர்பெய்து மறுத்த ஈரமெனவே எதிர்பெய்யாது மறுத்த ஈரமுங் கொள்க.*

**"கூர்முள் முள்ளி ..........................**
**நெஞ்சறை போகிய அறிவி னேற்கே."** **(அகம். 26)**

*இதனுள் ஒருத்தியை வரைந்து கூறாது நல்லோரைப் பொது வாகக் கூறியவாறும் வேண்டினமெனப் புலம்புகாட்டிக் கலுழ்ந்ததென ஈரங்கூறியவாறுங் காண்க.*

*தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற்கண்ணும் - பரத்தையர்மாட்டுத் தங்கிய செல்வியை மறையாத ஒழுக்கத்தோடே வந்த தலைவனைநீ கூறுகின்ற பணிந்த மொழிகளை எங்கையர்க்கு[3] வணங்கிக் கூறென இரந்துகோடற் கண்ணும்:*

1. அருக்கி – அருகப்பண்ணி; சுருங்கச் செய்து.

   எதிர்பெய்தல் – படர்க்கையிடத்தாரைத் தன்முன்னிலையில் உள்ளார் போல் வைத்துரைத்தல்.

2. ஈரம் – நயத்தலாகிய அன்பு.

3. எங்கையர் – என்தங்கைமார்; என்றது பரத்தையரை.

*"அகன்றுறை யணிபெற" என்னும் மருதக்கலியுள்*

**"நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்**
**தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்**
**ஞெகிழ்தொடி இளையவர் இடைமுலைத் தாதுசோர்ந்**
**திதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்" (73)**

*என்பன கூறி,*

**"மண்டுநீ ராரா மலிகடல் போலுநின்**
**தண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்**
**புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமெனில்**
**தோலாமோ நின்பொய் மருண்டு" (கலி. 73)**

*எனவும் எங்கையரைத் தேற்றெனக் கூறியவாறு காண்க.*

*செல்லாக் காலைச்[1] செல்கென விடுத்தலும் - தலைவன் செல்லானென்பது இடமுங் காலமும்பற்றி அறிந்த காலத்து ஊடலுள்ளத்தாற் கூடப்பெறாதாள் செல்கெனக் கூறி விடுத்து ஆற்றுதற்கண்ணும்:*

*"புள்ளிமி ழகல்வயல்" என்னும் மருதக்கலியுள்,*

**"பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி**
**நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி**
**ஆங்கே அவர்வயிற் சென்றி அணிசிதைப்பான்**
**ஈங்கெம் புதல்வனைத் தந்து" (கலி. 79)**

*எனவும்,*

**"சேற்றுநிலை முனைஇய...**
**சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ" (அகம். 46)**

*எனவும் வரும்.*

*காமக்கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும் - மனையறத்திற்கு உரியளாக வரைந்துகொண்ட காமக்கிழத்தி, தலைவி புதல்வன் மனைப்புறத்து விளையாடுகின்ற*

1. செல்லாக்காலை – தலைவன் தன்னை விட்டுச் செல்லமாட்டான் என்பதனைத் தெளிவாக அறிந்த காலத்து.

வனைத் தழுவிக்கொண்டு தான் ஏமுறுதற்குக் காரணமான விளையாட்டின் முடிவின் கண்ணும்:

அவள் எம்மைப் பாதுகாப்பீரோவென வினாயவழி அவனும் அதற்கு உடன்பட்டான்போலக் கூறுவன உளவாதலின் 'ஏமுறு விளையாட்டு' என்றார். 'இறுதி யென்றார் விளையாட்டு முடியுந் துணையுந் தான் மறையநின்று பின்னர்க் கூறுதலின்.

**"நாயுடை முதுநீர்க்......**
**மகன் தாய் ஆதல் புரைவதாங் கெனவே"** **(அகம். 16)**

என வரும்.

(சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டு இடத் தானும்) சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி—காமக்கிழத்தியது ஏமுறும் விளையாட்டுப்போலாது தலைவிதன் புதல்வனைத் தழீஇ விளையாட்டையுடைய இல்லிடத்தே தலைவன் தோன்றி; அறம்புரி உள்ளமொடு தன்வரவு அறியாமைப் புறஞ்செய்து - அவ் விளையாட்டு மகிழ்ச்சியாகிய மனையறத்தினைக் காண விரும்பிய நெஞ்சோடே தன் வரவினைத் தலைவி அறியாமல் அவள் பின்னே நிற்றலைச்செய்து; பெயர்த்தல் வேண்டு இடத்தானும் - தலைவியது துனியைப் போக்குதல் வேண்டிய இடத்தும்:

'தன்வரவறியாமை' என்றதற்குத் தன்னைக் கண்டால் தலைவியுழை நின்றார் தனக்குச் செய்யும் ஆசாரங்களையும் அவர் செய்யாமற் கைகவித்துத் தன் வரவு அறியாமை நிற்பனென்று கொள்க.

**"மையற விளங்கிய மணிமருள் அவ்வாய்......**
**தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும்**
**ஆபோற் படர்தக நாம்"** **(கலி. 81)**

என வரும்.

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால் அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும் - அங்ஙனம் விளையாடுகின்ற காலத்து மக்கள் தந்தையரை ஒப்பரென்னும் வேத விதிபற்றி முடிவில்லாத சிறப்பினையுடைய மகனைப் பழித்து வெகுளுதற்கண்ணும் :

*மகனுக்கும் இது படுமென்று கருதிக் கூறலின்*[1] *தலைவனைப் பழித்தென்னாது 'மகப்பழித்' தென்றார்.*

*"மைபடு சென்னி" என்னும் மருதக்கலியுள்,*

**"வனப்பெலா நுந்தையை யொப்பினும்......**
**மென்றோள் நெகிழ விடல்"** **(கலி 86)**

*என அவனைக் கொண்டு விளையாடியவழி அவன் தலைவன் மேல் வீழ்தலின்,*

**தந்தை வியன்மார்பில் பாய்ந்தான் அறனில்லா**
**அன்பிலி பெற்ற மகன்** **(கலி. 86)**

*எனத் தன் திறத்து அன்பிலனென நெருங்கிக் கூறியவாறு காண்க.*

*(கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்) கொடியோர் நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ - கொடியோரென்றது பாணர் கூத்தர் விறலியர் அந்தணர் முதலியோரை; கொடியோராய்த் தலைவன் புகழைக் கூறுதற்கு விரும்பினோர் பரத்தையர்க்கு வாயிலாய் வந்து கூறிய சொல்லோடே தானும் அவரிடத்தே சேர்ந்து ; பகுதியி னீங்கிய கொடுமை - காவற்பாங்கிற் பக்கமும் ஆங்கோர் பக்கமுமாகிய பகுதி காத்தலினின்று நீங்கிய பரத்தையரைக் கூடிய கொடுமை; சுடுமென ஒடியாது தகுதிக்கண்ணும் - நெஞ்சைச் சுடுமென்று கூறி அவன் தவற்றைக் கூறுதலைத் தவிராமற் கூறுதற்குத் தக்க தகுதியிடத்தும்;*

*இன், நீக்கப்பொருட்டு; பகுதி - கூறுபாடு, ஆகுபெயர்; பகுதிகளைக் காத்தற்குப் பிரிவேனெனக் கூறிப் பிரிந்து பாணர் முதலியோர் புதிதிற் கூட்டிய பரத்தையரிடத்தே ஒழுகிய மெய் வேறுபாட்டோடு வந்தானைக் கண்டு அப்பகுதிகளைப் பரத்தையராகக் கூறுவாளாயிற்று. அது, "இணைபட நிவந்த" என்னும் மருதக் கலியுள்,*

**"கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்**
**பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானோ**

1. மகனுக்கும் இதுபடும் – தந்தையின் பண்பாகிய இது அவன்பெற்ற மகனுக்கும் பொருந்தும். படுதல் – பொருந்துதல்.

**பேணானென் றுடன்றவர் உகிர்செய்த வடுவினான்**
**மேல்நாள்நின் தோள்சேர்ந்தார் நகைசேர்ந்த இதழினை**
**நாடிநின் தூதாடித் துறைச்செல்லாள் ஊரவர்**
**ஆடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்றாளோ**
**கூடியார்ப் புனலாடப் புணையாய மார்பினில்**
**ஊடியார் எறிதர ஒளிவிட்ட அரக்கினை;**
**வெறிதுநின் புகழ்களை வேண்டாரின் எடுத்தேத்தும்**
**அறிவுடை அந்தணன் அவளைக்காட் டென்றானோ**
**களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட உருவின்மேல்**
**குறிபெற்றார் குரற்கூந்தல் கோடுளர்ந்த துகளினை"**
**(கலி. 72)**

*என்பவற்றாற் பாணர் முதலியோர் வாயிலாயவாறு காண்க.*

**"ஏந்தெழின் மார்ப எதிரல்ல நின்வாய்ச்சொல்...**
**... ... ... ... ... ... ... ...**
**உருவழிக்கும் அக்குதிரை யூரல் நீ ஊரில் பரத்தை**
**பரியாக வாதுவனாய் என்று மற்றச்சார்த்**
**திரிகுதிரை யேறிய செல்."** **(கலி. 96)**

*இதனுட் பாணன் தூதாட வாதத்தான் வந்த குதிரை யென்பதனால் அவன் கூட்டிய புதிய பரத்தையர் என்பதூஉம் அவன் பகுதியினின்று நீங்கியவாறுங் குதிரையோ வீறியதென்பது முதலியவற்றாற் கொடுமை நெஞ்சைச் சுடுகின்றவாறும் அதனை நீக்கிய பரத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தக்கு[1] நின்றவாறுங் காண்க.*

*கடவுட்பாட்டு[2] 'ஆங்கோர் பக்கமும்'[3] யானைப்பாட்டுக் 'காவற் பாங்கின் பக்க' மும்மாம்.*

*கொடுமை ஒழுக்கங் கோடல்[4] வேண்டி அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்[5] காதல் எங்கையர் காணின் நன்றென*

1. தக.பா.வே
2. 'கடவுட்பாட்டு' என்றது, மருதக்கலி 28ஆம்– பாடலை.
3. 'யானைப்பாட்டு' என்றது, மருதக்கலி 32ஆம் – பாடலை.
4. கோடல் – பொறுத்துக்கொள்ளுதல்.
5. நெருங்குதல் – இடித்துரைத்தல்.

*மாதர்சான்ற வகையின்கண்ணும்: கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி - அங்ஙனம் பகுதியினீங்கிப் பரத்தையர்மாட்டு ஒழுகிக் கொடுமை செய்த ஒழுக்கத்தைத் தலைவி பொறுத்தலை வேண்டி ; அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கி - தன் அடிமேல் வீழ்ந்து வணங்கிய தலைவனை அதனின்மீது துனிமிக்குக் கழறி; காதல் எங்கையர் காணின் நன்றென - நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர் காணின் இவை நன்றெனக் கொள்வரெனக் கூறி; மாதர் சான்ற வகையின்கண்ணும் - காதல் அமைந்து மாறிய வேறுபாட்டின் கண்ணும்:*

*பொறாதாரைக் கொள்ளா ரென்பவாகலிற் கோடல் பொறுத்தலாயிற்று. 'காதலெங்கையர், மாதர் சான்ற' என்பனவற்றால் துனிகூறினார். எனவே, யாங்கண்டதனாற் பயனின்றென்றார்.*

*"நில்லாங்கு நில்" என்னும் பூழ்ப்பாட்டினுள்,*[1]

**"மெய்யைப்பொய் யென்று மயங்கிய கையொன்**
**றறிகல்லாய் போறிகாணீ;**

**நல்லாய்,**
**பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து**
**கையொடு கண்டாய் பிழைத்தேன் அருளினி,**
**அருளுகம் யாம்யாரெம் எல்லா தெருள**
**அளித்துநீ பண்ணிய பூழெல்லாம் இன்னும்**
**விளித்தநின் பாணனொ டாடி அளித்தி**
**விடலைநீ நீத்தலின் நோய்பெரி தேய்க்கும்**
**நடலைப்பட் டெல்லாநின் பூழ்."** **(கலி. 95)**

*இதனுள் 'அருளினி'யென அடிமேல் வீழ்ந்தவாறும் 'அருளுகம் யாம்யார்' எனக் காதல் அமைந்தவாறும் 'விளித்தளித்தி' யென இப் பணிவை நின் பெண்டிர் கொள்வரெனவுங் கூறியவாறுங் காண்க.*

**"நினக்கே அன்றஃ தெமக்குமார் இனிதே**
**நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை**

1. 'பூழ்ப்பாட்டு' என்றது, மருதக்கலி 30–ஆம் பாடலை.

**வேண்டிய குறிப்பினை யாகி**
**ஈண்டுநீ அருளா தாண்டுறை தல்லே."** **(ஐங்குறு. 46)**

*இதுவும் அது.*

*தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளிய வழியும் - பரத்தையர் கருதி அணிந்த நன்றாகிய அணிகளையுடைய புதல்வனை மாயப் பரத்தைமையைக் குறித்தவிடத்தும்:*[1]

*அவருள் துனியாலே வருந்திய பரத்தையர் தம் வருத்தத்தினை உணர்த்தியும் தலைநின்றொழுகும் பரத்தையர் தஞ்சிறப்பு உணர்த்தியும் அணிவரென்றற்குக் 'கண்ணிய' என்றார். பரத்தையர் சேரி சென்று அணியணிந்ததற்கு வெகுண்டு கூறலிற் பொய்யாகிய பரத்தை யென்றார். எனவே தலைவன் பரத்தைமை கருதினாளா யிற்று.*

**"உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்...**
**யானே தவறுடையேன்.** **(கலி. 84)**

*எனவரும்.*

*தன்வயிற் சிறைப்பினும்*[2] *- தலைவனில் தான் புதல்வற்குச் சிறந்தாளாகி அத் தலைவன்மாட்டும் அவன் காதலித்த பரத்தையர் மாட்டுஞ் செல்லாமற் புதல்வனைத் தன்பாற் சிறை செய்தற் கண்ணும்:*

*"புள்ளிமி ழகல்வயல்" என்னும் மருதக்கலியுள்,*

**"அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி**
**மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பவால்**
**தோய்ந்தாரை அறிகுவென் யானெனக் கமழுநின்**
**சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ;**

**புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்**
**பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானால்**

1. இங்குத் 'தாயர்' என்றது, தலைவன்பாற் காதலுடைய பரத்தையரை. கண்ணுதல் – கருதி அணிதல். மாயப்பரத்தை–மாயப்பரத்தமை; பொய்ம்மைவாய்ந்த பரத்தமையொழுகலாறு. உள்ளுதல் – கருதுதல்.

2. சிறைத்தல் — புறம்போகாது காத்தல்.

**மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பில்**
**பூணினால் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ;**

**கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி**
**வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானால்**
**நண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்**
**கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ;**

**எனவாங்கு,**
**பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி**
**நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி**
**ஆங்கே அவர்வயின் சென்றி அணிசிதைப்பான்**
**ஈங்கெம் புதல்வனைத் தந்து.'' (கலி. 9)**

*இது தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்தது.*

**''ஞாலம் வறந்தீர'' என்னும் மருதக்கலியுள், (கலி. 82)**

**''அவட்கினி தாகி விடுத்தனன் போகித்**
**... ... ... ... ...**
**அமைந்த தினிநின் றொழில்.**

*இது காதற்பரத்தையர்பாற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.*

*அவன்வயிற் பிரிப்பினும்*[1] *— தன்னொடு மைந்தனிடை உறவு நீக்கி அவனைத் தலைவனொடு சார்த்துதற் கண்ணும்.*

*என்றது, எமக்கிவன் யாரென்று அயன்மை கூறுதலாம்.*

*''மைபடசென்னி'' என்னும் மருதக்கலியுள், (கலி. 86)*

**''மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர்;**
**ஆயிழாய், தாவாத எற்குத் தவறுண்டோ காவாதீங்**
**கீத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாங்**
**கன்றி அதனைக் கடியவுங் கைந்நீவிக்**
**குன்ற விறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்**
**தந்தை வியன்மார்பிற் பாய்ந்தான் அறனில்லா**
**அன்பிலி பெற்ற மகன்.''**

1. அவன் வயிற் பிரித்தலாவது, தலைவி மைந்தனொடு தனக்குள்ள உறவை விலக்கிய கருத்தில் அவனைத் தலைவனுடன் சார்த்திக்கூறுதல்.

*என்புழி "அறனில்லா அன்பிலி பெற்ற மகன்" எனவும், "நின் மகன்றாயாதல் புரைவதா லெனவே" என்புழி "நின்மகன்" எனவும் பிரித்தவாறு காண்க.*

*இன்னாத் தொல்சூள் எடுத்தற்கண்ணும்*[1] *- இன்னாங்குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறு மிடத்தும்;*

*தலைவன் 'வந்தகுற்றம் வழிகெட' ஒழுகிக், களவிற் சூளுற வான் வந்த ஏதம் நீக்கி, இக்காலத்துக் கடவுளரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் 'இன்னாத சூள்' என்றார். அது களவுபோலச்சூளுறுதலின் 'தொல்சூள்' என்றார்.*

*"ஒரூஉக்கொடி யியனல்லார்" என்னும் மருதக்கலியுள். (கலி 88)*

**"வேற்றுமை என்கண்ணோ ஓராதி தீதின்மை**
**தேற்றக்கண் டீயாய் தெளிக்கு;**
**இனித் தேற்றம் யாம்;**
**தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்**
**தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி**
**நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி**
**யார்மேல் விளியுமோ கூறு"** **(கலி. 88)**

*எனத் தலைவி எம்மேலே இப் பொய்ச்சூளால் வருங்கேடு வருமென மறுத்தவாறு காண்க.*

*காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்: நலம் பாராட்டிய காமக்கிழத்தியர் - தலைவி தன்னிற் சிறந்தாராகத் தன்னான் நலம்பாராட்டப்பட்ட இற்பரத்தையர்; தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்—மேல் தீமையுறுவரென முடித்துக்கூறும் பொருளின் கண்ணும்;*[2]

**"மடவ ளம்மநீ இனிக்கொண் டோளே**
**தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்**

1. இன்னாச் சூள் – சொல்லிய திறத்தின் வழுவிய காலத்துத் துன்பந்தரும் சூளுறவு. களவுக்காலந்தொடங்கித் தலைவனாற் செய்யப்படுதலின் 'தொல்சூள்'.

2. 'நலம்பாராட்டிய காமக்கிழத்தியர் தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்' என இயைத்து, "தலைவி தன்னிற் சிறந்தாராகத் தன்னால் நலம் பாராட்டப்பட்ட இற்கிழத்தியர், மேல் தீமையுறுவர் எனமுடித்துக் கூறும் பொருளின் கண்ணும்" எனப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர்.

**பெருநலந் தருக்கு மென்ப விரிமலர்த்**
**தாதுண் வண்டினும் பலர்நீ**
**ஓதி யொண்ணுதல் பசப்பித் தோரே. (ஐங்குறு 67)**

*இதனுள் இப்பொழுது கிடையாதது கிடைத்ததாக வரைந்து கொண்ட பரத்தை தன்னொடு இளமைச் செவ்வி ஒவ்வா என்னையுந் தன்னோடொப்பித்துத் தன் ரெிய நலத்தாலே மாறுபடுமென்பலென அவள் நலத்தைப் பாராட்டியவாறும் நீ பசப்பித்தோர் வண்டு தாது உண்ட மலரினும் பலரெனத் தீமையின் முடித்தவாறுங் காண்க.*

*"அணிற்பல் லன்ன" (குறுந். 19) என்னும் பாட்டுக் கற்பாகலின் இதன்பாற்படும்.*

*கொடுமையொழுக்கம் தோழிக்கு உரியவை வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமைக் காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்-கொடுமை ஒழுக்கம் தோழிக்கு உரியவை [1] —பரத்தையிற் பிரிவும் ஏனைப்பிரிவுகளும் ஆகித் தலைவன்கண் நிகழுங் கொடுமை யொழுக்கத்தில் தோழி கூறுவதற்கு உரியளென மேற்கூறுகின்றவற்றைக் கேட்டவழி; வடுவறு சிறப்பிற் கற்பில திரியாமை எஞ்ஞான்றுங் குற்றமின்றி வருகின்ற பிறப்பு முதலிய சிறப்பிடத்துங் கற்பிடத்துந்திரிவுபடாதபடி; காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் நிலையினும்- தோழி கூற்றினை வெகுளலும் மகிழ்தலும் அவளைப் பிரித்தலும் பின்னும் அவள் கூற்றினைக் கேட்டற்கு விரும்புதலுமாகிய நிலையின்கண்ணும்; ஆவயின் வரூஉம் நிலையினும்-அத்தோழி யிடத்துத் தலைவனைக் காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலுமாய் வரும் நிலையின்கண்ணும்; பல்வேறு நிலையினும். இக்கூறியவாறன்றிப் பிறவாற்றாய்ப் பல்வேறுபட்டு வரும் நிலையின் கண்ணும் :*

1. "கொடுமையொழுக்கம் தோழிக்குரியவை" என்றது, தலைவனது கொடுமை யொழுக்கத்தில் தோழிகூறுவதற்கு உரியவாக இவ்வியல் 9–ஆம் சூத்திரத்திற் கூறப்படும் கூற்றுக்கள்.

வடுவறு சிறப்பிற்றிரியாமை, கற்பிற்றிரியாமை என ஈரிடத்தும் இயைத்தும், பிரித்தலும் பெட்டலும் நிலையினும் ஆவயின் வரூஉம் நிலையினும் என இயைத்தும் பொருள் வரையப்பட்டது.

*அவள்வயினென்னாது 'ஆவயி'னென்றார், தோழியும் பொருளென்பதுபற்றி.*

**"இதுமற் றெவனோ......நமக்கே. (குறுந். 181)**

*இது தோழி இன்னாக்கிளவி கூறியதனை இதுபொழுது கூறிப் பயந்த தென்னெனக் காய்ந்து கூறினாள்.*

**"பார்பக வீழ்ந்த......பண்பே". (நற்றிணை. 24)**

*இது செய்தனையெனத் தலைவி உவந்து கூறியது.*

**"வண்டுபடத் ததைந்த கொடியிணர்**
**பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்**
**கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்**
**கானங் காரெனக் கூறினும்**
**யானோ தேறேனவர் பொய்வழங் கலரே". (குறுந். 21)**

*இது கானங் காரெனக் கூறவும் வாராரென்றவழி அது கூறினும் யானோ தேறேனெனப் பிரிநிலை ஓகாரத்தாற் பிரிந்தது.*

**"யாங்கறிந் தனர்கொல் தோழி பாம்பின்**
**உரிநிமிர்ந் தன்ன வுருப்பவி ரமையத்**
**திரைவேட் டெழுந்த சேவ லுள்ளிப்**
**பொறிமயி ரெருத்திற் குறுநடைப்பேடை**
**பொரிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்**
**தயங்க விருந்து புலம்பக் கூஉம்**
**அருஞ்சுர வைப்பிற் கானம்**
**பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே." (குறுந். 154)**

*இது, வல்லுவோர் என்னும் பெயர் கூறித் தோழி கொடுமை கூறியவழி அவளையே பிரிதல்வன்மை யாங்கறிந்தனரெனத் தலைவி வினவுதலின் அது பின்னுங் கேட்டற்கு அவாவியதாம்.*

*இனித் தோழியிடத்துத் தலைவனைக் காய்தல் முதலியன வருமாறு:*

**"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினு முரைய லவர்நமக்**

**கன்னையும் அத்தனும் அல்லரோ தோழி**
**புலவிய தெவனோ அன்பிலங் கடையே.”** **(குறுந். 93)**

**“வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**பகைப்பத் ததைந்த நெய்தல் கழிய**
**ஓதமொடு பெயருந் துறைவற்குப்**
**பைஞ்சாய்ப் பாவை யீன்றனென் யானே.”** **(ஐங்குறு. 155)**

*இது, பல்லாற்றானும் வாயில் நேராத தலைவியை மகப் பேற்றிற்கு உரிய காலங்கழிய ஒழுகா நின்றாயென நெருங்கிய தோழிக்கு யான் களவின்கண் மகப்பெற்றேனெனக் காய்ந்து கூறியது.*

**“கொடிப்பூ வேழந் தீண்டி யயல**
**வடுக்கொண் மாஅத்து வண்டளிர் நுடங்கும்**
**மணித்துறை யூரன் மார்பே**
**பனித்துயில் செய்யு மின்சா யற்றே.”** **(ஐங்குறு. 14)**

*இஃது, உவத்தல்.*

**“புதன்மிசை நுடங்கும் வேழ வேண்பூ**
**விசும்பாடு குருகிற் றோன்றும் ஊரன்**
**புதுவோர் மேவல னாகலின்**
**வறிதா கின்றென் மடங்கெழு நெஞ்சே.”** **(ஐங்குறு 17)**

*இது, பிரித்தல்.*

**“நாமவர் திருந்தெயி றுண்ணவு மவர்நமது**
**ஏந்துமுலை யாகத்துச் சார்ந்துகண் படுப்பவுங்**
**கண்சுடு பரத்தையின் வந்தோர்க் கண்டும்**
**ஊடுதல் பெருந்திரு வுறுகெனப்**
**பெறலரு மையின் முயங்கி யோனே.”**

*இது, பெட்டது.*

*“நீரார் செறுவின்' (கலி 75) என்னும் மருதக்கலியும் அது.*

*இனிப் ‘பல்வேறு நிலை’யாவன:- தோழி பிரிவுணர்த்திய வழிச் செலவழுங்கக் கூறுவனவற்றின் வேறுபாடுகளும், பிரிந்துழி*

வழியருமை பிறர் கூறக்கேட்டுக் கூறுவனவும், தலைவனது செலவுக் குறிப்பு அறிந்து தானே கூறுவனவுந், தூதுவிடக் கருதிக் கூறுவனவும், நெஞ்சினையும் பாணனையும் தூதுவிட்டுக் கூறுவனவும், வழியிடத்துப் புட்களை நொந்து கூறுவனவும், பிரிவிடை யாற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலெனக் கூறுவனவும், அவன்வரவு தோழி கூறியவழி விரும்பிக் கூறுவனவுங். கூறிய பருவத்தின் வாராது பின்னர் வந்தவனொடு கூடியிருந்து முன்னர்த் தன்னை வருத்திய குழலை மாலையிற் கேட்டுத் தோழிக்குக் கூறுதலுந், தலைவன் தவறிலனெனக் கூறுவனவும், புதல்வனை நீங்காதொழுகிய தலைவன் நீங்கிய வழிக் கூறுவனவும். காமஞ்சாலா விளமையோளைக் களவின்கண் மணந்தமை அறிந்தேனெனக் கூறுவனவும், இவற்றின் வேறுபட வருவன பிறவுமாம்.

**"அருளு மன்பு நீக்கி ...... நாமே"** **(குறுந். 20)**

இது, செலவழுங்கக் கூறியது,

**"வெந்திறற் கடுவளி......சென்றவாறே'** **(குறுந். 39)**

**"எறும்பி அளையிற்......வழுங்க லூரே'** **(குறுந். 12)**

இவை, வழியருமை கேட்டவழிக் கூறியன.

**"நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்**
**கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையாரென்**
**ஒண்ணுதல் நீ வுவர் காதலர் மற்றவர்**
**எண்ணுவ தெவன்கொல் அறியே னென்னும்'** **(கலி. 4)**

இது, செலவுக் குறிப்பறிந்து தோழிக்குக் கூறியது கொண்டு கூறிற்று.

**"பலர்புகழ்......மறவாதீமே."** **(ஐங்குறு. 473)**

இது, தூதுவிடக் கருதிக் கூறியது.

**"சூழ்கம் வம்மோ......பொருளே."** **(ஐங்குறு. 317)**

இது, நெஞ்சினைத் தூதுவிட்டுக் கூறியது

**"மையறு சுடர்நுதல்......பாணனதறிவே."** **(ஐங்குறு 474)**

*இது, பாணனைத் தூதுவிட்டுக் கூறியது.*

**'புல் வீழ் இற்றிக்......தூதே.'** (குறுந். 106)

*இது, தூது கண்டு கூறியது.*

**"ஆம்பற் பூவின்......சென்ற நாட்டே."** (குறுந். 46)

*இது, சென்ற நாட்டு இவை இன்றுகொலென்றது.*

**"வாராராயினும்......என்னாதோரே."** (குறுந். 110)

*இது, பருவங்கண்டு அழிந்து கூறியது*

**"உதுக்கா ணதுவே......மன்னே."** (குறுந். 191)

*இது, காய்ந்து கூறியது.*

**"முதைப்புனங் கொன்ற......வாராதே."** (குறுந். 155)

*இது, பொழுதொடு தான் வந்தன்றெனப் பொழுது கண்டு மகிழ்ந்து கூறினாள்.*

**'அம்ம வாழி......அழப்பிரிந்தோரே.'** (ஐங்குறு. 334)

*இது, வன்புறை எதிரழிந்து கூறியது.*

**"அம்ம வாழி......யென்னு மாறே."** (ஐங்குறு. 333)

*இது, புள்ளை நொந்து கூறியது.*

**"காதல ருழைய......ஞான்றே."** (குறுந். 41)

*இஃது, ஆற்றுவலெனக் கூறியது.*

**"நீகண் டனையோ......காதலர் வரவே."** (குறுந். 75)

*இது, தலைவன் வரவை விரும்பிக் கூறியது.*

**"இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலும்**
**உம்மையா மென்பவ ரோரார்காண்--நம்மை**
**எளிய ரென நினைந்த வின்குழலா ரேடி**
**தெளியச் சுடப்பட்ட வாறு."** (திணை. நூற். 123)

*இது, குழல் கேட்டுத் தோழிக்குக் கூறியது.*

**“பெருங்கடல் திரையது சிறுவெண் காக்கை**
**நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு**
**பூக்கமழ் பொதும்பர்ச் சேக்குந் துறைவனோடு**
**யாத்தேம் யாத்தன்று நட்பே**
**அவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே.” (குறுந். 313)**

*இது, தலைவன் தவறிலனென்று கூறியது.*

**“உடலினே னல்லேன் பொய்யா துரைமோ**
**யாரவன் மகிழ்ந தானே தேரொடு**
**தளர்நடைப் புதல்வனை யுள்ளிநின்**
**வளமனை வருதலும் வெளவி யோளே.” (ஐங்குறு. 66)**

*இது, புதல்வனை நீங்கியவழிக் கூறியது.*

**“கண்டனெ மல்லமோ மகிழ்நநின் பெண்டே**
**பலரொடு பெருந்துறை மலரொடு வந்த**
**தண்புனல் வண்ட லுய்த்தென**
**உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே. (ஐங்குறு. 69)**

*இது காமஞ்சாலா விளமையோளைக் களவின் மணந்தமை அறிந்தேனென்றது.*

*வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇ - வாயில் தன் ஏதுவாகத் தலைவிக்கு வருங் கூற்று வகையோடு கூட்டி ;*

*வாயில்களாவார் செய்யுளியலுட் கூறும் பாணன் முதலியோர். வகையென்றதனான் ஆற்றாமையும் புதல்வனும் ஆடை கழுவுவாளும் பிறவும் வாயிலாதல் கொள்க.*

**“கொக்கினுக் கொழிந்த தீம்பழம் கொக்கின்**
**கூம்புநிலை யன்ன முகைய வாம்பல்**
**தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழுந்**
**தண்டுறை யூரன் தண்டாப் பரத்தமை**
**புலவா யென்றி தோழி புலவேன்**
**பழன யாமைப் பாசறைப் புறத்துக்**
**கழனி காவலர் சுடுநந் துடைக்குந்**
**தொன்றுமுதிர் வேளிர் குன்றூ ரன்னவென்**

**நன்மனை நனிவிருந் தயருங்**
**கைதூ வின்மையி னெய்தா மாறே.”** **(நற்றிணை. 280)**

*இந் **நற்றிணை** தலைவனொடு புலவாமை நினக்கு இயல்போ வென்ற தோழிக்கு விருந்தாற் கைதூவாமையின் அவனை எதிர்ப் படப் பெற்றிலேனல்லது புலவேனோ என்றவாறு.*

**“அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்**
**தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ**
**இரந்தூ ணிரம்பா மேனியொடு**
**விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.”** **(குறுந். 33)**

*இது, பாணன் சொல்வன்மைக்குத் தோற்று வாயில் நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது;*

**“காண்மதி பாணநீ யுரைத்தற் குரியை**
**துறைகெழு கொண்கன் பிரிந்தென**
**இறைகே ழெல்வளை நீங்கிய நிலையே.”** **(ஐங்குறு. 140)**

*இது, பரத்தையிற் பிரிந்துழி அவன் நின் வார்த்தையே கேட்பனென்பது தோன்றப் பாணற்குத் தலைவி கூறியது.*

**“ஆடியல்விழவின்....வேந்துடை யவையே.” (நற்றிணை. 90)**

*இது பாணனைக் குறித்துக் கூறியது.*

**“நெய்யுங் குய்யு மாடி......வேட்டதில் வழியே.”** **(மேற்படி. 380)**

*இது பாணனுக்கு வாயின் மறுத்தது.*

**“புல்லேன் மகிழ்ந......நும்மே.”** **(மேற்படி. 340)**

*இஃது, ஆற்றாமை வாயிலாகச்சென்றுழித் தலைவி கூறியது.*

**“வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்**
**காணிய சென்ற மடநடை நாரை**
**காலை யிருந்து மாலைக் சேக்குந்**
**தண்கடற் சேர்ப்பனொடு வாரான்**
**தான்வந் தனனெங் காத லோனே.”** **(ஐங்குறு. 157)**

*இது, வாயில் வேண்டி ஒழுகுகின்றான் புதல்வன் வாயிலாக வருமெனக் கேட்டு அஞ்சிய தலைவி அவன் விளையாடித் தனித்து வந்துழிக் கூறியது.*

*"கூர்முண் முள்ளி" என்னும் (26) அகப்பாட்டு ஆற்றாமை வாயிலாகச் சென்றுழித் தடையின்றிக் கூறியவாறு*

*மாறாப் புண்போன் மாற்றச் சீற்றங் கனற்றப் பின்னும் புலவி கூர்ந்து தலைவன் கேட்ப முன்னிலைப் புறமொழியாக யான் நோமென்னவும் பொல்லாரென[1] வலிதிற் கூறியவாறு காண்க.*

**"பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி" (கலி. 79)**

*எனப் புதல்வனை வாயிலாகக் கொண்டு சென்றவாறு காண்க.*

**"நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவர்**
**ஆடைகொண் டொலிக்குநின் புலத்திகாட் டென்றாளோ**
**கூடியார் புனலாடப் புணையாய மார்பினில்**
**ஊடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை." (கலி. 72)**

*இஃது ஆடை கழுவுவாளை வாயிலென்றது.*

*பிறவும் வேறுபட வருவனவெல்லாம் இதனாற் கொள்க.*

*கிழவோள் செப்பல் கிழவது என்ப—இப் பத்தொன்பதுங் கிழவோளுக்கு உரிமையுடைத்தென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு. முன்னர் நின்ற ஏழனுருபுகளைத் தொகுத்து இன்னதன் கண்ணும் இன்னதன்கண்ணுந் தலைவி செப்புதலை வாயிலின் வகையோடே கூட்டிக் கிழவோள் செப்பல் வாயிலின் வருஉம் வகையொடு தொகைஇ என மாறுக. (6)*

***ஆய்வுரை :*** *இது, தலைவனை மணந்து வாழும் மனை வாழ்க்கையில் தலைமகள் கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.*

*(இ-ள்) தலைமகனது நினைவினைத் தலைவி மிகவும் அறிவாளாதலின் அவனை ஆர்வமுடன் வரவேற்குமிடத்தும். தன்னை அணுகாதவாறு நீக்கி நிறுத்துமிடத்தும், மனையற வுரிமையைத் தந்த தலைவனிடத்து அவனது பெருமையை மதித் தொழுகலில் தவறாதஅன்புமீதூர்தற் கண்ணும், தலைவனைத்*

1. "யான் ஓம் என்னவும் ஒல்லார் எனவலிதிற்கூடியவாறு காண்க" என்றிருத்தல் வேண்டும். ஓம் – ஒவும்; விலகுவீராக. என்னவும் – என்றுயான் கூறவும் ஒல்லார் – அதற்கிசையார், எனப்பொருள்கொள்ளுதல் வேண்டும்.

தலைவி பிரிந்து தனிமையுற்ற வருத்தம் பெரிதாகலின் மனச் சுழற்சி பெருகிய காமத்தின் மிகுதிக்கண்ணும். இன்பமும் துன்பமும் தன்பால் ஒருங்கே தோன்றிய நிலையினும். புதல்வன் பிறந்த நிலையில் நிகழ்த்தப் பெறும் விரும்பத்தக்க நெய்யாடல் விழாவிற் கலந்து கொள்ளவிரும்பி வந்த தலைவனை நெஞ்சு புண்படுமாறு செய்து தன்னொடு கூடுதலை விலக்கிய தாழ்வுற்ற நிலையிலும், விரும்பியவுள்ளத்துடன் புதிய பெண்டிரின் நலத்தின் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவனைத் தனது தனிமைத்துயரினை நன்கு அறிவித்து அவன்பாற் செல்கின்ற தனது நெஞ்சினை அவன்பாற் செல்லுதலினின்றும் மீட்டுச் சுருங்கச் செய்து அவனாற் காதலிக்கப் பட்டாரை எதிரிலே தோன்ற உருவகஞ் செய்து புணர்ச்சியை மறுத்த அன்பின் பக்கத்தும், பரத்தையர்பால் தங்கிய புறத்தொழுக்கமுடைய தலைவனை வணங்கி நினது வேட்கையை என்பால் உரையாது என் தங்கையராய பரத்தையர்க்கு உரைப்பாயாக என இரந்து வேண்டுதற்கண்ணும், தலைவன் தன்னை விட்டு நீங்காநிலை யினனாகிய காலத்து (நின்னாற் காதலிக்கப்படும் புறப்பெண்டிர்பாற்) செல்வாயாக என விடுத்தற்கண்ணும், (தலைவனது அன்புக் குரியளாகிய) காமக்கிழத்தி தலைவியாகிய தான் பெற்ற குழந்தையை அன்புடன் தழுவி இன்பமுற விளையாடும் விளையாட்டின் முடிவிலும், சிறந்த அன்பின் செய்கை புலப்படும் அவ்விடத்துத் தலைவன் தோன்றி மனையறத்தை விரும்பிய நெஞசத்துடன் தான் வந்த செயலைத் தலைவி யறியாதவாறு புறத்தே அணைந்து நின்று தலைவிபா லுளதாகிய ஊடலைப் போக்க வேண்டிய இடத்தும், அந்நிலையில் தந்தையரைப் பண்பினாலும் செயலினாலும் ஒப்பர் அவர்தம் மைந்தர் என உலகம் கூறுதலால் முடிவில்லாத சிறப்பினையுடைய மகவைத்தந்தையொடு சார்த்திப் பழித்துரைக்கு மிடத்தும், கொடுமையுடையாரது கொடுந்தன்மை அவரையே பின்னர்ச்சுடும் என்னும் பழமொழியை யுளத்துட்கொண்டு தன் துன்பத்தினை யெண்ணித் தளராது தலைவரது நற்புகழை விரும்பியவர்களது சொல்லோடு பொருந்திக் கணவனொடு வேறுபட்டுப் பிணங்குதலினின்றும் நீங்கிய தகுதிக் கண்ணும், தனது கொடிய புறத்தொழுக்கினைப் பொறுத்துக்கோடல் வேண்டும் என்று அடிமேல் வீழ்ந்த கணவனை இடித்துரைத்து இச்செயல் நின்பாற் காதலுடைய என் தங்கையராய பரத்தையர் காணின்

நன்றாமோ எனத் தன் காதல் நிறைவு தோன்றக் கூறுந் திறத்தின் கண்ணும், தாயரை அணுகி அவர்களால் நல்ல அணிகலன்கள் அணியப்பெற்ற தன் மகனைப் பொய்ம்மையொழுக்கினளாய பரத்தை நினைத்த வழியும், தன்னிடத்துத் தோன்றிய அன்பின் சிறப்பினாலும் தலைவன்பால் தோன்றிய அயன்மைபற்றிய வேறு பாட்டினாலும் இன்னாமையைத் தரும் நிலையில் தலைவன் செய்த பழைய சூளுறவைத் தன் மனத்துக்கொண்ட நிலையிலும், தலைவனுடைய காமக்கிழத்தியின் நலத்தினைப்பாராட்டத் தொடங்கித் தலைவன் தன்னை அயன்மை செய்தொழுகுதலாகிய தீமையின்கண் முடித்துக்கூறும் பொருளின்கண்ணும், கொடுமை விளைக்கும் தலைவனது புறத்தொழுக்கின்கண்ணே தோழி கூறுதற்குரிய கூற்றுக்களினிடையே குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பின்கண் திரியாது வெகுளுதலும் பாராட்டுதலுந் தீமையின் வேறுபடுத்தலும் அன்பினாற் பேணிக் கொள்ளுதலும் என அவ்விடத்து வேறுபட்டு வரும் பல்வேறு நிலைமைக்கண்ணும் ஏனைய வாயில்கள்பால் வரும் கூற்றுவகையொடு தொகுத்து இவ்விடங்களில் தலைவி கூற்றுநிகழ்த்தல் உரிமையுடையது என்பர் ஆசிரியர் எ---று.

**7. புணர்ந்துடன் போகிய கிழவோன் மனையிருந்**
**திடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி**
**அன்புறு தக்க கிளத்தல் தானே**
**கிழவோன் செய்வினைக் கச்ச மாகும்.**

***இளம்பூரணம் :*** என்—எனின், இதுவும் தலைமகட்குரிய கிளவிக்கட்படும் இலக்கணம் நுதலிற்று.

(இ - ள்.) களவிற்புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக்கடன் பூண்டொழுகுங் காலத்து மனைக்கணிருந்து தான் முன்னர் இடைச்சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப்பொருண் முதலியவற்றையும் அவற்றின் தொழிலையும் குறித்துக் கிழவன் அன்புறுதற்குத் தக்கவற்றைக் கூறுதலே தலைமகன் இயற்றுந் தொழிற்கு அஞ்சும் அச்சமாகும் என்றவாறு.

எனவே புணர்ந்துடன் போகாத தலைவி அங்ஙனமிருந்து கூறல் தலைவற்கு அவன் செய்வினைக்கண் அச்சமாகாதென்றவாறு.

**"கான யானை தோல்நயந் துண்ட**
**பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை**
**அலங்க லுலவை யேறி யொய்யெனப்**
**புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்**
**அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்ச்**
**சேர்ந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்**
**கொல்லே மென்ற தப்பற்குச்**
**சொல்லா தகறல் வல்லு வோரே."** **(குறுந். 79)**

*இதனுள் அஞ்சியவாறு காண்க. பிறவுமன்ன.* *(7)*

***நச்சினார்க்கினியர்:*** *இது, தலைவி கூற்றின்கட் படுவ தோர் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ - ள்.) புணர்ந்து உடன் போகிய கிழவோள் மனை இருந்து - களவுக் காலத்துப் புணர்ந்து உடன் போகிய தலைவி கற்புக்காலத்து இல்லின்கண் இருந்து; இடைச்சுரத்து இறைச்சியும் அன்புறுதக்க வினையுஞ் சுட்டிக் கிளத்தல் தானே - தான் போகிய காலத்துக் காட்டின்கட் கண்ட கருப்பொருள்களையுந் தலைவன் தன்மேல் அன்பு செய்தற்குத்தக்க கருப்பொருளின் தொழில்களையும் கருதிக் கூறுதல்தானே; கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும் - தலைவன் எடுத்துக்கொண்ட காரியத்திற்கு முடித்தலாற்றான் கொலென்று அஞ்சும் அச்சமாம்[1] (எ - று.)*

*எனவே, அருத்தாபத்தியாற் புணர்ந்து உடன் போகாத தலைவி மனைக்கணிருந்து தலைவன் கூறக்கேட்டு அக்கருப் பொருள்கள் தன்மேல் அன்புறுதக்க வினைகளைக் கூறுதல் தலைவன் செய்வினைக்கு அச்சமாகாது; வருவரெனத் துணிந்து கூறு தலாமென்றாராயிற்று.*

**"கான யானை..........வல்லுவோரே.** **(குறுந். 79)**

*புலம்புதரு குரலவாய்ப் புறவினைப் பெடை அழைக்கும் வருந்தங் கண்டு வினைமுடியாமல் வருவரோவென அஞ்சியவாறு காண்க.*

1. 'கிழவோன் செய்வினைக்கு அச்சம்' என்றது, "தலைவன் தான் மேற்கொண்ட காரியத்தினை முடித்தலாற்றான் கொல்லோ" எனத் தலைவி அஞ்சும் அச்சத்தினை.

"அரிதாய வறனெய்தி" என்னும் (11) கலிப்பாட்டுத் தலைவன் அன்புறுதக்கன கூறக் கேட்ட தலைவி அவற்றைக் கூறிப் புனைநலம் வாட்டுநர் அல்லரென வரவு கருதிக் கூறியவாறு காண்க.[1] இதனுள் ஆற்றுவிக்குந் தோழி வருவர் கொல்லென ஐயுற்றுக் கூறலின்மையின் தோழி கூற்றன்மையும் உணர்க.

**"புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன" (கலி. 3)**

என்றாற் போல்வன தலைவி கூற்றாய் வருவன உளவாயின் இதன் கண் அடக்குக. (7)

**ஆய்வுரை** இது தலைவிக்குரிய கூற்றுக்களில் ஒன்றற்குரிய இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) களவொழுக்கத்தில் தலைவனுடன் கூடி, உடன்போக்கிற் சென்ற தலைவி, பின்னர் மனையறக் கடமைபூண்டு மனைக்கண் இருந்து, சுரத்திடையே தலைவனொடு சென்றபோதுதான் முன்பு கண்ட கருப்பொருள்களையும் அவற்றின் தொழில்களையும் சுட்டித் தலைவன் தன்மேல் அன்புகூர்தற்குத் தக்கவற்றைக் கூறுதலே தலைவன் பிரிந்து சென்று செய்யும் வினைக்கண் அஞ்சும் அச்சத்திற்குக் காரணமாகும். எ—று.

இறைச்சி-கருப்பொருள் : என்றது, இங்கு விலங்கு புள் முதலிய இயங்குதிணை யுயிர்களைச் சுட்டியது, வினை என்றது மேற்குறித்த ஆணும் பெண்ணுமாகிய இயங்குதிணையுயிர்களில் ஆண் தன் காதலுக்குரிய பெண்ணினை அன்பினாற் பேணுதலாகிய தொழிலைக் குறித்து நின்றது. கிழவோன்செய்வினை என்றது. தலைவன் மனைவியைப் பிரிந்து சேயிடைச் சென்று நிகழ்த்துதற்குரிய ஆள்வினைச் செயலை. அச்சம் என்றது. வினைமேற்கொண்ட தலைவன் தான் வினைமுடித்து வருமளவும் தன் மனைவி ஆற்றியிருக்க வல்லளோ என அஞ்சும் அச்சத்தினையும், வினைவயிற் சென்ற தலைவர் நம்பாற் கொண்ட அன்பு காரணமாக நெடுநாள் நம்மைப்பிரிந்துறைத லாற்றாது வினை முடியாது இடையே திரும்பி விடுவாரோ எனத் தலைவி அஞ்சும் அச்சத்தினையும் குறித்துநின்றது. இஃது ஒப்பக்கூறல் என்னும் உத்தியின் பாற்படும்.

1. "அரிதாய அறனெய்தி" (கலித்—11) என்ற பாட்டு தலைவி கூற்றாகும் என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

*புணர்ந்து உடன்போகிய கிழவோள் மனையிருந்து இடைச் சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி அன்புறுதக்க கிளத்தல் எனவே, உடன் போக்கிற் செல்லாத தலைவிக்கு மனைக்கண் இருந்து இடைச்சுரத்துக் கருப்பொருள் வினை நிகழ்ச்சிகளை யெண்ணிக் கூறும் வாய்ப்பு இல்லையென்பது பெறப்படும்.*

**8. தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர்.**

***இளம்பூரணம் :*** *என் எனின், இதுவுமது.*

*(இ-ள்) தோழியுள்ளிட்ட வாயில்களைப் போகவிட்ட அக்காலத்தும்*[1] *முற்கூறிய*[2] *நிகழுமென் றுரைப்பர் புலவர் என்றவாறு.*

*உதாரணம் வந்தவழிக் காண்க. (8)*

***நச்சினார்க்கினியம் :*** *இது தோழி முதலிய வாயில்கட்கு எய்தாத தெய்துவித்தது.*

*(இ-ள்.) தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்*[3] *தலைவனது செலவுக் குறிப்பு அறிந்து அவனைச் செலவழுங்குவித் தற்குத் தோழி யுள்ளிட்ட வாயில்களைத் தலைவி போகவிட்ட அக்காலத்து அவர் மேலன போலக் கூறும் கூற்றுக்களும்; ஆவயின் நிகழும் என்மனார் புலவர்-தலைவி அஞ்சினாற்போல அவ்வச்சத்தின்கண்ணே நிகழுமென்று கூறுவர் புலவர். (எ - று.)*

*"அறனின்றி யயல்தூற்றும்" (கலி.3) என்னும் பாலைக் கலியுள் இறைச்சியும் வினையுமாகிய பூ முதலியன கூறியவாற்றால் தலைவிக்கிரங்கி நீர் செலவழுங்குமெனக் கூறுவாள் "யாமிரப்பவு மெமகொள்ளா யாயினை" எனப் பிற வாயில்களையுங் கூட்டி உரைத்தவாறு காண்க. (8)*

***ஆய்வுரை:*** *இது, தலைவன் மேற்கொண்ட வினைக்கண் அச்சம் விளைப்பது பிறிதொருநிகழ்ச்சியும் உண்டென்கின்றது.*

---

1. ஆவயின்—கிழவோன்செய்வினையாகிய தொழில் நிகழும் காலமாகிய அவ்விடத்தின் கண்.

2. 'நிகழும்' என்னும் பயனிலைக்கு மேற்சூத்திரத்திற் குறிக்கப்பட்ட 'அச்சம்' என்பது வருவித்துரைக்கப்படும்.

3. புகுத்தல்—தலைவன்பாற் போகவிடுதல்.

*(இ-ள்) தலைவன் பிரிந்து சென்றானாக மனைக்கண் இருக்கும் தலைவி தனது ஆற்றாமை கருதித் தோழியுள்ளிட்ட வாயில்களைத் தலைவன்பால் தூதாகப் போகவிட்ட காலத்தும் அவ்விடத்துத் தலைவன் செய்யும் வினைக்கண் அச்சம் நிகழும் என்பர் புலவர் எ-று.*

*புகுப்பினும் என்புழி உம்மை, முற்கூறியவாறு அன்புறுதக்க தலைவி கிளத்தலேயன்றி வாயில்களைத் தலைவன்பால் தூதாகப் போகவிட்டகாலத்தும் எனப் பொருள்தருதலின் இறந்தது தழீஇய எச்சவும்மையாகும். புகினும் என்னாது புகுப்பினும், என்றமையால் புகுத்தற்கு வினைமுதல் தலைவி எனக்கொள்க.*

9. **பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த**
**தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்**
**அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்**
**கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்**
**சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்**
**அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை**
**அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்**
**பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி**
**இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்**
**வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்**
**புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியுஞ்**[1]
**சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்**
**மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்**
**பேணா ஒழுக்கம் நாணிய பொருளினுஞ்**
**சூள்வயின்**[2] **திறத்தால் சோர்வுகண் டழியினும்**
**பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து**
**பெறுதகை யில்லாப் பிழைப்பினும் அவ்வழி**[3]
**உறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய**

---

(பாடம்) 1. புகற்சியுஞ், 2. சூள்நயத், 3. அவ்வயின்.

**கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும்**
**உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின்**
**உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று**
**தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்**
**அருமைக் காலத்துப் பெருமை காட்டிய**
**எளிமைக் காலத் திரக்கத் தானும்**
**பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்**
**பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்**
**நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்**
**காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்**
**பிரியுங் காலத் தெதிர் நின்று சாற்றிய**
**மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்**
**வகைபட வந்த கிளவி யெல்லாந்**
**தோழிக் குரிய என்மனார் புலவர்.**

***இளம்பூரணம் :*** *என் - எனின், கற்பின்கண் தோழிகூற்று நிகழும் இடம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று*

*(இ - ள்.) பெறற்கரும் சிறப்பு முதலாக மரபுடை யெதிரும் உளப்படப் பிறவும் ஈறாக மொழியப்பட்டவை யாவும் தோழிக்குரிய என்று கூறுவர் புலவர் என்றவாறு*

*பெறற்கரும் பெரும்பொருண்*[1] *முடிந்தபின் வந்த தெறற்கரு மரபிற் சிறப்பின்கண்ணும் என்பது—பெறுதற்கு அரிய பெரும் பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்குரிய மரபு காரணத்தால் தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும் தோழிகூற்று நிகழும் என்றவாறு.*

*பெரும்பொருள்—ஈண்டு வரைவிற்கேற்றது. தெறுதல்—அழல நோக்குதல்.*

1. தலைமகட்குச் சுற்றத்தார் வேண்டிய பரிசப்பொருளை அவர்கள் விரும்பிய வண்ணமே கொடுத்து வரைந்து கொள்ளுதற்கு ஏற்ற மிகுபொருள் என்பார்; 'பெறற்கரும் பெரும் பொருள்' என்றார்.

**"அயிரை......பெரிய நோன்றனிர் நோகோ யானே"**

**(குறுந். 178)**

*எனவரும்.*

*அற்றமழிவு உரைப்பினும் என்பது---முற்காலத்துற்ற வருத்தத்தின் நீங்கினமை கூறினும் என்றவாறு.*

**"எரிமருள்..........மலரணிந் தோயே"** **(ஐங்குறு. 294)**

*எனவரும்.*

*அற்றம் இல்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக்கடத்தினும்*[1] *என்பது—குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக்கடன் கொடுத்தற்கண்ணும் என்றவாறு.*

**"நெஞ்சமொடு மொழிகடுத் தஞ்சுவர நோக்குந்**
**தாயவட் டெறுதரக் காக்கவெம் மகனெனச்**
**சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற**
**மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே**
**பெற்றனம் யாமே மற்றதன் பயனே."**

**"வாழி ஆதன்... எனவேட் டேமே"** **(ஐங்குறு. 6)**

**'திண்டேர்நள்ளி......காக்கையது பலியே"** **(குறுந். உளய)**

*எனவரும்.*

*சீருடைப் பெரும்பொருள்*[2] *வைத்தவழி மறப்பினும் என்பது —சீருடைய பெரும்பொருளாவது இற்கிழமை : அதனைத் தலைமகண்மாட்டு வைத்தவிடத்து அவளை மறந்து ஒழுகினவழியும் என்றவாறு.*

---

1. மக்களது வாழ்க்கை வளம்பெறும் வண்ணம் சோர்வின்றிச் செய்தற்குரியது தெய்வ வழிபாடு என்பது புலப்பட 'அற்றமில்லாத் தெய்வக்கடம் எனவும், அதுதானும் களவொழுக்கத்தில் வந்தொழுகிய தலைமகனது நலங் குறித்துத் தோழியால் நேர்ந்து கொள்ளப்பட்டமையின் 'கிழவோற்சுட்டிய தெய்வக்கடம்' எனவும் விரித்துரைக்கப்பட்டது.

2. "சீருடைப் பெரும்பொருள்" என்றது, மனையறத்தை நடத்துதற்குரிய மனையறத்தின் ஆட்சியுரிமையை. வைத்தவழி—தலைமகள்பால் பொறுப்பாக வைத்த இடத்து. மறத்தல்—தலைவன் அவளை மறந்து ஒழுகுதல்.

*அஃதாவது அறத்தினானாதல் பொருளினானாதல் அவனுக்காகிய இசையுங் கூத்தும் முதலியவற்றான் அத்திறம் மறத்தல். அவ்வழியுந் தோழிகூற்று நிகழும்.*

**"பொங்குதிரை..........கண்பசந் ததுவே"** **(நற்றிணை 35)**

*என வரும்.*

*அடங்கா வொழுக்கத் தவன்*[1] *வயி னழிந்தோளை யடங்கக் காட்டுதற் பொருளின்கண்ணும் என்பது - அடங்கா வொழுக்கத்தை யுடைய தலைவன்மாட்டு மனன அழிந்தோளை*[2] *அடங்கக் காட்டுதற்கு ஏதுவான பொருட்பக்கத்தினும்*[3] *கூற்று நிகழும் என்றவாறு.*

**"இது மற்றெவனோ............நமக்கே"** **(குறுந். 181)**

*எனவரும்.*

*பிழைத்து வந்திருந்த கிழவனை*[4] *நெருங்கி இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்ணும்*[5] *என்பது–பிழைத்து வந்திருந்த தலைமகனை நெருங்கித் தலையளிக்குமாறு கூறித் தலைமகன் மாட்டாக்கிக் கொடுத்தற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.*

**"பகலில்............மகிழ்நநின் பெண்டே."** **(ஐங்குறு. 57)**

---

1. "அடங்காவொழுக்கத்தவன்" என்றது, மனையறத்தின் அளவில் அடங்கி யொழுகாமல் பரத்தமையாகிய புறத்தொழுக்கத்திற் சென்றொழுகும் தலைவன்.

2. 'அழிந்தோள்' என்றது, அவனது பரத்தமையொழுக்கத்தினை யெண்ணி வருந்திய தலைவியை.

3. அடங்கக்காட்டுதற்பொருளாவது, தலைவனுடைய குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு அடக்கமுடையளாய்த் தனக்குரிய இவ்வாழ்க்கைக் கடமைகளை மேற்கொண்டு நிகழ்த்துதற்கு ஏதுவாக எடுத்துக்காட்டப்படும் பொருட் பகுதி.

4. 'பிழைத்து வந்திருந்த கிழவன்' என்றது, பரத்தமையாகிய பிழையினைச் செய்து மனையின்கண் வந்திருந்த தலைவனை. நெருங்குதல்—இடித்துரைத்தல்

5. இழைத்தலாவது, அவன் செய்த குற்றம் தேய்ந்து மறைய அவனைத் தலைவியின் தலையளிக்கு உரியனாகச் செய்தல்.

ஆக்கிக்கொடுத்தலாவது, பரத்தையருடன் அவன்கொண்ட தொடர்பினை யகற்றித் தலைமகட்கேயுரியவனாகத் திருத்திக்கொடுத்தல்.

**"கேட்டிசின்................நெஞ்சே"** **(ஐங்குறு. 59)**

*என வரும்.*

*வணங்கியல் மொழியான்*[1] *வணங்கற் கண்ணும் என்பது— தாழ்ந்த இயல்பினையுடைய மொழியினான் வணங்குதற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.*

**"உண்டுறைப்..........கொளல்"** **(ஐந்திணையெழு. 52)**

*என வரும்.*

*புறம்படு விளையாட்டுப்*[2] *புல்லிய புகர்ச்சியும் என்பது— புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகர்ச்சிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. புகர்ச்சி—குற்றம்.*

**"காலையெழுந்து......பிறத் தல்லே"** **(குறுந் 45)** *என வரும்.*

*சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்*[3] *என்பது— இருவர்க்குஞ் சிறந்த புதல்வனை நினையாமையால் தலைமகன் தனிமையுறுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"நெடுநா......பிறந்த மாறே"** **(நற்றிணை. 40)** *எனவும்*

**"நூண்ஞாண்......தொடுத்து"** **(ஐந்திணையெழு. 94)**

*எனவும் வரும்.*

*மாணலந் தாவென வகுத்தற்கண்ணும் என்பது—நீ கொண்ட நலத்தினைத் தந்துபோ எனக் கூறுதற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"விட்டென......உண்டவென் நலனே"** **(குறுந் 236)**

*என வரும்*

---

1. வணங்கியல்மொழி—வணக்கத்தைப் புலப்படுத்தும் இயல்புடையபணிந்த மொழி.

2. 'புறம்படுவிளையாட்டு' என்றது, தலைவன் யாறும் குளனும் காவு மாடிப் புறத்தே சென்று பரத்தையரொடு விளையாடும் விளையாட்டினை புல்லுதல்—பொருந்துதல். புகர்ச்சி——குற்றம். புகர், புகர்ச்சி என்றாயிற்று.

3. தேராது புலம்புதல்—தேர்ந்து வெளிப்படச்சென்று காணஇயலாமையால் தனிமையுற்று வருந்துதல்

*பேணா வொழுக்கம்*[1] *நாணிய பொருளினும் என்பது — தலைமகனைப் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகள் நாணிய பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"யாயாகியளே................கரப்பா டும்மே"** **(குறுந்.6)**

*எனவரும்.*

*சூள்வயிற் றிறத்தாற் சோர்வுகண் டழியினும் என்பது — தலைமகன் சூளுற்ற சூளுறவிற் சோர்வுகண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"எம்மணங்கினவே.............சூளே"** **(குறுந். 53)**

*என வரும்.*

*பெரியோரொழுக்கம் பெரிதெனக் கிளந்து பெறுதகை யில்லாப் பிழைப்பினும்*[2] *என்பது—பெரியோ ரொழுக்கம் பெரிதாகுமெனச் சொல்லித் தலைமகளைப் பெறுந்தகைமை யில்லாத பிழைப்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"வெள்ளிவிழுத்..............உலகத் தானே"** **(அகம் 286)**

*என வரும்.*

*அவ்வழி யுறுதகை யில்லாப் புலவியின்*[3] *மூழ்கிய கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும் என்பது—மேற் சொல்லிய வாற்றாற்*

1. 'பேணாவொழுக்கம்' என்றது, தலைவன் தனக்குரிய பெருமையும் உரனும் முதலிய பண்புகளைப் பேணாது மேற்கொண்ட புறத்தொழுக்கத்தினைத் தலைவனது பேணா வொழுக்கத்தினையெண்ணித் தலைவி நாணினாள் என்பார், 'பேணாவொழுக்கம் நாணிய பொருளினும்' என்றார்.

'பிறர் பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னும் உலகு'

எனவரும் திருக்குறள் இத்தொல்காப்பியத் தொடர்ப்பொருளை அடியொற்றி யமைந்ததாகும்.

2. "பெறுதகையில்லாப் பிழைப்பு" என்றது, தனக்குரிய தலைவியைத் தான் அடையப் பெறும் அன்புரிமையினையிழக்கும் நிலையில் தலைவன் மேற்கொண்ட பரத்தமையாகிய குற்றத்தினை. பிழைப்பு—குற்றம்.

3. 'உறுதகையில்லாப்புலவி' என்றது, தலைவன் தலைவியை மெய்யுறுதற்கு ஏலாதவாறு தலைமகளிடத்தே தோன்றிய பிணக்கம்,

புலவியுள் மூழ்குதலாவது, தன்னியல்பாகிய மென்மைப்பண்புகள் வெளிப்படாதவாறு தான் கொண்டுள்ள புலவியாகிய பிணக்கமே மேற்பட்டுத் தோன்றுதல்.

*றலைவன் பிழைத்தவழி அவனா லுறுந்தகைமை யில்லாத புலவியின் மூழ்கிய தலைவி பக்கத்தாளாகி நின்று அதனைக் கொடுத்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"மானோக்கி நீயழ நீத்தவன் ஆனாது**
**நாணில னாயின் நலிதந் தவன்வயின்**
**ஊடுவ தென்னோ வினி"** **(கலி. 87)** *என வரும்.*

*உணர்ப்புவயின் வாரா வூடலுற்றோள்வயி னுணர்த்தல் வேண்டிய கிழவோன்பா னின்று தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும் என்பது—தலைவன் ஊடல் தீர்க்கவும் அதன்வழி வாராத ஊடலுற்றோள்வயின்[1] அவ்வூடலைத் தீர்த்தல் வேண்டிய தலைவன் பக்கத்தாளாகி நின்று தலைவனை வெகுண்டு நின்றுண் டாக்கிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்"** **(திருக்குறள் 1302)**

*என வரும்.*

*அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத் திரக்கத்தானும்[2] என்பது-தாமரியராகிய களவுக்காலத்துத் தமது பெருமையைக் காட்டிய தாம் எளியராகிய கற்புக்காலத்து இரக்கத்தின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

---

தலைவன்பால் தலைவி கொண்ட பிணக்கத்தை நீக்கக்கருதிய தோழி தலைவன் பக்கம் சார்ந்து பேசாது தலைவிக்கே சார்புடையளாய்ப் பேசி அவளது புலவியைத் தணித்தற்குரியாள் என்பார். 'புலவியுள்மூழ்கிய கிழவோள்பால் நின்று கெடுத்தற்கண்ணும்' என்றார். கெடுத்தலாவது, தலைமகள் கொண்டுள்ள புலவியைத் தவிர்த்தல்.

1. உணர்ப்புவயின்வாரா ஊடலாவது, தலைவன் தனது தவறின்மையைப் பலவாறு தலைவிக்கு உணர்த்தவும் தணியாத நிலையில் தலைமகள் கொண்ட பெரும் பிணக்கமாகும். இந்நிலையில் தலைவன் பக்கத்தளாய் நின்று தலைவியை வெகுண்டுரைத்து அவளது தணியாத ஊடலைத் தணிவித்து அவ்விருவரையும் மனைவாழ்க்கைக் கடமையில் ஒன்றுபட்டு வாழும் தகுதியினராகத் திருத்துதல் தோழிக்குரிய கடமையாம் என வற்புறுத்துவார்.

"உணர்ப்புவயின்வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கிய தகுதி" என்றார் ஆசிரியர்.

2. அருமைக்காலம்—தலைமகன் தலைமகளை எளிதிற் காணுதற்கியலாத களவுக்காலம். எளிமைக்காலம்—தலைவியை எக்காலத்தும் தன்மனையகத்துக் கண்டு அளவளாவுதற்குரிய கற்புக்காலம்.

பெருமைகாட்டிய விரக்கம் எனக் கூட்டுக. இதனாற் சொல்லியது, வாளாதே இரங்குதலன்றிப் பண்டு இவ்வாறு செய்தனை இப்பொழு திவ்வாறு செய்யா நின்றனை எனத் தமதுயர்ச்சியுந் தலைமகனது நிலையின்மையுந் தோற்ற இரங்குதலாயிற்று. இதுவும் புலவிமாத்திரமன்றித் தலைவ னீங்கி யொழுகும் ஒழுக்கம் மிக்கவழிக் கூறுவதெனக் கொள்க.

**"வேம்பின் பைங்காய்.........அன்பின் பாலே"** **(குறுந் 196)**

என வரும்

பாணர் கூத்தர் விறலிய ரென்றிவர் பேணிச் சொல்லிய குறைவினை யெதிரும் என்பது—பாணராயினுங் கூத்தராயினும் விறலியராயினும் இத்தன்மையர் விரும்பிச் சொல்லிய குறையுறும் வினைக் கெதிராகவுங் கூற்று நிகழும் என்றவாறு.

குறையுறும் வினை குறைவினை யென ஒட்டிற்று ; அது சொல்லிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று;

**"புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி**
**நில்லல் பாண செல்லினிப் பரியல்**
**பகல்எஞ் சேரிக் காணின்**
**அகல்வய லூரன் நாணவும்பெறுமே"**

எனவும்,

**"அணிநிறக் கொண்டை ஆடிடம் பார்த்து**
**மணிநிறச் சிறுசிரல் மயங்குநம் பொய்கை**
**விரைமல காற்றா விருந்தினம் யாமென**
**முழவிமிழ் முன்றில் முகம்புணர் சேர்த்தி**
**எண்ணிக் கூறிய இயல்பினின் வழாஅது**
**பண்ணுக்கொளப் புகுவ கணித்தோ பாண**
**செவிநிறை உவகையேம் ஆக**
**இதுநா ணன்மைக் குரைத்துச்சென் றீமே"**

எனவும் வரும்.

*நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்[1] காத்ததன்வயிற் கண்ணின்று பெயர்ப்பினும்[2] என்பது - தலைவியை நீத்த கிழவனை அவளுடன் நிகழுமாறு படுத்தல் வேண்டி அவனைப் புறங்காத்த தன்னிடத்துற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.*

**"மனையுறு கோழி.............தெருவே" (குறுந். 139)**

*என வரும்,*

*பிரியுங்காலை யெதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்பட என்பது—தலைவன் சேயிடைப் பிரியுங் காலத்து முன்னின்று சொல்லிய மரபுடை மாறுபாடும் என்றவாறு.*

*எனவே, அகத்திணையியலுட் கூறப்பட்டது களவுக்காலத்தை நோக்கிக் கூறுதலான் அயலிதாகக் கூறப்பெறும் என்பதூஉம் இவ்வோத்தினுட் செலவழுங்குவித்தல் பார்ப்பார்க் குரித்தாகக் கூறுதலானுங் கற்பினுட் பிரிவு மரபு கெடாமற் கூறவேண்டும் என்பதூஉங் கருத்து.[3] மரபினாற் கூறுதலாவது குற்றேவன் முறைமையாற் கூறுதல். பிரிவை அகத்திணையியலுள் வைத்ததனான், ஆண்டுக் கூறிய கிளவி இருவகைக் கைகோளிற்கும் பெரும் பான்மையொக்கும் எனக்கொள்க. உடன்போக்கும் ஒக்குமோ எனின், கற்பினுள் உடன்போக்கு உலகியலுட் பெரும்பான்மையென்று கொள்க. இக்கூற்றுத் தலைமகன் மாட்டுந் தலைமகள்மாட்டுமாம்.*

**"அறனின்றி...........கானந் தகைப்ப செலவு" (கலித்.3)**

*என வரும்.*

*இனித் தலைமகட்குக் கூறியதற்குச் செய்யுள்: -*

1. நிகழுமாறுபடீஇயர்——நிகழும்படி செய்தல் வேண்டி. படீஇயர்—செய்யியர் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.

2. கண் இன்று—கண்ணோட்டம் இன்றி. இன்றி என்னும் வினையெச்சம் செய்யுளாதலின் இன்று எனத்திரிந்தது.

3. அகத்திணையியலிற் கூறப்படும் கிளவிகள் களவு கற்பு என்னும் இரு வகையொழுகலாறுகட்கும் பொதுப்பட அமைந்தன. அவ்வியலிற் கூறப்பட்ட பிரிவுகளுள் அயலிடமாகிய அணிமைக்கட்பிரியும் பிரிவு களவொழுக்கத்திற்குரியது. இங்குக்கூறப்படும் சேய்மைக்கட்பிரிவு கற்புக்காலத்திற்குரியதாகும்.

**"அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப்**
**பின்னிருந்து வாழ்வார் பலர்"** **(திருக்குறள் 1160)**

*எனவரும்*

*பிறவும் வகைபட வந்த கிளவி யெல்லாந் தோழிக்குரிய வென்மனார் புலவர் என்பது—மேற்சொல்லப்பட்ட கிளவியன்றிப் பிற வாய்பாட்டாற் பாகுபடவந்த கிளவி யெல்லாந் தோழிக்குரிய என்றுரைப்பர் புலவர் என்றவாறு.*

*வகைபடவந்த கிளவியாவன :—பிரிந்த தலைமகன் வருவ னெனக் கூறுதலும், பருவங்கண்டு கூறுதலும், வற்புறுத்தலும், நிமித்தங்கண்டு கூறுதலும், வந்தான் எனக்கூறுதலும், இந்நிகரனவும், மேற்சொல்லப்பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங் கொள்க, அவற்றிற் களவுக்குங் கற்பிற்கும் பொதுவாகி வருவன அகத்திணையியலுட்கொள்க. கற்பிற்கே உரித்தாகி வருவன ஈண்டுக் கொள்க.*

**"ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை**
**ஏமாண் சிலையார்க் கினமா இரிந்தோடும்**
**தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கண்டு**
**வாய்மாண்ட பல்லி படும்."** **(கைந்நிலை. 18)**

*இது நிமித்தங் கண்டு கூறியது.*

**"வாளிலங் குண்கண் வையெயிற் றோயே**
**ஞாலங் காவலர் வந்தனர்**
**காலை அன்ன மாலைமுந் துறத்தே."**

*இது தலைவன் வந்தமை கூறியது. பிறவும் அன்ன.* *(9)*

***நச்சினார்க்கினியம்:*** *இது, முறையானே தோழிக்குரிய கூற்றுக் கூறுகின்றது.*

*(இ-ள்) (பெறற்கு அரும் பெரும் பொருள் முடிந்த பின் வந்த தெறற்கு அரும் மரபிற் சிறப்பின்கண்ணும்) பெறற்கு அரும் பெரும் பொருள்[1] முடிந்தபின் வந்த-தலைவனுந் தலைவியுந் தோழியும்*

1. 'பெறற்கரும் பெரும்பொருள்' என்றது, பெறுதற்கு அரிது எனநினைத்த பெரிய பொருளாகிய திருமணம். முடிதல்——நிறைவேறுதல். தெறற்கு அரும்மரபாவது களவொழுக்கத்திற் போன்று பெற்றோர்களால் வெகுண்டு நோக்குவதற்கு உரியதல்லாத மரபொடு பொருந்திய மனைவாழ்க்கை.

*பெறுதற்கரிதென நினைத்த பெரிய பொருளாகிய வதுவை வேள்விச் சடங்கான் முடிந்தபின்பு தோன்றிய; தேறற்கு அரும் மரபிற் சிறப்பின் கண்ணும்[1] தனது தெறுதற்கரிய மரபுகாரணத்தால் தலைவன் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும்; தோழி கூற்று நிகழும்.*

*தலைவியையுந் தலைவனையும் வழிபாடாற்றுதலின் 'தெறற் கரு மரபின்' என்றார். தெறுதல்- அழன்று நோக்குதல். சிறப்பு, இவளை நீ ஆற்றுவித்தலின் எம் உயிர் தாங்கினேம் என்றாற் போல்வன அவை எம்பெருமானே அரிதாற்றியதல்லது யான் ஆற்றுவித்தது உண்டோ வென்றானும் நின் அருளால் இவள் ஆற்றியதல்லது யான் ஆற்றுவித்தது உண்டோவென்றானுங் கூறுவனவாம்.*

**"அயிரைபரந்த அந்தண் பழனத்து"** **(குறுந். 178)**

*இதனுண் முலையிடைக் கிடந்தும் பனிக்கின்ற நீர் அரியமாகிய காலத்து எங்ஙனம் ஆற்றினீரென யான் நோவாநின்றேன், இங்ஙனம் அருமை செய்தலால் தேற்றுதற்கு உரியேனாகிய என்னைச் சிறப்பித்துக் கூறல் ஆகாது என்றவாறு காண்க.*

**"பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப்**
**புன்கா னாவற் பொதிப்புற விருங்கனி**
**கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்**
**பல்கா லலவன் கொண்டகோட் கசாந்து**
**கொள்ளா நரம்பி னிமிரும் பூசல்**
**இரைதேர் நாரை யெய்திய விடுக்குத்**
**துறைகெழு மாந்தை யன்ன விவள்நலம்**
**பண்டு மிற்றே கண்டிசிற் றெய்ய**
**உழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய**
**ஞெகிழ்ந்த கவினலங் கொல்லோ மகிழ்ந்தோர்**
**கட்கழி செருக்கத் தன்ன**
**காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே."** **(நற்றிணை. 35)**

1. சிறப்பு என்றது, தலைவன் இந்நிலை எய்துதற்குத் துணை செய்த தோழியைச் சிறப்பித்துக்கூறுதலை.

*இதனுள் தலைவி கனியாகவுந் தும்பி தோழியாகவும் அலவன் தன்மேல் தவறிழைக்குந் தமராகவும் தலைவன் இரைதேர் நாரையாகவும் உள்ளுறையுவமங் கொள்வுழித் தலைவி பொருட்டு யாய்க்கு அஞ்சி யொழுகினேனை நீ காத்ததன்றியான் ஆற்றுவித்தது உளதோவெனத் தலைவன் சிறப்பிற்கு எதிர் தோழி கூறியவாறு காண்க. 'பண்டும் இற்றே' என்றது பண்டையின் மிகவும் வருந்தினாளென்றாள். இவள் கண் நீண்டு பசந்தது, களவின்கண் நீங்காது அளியாநிற்கவுஞ் சிறிது கெட்ட அழகின் மிகுதியோ, கள்ளுண்டார்க்குக் கள் அறுஉங்காலத்துப் பிறந்த வேறுபாடுபோலுங் காமவேறுபாடோ, அவ்விரண்டும் அல்லவே, இஃது ஓர் அமளிக்கண் துயிலப்பெற்றும் வேதவிதி பற்றிக் கூட்டம் நிகழாமையாற் பிறந்த மிக்க வேறுபாடன்றோ? இதனை இவளே ஆற்றுவதன்றி யான் ஆற்றுவதன்றி யான் ஆற்றுவிக்குமாறென்னை என்றாளென்க.*

*அற்றம்[1] அழிவு உரைப்பினும்-களவுக்காலத்துப்பட்ட வருத்தம் நீங்கினமை கூறினும்:*

**'எக்கர் ஞாழ லிகந்துபடு பெருஞ்சினை'** (ஐங்குறு. 148)

**"எரிமருள் வேங்கை யிருந்த தோகை"** (ஐங்குறு. 294)

*என வரும்*

*அற்றம் இல்லாக் கிழவோட்[2] சுட்டிய தெய்வக் கடத்தினும் களவொழுக்கம் புலப்பட ஒழுகுதல் இல்லாத தலைவியைத் தலைவன் வரைந்து கோடல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலின் அப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டுமெனத் தலைவற்குக் கூறும் இடத்தும்:*

**"நெஞ்சொடு மொழிகடுத் தஞ்சுவர நோக்குந்**
**தாயவட் டெறுவது தீர்க்க வெமக்கெனச்**
**சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற**

1. அற்றம்—வருத்தம். அழிவு—நீங்குதல்.

2. அற்றம் இல்லாக் கிழாவோள் – தன்கடமையிற் சோர்வில்லாத தலைவி. 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' (56) எனவரும் திருக்குறள், 'அற்றமில்லாக்கிழவோள்' எனவரும் இத் தொல் காப்பியத் தொடருக்கு அமைந்த விரிவுரையாகத் திகழ்தல் காண்க.

**மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே**
**பெற்றனம் யாமே மற்றதன் பயனே."**

கிழவோற் சுட்டிய தெய்வக்கடம்' என்று பாடம் ஓதி

**"வாழி யாதன் வாழி யவினி"** **(ஐங்குறு. 6)**

என்பது உதாரணங் காட்டுவாரும் உளர்.[1]

சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்[2] தலைமையுடைய இல்லறத்தைத் தலைவிமாட்டு வைத்தகாலத்துத் தலைவன் அறஞ்செயற்கும் பொருள் செயற்கும் இசையுங் கூத்துமாகிய இன்பம் நுகர்தற்குந் தலைவியை மறந்து ஒழுகினும்:

**"கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிறுந்**
**தேர்வண் கோமான் தேனூ ரன்னவிவள்**
**நல்லணி நயந்துநீ துறத்தலின்**
**பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே."** **(ஐங்குறு.55)**

இதனுள், துறத்தலினெனப் பொதுவாகக் கூறினாள் அற முதலியவற்றைக் கருதுதலின்.

அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை அடங்கக் காட்டுதற் பொருளின்கண்ணும்[3] - புறத்து ஒழுக்கத்தை உடையனாகிய தலைவன் மாட்டு மனம் வேறுபட்ட தலைவியைப் புறத்து ஒழுக்கமின்றி நின்மேல் அவர் அன்புடையரென அவ் வேறுபாடு நீங்க நெருங்கிக் கூறுதலையுடைத்தாகிய பொருளின்கண்ணும் :

**"செந்நெற் செறுவிற் கதிர்கொண்டு கள்வன்**
**தண்ணக மண்ணளைச் செல்லும் ஊரற்**
**செல்வளை ஞெகிழச் சாஅய்**
**அல்ல லுழப்ப தெவன்கொ லன்னாய்."** **(ஐங்குறு. 27)**

இதன் உள்ளுறையாற் பொருளுணர்க.

1. இளம்பூரணர்.

2. சீருடைப் பொருள் என்றது, தலைமையுடைய இல்லறத்தினை. மறத்தல் என்றது, தலைவன் தலைவியை மறந்தொழுகுதலை.

3. அடங்கக் காட்டுதலாவது, புறத்தொழுக்கமின்றி நின்மேல் அன்புடையார் எனத் தலைவிக்கு ஏதுக்காட்டித் தெளிவித்தல்.

*பிழைத்து வந்து இருந்த கிழவனை நெருங்கி இழைத்து ஆங்கு ஆக்கிக் கொடுத்தற்கண்ணும்*[1] *— பரத்தையர் மனைக்கண் தங்கி வந்து அகனகர் புகுதாது புறத்திருந்த தலைவனை மிகக் கழறிச், சில மொழிகளைக் கூறி, இதனானே தலைவி மனத்தின் கண் ஊடல்நீங்குந் தன்மை உளதாக்கிக் கூட்டும் இடத்தும் :*

**"நகைநன்றம்ம.............பெரிதே"** **(அகம். 346)**

**"கேட்டிசின்..............நோமெ னெஞ்சே"** **(ஐங்குறு 59)**

*எனவரும்.*

*வணங்கியன் மொழியான் வணங்கற்கண்ணும்—தாழும் இயல்பினையுடைய சொற்களால் தோழி தாழ்ந்து நிற்கும் நிலைமைக் கண்ணும் :*

**"உண்டுறைப்...........கொளல்"** **(ஐந். எழு. 54)**

*எனவரும்.* **"பகலிற்றோன்றும்......பெண்டே"** **(ஐங்குறு. 57)**

*இதுவும் அதன்பாற்படும்.*

*புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்*[2] *- பரத்தை யரிடத்தே உண்டாம் விளையாட்டினைத் தலைவன் பொருந்திய மனமகிழ்ச்சிக்கண்ணும் :*

*விளையாட்டாவது யாறுங் குளனுங் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்தலாம்.*

*'பகுவாய் வராஅல்' (அகம் **36**)இதனுள் கொள்வா ரார்ப்பினும் பெரிதெனவே*[3] *நாண் நீங்கிப் புலப்படுத்தலை மகிழ்ந்தவாறு காண்க.*

---

1. பிழைத்து – தவறு செய்து. நெருங்குதல்—இடித்துக்கூறுதல். இழைத்தலாவது, தலைவனது தவற்றினை மறக்கும் நிலையில் நுண்ணிய சொற்களால் நயம்படவுரைத்தல்.

ஆக்கிக் கொடுத்தலாவது, தலைவி தன் மனத்திற்கொண்ட ஊடல் நீங்கியுணருந் தன்மையினையுளதாக்கித் தலைவனைத் தலைவிக்கு உரியனாகக் கொடுத்தல்.

2. புறம்படு விளையாட்டு—பரத்தையரொடு தலைவன் புறம்போந்து விளையாடும் விளையாட்டு.

புல்லுதல்—பொருந்துதல். புகற்சி—விருப்பம்.

3. 'இதனுள் கொள்வா ரார்ப்பினும் பெரிதெனவே' என்பது, 'இதனுள் வென்றி கொள்வீரரார்ப்பினும் பெரிதெனவே' என்றிருத்தல் வேண்டும்.

*சிறந்த புதல்வனை நேராது[1] புலம்பினும்--யாரினும் சிறந்த புதல்வனை வாயிலாகக்கொண்டு சென்றுழி அவற்குந் தலைவி வாயில் நேராமல் தலைவன் வருந்தினும் :*

**“பொன்னொடு குயின்ற பன்மணித் தாலித்
தன்மார்பு நனைப்பத் தன்றலையு மிஃதோ
மணித்தகைச் செவ்வாய் மழலையங் கிளவி
புலர்த்தகைச் சாந்தம் புலர்தொறுநனைப்பக்
காணா யாகலோ கொடிதே கடிமனைச்
சேணிகந் தொதுங்கு மாணிழை யரிவை
நீயிவணேரா வாயிற்கு நாணுந்
தந்தையொடு வருவோன் போல
மைந்தனொடு புகுந்த மகிழ்நன் மார்பே”**

*எனவரும்.*

*மாண் நலம் தா என வகுத்தற்கண்ணும்[2]—இவள் இழந்த மாட்சிமைப்பட்ட நலத்தைத் தந்து இகப்பினும் இகப்பாயெனத் தலைவனை வேறுபடுத்தற்கண்ணும்:*

**“யாரை............நலந்தந்து சென்மே”** **(நற்றிணை. 395)**

*எனவரும்.*

**“நுண்ஞாண் வலையிற்.........தொடுத்து”** **(ஐந். எழு. 66)**
*இதுவும் அதன்பாற்படும்.*

*பேணா ஒழுக்கம்[3] நாணிய பொருளினும் - பரத்தை தலைவியைப் பேணாது ஒழுகிய ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணும் : தலைவற்குத் தோழி கூற்று நிகழ்த்தும்.*

**“பொய்கை நீர் நாய்ப் புலவுநாறு இரும்போத்து”**
**(அகம் 385)**

---

1. நேராது—உடன்படாது. நேர்தல்—உடன்படுதல். ‘தேராது’ என்பது இளம் பூரணருரையிற் கண்ட பாடம்.

2. வகுத்தல்—பிரித்தல்; வேறுபடுத்துரைத்தல்.

3. ‘பேணா ஒழுக்கம்’ என்பதற்குப் ‘பரத்தை தலைவியைப் பேணாது ஒழுகிய ஒழுக்கம்’ எனப் பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர். ‘நாணுதல்’ என்றது, தலைவனால் விரும்பப்பட்ட பரத்தை தன்னை மதியாது ஒழுகினமை கண்டு தலைவிநாணுதலை.

*இதனுள், யான் நினக்குத் தோழியாவேனெனப் பரத்தை நீவிய பேணா ஒழுக்கத்திற்குத் தலைவி நாணியது கண்டு தான் நாணினேனென்று தலைவற்குத் தோழி கூறியவாறு காண்க.*

*இன்னுந் தலைவனது பேணா ஒழுக்கத்திற்குத் தலைவி நாணிய பொருளின் கண்ணுமெனவுங் கூறுக.*

**"யாயா கியளே மாஅ யோளே"** **(குறுந். 9)**

*என வரும்.*

*இவை இரண்டும் பொருள்.*

*சூள் நயத் திறத்தாற் சோர்வு*[1] *கண்டு அழியினும் : நயத்திறத்தாற் சூள் சோர்வு கண்டு அழியினும்-கூடுதல் வேட்கைக் கூறுபாட்டால் தான் சூளுறக்கருதிய சூளுறவினது பொய்ம்மையைக் கருதித் தலைவி வருந்தினும்: தோழிக்குக் கூற்று நிகழும்.*

**"பகல்கொள் விளக்கோ டிராநா ளறியா**
**வென்வேற் சோழர் ஆமூர் அன்னவிவள்**
**நலம்பெறு சுடர் நுதல் கேம்ப**
**எவன் பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே."** **(ஐங்குறு. 56)**

*இதனுள் இவள் நுதல் தேம்பும்படி நீ தேற்றிய சொல்லெனவே சோர்வுகண்டு அழித்தாளென்பது உணர்ந்தும் இப்பொய்ச்சூள் நினக்கு என்ன பயனைத் தருமெனத் தோழி தலைவனை நோக்கிக் கூறியவாறு காண்க.*

*"காடுற நிவந்த" (அகம். 266) என்னும் மணிமிடை பவளத்தைத் தோழி கூற்றாகக் காட்டுவாரும் உளர்.*[2]

*(பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து பெறுதகை இல்லாப் பிழைப்பினும்) பெரியோர் பெறுதகை இல்லாக் கிளத்து*

1. 'சூள்நயத்திறத்தாற் சோர்வு' என்பதனை 'நயத்திறத் தாற்சூள் சோர்வு' என மொழிமாற்றிப் பொருள் வரையப்பட்டது. நயத்திறம்—நயந்ததிறம்; கூடுதலை விரும்பிய' வேட்கை கூறுபாடு. சூள்சோர்வு—தான்கூறிய சூளுறவினின்றும் வழுவிப் பொய்யனாகிய தன்மை.

2. 'கோடுறநிவந்த' (அகநானூறு—266) என்ற பாடல் இளம்பூரணருரையிற் காணப்படாமையால், இப்பாடலை உதாரணமாகக் காட்டிய வேறோருரை நச்சினார்க்கினியர் காலத்து வழங்கியதெனத் தெரிகிறது.

– நன்மக்கள் பெறுந்தகைமை இல்லறமாயிருக்குமென்றுஞ் சொல்லி; பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து பிழைப்பினும் - நன்மக்கள் ஒழுகும் ஒழுக்கம் பெரிதாயிருக்கு மென்றுஞ் சொல்லித் தான் தலைவனை வழிபாடு தப்பினும் : தோழிக்குக் கூற்று நிகழும்.

பெரியோரையுங் கிளந்தென்பதனையும் இரண்டிடத்துங் கூட்டுக.[1]

**"வெள்ளி விழுத்தொடி மென்கருப் புலக்கை" (அகம். 286)**

இதனுள் 'அற' னென்றது இல்லறத்தை; 'தற்றகவுடைமை நோக்கி' யென்றது, தன்னால் அவ்வறனும் பொருளுந் தகுதிப் பாடுடையவாந் தன்மையை நோக்கி என்றவாறாம்; 'முன்னியது என்றது புறத்தொழுக்கத்தை; 'பெரியோரொழுக்க மனைய' வென்றது பெரியோர் ஒழுக்கம் பெரிய வென்றவாறு.

இது முன்னர் நிகழ்ந்த பொய்ச்சூள்பற்றி நும்மனோர் மாட்டும் இன்ன பொய்ச்சூள் பிறக்குமாயின் இவ்வுலகத்து மெய்ச்சூள் இனி இன்றாம். அதனாற் பெரியோரைத் தமது ஒழுக்கத்தைத் தேருங்காலை அரியவாயிருந்தனவெனத் தலைவனை நோக்கித் தோழி கூறலின் அவனை வழிபாடு தப்பினாளாயிற்று. உள்ளுறையுவமம் இதற்கு ஏற்குமாறுணர்க.

அவ்வயின் உறுதகை இல்லாப் புலவியுண் மூழ்கிய கிழவோள் பால் நின்று கெடுத்தற்கண்ணும் - தலைவன் அங்ஙனம் பிறழ்ந்த இடத்து அவன் சென்று சேருந் தகைமை இல்லாமைக்குக் காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவிபக்கத்தாளாய் நின்று அவள் புலவியைத் தீர்த்தற்கண்ணும் :

**"மானோக்கி நீயழ நீத்தவ னானாது**
**நாணில னாயி னலிதந் தவன்வயின்**
**ஊடுத லென்னோ வினி." (கலி 87)"**

1. 'பெரியோர் பெறுதலை இல்லாக்கிளந்து பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து, எனப் 'பெரியோர்' என்பதனையும் 'கிளந்து' என்பதனையும் இரண்டிடத்துங்கூட்டியும் சொற்களை முன்பின்னாக மாற்றியும் இந்தொடர்க்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை பொருள் மாறுபாடில்லா திருப்பினும் உரைமரபுக்கு ஒவ்வாததொன்றாம் என உணர்தல் வேண்டும்.

பிழைத்தல் – தலைவனை வழிபடுதலில் தப்புதல்.

**"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது**
**மிக்கற்றா னீள விடல்."** **(குறள். 1302)**

**"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி**
**வாலிழை மகளிர் மரீஇய சென்ற**
**மல்ல லூரன் எல்லினன் பெரிதென**
**மறுவருஞ் சிறுவன் தாயே**
**தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே."** **(குறுந். 45)**

*(உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின் உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக்கண்ணும்) உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின் —தலைவன் தெளிவிக்கப்படுந் தன்மைக்கணில்லாத ஊடல் மிகுத் தோளிடத்து;*[1]

*உணர்ப்புப் 'புணர்ப்புப்' போல் நின்றது*[2]

*உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று - ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைவன்வயத்தாளாய் நின்று; தான் வெகுண்டு ஆக்கிய தகுதிக்கண்ணும்—தான் தலைவியைக் கழறி அவள் சீற்றம் போந்தன்மை உண்டாக்கிய தகுதிக் கண்ணும்:*

**"துறைமீன்..............அறியா ரம்மவஃ துடலு மோரே"**
**(அகம். 316)**

*இது, தோழி தலைவியை வெகுண்டு ஆக்கியவாறு காண்க.*

*(அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எண்மைக் காலத்து இரக்கத்தானும்) எண்மைக் காலத்து - தாம் எளியராகிய கற்புக் காலத்திலே; அருமைக் காலத்துப் பெருமை காட்டிய இரக்கத்தானும் —களவுக்காலத்துத் தமது பெருமையை உணர்த்திய வருத்தத்தின் கண்ணும்:*

**"வேம்பின் பைங்காயென்"** **(குறுந். 196)**

1. ஊடல் உற்றோள்—ஊடல் மிகுந்தோள். உறுதல்—மிகுதல்.

2. புணர்த்தல் என்னும் பொருளுடைய புணர்ப்பு' என்னுந் தொழிற்பெயர் 'புணர்க்கப்படும் தன்மை' என்ற பொருளைத் தந்தாற் போன்று, உணர்த்தல் என்னும் பொருளுடைய 'உணர்ப்பு' என்னுந் தொழிற்பெயர், 'உணர்த்தப்படுந் தன்மை' எனப் பொருள் தந்து நின்றது.

*பாணர் கூத்தர் விறலியர் என்றிவர் - பாணருங் கூத்தரும் விறலியருமென்று சொல்லுகின்ற இம் மூவரும்; பேணிச் சொல்லிய குறைவினை எதிரும் - விரும்பிக்கூறிய குறையுறும் வினைக்கு எதிராகவும்: கூற்று நிகழும்.*

*'எதிரு' மென்றது அவர் வாயில்வேண்டியவழித் தோழி அவர்க்கு மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலுங் கூறியதாம்*

**"புலைமகனாதலின்...நாணவும் பெறுமே."**

*இது பாணர்க்கு வாயின் மறுத்தது.*

**"விளக்கின்...............போர்வையஞ்சொல்லே" (நற்றிணை 310)**

*இது விறலிக்கு வாயின் மறுத்தது. மறுப்பாள்போல் நேர்வ வந்துழிக் காண்க.*

*(நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக்[1] காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்) நீத்த கிழவனை —பரத்தையிற் பிரிந்து தலைவியைக் கைவிட்ட தலைவனை; நிகழுமாறு படீஇ— தானொழுகும் இல்லறத்தே படுத்தல்வேண்டி; காத்த தன்மையில் - புறத்தொழுக்கிற் பயனின்மை கூறிக் காத்த தன்மையினாலே; கண் இன்று பெயர்ப்பினும்-கண்ணோட்டமின்றி நீக்கினும்:*

**"மனையுறை கோழி.........தெருவே" (குறுந். 139)**

*இதனுள் 'அம்பலொடு வார' லெனவே பன்னாள் நீத்தமையுங் கண்ணின்று[2] பெயர்த்தமையுங் கூறிற்று. கோழி போலத் தாயர் மகளிரைத் தழீஇக்கொண்டாரென்றலிற் புறம் போயும் பயமின்றெனக் காத்த தன்மை கூறிற்று.*

*(பிரியுங் காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்) பிரியுங் காலை எதிர்நின்று சாற்றிய-தலைவன் கற்பிடத்துப் பிரியுங்கால் தெய்வத்தன்மையின்றி[3] முன்னின்று*

1. ஆறுபடீஇ – இல்லறத்தேபடுத்தல் வேண்டி, ஆறு—இல்லறம்.

2. கண் இன்று—கண்ணோட்டம் இன்றி. இன்றியென்னும் வினையெச்சம் இன்று எனத்திரிந்தது.

3. உரையில் 'தெய்வத்தன்மையின்றி' என்பதற்குரிய குறிப்பு மூலத்தில் இல்லாமை சிந்திக்கத்தகுவதாகும்.

*வெளிப்படக் கூறிய; மரபுடை எதிரும் உளப்படப் பிறவும் முறை யுடைத்தாகிய எதிர்காலமும் இறந்தகாலமும் உட்படப் பிறவற்றுக் கண்ணும்:*

*'எதிரும்' என்ற உம்மை, எச்சவும்மை.[1] 'பிற' ஆவன தலைவன் வரவுமலிந்து கூறுவனவும், வந்தபின்னர் முன்பு நிகழ்ந்தன கூறுவனவும், வற்புறுப்பாள் பருவமன்றெனப் படைத்து மொழிவனவுந், தூது கண்டு கூறுவனவுந், தூது விடுவனவுஞ் சேணிடைப் பிரிந்தோன் இடைநிலத்துத் தங்காது இரவின் வந்துழிக் கூறுவனவும், நிமித்தங் காட்டிக் கூறுவனவும், உடன் சேறலை மறுத்துக் கூறுவனவும் பிறவுமாம்.*

*"பா அலஞ்செவி" என்னும் பாலைக்கலியுள்,*

**"பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு**
**எந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வது**
**அந்நாள்கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே." (கலி : 5)**

*இதனுட், 'புரிந்தனை' யென இறப்பும் 'இறக்கு'மென எதிரும் மரபில் தப்பாமல் வந்தவாறு காண்க.*

**"வேனில்............பொருளே" (ஐங்குறு. 309)**

*இஃது எதிரது நோக்கிற்று.*

**"புறவணி நாடன் காதன் மடமகள்" (ஐங்குறு. 424)**

*இதுவும் அது.*

*இனிப் 'பிற' வருமாறு:*

**"பார்வைவேட்டுவன்......நமக்கே." (நற்றிணை. 212)**

*இது தலைவிக்கு வரவு மலிந்தது.*

---

1. 'எதிர்' என்பதற்கு 'எதிர்காலம்' எனப்பொருள் கொண்டு, 'எதிரும்' என்ற இறந்தது தழீஇய எச்சவும்மையால் இறந்த காலமும் உட்பட என உரைவரைந்தார் நச்சினார்க்கினியர். இந்நூற்பாவில் முன் வந்துள்ள 'பாணர் கூத்தர் விறலியர் என்றிவர் பேணிச்சொல்லிய குறைவினை எதிரும்' 'என்புழி. "எதிரும்" என்றது, அவர் வாயில் வேண்டியவழித் தோழி அவர்க்கு மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலுங்கூறியதாம்' என இவ்வாசிரியரே விளக்கியிருத்தலால். 'எதிரும்' என்பதற்கு 'மாறுபாடும்' என இளம்பூரணர் கூறிய பொருளே பொருத்தமுடையதாகும்.

**"நீலத்தன்ன.............மார்பே."** **(அகம். 314)**

*இது, முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றாமையும் அது கண்டு தான் கலங்கியவாறுந் தலைவற்குக் கூறியது.*

**"மடவமன்ற காரென......மதித்தே"** **(குறுந். 66)**

*இது, பருவம் அன்றெனப் படைத்து மொழிந்தது.*

**"என நீ, தெருமரல் வாழி தோழிநங் காதலர்**
**பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்**
**செருமேம் பட்ட வென்றியர்**
**வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே."** **(கலி. 26)**

*இது, தூது வந்தமை தலைவிக்குக் கூறியது.*

**"கைவல் சீறியாழ்ப் பாண நுமரே**
**செய்த பருவம் வந்துநின் றதுவே**
**எம்மின் உணரா ராயினுந் தம்வயின்**
**பொய்படு கிளவி நாணலும்**
**எய்யா ராகுதல் நோகோ யானே."** **(ஐங்குறு. 472)**

*இது, குறித்த பருவத்துத் தலைவன் வாராதவழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது.*

*தூதுவிட்டது வந்துழிக் காண்க.*

**"பதுக்கைத் தாய"** **(ஐங்குறு, 362)**

*இது, சேணிடைப் பிரிந்து இரவின் வந்துழிக் கூறியது*

**"ஆமா சிலைக்கு மணிவரை"** **(கைந்நிலை, 18)**

*இது நிமித்தங் காட்டிக் கூறியது.*

*இன்னும் அதனானே நமர் பொருள்வேண்டுமென்றார் அதற்கு யான் அஞ்சினேனெனக் களவின் நிகழ்ந்ததனைக் கற்பில் தலைவிக்குக் கூறுதலுங் கொள்க*

**"சன்னவில் தோளான் கடிநாள் விலக்கு தற்**
**கென்னை பொருணினைந்தார் ஏந்திழாய்—பின்னர்**

**அமரேற்றுக் கொள்ளுமென் றஞ்சினேன் அஞ்சார்**
**நமரேற்றுக் கொள்ளாத ஞான்று."**

இன்னந் தோழி கூற்றாய்ப் பிறாவற்றான் வருவனவெல்லாம் இதனான் அமைக்க.

**"அன்னை வாழிவேண் டன்னை"** **(ஐங்குறு. 104)**

இது, புதல்வற்பெற்றுழித் தலைவன் மனைக்கட்சென்ற செவிலிக்கு அறத்தொடு நின்று வதுவைகூட்டிய தோழி அவன் ஊர் காட்டிக் கூறியது.

வகைபட வந்த கிளவி[1] எல்லாம் தோழிக்கு உரிய என்மனார் புலவர். தோழிகூற்றாய்த் தலைவிகூற்றினுள் அடங்குவதன்றித் தோழிக்கே கூறத்தகும் வேறுபாடு உண்டாகவந்த கிளவிகளெல்லாந் தோழிக்கு உரியவென்று கூறுவர் புலவர் (எ - று.)

இச் சூத்திரத்துக்கண் ஏழனுருபும் அவ்வுருபு தொக்கு நின்று விரிந்தனவுஞ் செயினென்னும் வினையெச்சமும் உரிய வென்னுங் குறிப்புவினை கொண்டன. அவற்றை இன்னவிடத்தும் இன்னவிடத்தும் இன்னதுசெய்யினும் உரியவென்று ஏற்பித்து முடிக்க. (9)

**ஆய்வுரை :** இது, கற்பின்கண் தோழிகூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.

(இ - ள்) பெறுதற்கரிய பெரியபொருளாகிய திருமணம் நிறைவேறியபின் அமைந்த பிறரால் வெகுளுதற்கரிய மனை வாழ்க்கை மரபு காரணத்தால் தலைவனுக் குளதாகிய சிறப்பினைப் பாராட்டியுரைக்குமிடத்தும், களவுக்காலத்துத் தாம் உற்ற இடையூறுகள் நீங்கிய திறத்தைக் கூறுமிடத்தும், தன் கடமைகளிற் சிறிதும் சோர்வில்லாத தலைவியைத் தலைவன் விரைந்து மணந்து கொள்ளுதல் குறித்துத் தான் வேண்டியவாறு தெய்வம் அதனை முடித்தமையால் தெய்வத்திற்குப் பரவுக்கடன் கொடுத்தல் வேண்டும் எனத் தலைவனுக்குக் கூறுமிடத்தும், புகழுடைய பெரும் பொருளாகிய மனைவாழ்க்கையினைத் தலைவியின்பால் வைத்த

1. 'வகைபட வந்த கிளவி' என்றது, தோழி கூற்றாய்த் தலைவி கூற்றினுள் அடங்குதலின்றித் தோழிகூற்றாகவே கொள்ளத்தரும் சிறப்புரிமையுடைய கிளவிகளை என்பர் நச்சினார்க்கினியர்,

வழித் தலைவன் தன் கடமையினை மறந்தொழுகியவிடத்தும், புறத்தொழுக்கத்தையுடைய தலைவன் திறத்து மனம் வருந்தி ஊடிய தலைவியை அவளது ஊடல் தணிய எடுத்துக் காட்டுதற்குக் காரணமாகிய பகுதியிடத்தும், பரத்தமையாகிய குற்றத்தினைப் புரிந்து வந்திருந்த தலைவனை இடித்துக் கூறிக் குற்றந்தீர்ந்த நிலையில் தலைவியின் அன்புக்குரியவனாக ஆக்கிக்கொடுக்கு மிடத்தும். பணிவினைப்புலப்படுத்தும் மொழிகளால் தலைவனை வணங்குதற்கண்ணும், புறத்தே சென்று பரத்தையரொடும் விளை யாடுதலைப் பொருந்திய தலைவனது விருப்பத்தின்கண்ணும், மனைவாழ்க்கையில் அன்புகூர்தற் சிறப்புடைய மகனைத் தலைவன் வாயிலாகக் கொண்டு சென்றவிடத்துத் தலைவி வாயில் நேராமையால் தலைவன் தனிமையுற்று வருந்துமிடத்தும், தலைமகளிடத்திலிருந்து நீ கொண்ட மாட்சிமை பொருந்திய நலத்தினை மீட்டுத் தந்து செல்வாயாக எனத் தலைவனை வேறுபடுத்துரைக்குமிடத்தும். தலைவனது பேணாவொழுக்கினையெண்ணி நாணமுற்ற நிலையிலும், தலைவன் தான் செய்த சூளுறவினின்றும் பிழைத்த மையால் உளவாம் தீமையினையெண்ணித் தலைவி வருந்திய நிலையிலும், பெரியோராயினாரது ஒழுகலாறு பெருமையின் கண்ணதாகும் என்று கூறித் தலைவியைப் பெறுந்தகையில்லாதவாறு தலைவன் செய்த பிழையினை எடுத்துக் கூறுமிடத்தும், மேற்சொல்லியவாறு தலைவன் தவறு செய்துழி அவனால் அணு குந்தன்மையில்லாத புலவியுள் அழுந்திய தலைவியின் சார்புடையளாய் நின்று அவளது புலவியை நீக்குமிடத்தும், தலைவன் தனது நிலையினையுணர்த்தி ஊடல் தீர்க என வேண்டிக் கொள்ளவும் தணியாத ஊடலைத் தீர்த்தல் வேண்டிய தலைவனது சார்புடையளாய்த் தலைவியை வெகுண்டு நின்று அவளது ஊடல் தீர்த்து உண்டாக்கிய மனை வாழ்க்கை யமைதியாகிய தகுதியிடத்தும், காணுதற்கு அரிள களவுக்காலத்துத் தம் பெருமையைப் புலப்படுத்திய நிலையில் கற்புக் காலத்துத்தம் எளிமையைக் கூறி இரங்குமிடத்தும் (தலைவியது ஊடல் தணிவித்தல் கருதி) பாணர், கூத்தர், விறலியர் என்னும் இவ்வாயில்கள் விரும்பிக்கூறிய குறையிரத்தல்களுக்கு மறுமொழி கூறும் நிலையிலும், பரத்தமையினை மேற்கொண்டு தலைவியைக் கைவிட்ட தலைவனைத் தலைவியுடன் மனையறமாகிய நன்னெறியில் ஒழுகச் செய்தல் வேண்டித் தலைவியைப் பாதுகாத்த

தன்மையினாலே கண்ணோட்டமின்றிக் கடிந்துரைத்துப் பரத்தமைக் குற்றத்தினின்றும் தலைவனை மீட்டற்கண்ணும், தலைவன் சேயிடைப்பிரிவிற் (நெடுந்தூரப்பிரிவிற்) பிரிந்து செல்ல எண்ணிய காலத்து அவனுக்கு முன்னின்று கூறிய—உலகியலின் மாறுபடாத எதிர்மொழி உட்பட இன்னோரன்ன பிறவுமாகக் கூறுபட வந்த கிளவிகள் எல்லாம் தோழிக்கு உரிய என்று கூறுவர் புலவர் எ—று.

10, **புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்**
**இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்**
**பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்**
**மறையின் வந்த மனையோள் செய்வினை**
**பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்**
**காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையின்**
**தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்**[1]
**காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்**
**இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து**
**பின்னை**[2] **வந்த வாயிற் கண்ணும்**
**மனையோ ளொத்தலின் தன்னோர் அன்னோர்**
**மிகையெனக்**[3] **குறித்த கொள்கைக் கண்ணும்**
**எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்**
**கண்ணிய காமக் கிழத்தியர் மேன.**

என்—எனின், காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடம் உணர்த்திற்று.

***இளம்பூரணம் :*** புல்லுதன் மயக்கும் புலவி முதலாகச் சொல்லப்பட்ட இடத்தினும் அந்நிகரன பிறவிடத்தினும் குறிக்கப் பட்ட கூற்றுக் காமக்கிழத்தியர் மேலன என்றவாறு.

கூற்றென்பது அதிகாரத்தான் வந்தது.

பா. வே. 1. தாய்போல் தழீஇக் கழறியம் மனைவியைக்.

2. பின்னர்

3. மிகைபடக்.

*காமக்கிழத்தியராவார் பின்முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர்; ஒத்த கிழத்தியரும் இழிந்த கிழத்தியரும் வரையப்பட்டாரும் என. ஒத்த கிழத்தியர்— முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல். இழிந்தாராவார்—அந்தணர்க்கு அரசகுலத்தினும் வணிக குலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஏனையிரண்டுகுலத்தினுங் கொடுக்கப்பட்டாரும். வணிகர்க்கு வேளாண்குலத்திற் கொடுக்கப்பட்டாரும் வரையப் பட்டார்—செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர், கன்னியில் வரையப்பட்டாரும் அதன் பின்பு வரையப்பட்டாரும் என இரு வகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் யாரெனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகுமிளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார்.[1] இவருள்ளும் ஒருவரைப் பற்றி மறுதலைப் பெண்டிரைச் சார்த்திக் கூறுவனவும் காமக்கிழத்தியர் கூற்றின்பாற் படும். இவற்றின் வேறுபாடு அவரவர் கூற்றானறிக. இச்சூத்திரத்திற் காமக்கிழத்தியென ஓதாது 'கிழத்தியர்' என ஓதுதலானும் பலவகையார் என்பது கொள்க.*

*புல்லுதன் மயக்கும்[2] புலவிக்கண்ணும் என்பது—புல்லுதலைக் கலக்கும் புலவிமாட்டுங் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் என்றவாறு.*

*அஃதாவது முதிராத புலவிமாத்திரமாகிய புணர்ச்சியையுடன் பட்ட நெஞ்சத்தளாதல்.*

**"பொது மாழி........ஐய எமக்குநின் மார்பு."** **(கலித். 68)**

*இது மூவகையார்க்கும் பொது.*

1. தலைவியை மணந்துகொண்ட பின்பு தலைவனால் வேட்கை காரணமாக மணஞ்செய்துகொள்ளப்படும் மகளிர் காமக்கிழத்தியராவர். தலைவன் குலத்தோடு ஒத்த குலத்திற்பிறந்தவளும், அவனது குலத்தினும் தாழ்ந்த குலத்திற் பிறந்தவளும், பரத்தையரில் தலைவனால் வரைந்துகொள்ளப் பட்டவளும் எனக் காமக்கிழத்தியர் முத்திறப்படுவர் என்பதும், ஆடலும் பாடலும் வல்லாராகி அழகும் இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர்க்கும் உரிமை பூணாதாராய் வாழும் பொதுமகளிர் பரத்தையர் எனப்படுவர் என்பதும் இளம்பூரணர் கருத்தாகும்.

2. மயக்குதல்—கலத்தல், புல்லுதலைக்கலந்தபுலவி எனவே, தலைவனொடு புணர்ச்சியையுடன்பட்ட நெஞ்சத்தள் ஆகிய நிலையில் கொண்ட முதிராத பிணக்கமாதல் பெறப்படும்.

இல்லோர்[1] செய்வினை யிகழ்ச்சிக் கண்ணும் என்பது— மனையகத்தோர் செய்த வினையை யிகழ்ந்து கூறுதற்கண்ணும் என்றவாறு.

பன்மையால் தலைமகனை யிகழ்தலுந் தலைமகளை யிகழ்தலுங்கொள்க.

**"கழனிமா அத்த..........புதல்வன் தாய்க்கே"** **(குறுந். 8)**

என்றும்,

**"நன்மரங்................ யாடியாரே"** **(அகம்.166)**

என்றும் வரும். இவை தலைவனை இகழ்ந்தன.

**"அளியர் தாமே ................பெரும்பேதையரே"**

**"எரியகைந் தன்ன ..........அலை இயர்தன்வயிறே"** **(அகம் 106)**

இவை பரத்தை கூற்று.

பல்வேறு புதல்வர்க் கண்டுதனி யுவப்பினும் என்பது- பல வகைப் புதல்வரைக் கண்டு மிகவும் உவந்து கூறியவழியு மென்றவாறு.

**"நயந்தலை........... கோதை பரிபாடக் காண்கு"** **(கலித்.80)**

எனவரும்.

மறையின் வந்த மனையோள் [2] செய்வினை பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும் என்பது—களவின் வருகின்ற மனையோள் செய்வினை பொறையின்றிப் பெருகிய துன்பத்தின் கண்ணும் என்றவாறு.

**"வாளை.........தொலையுந பலவே."** **(நற்றிணை. 390)**

இது, பரத்தையராகி வந்த காமக்கிழத்தியர் கூற்று.

---

1. இல்லோர்—மனையின்கண் வாழ்வோர்; என்றது தலைவியையும் தலைவனையும்.

2. மறையின் வந்த மனையோள் என்றது, களவொழுக்கத்திற்குரியளாய் ஒழுகிப் பின்பு தலைவனால் மணந்து கொள்ளப்பட்டு மனையறத்திற்கு உரிமை பூண்ட தலைவியை.

*காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையிற்[1] றாய்போற் உழறித் தழீஇய மனைவியைக் காய்வின் றவன்வயிற் பொருத்தற்கண்ணும்* என்பது—காதற் சோர்வினாலும் ஒப்புர வுடைமை யானுந்தாய் போற் சுழறிப் பொருத்தப்பட்ட மனைவியைக் காய்தலின்றித் தலைமகன்மாட்டுப் பொருந்தற்கணுங் கூற்று நிகழும் என்றவாறு.

இதுவும் அவள் கூற்று. காதற்சோர்வு என்பது, தன்மாட்டுக், காதல் சோர்தல். இது தலைமகன் மாட்டுத் துனியுளவழி நிகழும் நிகழ்ச்சி.

**"வயல்வெள்.............மகனென் னாரே."** **(நற்றிணை.290)**

இது காமக்கிழத்தியாகிய தலைமகட்கு முன் வரையப்பட்ட பரத்தை கூற்று.

*இன்னகைப் புதல்வனைத் தழீஇ யிழையணிந்து பின்னை வந்த வாயிற் கண்ணும்* என்பது—இனிய நகையையுடைய புதல் வனைத் தழீஇ இழையணிந்து பின்னை வந்த வாயிலின் கண்ணும் என்றவாறு. பின்னை என்றதனால் ஏனைய வாயில்களை மறுத்த வழியென்று கொள்க.

**"புள்ளிமிழ்........ஈங்கெம் புதல்வனைத் தந்து"** **(கலித் 79)**

என வரும்.

*மனையோள் ஒத்தலின் தன்னோரன்னோர் மிகையெனக்[2] குறித்த கொள்கைக் கண்ணும்* என்பது—தான் மனையாளை ஒத்தலாற் றன்போல்வார் தலைவற்கு மிகையெனக் குறித்த கோளின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

**"அரிற்பவர்ப்..........துஞ்சு நாளே"** **(குறுந். 91)**

என வரும்

*எண்ணிய பண்ணையென் றிவற்றோடு* என்பது—எண்ணப் பட்ட விளையாட்டு என்று சொல்லப்பட்ட இவற்றோடென்றவாறு.

---

1. கடப்பாட்டாண்மை—ஒப்புரவுடைமை. 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லொவுலகு' என்புழிக் 'கடப்பாடு' ஒப்புரவு என்ற பொருளில் ஆளப் பெற்றுள்ளமை யறியலாம்.

2. மிகை—வேண்டப்படாமை ; தேவையற்ற நிலை.

*விளையாட்டாவது ஆறுங் குளனுங் காவும் ஆடுதல்.*

**"கூந்தலாம்பல்.........கொழுநன் மார்பே"** **(குறுந். 80)**

*பிறவும் என்றதனால் தலைமகட்குரித்தாகச் சொல்லப் பட்டவற்றுள் ஒப்பன கொள்ளப்படும். அவற்றுட் சில வருமாறு:-*

*"ஞாலம் வறந்தீர" என்னும் மருதக்கலியுள்,*

**"அடக்கமில் போழ்தின்கண் தந்தைகா முற்ற**
**தொடக்கத்துத் தாயுழைப் புக்கான்"**

*எனவும்,*

**"வழிமுறை தாயுழைப் புக்கான்"**

*எனவும்,*

**"தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றிஃதோர்"**
**புலத்தகைப் புத்தேளிற் புக்கான்"** **(கலித். 82)**

*எனவும்,*

*கூறுதலிற் புதல்வனை யீன்றாள் மூன்றாங் காமக்கிழத்தி யாயினளாறும் இவன்மாட்டுத் தாயர்கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப்பரத்தை யுள்ளிக் கூற்றுநிகழ்ந்தவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன. தோழி கூற்றும் இவட்கும் ஒக்கும். (10)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, காமக்கிழத்தியர் கூற்றெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது; காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமைபூண்டு இல்லற நிகழ்த்தும் பரத்தையர் அவர் பலராதலிற் பன்மையாற் கூறினார். அவர் தலைவனது இளமைப்பருவத்திற்கூடி முதிர்ந்தோரும், அவன் தலை நின்றுஒழுகப்படும் இளமைப்பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோருங் காமஞ்சாலா இளமையோருமெனப் பல பகுதியராம். இவரைக் 'கண்ணிய காமக்கிழத்திய' ரெனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர் கூத்தும் பாட்டும் உடையராகி வருஞ் சேரிப்பரத்தையருங் குலத்தின்கண் இழிந்தோரும் அடியரும் வினை வலபாங்கினரும் பிறருமாம். இனிக் காமக்கிழத்தியரைப், பார்ப்பார்க்குப் பார்ப்பனியை யொழிந்த மூலரும், ஏனையோர்க்குத் தங்குலத்தரல்லாதோரும், வரைந்து கொள்ளும் பரத்தையரு*

*மென்று பொருளுரைப்பாரும் உளர் அவர் அறியார்; என்னை? சிறப்புடைத் தலைவியரொடு பரத்தையரையுங் கூட்டிக் காமக் கிழத்தியரென்று ஆசிரியர் சூத்திரஞ் செய்யின் மயங்கக்கூறலென்னுங் குற்றந் தங்குமாதலின்*[1]*. அன்றியுஞ் சான்றோர் பலருங் காமக் கிழத்தியரைப் பரத்தையராகத் தோற்றுவாய்செய்து கூறுமாறும் உணர்க.*

*(இ-ள்.) புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும் - தலைவன் தனது முயக்கத்தைத் தலைவியிடத்துந் தம்மிடத்தும் இடைவிட்டு மயக்குதலால் தலைவிகண் தோன்றிய புலவியிடத்தும்.*[2] *காமக் கிழத்தியர் புலந்து கூறுப.*

**"மண்கனை...........சூழந்திசின் யானே"** **(அகம். 76)**

*இதனுள் எஞ்சேரி வந்தெனக் கழறுபவென்ப அவன் பெண்டிரென முன்னைஞான்று புல்லுதன் மயக்குதலால் தலைவி புலந்தவாறும் அதுகண்டு காமக்கிழத்தி கொண்டுகைவலிப்பலெனப் பெருமிதம் உரைத்தவாறுங் காண்க.*

*இது, பெருமிதங்கூறலின் இளமைப்பருவத்தாள் கூற்றாயிற்று.*

**"ஒண்டொடி யாயத் துள்ளுநீ நயந்து**
**கொண்டனை யென்பவோர் குறுமகள்'** **(அகம். 96)**

*எனக் காமஞ்சாலா இளமையோளைக் கூறிற்று*

*இரட்டுற மொழிதலென்பதனாற் பரத்தையரிடத்துப் புலப் பட ஒழுகாது அவர் புல்லுதலை மறைத்தொழுகுதலாற் காமக்*

---

1. காமக்கிழத்தியராவார் பின் முறை வதுவையாகத் தலைவனால் மணந்து கொள்ளப்பட்டவர்கள் எனவும், அவர்கள் தலைவனொடு ஒத்தார், இழிந்தார் வரையப்பட்டார் என மூவகைப்படுவர் எனவும், இழிந்தராவார் அந்தணர்க்கு அரசர் வணிகர் வேளாளர் ஆகிய குலத்திற்கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு வணிகர் வேளாண்குலத்திற் கொடுக்கப்பட்டாரும் வணிகர்க்கு வேளாண்குலத்தில் கொடுக்கப்பட்டாரும் ஆவர் எனவும் கூறுவர் இளம்பூரணர். சிறப்புடைத்தலைவியராகிய இவர்களைச் செல்வராயினார் கணிகைக்குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரையப்பட்டாராகிய பரத்தையரொடு கூட்டிக் காமக்கிழத்தியர் எனச்கூறுதல் பொருந்தாதென்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

2. புல்லுதல் மயக்கும் புலவியாவது, தலைவியிடத்தும் தம்மிடத்தும் தலைவன் இடையிட்டு முயங்குதலால் காமக்கிழத்தியர்க்கு உண்டாகும் பிணக்கம். மயக்குதல்––கலத்தல்; முயங்குதல்.

*கிழத்தியர்க்குப் பிறக்கும் புலவிக்கண்ணும் அவர்க்குக் கூற்று நிகழுமெனவும பொருள் கூறுக.* [1]

**"கண்டேனின் மாயங்களவாதல்பொய்ந்நகா" (கலி. 90)**

*என்னும் மருதக்கலியுட் காண்க.*

*இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும் - இல்லிடத்திருந்த தலைவனுந் தலைவியும் ஊடியும் உணர்த்தியுஞ் செய்த தொழிலைக் கேட்டு இகழும் இகழ்ச்சிக்கண்ணும் :*

**'கழனிமாத்து' (குறுந்-8) "நன் மரங்" (அகம் 166)**

*எனவரும் இவையும் இளையோர் கூற்று பிறவும் அன்ன.*

*பல்வேறு புதல்வர்க் கண்ட நனி உவப்பினும் — வெவ் வேறாகிய புதல்வரைத் தாங்கண்டு மிக மகிழ்ச்சி செய்யினும்*

*"வேறுபல் புதல்வ" ரென்றார். முறையாற்கொண்ட மனைவியர் பலரும் உளராதலின்.* [2]

*'ஞாலம் வறந்தீர' என்னும் மருதக்கலியுள்,*

**"அடக்கமில் போழ்தின்கண் தந்தைகா முற்ற**
**தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளும்**
**மருப்புப்பூண் கையுறை யாக அணிந்து**
**பெருமா னகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்**
**சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன." (கலி. 82)**

*இது, முதிர்ந்தாள் உண்ணயந்து கூறியது.*

**"மற்றும் வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளும்**
**மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து**

---

1. இனி பரத்தையரிடத்து வெளிப்பட ஒழுகாது அவர் புல்லுதலைத் தலைவர் தம்மிடத்து மறைத்தொழுகுதல் காரணமாகக் காமக்கிழத்தியர்க்கு உளதாகிய புலவி என இரட்டுற மொழிதலாற் பொருள்கொள்வர் நச்சினார்க்கினியர். இங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் 'மயக்குதல்' எனுஞ்சொல் 'மறைத்தல்' என்னும் பொருளில் ஆளப் பெற்றதாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. பல்வேறு புதல்வராவார் ; தலைவனால் முறையே மணஞ்செய்து கொள்ளப்பெற்ற மனைவியர் பலரிடத்தும் தோன்றிய புதல்வர்கள்,

**முயங்கினள் முத்தினள் நோக்கி நினைந்தே**
**நினக்கியாம் யாரே மாகுது மென்று**
**வனப்புறக் கொள்வன நாடி யணிந்தனள்"** **(கலி. 82)**

*இதனுள் நோய்தாங்கினளென இளமைப்பருவத்து மகிழ்ச்சியும் முதிர்ந்த பருவத்து மறவியுந் தோன்றக் கூறாமையினானும் வழி முறைத்தா யென்றமையானும் இஃது இடைநிலைப் பருவத்தாள் கூற்று.*

**"அவட்கினி தாகி விடுத்தனன் போகித்**
**தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்**
**புலத்தகைப் புத்தேளில் புக்கான்"** **(கலி. 82)**

*என்றவழிப் 'புத்தே'ளென்றதுவுந் தலைநின்றொழுகும் இளையோளைக் கூறியது.*

**"தந்தை யிறைத்தொடீஇ மற்றிவன் றன்கைக்கண்**
**தந்தாரியா ரெல்லாஅ விது**
**இஃதுதொன்று"** **(கலி. 84)**

*என்றாற்போல அவள் கொடுப்பக்கொள்வனவுங் கொள்க.*

*(மறையின் வந்த மனையோள் செய்வினைப் பொறையின்று பெருகிய பருவரற்கண்ணும்) மறையில் வந்த - தலைவற்கு வேறோர் தலைவியோடு களவொழுக்கம் நிகழ்தலின் அவன் செய்திகளின் வேறுபாட்டால் தமக்குப் புலப்பட வந்த; மனையோள் செய்வினை-மனையோளாதற்குரியவள் தமர்பணித்தலிற் றைந்நீராடலும் ஆறாடலும் முதலிய செய்தொழில்களைச் செய்யு மிடத்து; பொறை இன்று பெருகிய பருவரற்கண்ணும்-இவள் தோற்றப்பொலிவால் தலைவன் கடிதின் வரைவனெனக் கருதிப் பொறுத்தலின்றி மிக்க வருத்தத்தின்கண்ணும்:*

**"வாளைவாளிற்...தொலையுந பலவே."** **(நற்றிணை. 390)**

*இதனுள், விழவிற்செல்கின்ற தலைவியைக் கண்டு காமக் கிழத்தி இவள் தோற்றப்பொலிவோடு புறம்போதரக் காணின் வரைவனெனவும், அதனான் இல்லுறைமகளிர் பலருந் தோள் நெகிழ்பவெனவும் பொறாது கூறியவாறு காண்க.*

*(காதற் சோர்விற் கடப்பாட்டு ஆண்மையில் தாய்போல் தழீஇக் கழறி அம் மனைவியைக் காய்வு இன்று அவன் வயிற் பொருத்தற்கண்ணும்) காதற் சோர்வில்-தானுங் காய்தற்குரிய காமக்கிழத்தி தலைவன் தன்மேற் காதலை மறத்தலானும்; கடப் பாட்டாண்மையிற் சோர்வில்—அவற்கு இல்லொடு பழகிய தொல்வரற் கிழமையாகிய ஒப்புரவின்மையானும்; தாய்போல் தழீஇக் கழறி–தலைவியைச் செவிலிபோல உடன்படுத்திக் கொண்டு தலைவனைக் கழறி; அம் மனைவியைக் காய்வின்று அவன் வயிற் பொருத்தற்கண்ணும்—அத்தலைவியைக் காய்தலின் றாக்கித் தலைவனிடத்தே கூட்டுமிடத்தும்:*

*இது, துனிநிகழ்ந்துழித் தலைவனது தலைவளரிளமைக்கு ஒருதுணையாகி முதிர்ந்த காமக்கிழத்தி இங்ஙனங் கூட்டு மென்றார்.*

**"வயல்வெள் ளாம்பல்...........என்னாரே"** **(நற்றிணை. 290)**

*இதனுள் நீ இளமைச்செவ்வியெல்லாம் நுகர்ந்து புதல்வற் பயந்த பின்னர் உழுதுவிடு பகடு எச்சிலை அயின்றாற் போலப் பிறர் அவனை நுகர்ந்தமை நினக்கு இழுக்கன்றெனவும், அவனோடு கூட்டம் நெடுங்காலம் நிகழ்த்தவேண்டும் நீ; அவள் அவனோடு கட்டிவரை எய்தியிருக்கின்றாளென்று ஊரார் கூறுகின்ற சொல்லை என்னைப்போல வேறுபட்டுக் கொள்ளாதே, கொள்வது நின் இளமைக்கும் எழிற்கும் ஏலாதெனவும், அவனை வண்டென்பதன்றி மகனென்னாராதலின் அவன் கடப்பாட்டாண்மை அதுவென்றுங் கூறினாள்.*

**இனி "என்சொற் கொள்ளன்மாதோ"** **(நற்றிணை 290)**

*என்பதற்கு என்வார்த்தையைக் கேட்டல் நினக்கு விருப்பமோ? விருப்பமாகில் யான் கூறுகின்றதனைக் கொள்க.*

**ஈண்டுபெருந் தெய்வத்......நின்னயந்தோரே"** **(நற்றிணை. 315)**

*இதனுள் மூத்துவினை போகிய அம்பிபோலப் பருவஞ் சென்ற பிணிக்கப்பட்ட எம்மைப்போலாது இவள் இப்பருவத்தே இனையளாகற்பாலளோ மலர்ந்த செவ்வியான் முறை வீயாய்க் கழியாது இடையே எரிந்து கரிவுற்ற பூவினைப்போல எனத் தலைவனுக்குக் காமக்கிழத்தி கூறியவாறு காண்க.*

*(இன் நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து பின்னர் வந்த வாயிற்கண்ணும்) இன்நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து-கண்டோர்க்கெல்லாம் இன்பத்தைப் பயக்கும் புதல்வனை எடுத்துப் பொலங்கலத்தாற் புனைந்து கொண்டு : பின்னர் வந்த வாயிற்கண்ணும் – பல வாயில்களையும் மறுத்த பின்னர் வாயிலாகக் கொண்டு புகுந்த வாயிலின் கண்ணும்:*

**"என்குறித் தனன்கொல் பாணநின் கேளே**
**வன்புறை வாயி லாகத் தந்த**
**பகைவரு நகூஉம் புதல்வனை**
**நகுவது கண்டு நகூஉ மோரே"**

*இதனுள் வன்புறை வாயிலாகிய புதல்வனைக் கண்டு நகுவாரைத் தனக்கு நகுவாரைப்போல நகாநின்றானெனக் காமக் கிழத்தி கூறி வாயில் நேர்ந்தவாறு காண்க. 'பகைவரும் நகூஉ' மெனவே தான் புலக்கத்தகுந் தலைவியர் புதல்வனென் நாளாயிற்று.*

*(மனையாள் ஒத்தலில் தன்னோர் அன்னோர் மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும்) மனையோள் ஒத்தலில் - தானும் உரிமை பூண்டமைபற்றி மனையோளோடு தானும் ஒத்தாளாகக் கருதுதலின்; தன்னோர் அன்னோர் மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும் - தன்னை ஒக்கும் ஏனை மகளிரின் தன்னை விசேட முண்டாகக் குறித்துக்கொண்ட கோட்பாட்டின் கண்ணும்;*

**"குழற்காற் சேம்பின் ...................**
**நேரிறை முன்கை வீங்கியவளையே." (அகம். 336)**

*இதனுள் யான் அவண் வாராமாறே எனத் தான் மனையோளைப் போல் இல்லுறைதல் கூறி யாண்டுச் செல்லிற் சுடரோடு திரியும் நெருஞ்சிபோல என மகளிரை யான் செல்வுழிச் செல்லுஞ் சேடியர் போலத் திரியும்படி பண்ணிக் கொள்வலெனக் கூறியவாறு காண்க,*

*எண்ணிய பண்ணை - தலைவற்குத் தகுமென்று ஆய்ந்தயாறுங் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்வனபோல்வனவற்றுக்கண் தாமும் விளையாடுதற்கண்ணும் :*

**"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி" (குறுந் 80)**

*இதனுள், யாமஃதயர்கஞ் சேறும் என விளையாட்டுக் கூறினாள்.*

*என்று இவற்றோடு பிறவும்—இக் கூறியவற்றின் கண்ணும் புதல்வற்கண்ட நனியுவப்பினும் கூற்று நிகழுமென்று கூறப்பட்ட இவ்வெட்டோடே பிற கூற்றுக்களும், கண்ணிய காமக் கிழத்தியர் மேன — இக் கருதப்பட்ட காமக்கிழத்தியரிடத்தன (எ-று)*

*கூற்றென்பது அதிகாரத்தான் வருவிக்க; ஒடுவென்றது உருபு; கண்ணுதல், ஒரு மனைத் தெருவின்கண் உரிமை பூண்டு இல்லற நிகழ்த்துவரென்று சிறப்புக்கருதுதல்.[1] 'பிறவு' மென்றதனால் தலைவனை என்னலந் தாவெனத் தொடுத்துக் கூறுவனவும், நின் பரத்தைமையெல்லாம் நின் றலைவிக்கு உரைப்பலென்க கூறுவனவுஞ், சேரிப்பரத்தையரொடு புலந்துரைப்பனவுந், தலைவி கூற்றோடொத்து வருவனவும் பிறவாறு வருவனவுங் கொள்க.*

**"தொடுத்தென் மகிழ்ந செல்லல் ................"**
**வஞ்சி அன்னவென் நலந்தந்து சென்மே"** **(அகம். 396)**

*இது காமக்கிழத்தி என்னலந் தாவென்றது.*

**"உள்ளுதொறு நகுவேன் தோழி"** **(நற்றிணை. 100)**

*இது, மனையோட்கு உரைப்பலென்றலின் நடுங்கினானென்றது. "கண்டேனின்மாயம்" என்னும் மருதக்கலியுள்.*

**"ஆராக் கவவின் ஒருத்தி ............**
**சீறடி தோயா இறுத்த தமையுமோ"** **(கலி. 90)**

*எனச், சேரிப் பரத்தையராற் புலந்து தலைவனோடு கூறிய வாறு காண்க. இன்னும் இதனானே,*

**"நீளிரும் பொய்கை............."**
**அரிவேய் உண்கண் அவன்பெண்டிர் காணத்**
**தாருந் தானையும் பற்றி ஆரியர்**
**பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்**
**தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்**
**மார்புகடி கொள்ளே னாயின் ஆர்வுற்**
**றிரந்தோர்க்கீயா தீட்டியோன் பொருள்போற்**
**பரந்து வெளிப்படா தாகி**
**வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே."** **(அகம் 276)**

1. கண்ணிய சிறப்பாவது, தலைவியைப் போன்று ஒருதெருவில் ஒருங்கிருக்கும் மனையினைப் பெற்று இல்லறம் நிகழ்த்துதற்குரியர் எனச் சிறப்பாகக் கருதப்படுதல்.

இதனுட் பரந்து வெளிப்படாதாகி வருந்துக என்னலம் என்றமையிற் சேரிப்பரத்தையைப் புலந்து கூறுதன் முதலியனவுங் கொள்க. இன்னும் வேறுபட வருவனவெல்லாம் இதன்கண் அடக்குக. *(10)*

**ஆய்வுரை:** இது, காமக்கிழத்தியர் கூற்றுநிகழ்த்துமிடங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்.) தலைவன் தம்மொடும் பிற மகளிரொடும் கூடி மகிழ்தலை விரவி மேற்கொள்ளுதலால் உளதாகிய புலவியிடத்தும், மனையகத்தாராகிய தலைவி முதலியோர் தம்மை மதியாது செய்தசெயல்களை இகழும் நிலையிலும், தலைவனுக்குப் பெண்டிர் பலரிடத்தும் பிறந்த புதல்வர்களைக்கண்டு உவகைமீக்கூர்ந்த நிலையிலும், களவொழுக்கம் ஒழுகிமணந்து மனையறம் நிகழ்த்தும் மனைவி தம்மைக்குறித்துச் செய்யும்— தமக்குப் பொறுக்க வொண்ணாததாய்ப் பெருகிய துன்பத்தின் கண்ணும். தம்பாலுளதாகிய காதற்சோர்வினாலும் மனையறக் கடமைகளை ஆளுதலாகிய ஒப்புரவுடைமையினாலும் தாய்போல்நின்று இடித்துரைத்துமனைக்கிழத்தியாகிய தலைவியை வெகுளுதலின்றித் தலைவனொடு பொருந்தி வாழச் செய்தற்கண்ணும், தாம் வாயில் மறுத்த நிலையில் இனிய மகிழ்ச்சியை விளைக்கும் புதல்வனை அன்பினால் தழுவி அணிகலனணிந்து பின்னர் வாயிலாகக் கொண்டு வந்த வாயில்களிடத்தும், மனைக்கிழத்தியாகிய தலைவியோடு ஒத்தவுரிமையுடைய வளாகத் தன்னைக் கருதுதலால் தன்னையொத்த ஏனைமகளிரினும் தான் தலைவனுக்குச் சிறத்தாள் எனக் கொண்ட கோட்பாட்டின் கண்ணும், தலைவன் நிகழ்த்துவனவாகக் காதலர் கலந்துகொள்ளும் விளையாட்டுக்கள் என்று சொல்லப்பட்ட இவற்றோடு பிறவும் மனைவியுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்க காமக்கிழத்தியர் கூற்று நிகழ்த்தற்குரிய இடங்களாம். எ-று.

புல்லுதல்- புணர்தல். மயக்குதலாவது ஒருகால் தம்மிடத்தும் மற்றொருகால் பிறரிடத்தும் ஆக விரவி நிகழச்செய்தல்.

*மனையறக்கடமைகளில் உரிமை காமக்கிழத்தியர்க்கு உண்டு என்பது புலப்படக் கண்ணிய காமக்கிழத்தியர் என அடைபுணர்த் தோதினார். கண்ணுதல்- கருப்படுதல்: வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியொடு ஒப்ப மதிக்கப் பெறுதல்.*

**11. கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோண் மாண்புகள்**
**முகம்புகன் முறைமையிற் கிழவோற் குரைத்தல்**
**அகம்புகன் மரபின் வாயில்கட் குரிய.**

***இளம்பூரணம்:*** *என்-எனின், அகம்புல் மரபினவாய வாயில்கள் கூற்று நிகழுமாறு உணர்த்திற்று.*

*(இ-ள்.) கற்பு முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவுமாகிக் கிழவோள்மாட் டுளதாகிய தன்மைகளை முகம்புகு தன்மையானே தலைமகற்கு உரைத்தல் அகம்புகு மரபின் வாயில் கட்குரிய என்றவாறு.*

*செய்யுளியலுள் "வாயி லுசாவே தம்மு ளுரிய" (சூ.191) என்பதனால், தலைமகற் குரைத்தலே யன்றித் தம்முள்தாம் கூறுதலும் உரியரென்று கொள்க.*

**"மதவலியானை.........திருநுதற் பசப்பே" (அகம். 354)**

*எனவும்,*

**"கண்டிசின்.......புறங்கவ வினளே" (குறுந். 359)**

*எனவும்,*

**"யாயகியளே........கரப்பா டும்மே" (குறுந். 9)**

*எனவும்,*

---

1. அகம்புகல் மரபின் வாயில்களாவார் பாணர் கூத்தர் முதலியோர். இவர்கள் தலைமகனை எக்காலத்தும் அகலாது நின்று தலைவியின் பிணக்கத்தைத்தீர்க்கும் வாயில்களாக மனைக்கண் பலகாலும் வந்து பழகும் இயல்பினராதலின் 'அகம்புகல் மரபின் வாயில்' என வழங்கப் பெற்றனர்.

இந்நூற்பாவில் மனைக்கிழத்திக்குரிய மாண்புகள் பலவும் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளமை காணலாம்.

**"முளிதயிர்..........முகனே"** **(குறுந். 197)**

*எனவும்,*

**"கானக்கோழி........செம்மல் தேரே"** **(குறுந். 242)**

*எனவும்,*

**"பிரசங்கலந்த........சிறுமது கையளே"** **(நற்றிணை 110)**

*எனவும்.*

**"பாணர்முல்லை......புதல்வனோடு பொலிந்தே"**
**(ஐங்குறு. 478)**

*எனவும் வரும்.*

*இவையெல்லாம் வாயில்கள் தம்முட் கூறின தலைவற்குக் கூறின வந்தவழிக் காண்க.* *(20)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, விருந்து முதலிய வாயில்கள் போலாது அகநகர்க்கட் புகுதற்குரிய வாயில்கள்* [1] *கூற்று உணர்த்துகின்றது.*

*(இ—ள்.) கற்பும்—கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கமும்: காமமும்-அன்பும்; நற்பால் ஒழுக்கமும் -எவ்வாற்றானுந் தங் குலத்திற்கு ஏற்றலாற்றான் ஒழுகும் ஒழுக்கமும்; மெல் இயற் பொறையும்-வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் அவனைப்போலாது ஒருதலையாக மெல்லென்ற நெஞ்சினராய்ப் பொறுக்கும் பொறையும்; நிறையும்-மறை புலப்படாமை நிறுக்கும் நெஞ்சுடைமையும்;* [2] *வல்லிதின்* [3] *விருந்து புறந்தருதலும்- வறுமையுஞ் செல்வமுங் குறியாது வல்லவாற்றான் விருந்தினரைப் பாதுகாத்து அவர் மனமகிழ்வித்தலும்; சுற்றம் ஓம்பலும்-கொண்டோன்*[4]

1. அகநகர்க்கட்புகுதற்குரிய வாயில்களாவார், விருந்து முதலிய வாயில்கள் போன்று ஏதோ ஒருசில காலத்தில் தலைவனது மனைக்கண் புகுதலன்றித் தலைவனது சுற்றத்தாரைப் போன்று அவனது மனையகத்து அடிக்கடி சென்று பழகும் இயல்பினராகிய வாயில்கள்.

2. "நிறையெனப்படுவது மறைபிற ரறியாமை" (கலி—) என வரும் தொடர்ப் பொருளையுளங்கொண்டு இவ்வுரை வரையப்பெற்றுள்ளமை காண்க.

3. வல்லிதன்—தான் விருந்தோம்புதலிற் பயின்று வல்ல திறத்தால்; இணையான்குடி மாறநாயனார் மனைவியார் தாம் பயின்றுவல்ல கைத்திறத்தால் அடியார்க்கு அடிசில் சமைத்த திறம் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

4. கொண்டோன்—கணவன்'

*புரக்கும் நண்புடை மாந்தருஞ் சுற்றத் தாருங் குஞ்சர முதலிய காலேசங்களும்*[1] *பல படை மாக்களும் உள்ளிட்ட சுற்றங்களைப் பாதுகாத்து அவை உண்டபின் உண்டலும்; அன்னபிறவுங் கிழவோள் மாண்புகள் - அவைபோல்வன பிறவுமாகிய தலைவியுடைய மாட்சிமைகளை; முகம்புகல் முறைமையிற் கிழவோற்கு உரைத்தல்- அவன் முகம்புகுதும் முறைமை*[2] *காரணத்தால் தலைவற்குக் கூறுதல்; அகம்புகல் மரபின் வாயில் கட்குஉரிய அகநகர்க்கட் புகுந்து பழகி அறிதன் முறைமையினை யுடைய வாயில்களுக்குரிய, என்றவாறு.*

*அன்னபிறவான, அடிசிற்றொழிலுங், குடிநீர்மைக் கேற்ற வகையான் தலைமகள் ஒழிந்த தலைமகளிரையும் மனமகிழ் வுறுத்தலுங், காமக்கிழத்தியர் நண்புசெய்து நன்கு மதிக்கப் படுதலும், போல்வன. புகலுதல் - மகிழ்தல். செவிலி கூறாமை கொள்க, அவட்கு முகம்புகல் முறைமையின்மையின்.*[3]

**"கடல்பா டவிந்து தோணி நீங்கி"** **(அகம் 50)**

*இதனுட் காமமிகுதியாற் கண் தாமே அழவுங் கற்பிற் கரக்கு மெனத் தலைவி பொறையும் நிறையுந் தோழி பாணற்குக் கூறினாள், அவன் தலைவற்கு இவ்வாறே கூறுவனெனக் கருதி. 'இனி' என்றதனாற் கற்பும் பெற்றாம்.*

*தலைவற்குக் கூறுவன வந்துழிக் காண்க.*

**'வாயி லுசாவே தம்முளு முரிய'** **(தொல். பொ. 512)**

*என்பதனால் தலைவற்கு உரையாமல் தம்முட் டாமே உசாவுவனவும் ஈண்டே கொள்க.*

---

1. குஞ்சரம்—யானை, காலேசங்கள்—ஊர்திகள்.

2. முகம்புகுதும் முறைமையாவது, தலைவனது முகம்நோக்கி அவன் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வண்ணம் அவனது முன்னிலையிற் சென்று கூறும் பழக்கமுடைமை.

3. அகம்புகல் மரபின் வாயில்களுள் செவிலியும் அடங்குவாளாயினும், தலைவனது முன்னிலைக்கட் சென்று உரையாடுதல் அவட்கு இயல்பன்மையாலும் தன்னால் வளர்க்கப் பெற்ற தலைவியின் நற்பண்புகளைத் தானே கூறுதல் தற்புகழ்ச்சியாமாதலானும் 'செவிலிகூறாமை கொள்க' என்றார் நச்சினார்க்கினியர்.

**"அணிநிற வெருமை யாடிய அள்ளல்**
**மணிநிற நெய்தல் ஆம்பலொடு கலிக்குங்**
**கழனி யூரன் மகளிவள்**
**பழன வூரன் பாயலின் றுணையே." (ஐங்குறு. 96)**

*இது, கற்புக் கூறியது.*

**"முளிதயிர் பிசைந்த" (குறுந். 167)**

*என்பது அடிசிற் றொழிலின்கண் மகிழ்ச்சி வாயில்கள் தம்முட் கூறியது.*

**"கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ**
**பழைமை பயனோக்கிக் கொல்லோ—கிழமை**
**குடிநாய்கள் தாம்பல பெற்றாருட் கேளா**
**அடி நாயேன் பெற்ற வருள்." (திணை, நூற். 134)**

*பல வாயில்களை மறுத்த தலைவி தனக்கு வாயில் நேர்ந்தமை தோழிக்கு விறலி கூறியது. (11)*

***ஆய்வுரை :*** *இது, தலைவனது மனைக்கண் வந்து பழகும் முறைமையினையுடைய பாணர் முதலிய வாயில்கள் உரையாடு தற்குரிய பொருள் வகையினைத் தொகுத்துரைக்கின்றது.*

*(இ-ள்) கணவனே தன் ஆருயிர்த்தலைவன் என்னும் உறுதியிற் கலங்காநிலைமையாகிய கற்பென்னுந்திண்மையும், தலைவன் பால் மாறாத வேட்கையும், நன்றின்பால் உய்க்கும் ஒழுக்கமும் அன்பென்னும் ஈரமுடைமையாகிய மென்மைத் தன்மையால் அறியாமையாற் பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுதலும் மறைபுறப்படாமையடக்கி நிறுத்தும் நிறையுடைமையும் தான் கற்றுவல்ல அட்டிற் றொழில் வன்மையால் செல்வம் நல்குர வாகிய எந்நிலையிலும் விருந்தினரைப் பேணுதலும், சுற்றத்தாரைத் துயர்துடைத்துப் பாதுகாத்தலும் பிறவும் அத்தன்மையவாகிய தலைவியின் நற்குண நற்செயல்களை முகம் விரும்பிக்கேட்கும் முறையில் தலைவனுக்கு எடுத்துக்கூறும் கூற்றுக்கள் மனைக்கண் பலகாலும் வந்து பழகும் முறைமையினையுடைய பாணர் முதலிய வாயில்கட்கு உரியன. எ—று.*

12. **கழிவினும் நிகழ்வினும்[1] எதிர்வினும் வழிகொள**
**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
**செவிலிக் குரிய வாகும் என்ப.**

**இளம்பூரணம் :** *என்—எனின். செவிலிக்குரிய கூற்று வருமாறுணர்த்திற்று.*

*(இ - ள்.) இறந்த காலத்தினும் நிகழ்காலத்தினும் எதிர் காலத்தினும் தன்குலத்தினுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலுஞ் செவிலிக்கு உரித்து என்றவாறு.*

*இறந்தகால முதலியவற்றாற் கூறுதலாவது முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார் இவ்வாறு செய்து தீமை பெற்றார் எனவும், இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன்பெறா நின்றாரெனவும், இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர் எனவுங் கூறுதல்.*

*அவை, அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும் : அவையாவன. தலைமகன்மாட்டும் உலகத்தார்மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல்.*

*அவை மனையாளைப் பற்றி வருதலிற் காம தந்திரத்துட் பாரியாதிகாரமெனக் கூறப்பட்டன. அறம்பற்றி வருதல் திரு வள்ளுவப்பயன் முதலிய சான்றோர் செய்யுட்களுள் அறப்பகுதியிற் கூறப்பட்டன.*

*உ-ம் வருமாறு :*

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"** **(குறள் 56)**

*எனவும்,*

**"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை"** **(குறள். 55)**

*எனவும்,*

---

1. கழிவு – இறந்தகாலம், நிகழ்வு – நிகழ்காலம். எதிர்வு—எதிர் காலம்.

**"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள். 51)**

*எனவும்,*

**"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்**
**உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி**
**இடனறிந் தூடி இனிதின் உணரும்**
**மடமொழி மாதராள் பெண்." (நாலடி 384)**

*இதனுள், "கட்கினியாள்" என்றதனான் கோலஞ்செய்தல் வேண்டு மெனக் கூறியவாறாம்; எனவும்*

**"அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்**
**படிசொற் பழிநாணு வாளை--அடிவருடிப்**
**பின்துஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்**
**என்துஞ்சுங் கண்கள் எனக்கு"**

*எனவும் வரும். இவை நல்லவை யுரைத்தல்.*

**"எறியென் றெதிர் நிற்பாள் கூற்றம் சிறுகாலை**
**அட்டில் புகாதாள் அரும்பிணி--அட்டதனை**
**உண்டி உதவாதாள் இல்வாழ்பேய், இம்மூவர்**
**கொண்டானைக் கொல்லும் படை" (நாலடி. 363)**

*எனவும்,*

**"தலைமகனிற் றீர்ந்தொழுகல் தான்பிறர்இல் சேறல்**
**நிலைமையில்தீப் பெண்டிரில் சார்தல்---கலனணிந்து**
**வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்**
**கோற்றொடியார் கோள்அழியும் ஆறு" (அறநெறிச். 94)**

*எனவும் வரும். இந்நிகரன அல்லவை கடிதலாம்.*

*பிறவும் அன்ன.*

***நச்சினார்க்கினியம்*** *இது, செவிலிகூற்று உணர்த்துகின்றது.*

*(இ-ள்.) கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள மூன்று காலத்துந் தத்தங் குலத்திற்கு ஏற்கும்படியாக;*

*நல்லவை உரைத்தலும் - முற்கூறிய கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும்; அல்லவை கடிதலும் - காமநுகர்ந்த இன்பமாகிய கற்பிற்குத் தீயவற்றைக் கடிதலும்; செவிலிக்கு உரிய ஆகும் என்ப - செவிலித்தாய்க்கு உரியவாகுமென்று கூறுவர் புலவர் ( எ- று.)*

**"கட்கினியாள்............பெண்."** **(நாலடி. 384)**

*கட்கினியாள், இது காமம்; வகைபுனைவாள், இது கற்பு; உட்குடையாள், இஃது ஒழுக்கம் ஊராண்மை, இது சுற்றமோம்பல்: ஊடியுணர்தல், அல்லவை கடிதல்.*

**"நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும்**
**மேலாறும் மேலுறை சோரினும்—மேலாய**
**வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்**
**இல்லாள் அமர்ந்ததே யில்"** **(நாலடி 383)**

*என்னும் வெண்பா விருந்துபுறந்தருதல் கூறியதுமாம்.*

*இனி 'ஆகு' மென்றதனானே செவிலி நற்றாய்க்கு உவந் துரைப்பனவுங் கொள்க.*

*'கானந்தோழி' (குறுந்தொகை 242), 'மறியிடைப்படுத்த' (ஐங்குறு 401), 'வாணுதலரிவை' (ஐங்குறு 494) இவை உவந்து கூறியன.*

**"பிரசங்கலந்த"** **(நற்றிணை. 110)**

*இது மனையறங் கண்டு மருண்டு உவந்து கூறியது.*

*'அடிசிற்கினியாளை' என்னும் பாட்டுச் செவிலிகூற்றன்றாயினுந் தலைவன் மனையறங் கண்டு கூறியதன் பாற்படுமெனக் கொள்க.*[1]

***(12)***

1. 'அடிசிற்கினியாளை' எனவரும் இவ்வெண்பா, திருவள்ளுவர் தம் மனைவி வாசுகியைக் குறித்துப் பாடிய கையறு நிலைச்செய்யுளாக வழங்கப் பெற்று வருதலால். "செவிலிகூற்றன்றாயினும் தலைவன் மனையறங் கண்டு கூறியதன் பாற்படு மெனக கொள்க' என்றார் நச்சினார்க்கினியர்.

**ஆய்வுரை :** இது, செவிலி கூற்றில் அமைதற்குரிய பொருள் வகையினைப் பகுத்துரைக்கின்றது.

(இ-ள்) இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலத்தும் உரிய செயல்களாக வழிவழியே தொடர்ந்து மேற்கொள்ளும் வண்ணம் நற்பொருள்களை (தலைவிக்கு) எடுத்துரைத்தலும், நன்மையல்லாத தீமை விளைப் பனவற்றைக் கடிந்துரைத்தலும் செவிலித்தாய்க்கு உரியன என்பர் எ—று

தலைவி முதலியோரைத் தீதகற்றி நன்றின்பா லொழுகும் நல்லறிவினராக நல்லுரைபகர்ந்து வளர்த்தல் செவிலிக்குரிய கடமையாதல் இதனாற் புலப்படுத்தியவாறு காணலாம்.

## 13. சொல்லிய கிளவி அறிவர்க்கும்[1] உரிய.

**இளம்பூரணம் :** என் - எனின். அறிவர் கூற்று நிகழுமா றுணர்த்திற்று.

(இ-ள்.) மேற் செவிலிக்குரித்தாகச் சொல்லப்பட்டகிளவி அறிவர்க்கும் உரிய என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டன. (13)

**நச்சினார்க்கினியம் :** இஃது அறிவரது கூற்றுக் கூறுகின்றது

(இ-ள்.) முற்கூறிய நல்லவை யுணர்த்தலும் அல்லவை கடிதலுமாகிய கிளவி செவிலிக்கேயன்றி அறிவர்க்கு முரிய (எ—று)

என்றது, அறியாத தலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொரு ளின்பங்களாற் கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக் காட்டுவரென்பதாம்[2].

**"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை"** (குறள். 55)

---

1. அறிவர் எனப்படுவார், முக்காலத்தியல்புகளையும் நன்குணர்ந்து மக்களைத் தீதகற்றி நன்றின்பா லுய்க்கும் அறிவும் ஒழுக்கமும் வாயந்த சான்றோராவர்.

2. கற்பனகற்றுக்கடிவன கடிந்தொழுகும் நற்பண்பினராகிய அறிவர், அறம் பொருள் இன்பங்களாகிய உறுதிப் பொருள் பற்றி முன்னோர் கூறிய செய்யுட்களை எடுத்துக் கூறி நல்லவையுணர்த்தி அல்லவை கடிவர் என்பது கருத்து.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள். 56)

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள். 51)

*இவை நல்லவை யுணர்த்தல்.*

"எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி யுதவா தாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை" (நாலடி. 363)

"தலைமகனின் தீர்ந்தொழுகல் தான்பிறரில் சேறல்
நிலைமையில் தீப்பெண்டிர்ச் சார்தல்—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு." (அறநெறி. 94)

*இவை அல்லவை கடிதல், இவை அறிவர் கூற்றாதலின் புறப்புறப் பொருளாயிற்றென உணர்ந்துகொள்க.*[1] *(13),*

**ஆய்வுரை :** *இஃது அறிவர்க்குரிய கிளவி கூறுகின்றது.*

*(இ-ள்.) மேற்கூறிய நல்லவையுரைத்தலும் அல்லவை கடிதலும் ஆகிய கூற்றுக்கள் செவிலிக்கேயன்றி அறிவர்க்கும் உரியன எ - று*

*அறிவர்க்கும் என்புழி உம்மை, இறந்ததுதழீ இயஎச்சவும்மை.*

**14. இடித்துவரை நிறுத்தலும்[2] அவர தாகுங்
கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்.**

1. புறப்புறப்பொருள்களாவன, அறம்பொருளின்பங்களின் கூறுபாடு தோன்ற நல்லவையுரைத்தலும் அல்லவை கடிதலும் ஆகிய அகவாழ்வுக்கு இன்றியமையாத குறிப்புடன் முன்னுள்ள சான்றோர் பாடிய செய்யுட்கள். இவற்றை 'முன்னோர் கூறிய குறிப்பினும்' (தொல் – புறத் –22) என்ற தொடரில் தொல்காப்பியனார் குறிப்பிடுவர். இச்செய்யுட்கள் புறத்திணை யொழுகலாற்றினைக்குறியாமல், ஒருவனும் ஒருத்தியும் மனையின்கண் இருந்து வையத்து வாழ்வாங்கு வாழும் கற்பிய லொழுக்கமாகிய அகத்திணைக்கு அரண்செய்யும் நோக்குடன் தலைவன் தலைவி இருவரையும் நல்லவையுரைத்து அல்லவை கடிந்து நன்னெறிப்படுத்தும் அறிவர் கூற்றாகவும் உலக வாழ்க்கையில் மனையறத்தார்க்கு மட்டுமின்றி மற்றையோர்க்கும் பயன்தரும் அறவுரைகளைத் தன்பாற் கொண்ட அறநூற் செய்யுட்களாகவும் புறத்திற்கும் புறமாய் அமைந்தமையின் 'இவை அறிவர்கூற்றாதலிற் புறப்புறப் பொருளா யிற்றென வுணர்ந்து கொள்க' என்றார் நச்சினார்க்கினியர்.

2. இடித்து வரை நிறுத்தல் – தீமை கண்டவிடத்து இடித்துக்கூறி அறநெறியாகிய எல்லைக்குள் அடங்கி ஒழுகும்படி செலுத்துதல். அவரது—அவர்க்குரியது.

**இளம்பூரணம் :** என் - எனின். அறிவர்க்குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) கழறிய எல்லையின்கண்ணே நிறுததலும் அறிவர்க்குரிய ; தலைவனும் தலைவியும் அவர் ஏவல்வழி நிற்றலின் என்றவாறு.

**"உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயும்"**

**(குறுந். 295)**

இது தலைமகற்குக் கூறியது.

**"துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை"** **(அகம். 316)**

இது தலைவிக் குரைத்தது.

**நச்சினார்க்கினியம் :** இஃது அறிவர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்.) கிழவனுங் கிழத்தியும் அவர்வரை[1] நிற்றலின்— தலைவனுந் தலைவியும் அவ்வறிவரது ஏவலைச்செய்து நிற்பராதலின் : இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும் - அவரைக் கழறி ஒரெல்லையிலே நிறுத்தலும் அவ்வறிவரது தொழிலாகும் (எ - று.)

அஃது, உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைவிமாட்டு ஊடினானையும் உணர்ப்புவயின் வாராது ஊடினாளையுங் கழறுப.

**"உடுத்துந் தொடுத்தும்"** **(குறுந். 295)**

இது, தலைவனைக் கழறியது.

**"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**யெனைமாட்சித் தாயினு மில்."** **(குறள். 52)**

இது, தலைவியைக் கழறியது. (14)

**ஆய்வுரை :** இஃது அறிவர்க்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ—ள்) தலைவனும் தலைவியும் அவ்வறிவர் ஏவல்வழி அடங்கி யொழுகுதற்குரியராதலின், அவ்விருவர்பாலும் தவறு

---

1. அவர்வரை—அறிவராகிய அவர் வகுத்த வாழ்க்கை வரம்பாகிய எல்லை.

*கண்டுழி அவர்களை இடித்துக்கூறி வாழ்க்கை வரம்பாகிய எல்லையிலே அடங்கியொழுகச் செய்தலும் அவ்வறிவர்க்குரிய கடமையாகும். எ-று.*

*கிழவனும் கிழத்தியும் அவர்வரைநிற்றலின் இடித்து வரைநிறுத்தலும் அவரதாகும் என இயையும். அவர் என்னுஞ்சுட்டு மேலைச்சூத்திரத்தில் நின்றஅறிவரைச் சுட்டி நின்றது, இடித்தல் - தவறுகண்டவிடத்துக்கண்டித்தல். வரைநிறுத்தலாவது வாழ்க்கை வரம்பாகிய எல்லையில் நின்றொழுகச் செய்தல்.*

**15. உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும் புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய.**

***இளம்பூரணம் :*** *என்-எனின். தலைமகன் புலக்குமிடம் கூறுதல் நுதலிற்று.*

*(இ-ள்.) புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கது.*[1] *பொருள் சூத்திரத்தான் விளங்கும்.*

**"எவ்வி இழந்த வறுமையர் பாணர்**
**பூவில் வறுந்தலை போலப் புல்லென்**
**றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்**
**தெல்லுறு மௌவல் நாறும்**
**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே"** **(குறுந். 19)**

*எனவரும்.* *(15)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, தலைவற்குப் புலவியும் ஊடலும் நிகழுமிடங் கூறுகின்றது.*

*(இ-ள்.) உணர்ப்புவரை இறப்பினும்*[2] *- கற்பிடத்துத் தலைவி ஊடியவழி அவன் தேற்றத் தேறுமெல்லை இகந்தனளாயினும்; செய்குறி பிழைப்பினும்*[3] *- களவின்கட் டலைவிசெய்த குறியைத்*

1. சிறிது நேரம் நிகழும் பிணக்கு புலவி எனவும், காலம் நீட்டித்து நிகழும் பிணக்கு ஊடல் எனவும் பெயர்பெறும்.

2. 'உணர்ப்புவரை' யாவது, தலைவன் தன்பாற் குற்றமின்மை யுணர்த்தித் தெளிவிக்கத் தலைவி ஊடல் தணியும் எல்லை. இறத்தல்—கடத்தல்; வரம்புமீறுதல்.

3. செய்குறிபிழைத்தலாவது, களவொழுக்கத்தில் தலைவி செய்த குறியினைத் தலைவி – தவறியொழுகுதல். புலத்தல்—உள்ளத்திற் பிணக்கம் தோன்றிச் சிறிது வேறுபடுதல், ஊடல் — அவ்வேறுபாடு மிகுந்து நெடிது நிலைத்தல்.

*தானே தப்பினும்; புலத்தலும் ஊடலுங் கிழவோற்கு உரிய - உள்ளஞ் சிறிது வேறுபடுதலும் அவ் வேறுபாடு மிக்கு நீடுநின்று தேற்றியக்கால் அது நீங்குதலுந் தலைவற்குரிய (எ - று).*

*எனவே, கற்பிற்கும் புலத்தலும் ஊடலும் உரிய, களவிற்கும் புலத்தலும் ஊடலுமுரிய வென்றார். புலவியும் ஊடலுங் கற்பிற்கே பெரும்பான்மை நிகழ்தலிற் கற்பிற்கும் அவை உரியவென்கின்றார், அவை களவிற்குஞ் சிறுபான்மை உரிமைபற்றிச் சேரக் கூறினார், சூத்திரச் சுருக்கம் நோக்கி.*

**"எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்."** (குறுந். 19)

*இது கற்பிற் புலந்தது.*

**"தீதிலேம் என்று தெளிப்பவுங் கைந்நீவி**
**யாதொன்று மெங்கண் மறுத்தரவு இல்லாயின்"** (கலி. 81)

*என்பது ஊடல். பிற இடத்தும் ஊடுதல் அறிந்துகொள்க.*

**"கலந்தநோய் கைம்மிகக் கண்படா என்வயின்**
**புலந்தாயும் நீயாயிற் பொய்யானே வெல்குவை"** (கலி. 46)

*என்பது குறிபிழைத்துழிப் புலந்தது.*

**"குணகடற் றிரையது பறைதபு நாரை"** (குறுந். 128)

*என்பதனுள் நாரை தெய்வங் காக்கும் அயிரை இரையை வேட்டாற்போல் நமக்கரியளாயினாளை நீ வேட்டா யென்பதனாற் குறி பிழைத்துழி ஊடினமை கூறிற்று. பிறவும் இவ்வாறு வருவன உய்த்துணர்ந்து கொள்க.* *(15)*

***ஆய்வுரை :*** இது, *தலைமகனுக்குரியதோர் இயல் புணர்த்துகின்றது.*

*(இ - ள்) தலைவன் தன் தவறின்மையை உணர்த்தத் தலைவி உணர்ந்து ஊடல் நீங்கும் எல்லையினைக் கடந்த நிலையினும். களவின்கண் தலைவி தான் செய்த குறியைத் தப்பிய நிலையினும் மனம் வேறுபட்டுப்பிணங்குதலும் அப்பிணக்கம் நீடித்தலும் தலைவனுக்கு உரியன எ—று.*

**புலவி—சிறிது பொழுது நிற்கும் பிணக்கம்.**
**ஊடல் - நெடும்பொழுது நீடித்துளதாம் பிணக்கம்.**
**'உணர்ப்புவயின்வாரா ஊடல் தோன்றின்**
**புலததல் தானே கிழவற்கும் வரையார்' (இறையனார்—50)**

*எனவரும் இறையனார் களவியல் நூற்பா இத்தொல்காப்பியச் சூத்திரத்தினை அடியொற்றியமைந்ததாகும்.*

**16. புலத்தலு மூடலு மாகிய விடத்துஞ்**
**சொலத்தகு கிளவி தோழிக் குரிய.**

***இளம்பூரணம் :*** *இது தோழிக்குரிய மரபுணர்த்திற்று.*[1]

**"அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் காமம்**
**புலந்தாரைப் புல்லா விடல்" (குறள். 1303)**

*இது கற்பு.*

**"கலந்தநோய் கைமிகக் கண்படா வெம்வயிற்**
**புலந்தாயு நீயாகிப் பொய்யானே வெல்குவை,**
**யிலங்குதா ழருவியோ டணிகொண்ட நின்மலைச்**
**சிலம்பு போற் கூறுவ கூறு**
**மிலங்கே ரெல்வளை யிவளுடை நோயே".**
**இது களவு. (கலித். 16)**

***நச்சினார்க்கினியம் :*** *இது, முன்னர்த், தலைவன் புலக்குமென்றார், அவ்விடத்துந் தோழியே கூற்றுநிகழ்த்துதற்கு உரியளென்கிறது.*

*(இ - ள்.) புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் - தலைவன் தலைவியையுந் தோழியையும் அச்சுறுத்தற்குச் செய்கையாகச் செய்துகொண்டு புலத்தலும் அதுநீட்டித்து ஊடலும் உடன் நிகழ்த்தியவழியும் ; சொலத்தகு கிளவி தோழிக்கு உரிய - சொல்லத் தகும் பணிமொழி*[2] *தோழிக்கு உரிய (எ - று).*

---

1. தலைவன்பால் புலத்தலும் ஊடலும் தோன்றியநிலைமைக்கண் தலைவனுக்கும் தலைவிக்கும் கூறவேண்டிய அறிவுரைகளைக் கூறி அப்பிணக்கினைத் தணிவித்தல் தோழியின் கடமையாகும்.

2. சொலத்தகும் பணிமொழியாவது தலைவன்கண் தோன்றிய புலத்தலையும் ஊடலையும் அறவேமாற்றும் முறையில் அன்பினாற் சொல்லத்தகும் பணிமொழி,

*எனவே தலைவி குறிப்பறிந்து தோழி கூறுதலன்றித் தலைவி தானே கூறப்பெறாளென்றவாறு. எனவே பாடாண்டிணைக் கைக் கிளையாயின் தலைவி கூறவும்பெறுமென்று கொள்க.[1] உம்மை சிறப்பும்மை.*

**"தாயுயிர் வேண்டாக் கூருகி ரலவன்**
**நரிதின்று பரிக்கும் ஊர யாவதும்**
**அன்புமுதல் உறுத்த காதல்**
**இன்றெவன் பெற்றனை பைந்தொடி திறத்தே"**
**"அலந்தாரை"** **(குறள். 1303)**

*என வரும்.*

*இவை கற்பில் தலைவி குறிப்பினால் தோழி கூற்று வந்தன.*

**"புலந்தாயு நீயாயிற் பொய்யானே வெல்குவை" (கலி. 46)**

*என்று களவில் தோழி கூறினாள் தலைவி குறிப்பினால்.*

**"கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக் குறிபெறாஅன்**
**புனையிழாய் என்பழி நினக்குரைக்குந் தானென்ப**
**துளிநசைஇ வேட்கையான் மிசைபாடும் புள்ளில்தன்**
**அளிநசை ஆர்வுற்ற அன்பினேன் யானாக" (கலி. 46)**

*எனத் தோழி சொல்லெடுப்பதற்குத் தலைவி சிறுபான்மை கூறுதலும் ஈண்டு உரியவென்பதனாற் கொள்க.*

**"யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்**
**தானூட யானுணர்த்தத் தானுணரான்---தேனூறுங்**
**கொய்தார் வழுதிக் குளிர்சாந் தணியகலம்**
**எய்தா திராக்கழிந்த வாறு." (முத்தொள்ளாயிரம், 104)**

*இதனுள் யானுணர்த்தத் தானுணரானெனப் பாடாண் திணைக் கைக்கிளையுள் தலைவி கூறியது காண்க. (16)*

***ஆய்வுரை :*** இது தோழிக்குரியதோ ரியல்பு கூறுகின்றது.

1. "பாடாண் திணைக் கைக்கிளையாவது, ஒருத்து ஒத்த அன்பினாற் காமமுறாத வழியும் குணச்சிறப்பின்றித் தானே காமமுற்றுக் கூறவது" (தொல்--புறத்--28) என்பர் நச்சினார்க்கினியர்.

*(இ - ள்) தலைவன் தலைவி என்னும் இருவரிடையே புலவியும் ஊடலும் ஆகிய பிணக்கங்கள் தோன்றிய நிலையிலும் அவற்றைத் தணிக்கும் வண்ணம் சொல்லுதற்குரிய கூற்றுக்கள் தோழிக்கு உரியனவாம் என்றவாறு.*

*தலைவன் புலத்தலும் அது நீட்டித்த நிலையில் ஊடலும் கொண்ட நிலையில் தலைவி உரையாடுதல் இல்லையென்பதும், தலைவியின் குறிப்பறிந்து தோழியே உரையாடுதற்கு உரியள் என்பதும் இந்நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாகும்.*

**17. பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிழவி**
**மடத்தகு கிழமை உடைமை யானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள்.**

***இளம்பூரணம் :*** *இதுவும் தோழிக்கு உரியதோர் இயல்பு உணர்த்திற்று.*

*இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும்*[1]

**“மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூழ் இளமுலை**
**முகிழ்செய முள்கிய தொடர்பவள் உண்கண்**
**அவிழ்பனி உறைப்பவும் நல்காது விடுவாய்**
**இமிழ்திரைக் கொண்க கொடியை காண்நீ;**

**இலங்கேர் எல்வளை ஏர்தழை தைஇ**
**நலஞ்செய நல்கிய தொடர்பவள் சாஅய்ப்**
**புலந்தழப் புல்லாது விடுவாய்**
**இலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காண்நீ.”** **(கலித். 125)**

*என வரும்.* *(17)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, சொல்லத்தகுங் கிளவியே யன்றிச் சொல்லத்தகாக் கிளவியுந் தோழி கூறுமென எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துகின்றது.*

---

1. தலைவனது பரத்தமைக்குற்றத்தை மறுத்து நீக்குதல் வேண்டியும் தலைவி அதனை நீக்குமாறு அறியாத மடம்பட்ட அறிவின் கிழமையுடையளாதல் கருதியும், “நீ தலைமகள்பால் அன்புடையாயல்லை; அவட்குக்கொடுமையே புரிகின்றாய்” எனத் தோழி தலைவன் முன்னின்று இடித்துரைத்தற்கும் உரியள் என்பதாம்.

*(இ - ள்.) பரத்தைமை மறுத்தல் வேண்டியும் - தலைவன் படிற்றுள்ளத்தாற் புறத்து ஒழுகும் ஒழுக்கத்தைப் போக்குதல் விரும்பியும்; கிழத்தி மடத்தகு கிழமை உடைமையானும்— தலைவி அவன் பரத்தைமை அறிந்தேயும் அவன் கூறியவற்றை மெய்யெனக் கொண்டு சீற்றங்கொள்ளாது ஒழுகும் மடனென்னுங் குணத்திற்கு ஏற்றன அறிந்தொழுகும் உரிமையுடையளாகிய எண்மையானும்: அன்பிலை கொடியை என்றலும் உரியள்— தலைவனை அன்பிலை யென்றலுங் கொடியை யென்றலுமுரியள் தோழி (எ - று.)*

*கொடுமை கடையாயினார் குணம். களவினுள் தன் வயினுரிமையும் அவன்வயிற் பரத்தைமையுங் கோடலின் இதற்குப் பரத்தைமை மறுத்தல் கொள்க.*

**"கண்டவ ரில்லென உலகத்துள் உணராதார்" (கலி. 125)**

*என்னும் நெய்தற்கலி கைகோள் இரண்டிற்குங் கொள்க. (17)*

***ஆய்வுரை :*** *இதுவும் அது.*

*(இ—ள்.) பரத்தையரை விரும்பியொழுகும் தலைவனது புறத்தொழுக்கத்தை நீக்குதல் கருதியும், தலைவி மடனென்னும் குணத்தால் அடங்கியொழுகும் எளிமையுடையளாதல் கருதியும் தலைவனை 'அன்பிலைகொடியை' எனத் தோழி இடித்துரைத்தற்கும் உரியள் எ—று.*

*'பரத்தை' என்றது, பரத்தையரைச் சேர்ந்தொழுகலாகிய புறத்தொழுக்கத்தைச் சுட்டி நின்றது 'பரத்தமை' எனப் பாடங் கொண்டார் நச்சினார்க்கினியர். மறுத்தல் — தீதெனவிலக்குதல் மடத்தகு கிழமையாவது, தலைவனது குற்றத்தினையறிந்தும் அறியாள் போன்று ஒழுகுதலாகிய மடன் என்னுங் குணத்தினைத் தனக்குரிய இயல்பாகக்கொண்டிருத்தல்.*

*"அன்பிலையை கொடியை" என்றல் தோழியாற் சொல்லத் தகாத கிளவியாயினும். தலைவனது பரத்தமையொழுக்கத்தை இடித்துரைத்துத் தவிர்த்தல் காரணமாகவும், அவனது குற்றத்தை நேரில் அறிந்தும் வெகுண்டு விலக்க முடியாத மடமைக்குணத்தினள் தலைவியாதலானும் இங்ஙனம் கடுஞ்சொற்கூறித் தலைவனைத் திருத்துவதற்கு உரியாள் தோழி என்றார் ஆசிரியர்.*

**18. அவன்குறிப் பறிதல் வேண்டியுள் கிழவி**
**அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.**

***இளம்பூரணம் :*** *இது தலைவிக் குரியதொரு மரபுணர்த் திற்று.*

*(இ-ள்.) தலைவன் குறிப்பறிதல்வேண்டியுந் தலைவி தனது அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தினும் வேற்றுமைக்கிளவி[1] தோற்றவும் பெறும் என்றவாறு.*

**"யாரிவன் என் கூந்தல் கொள்வான்" (கலித். 89)**

*எனவும்,*

**"யாரையோ எம்மில் புகுதருவாய்" (கலித் 68)**

*எனவும் கூறியவாறு காண்க. (18)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, தலைவிக்கு ஆவதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.*

*(இ-ள்.) அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் - தோழி அன்பிலை கொடியையெனக் கேட்ட தலைவன் முனிந்த உள்ளத்தனாங்கொல்லோவென ஐயுற்று அவனது குறிப்பை அறிதல் வேண்டியும்; அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்[2] - தனது நெஞ்சில் நிறைந்துநின்ற ஊடல் கையிகந்து துனியாகிய வழி இஃது அவற்கு எவனாங்கொல்லென அஞ்சிய வழியும் ; கிழவி வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறும் - தலைவி தலைவனொடு அயன்மையுடைய சொல்லைத் தோற்றுவிக்கவும் பெறும் (எ-று.)*

**"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்**
**இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்**

1. வேற்றுமைக்கிளவி என்பது, ஒத்த அன்பினால் உள்ளம் ஒன்றி ஒருமை யுணர்வினராய் வாழும் காதலர் இருவரிடையே ஒருவர் ஒருவரின் வேறுபட்டுள்ளார் நமக்கு உறவினரல்லர் என்னும் வேற்றுமையுணர்வினைத் தோற்றுவிக்கும் நிலையில் அமைந்த சொல்லாகும்.

2. ஊடல்–அகற்சி – ஊடல் எல்லை கடந்து துனியாகவிரிவடைதல்,

**கன்னையும் அத்தனும் அல்லரோ**
**புலவிய தெவனோ அன்பிலங் கடையே.”** **(குறுந். 93)**

*இதனுள் அவரை அன்பிலை கொடியையென்னாதி, அன்பில் வழி நின்புலவி அவரை என்செய்யும் அவர் நமக்கு இன்றியமையாத எமரல்லரோவென இருவகையானும் அயன்மை கூறியவாறு காண்க.* *(18)*

***ஆய்வுரை :*** இது, தலைவிக்குரியதோர் இயல்பு கூறுகின்றது.

*(இ-ள்.) தலைவனது உள்ளக் குறிப்பினை அறிந்து கொள்ளுதலைவிரும்பியவிடத்தும் தனது நெஞ்சம் அன்பினால் ஊடல் நீங்குமிடத்தும் உறவின்மையைப் புலப்படுத்துஞ்சொல் தலைமகள் பால் தோற்றவும் பெறும எ-று.*

*அகம்மலி ஊடல் அகற்சி – தன்மனத்தேயுண்டாகிய மகிழ்ச்சி காரணமாக ஊடல் அகலுதல். அகலுதல் — நீங்குதல்.*

*வேற்றுமைக்கிளவியாவது. ஒன்றிய கேண்மையினரா யொழுகும் காதலர் இருவரிடையே இவர் நமக்கு அயலார் என எண்ணும் வேறுபாட்டுணர்வினைத் தோற்றுவிக்கும் சொல்.*

**19. காமக் கடப்பினுட் பணிந்த கிளவி**
**காணுங் காலைக் கிழவோற் குரித்தே**
**வழிபடு கிழமை அவட்கிய லான.**

***இளம்பூரணம் :*** *இது, தலைமகற் குரியதொரு மரபுணர்த்திற்று.*

*இது, சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.* [1]

**“ஒரூஉ, கொடியியல் நல்லார் குரல் நாற்றத்துற்ற”**

*என்னும் மருதக்கலியுள்,*

**“பெரியார்க் கடியரோ ஆற்றாதவர்”**

*எனத் தலைவி கூறியவழி,*

1. காமம் எல்லைக்கடந்துமிக்க நிலையிற் பணிந்து கூறும் சொல் ஆராயுங் காலத்துத் தலைவனுக்கு உரியதாகும்; கணவனை வழிபட்டொழுகும் உரிமை எக்காலத்தும் தலைமகளுக்கு இயல்பாய் அமைந்திருத்தலால்.

**"கடியர் தமக் கியார் சொலத் தக்கார் மற்று" (கலித். 88)**

எனவரும்.

***நச்சினார்க்கினியம்:*** *இது, தலைவி வேற்றுமைக்கிளவி தோற்றிய பின்னர்த் தலைவற்கு உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ-ள்) காமக் கடப்பினுட் பணிந்த கிளவி [1] -அங்ஙனந் தலைவிகண்ணுந் தோழிகண்ணும் வேறுபாடு கண்டுழித் தனக்குக் காமங் கையிகந்துழித் தாழ்ந்துகூறுங் கூற்று: காணுங் காலை கிழவோற்கு உரித்தே-ஆராயுங் காலத்துத் தலைவற்கு உரித்து; வழிபடு கிழமை அவட்கு இயலான- அவனை எஞ்ஞான்றும் வழிபட்டொழுகுதல் தலைவிக்கு இல்லறத்தோடு பட்ட இயல் பாகலான் (எ-று.)*

**"ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா**
**என்க ணெவனோ தவறு" (கலி. 88)**

**"கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று" (கலி.88)**

**"நின்னாணை கடக்கிற்பா ரியார்" (கலி.81)**

*என்றாற் போல்வன கொள்க.*

*'காணுங்காலை' என்றதனால் தலைவன் தலைவியெதிர் புலப்பது தன்றவறு சிறிதாகிய இடத்தெனவும், இங்ஙனம் பணிவது தன் தவறு பெரிதாகிய இடத்தெனவுங் கொள்க. [2] (19)*

***ஆய்வுரை:*** *இது, தலைவர்க்குரியதோர் இயல் புணர்த்துகின்றது.*

*(இ-ள்.) காமவுணர்வுமிக்குத் தோன்றிய நிலையிற் பணிந்து கூறுங்கூற்று ஆராயுங்கால கணவனுக்குரியதாகும்; கணவனை எக்காலத்தும் வழிபட்டொழுகும் உரிமை மனைவிக்குரிய சிறப்பியல்பு ஆகலான் எ-று.*

---

1. காமக் கடப்பு – காமம் எல்லை கடத்தல்.
பணிந்த கிளவி – தாழ்ந்து கூறும் கூற்று.

2. கணவன் தன் தவறு சிறிதாகிய நிலையில் மனைவியெதிர் புலத்தலை மேற்கொள்வதும், தன்தவறு பெரிதாகிய நிலையில் மனைவியைப் பணிதலும் உலகியல் வாழ்வினை ஆராயுங்காலத்துப் புலனாம் என்பார் 'காணுங்காலை' என்றார். காணுதல் – ஆராய்தல்.

*காமக்கடப்பு என்றது, காமவுணர்வு தனக்குரிய எல்லையைக் கடந்து மிக்க நிலையினை, பணிந்த கிளவி-பணிவினைப் புலப்படுத்தும் முறையில் வணங்கிக் கூறும் சொல். காணுதல்-மனத்தாற் கருதி யுணர்தல். 'வழிபடு கிழமை அவட்கு இயவான, பணிந்த கிளவி கிழவோற்கு உரித்து' என இயையும்.*

## 20. அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே

**இளம்பூரணம்:** *இது, தலைமகட்குரியதோர் இயல்புணர்த்திற்று.*

*(இ-ள்)* [1] *பொருள்பட மொழிதலாவது பொய்யாக் கூறாது மெய்யே கூறல்.*

*உதாரணம் வந்த வழிக் காண்க.* *(20)*

***நச்சினார்க்கினியம்:*** *இது, தலைவன் பணிந்து மொழிந் தாங்குத் தலைவியும் பணிந்து கூறுமென்கின்றது.*

*(இ—ள்.) அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி* [2] *பிறர் அவலங் கண்டு அவலிக்கும் அருள் முன் தோற்றுவித்த அவ்வருள் பிறத்தற்கு ஏதுவாகி எஞ்ஞான்றும் அகத்து நிகழு அன்பினைக்*

1. அருட்பண்பினைத் தோற்றுவிக்கும் அன்புபொதிந்த இன்சொற்களைப் பொருள் நிரம்பியதாகத் தோன்றச் சொல்லுதல் தலைமகளுக்குரிய இயல்பாகும்.

2. அருள் என்றது, பிறர்துயரங்கண்டு வருந்தி அவர்தம் துன்பங்களைத் துடைத்தற்கு முந்துங்கருணையினை.

முந்துறுத்தல் – முன்னே தோற்றுவித்தல்.

அருள்முந்துறுத்த என்பதனை அன்புக்கு அடையாக்குக.

உயிர்ப்பண்பாகிய அன்பன் இலக்கணம் கூறவந்த தொல்காப்பியனார், அருளுணர்வைத் தோற்றுவித்தற்கு ஏதுவாகிய அன்பு என்பார், 'அருள்முந்துறுத்த அன்பு' என்றார். அவர் மொழியினை அடிபொற்றி அருளாகிய பண்பினை விளக்க வந்த திருவள்ளுவர். 'அருளென்னும் அன்பீனகுழவி' (திருக்குறள் – 757) என்றார். அன்புபொதிகிளவி – அன்பினை அகத்தடக்கிக் கொண்டு கூறும்சொல். பொருள் பட மொழிதலாவது, வேறோர் பொருள்பயப்பக் கூறுதல். அஃதாவது தலைவன் கூறியது போன்று பணிந்து கூறுகின்றவள், தன்பணிவினை வெளிப்படப் புலப்படுத்தாமல் தனது நெஞ்சம் தனது ஆணையையுங்கடந்து தலைவனது ஏவலைச் செய்தது என்றாற்போன்று வேறோர் பொருள்பட மறைத்துக் கூறுதல்.

*கரந்து சொல்லுங் கிளவி: பொருள்படமொழிதல் கிழவோட்கும் உரித்தே-பணிந்தமொழி தோற்றாது வேறோர் பொருள் பயப்பக் கூறுதல் தலைவிக்கும் உரித்து (எ-று.)*

*வேறு பொருளாவது தலைவன் கூறியாங்குத் தானும் பணிந்து கூறுவாள், பணியாதே தன் நெஞ்சு தன்னையுங் கை கடந்து அவன் ஏவலைச் செய்ததென்றாற் போலக் கூறுதலுமாம்.*

*இது 'தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்' (தொல்.பொ 11 ) எனப் பொருளியலுள் வழுவமைத்தற்கு இலக்கணம்.*

*“இணையிரண்டு” என்னும் மருதத்கலியுள்,*

**“மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்துல்**
**விசேர்ந்து வண்டார்க்குங் கவின்பெறல் வேண்டேன்**
**நோய் சேர்ந்த திறம்பண்ணி நின்பாணன் உம்மனை**
**நீசேர்ந்த வில்வினாய் வாராமற் பெறுகற்பின்” (கலி. 77)**

*எனக் கூறிய தலைவி.*

**“கடைஇய நின்மார்பு தோயலம் என்னும்**
**இடையு நிறையும் எளிதோநிற் காணின்**
**கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ**
**டுடன்வாழ் பகையுடை யார்க்கு” (கலி. 77)**

*என்புழி நிற்காணிற் கடவுபு கைத்தங்கா நெஞ்செனவே அவன் ஆற்றாமை கண்டருளி நெஞ்சு ஏவல்செய்ததென வேறோர் பொருள் பயப்பக் கூறித் தன் அன்பினைக் கரந்தவாறு காண்க.*

*'கூர்முண் முள்ளி” (அகம். 26) என்பதனுட் “சிறுபுறங் கவையினன்” என அவன் வருந்தியது ஏதுவாகத் தான் மண்போன் ஞெகிழ்ந்தேனென அருண் முந்துறுத்தவாறும், இவை பாராட்டிய பருவமும் உளவென அன்புபொதிந்து கூறியவாறும், ஆண்டும் பணிந்தமொழி வெளிப்படாமல் நெஞ்சறைபோகிய அறிவினேற்கெனத் தன் அறிவினை வேறாக்கி அதன்மேலிட்டுக் கூறியவாறுங் காண்க.*

***ஆய்வுரை :*** *இது, தலைவிக்கு உரியதோர் இயல்பு உணர்த்து கின்றது.*

*(இ-ள்) அருட்பண்பினைத் தோற்றுவிக்கும் அன்பினை யுள்ளடக்கிய சொற்களைப் பணிதற்பொருள் தோன்றச் சொல்லுதல் தலைவிக்கும் உரியது எ-று.*

*அன்பின் இலக்கணம் கூறும் முறையில் அமைந்தது. 'அருள் முந்துறுத்த அன்பு' என்னும் தொல்காப்பியத் தொடராகும். இதனை அடியொற்றி அருளின் இலக்கணங்கூறுவதாக அமைந்தது. 'அருளென்னும் அன்பீன்குழவி' (757) எனவரும் திருக்குறள் தொடராகும்.*

*பொருள் என்றது, மேலைச் சூத்திரத்திற் குறிக்கப்பட்ட பணிந்த மொழிப்பொருளை, படுதல்-தோன்றுதல். 'கிழவோட்கும் எனபுழி உம்மை கிழவோற்கே யன்றிக் கிழவோட்கும் என இறந்ததுதழீஇய எச்சவும்மையாகும்.*

**21. களவுங் கற்பும் அலர்வரை வின்றே.**

***இளம்பூரணம்:*** *என்-எனின். அலர் ஆமாறு உணர்த்திற்று.*

*(இ-ள்.) களவினுள் கற்பினும் அலராகு மென்று கூறுதல் வரைவின்று என்றவாறு.* [1]

*'தொகுத்துக் கூறல்' என்பதனாற் களவும் கண்டு ஒதுப்பட்டது.*

**"கண்டது மன்னும் ஒருநாள் அவர்மன்னுந்**
**திங்களைப் பாம்புகொண் டற்று."** **(குறள். 1146)**

*இது களவு.*

**"வேதின வெரிநின் ஓதி முதுபோத்**
**தாறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்**
**சுரனே சென்றனர் காதலர் உரனழிந்**
**தீங்கியான் அழுங்கிய எவ்வம்**
**யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே."** **(குறுந் 310)**

*இது கற்பு.*

***நச்சினார்க்கினியம்:-*** *இதுவுங் தலைவிக்குத் தோழிக்கும் உரிய கூற்றுக் கூறுகின்றது.*

---

1. முற்பட நிகழ்ந்த களவொழுக்கத்திலும் அதன்பின்னர் நிகழும் கந்பொழுக் கத்திலும் அலர்தோன்றுதல் நீங்கும் நிலையின்று.

*(இ-ள்.) களவின்கண்ணும் கற்பின்கண்ணும் அலரெழுகின்றதென்று கூறுதல் தலைவிக்குந் தோழிக்கும் நீக்குநிலைமையின்று (எ-று).*

*வரைவின்றெனப் பொதுப்படக் கூறினமையான் இருவரையுங் கொண்டாம். தலைவன் ஆங்குக் கூறுவனாயிற் களவிற் கூட்டமின்மையுங் கற்பிற் பிரிவின்மையும் பிறக்கும். 'ஒப்பக்கூற' லென்னும் உத்தி பற்றிக் களவும் உடனோதினார் சூத்திரஞ் சுருங்குதற்கு. 'களவலராயினும்' (தொல். கள. 24) எனவும் 'அம்பலு மலரும்' (தொல்.கள.48) எனவுங் களவிற் கூறியவை அலராய் நிகழ்ந்தவழி வேறுசில பொருண்மை பற்றிக் கூறுதற்கு வந்தன. அவை அலர்கூறப் பெறுப என்றற்கு வந்தன வன்றென உணர்க.*[1]

**"கரும்பின் எந்திரங் களிற்றெதிர் பிளிறுந்**
**தேர்வண் கோமான் தேனூர் அன்னஇவள்**
**நல்லணி நயந்துநீ துறத்தலிற்**
**பல்லோ ரறியப் பசந்தன்று நுதலே."** **(ஐங்குறு.55)**

*இது, தோழி அலர் கூறியது.* *(21)*

***ஆய்வுரை:*** இது, களவினும் கற்பினும் தலைவிக்கும் தோழிக்கும் உரியதோர் திறம் கூறுகின்றது.

*(இ-ள்) முற்கூறிய களவொழுக்கத்தினும் களவு வெளிப்பட்ட கற்பியலொழுக்கத்தினும் அலர் எழுகின்றது எனக்கூறுதல் நீக்கும் நிலமையின்று. எ-று.*

*அலர்-அலர்தல்; விரிதல்: என்றது, காதலர் இருவரிடையே மறைவில் நிகழும் நட்பு ஊரார் பலர்க்கும் புலனாக மகளிரிடையே*

1. செவிலிக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துரைக்குமிடத்துக் 'களவு அலராயினம்' எனவும், களவுவெளிப்பாட்டிற்குக் காரணமாவான் தலைவன் எனக் கூறுமிடத்து 'அம்பலும் அலரும் களவுவெளிப்படுத்தலின்' எனவும் வரும் நூற்பாக்கள் களவில் தோன்றும் அலரைக்குறித்த வேறு சில பொருண்மைகளைக் கூறியனவன்றி 'அலர் கூறப்பெறுவர்' என்றற்கு வந்தன அல்ல; ஆதலால் களவினும் கற்பினும் அலர்தோன்றும் எனவும் அலர் எழுகின்றது எனவும் கூறுதல் தலைவிக்கும் தோழிக்கும் நீக்கும் நிலைமையில்லை எனக் களவு கற்பு என்னும் இருவகையொழுகலாறுகட்கும் இயைய ஒப்பக்கூறல் என்னும் உத்திபற்றிக் 'களவும் கற்பும் அலர்வரைவின்றே' என்றார் ஆசிரியர். 'வரை வின்று' எனப் பொதுப்படக் கூறினமையால், தலைவி தோழி என்னும் இரு வரையுங்கொண்டார் நச்சினார்க்கினியர். இவ்விடங்களில் தலைவன் அலர் கூறுவனாயின் அவனுக்குக் களவிற் கூட்டமின்மையும் கற்பிற்பிரிவின்மையும் நேர்ந்தன என்பதுபட்டு மாறுபடும் என்பர் நச்சினார்க்கினியர்.

*வெளிப்பட்டுச் சொல் நிகழ்தல், "அலர் என்பது இன்னானோடு இன்னாளிடையது போலும் பட்டது' எனச்சொல்லி நிற்பது" என்பர் இறையனார் களவிய லுரையாசிரியர். தலைவனது ஒழுகவாறுபற்றி ஓர்மகளிரிடையே அலர் பரவுதலையறிந்து அஞ்சி அதுபற்றித் தலைவன்பாற் புலப்படுத்தற்கு உரியவர்கள் தோழியும் தலைவியும் ஆதலின் இந்நூற்பா அவ்விருவர்க்குமுரிய திறம் கூறியது எனக் கருத்துரைக்கப்பட்டது.*

**22. அலரில் தோன்றுங் காமத்து மிகுதி.[1]**

***இளம்பூரணம்:***

**"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
**நீராக நீளும்இந் நோய்" (குறள் 1147)**

*எனவும் வரும். (22)*

**அலரில் தோன்றுங் காமத்திற் சிறப்பே.[2]**

***நச்சினார்க்கினியம்:*** *இஃது அலர் கூறியதனாற் பயன் இஃது என்கின்றது.*

*(இ-ள்) அலரில்தோன்றுங் காமத்துமிகுதி-இருவகைக் கைகோளினும் பிறந்த அலரால்[3] தலைவற்குந் தலைவிக்குங் காமத்திடத்து மிகுதி[4] தோன்றும் (எ-று).*

*என்றது, களவு அலராகியவழி இடையீட்டிற்கு அஞ்சிய அச்சத்தான் இருவர்க்குங் காமஞ்சிறத்தலுங் கற்பினுட் பரத்தைமை யான் அலர்தோன்றியவழிக் காமஞ்சிறத்தலும் அவள் வருந்துமென்று தலைவற்குக் காமஞ்சிறத்தலுந் தலைவன் பிரிவின்கட் டலைவிக்குக் காமஞ் சிறத்தலும் பிறவுமாம்.*

**"ஊரவர் கௌவை" (குறள்.1147)**

**"நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்**
**காம நுதுப்பே மெனல்." (குறள் 1148)**

*என்றாற் போல்வன கொள்க. (உ)*

---

3. அலர் காரணமாகத் தலைவன் தலைவி இருவருள்ளத்தும் காமவுணர்வு மிக்குத் தோன்றும்.

4. 'அலரிற் றோன்றுங் காமத்திற் சிறப்பே' என்ற பாடம் நச்சினார்க்கினியர் கொண்ட தன்று என்பது 'காமத்திடத்து மிகுதிதோன்றும்' என்ற அவரது உரையாற் புலனாம்.

***ஆய்வுரை:*** *இஃது அலரால் விளைவது இது வெனக் கூறுகின்றது.*

*(இ-ள்) அலர்மொழியால் தலைவன் தலைவி இருவருள்ளத்தும் காமவேட்கை மிக்குத்தோன்றும் எ-று.*

*அலரின் அலர்மொழியினால்:* இன்னுருபு ஏதுப்பொருளில் வந்தது. *அலரின் காமத்து மிகுதி தோன்றும் என இயைத்துப் பொருள் கொள்க.*

## 23. கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே.

***இளம்பூரணம்:*** *இதுவும் அது*

*(இ-ள்) கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும் என்றவாறு.*[1]

*ஆங்கு-அசை.*

**"அகலநீ துறத்தலின் அழுதோவா உண்கணெம்**
**புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்**
**நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்**
**தமர்பாடுந் துணங்கையுள் அரவம்வந் தெடுப்புமே."(கலித். 70)**

*எனவரும்.*

*விளையாட்டாற் காமமிக்கு உறங்காமை கண்டுகொள்க. (23)*

***நச்சினார்க்கினியர்:*** *இதுவுங் காமச்சிறப்பே கூறுகின்றது.*

*(இ-ள்.) கிழவோன் விளையாட்டு* [2] *-தலைவன் பரத்தையர் சேரியுள் ஆடலும் பாடலும் கண்டுங் கேட்டும் அவருடன்யாறு முதலியன ஆடியும் இன்பம் நுகரும் விளையாட்டின் கண்ணும், ஆங்கும்* [3] *அற்று* [4] *—அப் பரத்தையரிடத்தும் அலரால் தோன்றுங் காமச் சிறப்பு (எ-று.)*

---

1. தலைவனது விளையாட்டும் அவ்வலர் போன்று தலைமகள் உள்ளத்தே காமவுணர்வினை மிகுதிப்படுத்தும்.

2. 'கிழவோன் விளையாட்டு' என்றது, பரத்தையர்சேரியுள் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் தலைவனது விளையாட்டினை.

3. ஆங்கும் – அப்பரத்தையரிடத்தும்.

4. அற்று – அத்தன்மைத்து; என்றது, அலரால் காமத்து மிகுதி தோன்றும் அத்தன்மையது என்பதாம்.

'ஆங்கும்' என்ற உம்மையான் ஈங்கும்[1] அற்றெனக் கொள்க. தம்மொடு தலைவன் ஆடியது பலரறியாதவழி யென்றுமாம். பலரறிந்த வழி அவனது பிரிவு தமக்கு இழிவெனப்படுதலின் அவர் காமச்சிறப்புடையராம். தலைவன் அவரொடு விளையாடி அலர் கேட்குந்தோறுந் தலைவிக்குப் புலத்தலும் ஊடலும் பிறந்து காமச் சிறப்பெய்தும். ஆங்கும் ஈங்குமெனவே அவ்விருவரிடத்துந் தலைவன் அவை நிகழ்த்தினானாகலின் அவற்குங் காமச் சிறப்பு ஒருவாற்றாற் கூறியவாறாயிற்று. இது காமக்கிழத்தியரல்லாத பரத்தையரொடு விளையாடிய பகுதியாகலின் வேறு கூறினார். காமக்கிழத்தியர் ஊடலும் விளையாடலுந் தலைவி ஊடலும் விளையாடலும் 'யாறுங் குளனும்' (தொல். பொ. 191) என்புழிக் கூறுப அஃது அலரெனப்படாமையின்[2] விளையாட்டுக்கண் ணென விரித்த உருபு வினைசெய்யிடத்து வந்தது.[3]

**"எஃகுடை எழினலத் தொருத்தியொடு நெருநை**
**வைகுபுனல் அயர்ந்தனை யென்ப அதுவே**
**பொய்புறம் பொதிந்தயான் கரப்பவுங் கையிகந்**
**தலரா கின்றால் தானே"** **(அகம். 116)**

எனவும்.

**"கோடுதோய் மலிர்நிறை ஆடி யோரே"** **(அகம். 166)**

எனத் தலைவியும் பரத்தையும் பிறர் அலர்கூறியவழிக் காமஞ் சிறந்து புலந்தவாறு காண்க. ஆண்டுப் பணிந்து கூறுங்காலும் விளையாடுங்காலுந் தலைவன் காமச் சிறப்புக் காண்க, (23.)

***ஆய்வுரை :*** இதுவும் காமவேட்கை மிகுதற்குரிய இடம் கூறுகின்றது.

---

1. ஈங்கும் – மனைக்கண்வாழும் தலைமகளிடத்தும்.

2. "காமக்கிழத்தியர் ஊடலும் விளையாடலுந் தலைவி ஊடலும் விளையாடலும் 'யாறுங்குளனும்' (11) என்புழிக்கூறுப; அஃது அலரெனப்படாமையின்." என இவ்வுரைப்பகுதி முற்றுப்புள்ளியுடன் அமைதல் வேண்டும்.

3. விளையாட்டுக்கண் எனக்கண்ணுருபு வினைசெய்யிடம் என்ற பொருளில் வந்தது.

*(இ - ள்) தலைவனது விளையாட்டு நிகழ்ச்சியாகிய அந்நிலையும் அவர்போன்று காமவேட்கையை மிகுதிப்படுத்தும் அவ்வியல் பினையுடையதாம் எ—று.*

*விளையாட்டு ஆங்கு—விளையாட்டு நிகழ்ச்சியாகிய அவ்விடம். அற்று—அத்தன்மைத்து.*

**24. மனைவி தலைத்தாட்[1] கிழவோன் கொடுமை**
**தம்முள வாதல் வாயில்கட் கில்லை.**

**இளம்பூரணம் :** *என் எனின், வாயில்கட் குரியதொரு மர புணர்த்திற்று.*

*(இ - ள்.) மனைவிமாட்டுக் கிழவோன் கொடுமையைத் தாங்கார் கூறல் வாயில்கட்கில்லை என்றவாறு. (24)*

**நச்சினார்க்கினியம் :** *இது, வாயில்கட்கு உரிய இலக்கணங் கூறுகின்றது.*

*(இ - ள்.) மனைவி தாட்டலை தலைவி எத்திறத்தானும் புலந்துழி அவளிடத்து; கிழவோன் கொடுமை - தலைவன் கொடுந்தொழில்களை; தம் உள ஆதல் - தம் உரைக்கண் உளவாக்கி உரைத்தல்; வாயில்கட்கு இல்லை - தோழி முதலிய வாயில்களுக் கில்லை (எ - று).*

*தாட்டலையென மாறுக. அது பாதத்திடத்தென்னுந் தகுதிச் சொல். அது வாயில்கள் கூற்றாய் வந்தது.[2] உதாரணம் வந்துழிக் காண்க. (24)*

1. 'மனைவிதாள்தலை' எனற்பாலது 'மனைவி தலைத்தாள்' என முன் பின்னாகத் தொக்கு நின்றது. தாள்தலை – பாதத்தின்கண். தம்மினும் உயர்ந்தோர் பால் ஒன்றினைத் தெரிவித்துக் கொள்ளும் நிலையில் தங்கள் அடியின்கண் (பாதத்தில்) இதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக்கூறும் உரையாடல் மரபினை அடியொற்றி வாயில்கள் தலைவியின்பால் உரையாடுதற்குரியர் என்பதனைப் புலப்படுத்தும் முறையில் அமைந்தது, 'மனைவிதலைத்தாள்' எனவரும் தொடராகும். பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'' எனவரும் அப்பரடிகள் அருளிச் செயல் தொன்றுதொட்டுவரும் இச்சொல் மரபினை இனிது புலப்படுத்தல் அறியத்தகுவதாகும்.

2. 'மனைவியின் பாதத்திடத்து' என்னும் பொருளுடைய 'மனைவிதலைத்தாள்' என்னும் தகுதிச் சொல், ஈண்டு நூலாசிரியர் கூற்றாகாது வாயில்கள் கூற்றாய் வந்தது என்பதாம்.

**ஆய்வுரை :** இது, வாயில்கட்கு உரியதோர் திறம் கூறுகின்றது.

(இ—ள்) மனைவியின் முன்னிலையில் கணவனது புறத் தொழுக்கமாகிய கொடுமையினைத் தம் உரையாடலிற் கொண்டு கூறுதல் வாயில்கட்கு இல்லை எ—று.

வாயில்களாவார். கணவனும் மனைவியும் ஆகிய காதலர் இருவரது கருத்தினையும் உளத்திற் கொண்டு அவ்விருவரும் அன்பினால் ஒன்றி நிகழ்த்தும் மனையறத்திற்குத் துணை நின்றுதவும் பார்ப்பான், பாணன். பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர் முதலியோர். கணவன் மனைவி என்னும் இருவரும் ஒன்றிய கேண்மையினராய் மனை வாழ்க்கையினை மாண்புற நிகழ்த்துதற்குத் துணை நின்று உதவும் கடமையினராகிய வாயில்களே கணவனது கொடுமையினை மனைவிக்குப் புலனாக அவளது முன்னிலையிற் கூறுவராயின் அவர் தம் கூற்றினால் மனைவியின் மனம் வருந்த மனைவாழ்க்கை மாட்சிமை பெற இனிது நிகழாது. ஆதலால் மனைவியின் முன்னர்க் கணவனது கொடுமையினை வாயில்கள் தம்முட் கொண்டு கூறுதல் கூடாது என அறிவுறுத்தும் முறையில் அமைந்தது இந்நூற்பாவாகும்.

**25, மனைவி முன்னர்க் கையறு கிளவி[1]**
**மனைவிக் குறுதி உள்வழி உண்டே**

**இளம்பூரணம் :** என்-எனின், இதுவுமது.

(இ—ள்) மனைவி முன்னர்ச் செயலற்றுக் கூறுஞ் சொல் மனைவிக்கு உறுதியுள்வழி வாயில்கட்கு உண்டு என்றவாறு.

**“இனியவர், வரினும் நோய்மருந் தல்லாய் வாரா**
**தவணர் ஆகுக காதலர் இவண் நம்**
**காமம் படர்பட வருத்திய**
**நோய்மலி வருத்தங் காணன்மா ரவரே. (25)**

என வரும்.

**நச்சினார்க்கினியம் :** இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது; இன்னுழி யாயிற் பெறுமென்றலின்.

1. கையறுகிளவி – செயலற்றதன்மையைப் புலப்படுத்தும் இரங்கல்மொழி,

*(இ—ள்) மனைவி முன்னர்க் கையறு கிளவி - தலைவி முன்னர்த் தலைவன் காமக்கடப்பினாற் பணியுந் துணையன்றி நம்மைக் கையிகந்தானெனக் கையற்றுக் கூறுங்கூற்று: மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே—புலந்துவருந தலைவிக்கு மருந்தாய் அவன் கூடுவதோர் ஆற்றல் உறுதி பயக்குமாயின்[1] அவ்வாயில்கட்கு உளதாம் (உ—று.)*

**"அறியா மையின் அன்னை யஞ்சி"** **(நற்றிணை. 50)**

*இதனுள், என்னறியாமையாலே அன்னாய் நின்னையஞ்சி யாங் கள்வன் துணங்கையாடுங் களவைக் கையகப் படுப்பேமாகச் செல்லாநிற்க, அவன் குழை முதலியவற்றை உடையனாய்த் தெருவு முடிந்த இடத்தே எதிர்ப்பட்டானாக, அவ்வருளாமையின் யாண்டையது என்கட் பசலையென்றானாக, அவனெதிரே என்சிறுமை பெரிதாகலான் ஆராயாதே துணிந்து நாணிலை எலுவ வந்தேனெனத் தோழி மெய்யானும் பொய்யானும் புனைந் துரைத்தவாறு காண்க. ஏனைய வாயில்கள் கூற்றுவந்துழிக் காண்க.*

*இங்ஙனந் தலைவன் சிறைப்புறமாகக் கூறுவன 'அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்' (தொல், பொ. 179) என்புழிக் கூறுதும்.*

***ஆய்வுரை:*** *இது, மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.*

*(இ—ள்) தலைவனது கொடுமை காரணமாக மனைவியின் முன்னிலையில் வாயில்களாவார் செயலற்றுக்கூறுஞ்சொல் மனைவியின் ஆற்றாமைநோய்க்கு மருந்தாய் உறுதி விளைக்குமாயின் அவ்வாயில் கட்கு உண்டு. எ—று.*

*கையறுகிளவி, செயலற்ற தன்மையைப் புலப்படுத்தும் முறையிற் கூறப்படும் இரங்கல்மொழி.*

*எனவே, மனைவிக்கு உறுதிவிளைத்தல் இன்றி மேலும் இரக்கத்தினை மிகுவிக்குமாயின் கையறுகிளவி விலக்கப்படும் என்பதாம்.*

1. 'உறுதியுள்வழி' ஆவது, தலைவியின் புலவியைத் தீர்க்கும் மருந்தாய்த் தலைவன் வருதல் திண்ணம் என்னும் துணிவினைத்தரும் இடம் எனப்பொருள் கொள்ளினும் அமையும்.

**26. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்**
**பின்னிலைத் தோன்றும் என்மனார்புலவர்.**

***இளம்பூரணம் :*** *இதுவுமது.*

*(இ - ள்.) முன்னிலைப் புறமொழியாகக் கூறுஞ் சொல் எல்லா வாயில்கட்கும் உரிய; பின்னிலைமுயலுங்கால் தோன்றும் என்றவாறு.*

*முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறுபோலக் கூறுதல்.*

**"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங்**
**கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்**
**பண்டுமிவ் வுலகத் தியற்கை"** **(கலித். 22)**

*என்றவழி அவ்வுரை தலைமகனை நோக்கியவாறு காண்க. (26)*

***நச்சினார்க்கினியம் :*** *இது வாயில்கட்கு உரியதோர் பகுதி கூறுகின்றது.*

*(இ - ள்.) முன்னிலைப் புறமொழி - முன்னிலையாய் நிற்கின்ற தலைவனை நோக்கிப் பிறரைக் கூறுமாறுபோலக் கூறுதல்; எல்லா வாயிற்கும்-பன்னிரண்டு வாயில்களுக்கும்; பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர் - குறைவேண்டி முயலுங்கால் தோன்றுமென்று கூறுவர் புலவர் (எ - று).*

**"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் ...**
**தாயுயிர் பெய்த பாவை போல**
**நலனுடை யார்மொழிக்கண் தாவார்தாந் தந்நலந்**
**தாதுதேர் பறவையினருந்திறல் கொடுக்குங்கால்**
**ஏதிலார் கூறுவ தெவனோநின் பொருள் வேட்கை"**
**(கலி. 22)**

*எனத் தலைவனை நோக்கி முன்னிலைப் புறமொழியாகக்[1] கூறிற்று.*

***ஆய்வுரை*** *இதுவும் வாயில்கட் காவதோர் சொற்றிறம் கூறுகின்றது.*

1. பின்னிலை முயலுங்காலமாவது, ஒன்றினை வேண்டிக்குறையுற்று நிற்குங் காலம்.

*(இ-ள்.) முன்னிலையில் உள்ளாரைக் குறித்துப் படர்க்கையிட மாகிய பறத்தேயுள்ளார் போற் கூறும் சொல், எல்லா வாயில் கட்கும் குறைவேண்டிப் பின்னிற்குங்கால் தோன்றும் என்பார் அறிஞர் எ - று.*

*பின்னிலை - குறைவேண்டிப் பின்னிற்றல்.*

**27. தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்**
**பல்லாற் றானும் ஊடலில் தகைத்தலும்[1]**
**உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்**
**ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்***
**அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன.**

***இளம் பூரணம் :-*** *என் எனின், கூத்தர்க்குரிய திறங் கூறுதல் நுதலிற்று.*

*(இ-ள்) தொல்லவை யுரைத்த லாவது—முன்புள்ளார் இவ்வாறு செய்வரெனக் கூறுதல்,*

*நுகர்ச்சி யேத்த லாவது—நுகர்ச்சி யிவ்வாறு இனிய தொன்றெனப் புகழ்தல்*

*பல்லாற்றானும் ஊடலிற் றகைத்தலும் என்பது—பல நெறியானும் ஊடலினின்றுந் தலைமகளை மீட்டல்: அஃதாவது இவ்வாறு செய்தல் குற்றமென்றானும் அன்புடையார் செய்யாரென் றானும்[2] மனைக்கிழத்தியர் செயலன்று என்றானும் இவ்வாறு கூறுதல்.*

*உறுதிகாட்ட லாவது—இவ்வூடல் தணிந்ததனாற் பயனிது வெனவும் நன்மை பயக்கும் எனவும் கூறுதல்.*

*அறிவு மெய்ந்நிறுத்தலாவது—தலைமகள் மெய்யின்கண் மிக்க துணிவினாற் § கெட்டவறிவை இது தக்கதன்றென அறிவு கொளுத்துதல்.*

1. 'தணித்தலும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்டபாடம்.'

* துணிவு காட்டலும். பா. வே.

§ துனியினாற், என்றிருத்தல் வேண்டும்.

2. 'என்றாயினும்' எனற்பாலன 'என்றானும்' எனக்குறைந்து நின்றன

*ஏதுவினுரைத்தலும் என்பது — இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினாற் கூறுதல். அது பிறள் ஒருத்தி கெட்டபடி கூறுதல்.*

*துணியக்காட்ட லாவது—அவள் துணியுமாறு காரணங் காட்டுதல்.*

*அணிநிலை யுரைத்தலாவது— இவ்வாறு உளதாகிய அணியைப் புலரவிடுகின்றதனாற் பயன் என்னை யெனக் கூறுதல்.*

*இவை யெல்லாம் கூத்தர் மேலன என்றவாறு. அவர் எல்லா நெறியினானும் புனைந் துரைக்க வல்ல ராதலான் அவர் மேலன என உரைத்தார். இவற்றிற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க. இந்நூல் வழக்குஞ் செய்யுளும் பற்றி நிகழ்தலின் இப்பொருண்மேல் வரும் வழக்குரை உதாரணமாம்*[1] *(27)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, கூந்தர்க்குரிய கிளவி கூறுகின்றது.*

*(இ — ள்) தொல்லவை உரைத்தலும் - முன்பே மிக்கார் இருவர் இன்பம் நுகர்ந்தவாறு இதுவெனக் கூறலும்; நுகர்ச்சி ஏற்றலும் - நுமது நுகர்ச்சி அவரினுஞ் சிறந்ததெனக் கூறலும்; பல் ஆற்றானும் ஊடலில் தணித்தலும் - இல்லறக் கிழமைக்கு இயல்பன்றென்றாயினுங் இஃது அன்பின்மையா மென்றாயினுங் கூறித் தலைவியை ஊடலினின்று மீட்டலும்; உறுதிகாட்டலும் - இல்வாழ்க்கை நிகழ்த்தி இன்பநுகர்தலே நினக்குப் பொருளென்றலும்;*

*இனிக் கூறுவன*[2] *தலைவற்குரிய : அறிவு மெய் நிறுத்தலும். புறத்தொழுக்கம் மிக்க தலைவற்கு நீ கற்றறிந்த அறிவு இனி மெய்யாக வேண்டுமென்று அவனை மெய்யறிவின் கண்ணே நிறுத்தலும்; ஏதுவின் உணர்த்தலும் - இக் கழிகாமத்தான் இழிவு தலைவரு மென்றதற்குக் காரணங் கூறலும்; துணிவு காட்டலும்- அதற்கேற்பக்*

---

1. "இந்நூல் வழக்குஞ் செய்யுளும் பற்றிவருதலின் இப்பொருள் மேல் வரும் வழக்குரையும் உதாரணமாம்" என உம்மையொடுகூட்டிப் பொருள் கொள்க.

2. கூத்தர்க்குரிய இக்கிளவிகள்யாவும் தலைவியைநோக்கிக் கூறுதற்குரியவாகக் கொண்டார் இளம்பூரணர். இவற்றுள், தொல்லவையுரைத்தல், நுகர்ச்சியேற்றல், பல்லாற்றானும் ஊடலில் தணித்தல் ஆகிய மூன்றும் தலைவிக்குக் கூறுவன எனவும், உறுதிகாட்டல், அறிவுமெய்ந்நிறுத்தல், ஏதுவின் உணர்த்தல் துணிவுகாட்டல், அணி நிலையுரைத்தல் எனவரும் ஐந்தும் தலைவற்குக்கூறுவன எனவும் பகுத்துரைப்பர் நச்சினார்க்கினியர்.

கழிகாமத்தாற் கெட்டாரை எடுத்துக்காட்டலும்; அணிநிலை உரைத்தலும் - முலையினுந் தோளினும் முகத்தினும் எழுதுங்காற் புணர்ச்சிதோறும் அழித்தெழுதுமாறு இதுவெனக் கூறலும்; கூத்தர் மேன - இவ்வெட்டுங் கூத்தரிடத்தன (எ—று)

கூத்தர், நாடகசாலையர், தொன்றுபட்ட நன்றுந் தீதுங் கற்றறிந்தவற்றை அவைக்கெல்லாம் அறியக்காட்டுதற்கு உரியராகலிற் கூத்தர் இவையும் கூறுபவென்றார் இலக்கியம் இக் காலத்திறந்தன.

இஃது அறிவுமெய்ந்நிறுத்தது.

**ஆய்வுரை :** இது, கூத்தர்க்குரிய திறம் கூறுகின்றது,

(இ—ள்) நாட்டில் நிகழ்ந்த தொன்மை வரலாறுகளை எடுத்துரைத்தலும், மனைவாழ்க்கை நுகர்ச்சியினைப் பாராட்டிப் புகழ்தலும், காதலரிடையே தோன்றிய ஊடலாகிய பிணக்கத் தினைப் பல்லாற்றானும் தணித்தலும். வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உண்மைகளை எடுத்துக் காட்டலும், கேட்போர் அறிவினை மெய்ம்மைக் குணத்தில் நிலைபெறச் செய்தலும். விளக்கிக் கூறுதலும் தாம் கூறும் பொருளில் ஐயமின்றித் துணிவுபெறும்படி காரணங்காட்டி முடித்துக் கூறலும் காதலர் தம் அழகினைக் கெடாது அன்பினால் நிலைபெறக் காத்துக் கொள்ளுமாறு கூறுதலும் கூத்தர்க்கு உரிய கிளவிகள் எ—று.

இந்நூற்பாவில் கூத்தர் கூறுங்கிளவிகள் இன்னாரை நோக்கியன என வரைந்து கூறாமையின் இக்கூற்றுக்களைக் கேட்டற்குரியார் தலைவன் தலைவி என்னும் இருவருமே எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

**28. நிலம் பெயர்ந் துரைத்தல் அவணிலை உரைத்தல்**
**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.**

**இளம்பூரணம் :** இது, மேற்கூறப்பட்ட கூத்தர்க்குஞ் சொல்லாத பாணர்க்கும் உரிய கிளவி உணர்த்திற்று.

(இ-ள்) நிலம் பெயர்ந்துரைத்தல் என்பது—தலைவன் பிரிந்தவிடத்துச் சென்று கூறுதல்.

*அவள்நிலை யுரைத்தல் என்பது—அவள் [1]நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதல்.*

**"அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோல்" என்னும் பாலைக் கலியுள்'**

**"தணியாநோய் உகந்தானாத் தகையவள் தகைபெற**
**அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி பணிபுநின்**
**காமர் கழலடி சேரா**
**நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே" (கலித். 30)**

*எனப் பாசறைக்கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியவாறு காண்க. (28)*

***நச்சினார்க்கினியம் :*** *இஃது, அதிகாரப்பட்ட கூத்தரோடு பாணர்க்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ—ள்) நிலம் பெயர்ந்து உறைதல் வரைநிலை உரைத்தல்[2]– தலைவன் சேட்புலத்துப் பிரிந்துறைதலைத் தலைவிக்காக வரைந்து மீளும் நிலைமை கூறுதல்; கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை[3] உரிய — கூத்தர்க்கும் பாணர்க்கும் யாப்பமைந்தன உரிய (எ—று)*

*யாப்பமைதலாவது தோழியைப் போலச் செலவழுங்கு வித்தல் முதலியன பெறாராகலின், யாழெழீ இக் கடவுள் வாழ்த்தி அவளது ஆற்றாமை தோன்றும் வகையான் எண்வகைக் குறிப்பும் பட நன்னயப்படுத்துத் தலைவற்குக் காட்டல் போல்வன.*

**"அரக்கத் தன்ன செந்நிலப் ......**
**முனைநல் லூரன் புனை நெடுந்தேரே." (அகம் - 14)**

*இதனுள், தலைவி யிரக்கந்தோன்றக் கடவுள் வாழ்த்திப் பிரிந்தோர் மீள நினையாநின்றேனாக அவர் மீட்சி கண்டேனெனப் பாணன் கூறியவாறு காண்க.*

---

1. 'அவள்' என்றது, தலைவியை,

2. 'நிலம்பெயர்ந்துரைத்தல், அவள்நிலையுரைத்தல்' எனப்பாடங்கொண்டார் இளம்பூரணர். நிலம் பெயர்ந்துறைதல் வரைநிலையுரைத்தல்' எனப்பாடங்கொண்டு 'சேட் புலத்துப்பிரிந்துறைந்த தலைவன், தலைவியின் துயர் துடைத்தல் வேண்டி அவ்விடத்தினின்றும் நீங்கி மீளும் நிலைமையினைக் கூறுதல்' எனப்பொருள்கொள்வர் நச்சினார்க்கினியர்.

3. யாத்தவை – இயைபுடையனவாகப் பொருந்தியவை.

*கூத்தர் கூற்று வந்துழிக் காண்க.*

***ஆய்வுரை:*** *இது நாடகத்தமிழ் வளர்க்கும் கூத்தர்க்கும் இசைத்தமிழ் வளர்க்கும் பாணர்க்கும் பொதுவாக உரிய கிளவிகளைத் தொகுத்துரைக்கின்றது.*

*(இ–ள்) (தலைவியைத் தலைவன் பிரிந்த நிலையில் தலைமகளது ஆற்றாமையினை) இடம்பெயர்ந்து சென்று (தலைவனுக்குக்) கூறுதலும், தலைவன் பிரிந்துறையும் சேய்நிலத்தின் நிலைமையினை மீண்டு வந்து (தலைவிக்குக்) கூறுதலும் கூத்தர்க்கும் பாணர்க்கும் ஒப்பப் பொருந்தியனவாக உரியவாகும் எ—று.*

*நிலம் பெயர்ந்துரைத்தலாவது, தாம் வாழும் ஊரினைவிட்டு நீங்கி நெடுந்தூரத்திற் சென்று தங்கிய தலைவனுக்குத் தலைவியது ஆற்றா நிலைமையைக் கூறுதல். அவணிலையுரைத்தலாவது, தலைவன் தங்கியிருக்கும் அவ்விடத்து நிலைமையினை மீண்டு வந்து தலைவிக்குக்கூறுதல்:. 'அவணிலையுரைத்தல்' என்பது 'அவண் நிலை யுரைத்தல்' எனப் பிரித்துப் பொருள் வரையப்பட்டது. 'அவணிலையுரைத்தல்' என்பதனை அவள் நிலையுரைத்தல் எனப் பிரித்துப் பொருள்கொள்வர் இளம்பூரணர். இப்பொருள் 'நிலம் பெயர்ந்துரைத்தல்' என்பதன்கண் அடங்கு மாதலானும் நிலம் பெயர்ந்து சென்ற கூத்தரும் பாணரும் தலைவன் தங்கிய இடத்தின் நிலைமையைத் தெரிந்து தலைவிக்கு மீண்டுவந்துரைத்தல் வேண்டுமாதலானும் அவண் நிலையுரைத்தல் எனப்பிரித்துப் பொருள் கொள்ளுதலே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும்.*

29. **ஆற்றது பண்பும் கருமத்து வினையும்***
**ஏவன் முடிபும் வினாவுஞ் செப்பும்**
**ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்**
**தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்**
**இளையோர்க் குரிய கிளவி யென்ப.**

***இளம்பூரணம் :*** *இஃது இளையோர்க்குரிய கிளவியா மாறுணர்த்திற்று.*

* விளைவும், என்றிருத்தல் வேண்டும்.

*சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.*[1]

**"விருந்தும் பெறுகுநள்......ஆய்ந்தே"** **(அகம். 324)**

*எனவரும். பிறவுமன்ன.* *(26)*

***நச்சினார்க்கினியம் :*** *இஃது உழைக்குறுந்தொழிற்குங் காப்பிற்கும் (தொல். பொ. 171) உரியாராகிய இளையோர்க் குரிய இலக்கணங் கூறுகின்றது.*

*(இ—ள்) ஆற்றது பண்பும் - தலைவன் தலைவியுடனாயினுந் தானே யாயினும் போக்கு ஒருப்பட்டுழி வழிவிடற்பாலராகிய இளையோர் தண்ணிது வெய்து சேய்த்து அணித்தென்று ஆற்றது நிலைமை கூறுதலும்; கருமத்து விளைவும் - ஒன்றாகச் சென்றுவந்த செய்பொருண் முடிக்குமாறு அறிந்து கூறுதலும்: ஏவல் முடிவும்- இன்னுழி - இன்னது செய்க என்று ஏவியக்கால் அதனை முடித்துவந்தமை கூறலும்; வினாவும்-தலைவன் ஏவலைத் தாங் கேட்டலும்; செப்பும்—தலைவன் வினவாத வழியும் தலைவிக் காகவாயினுஞ் செப்பத் தகுவன தலைவற்கு அறுவுகூறுதலும்; ஆற்றிடைக் கண்ட பொருளும்-செல்சுரத்துக் கண்ட நிமித்தம் முதலிய பொருள்களைத் தலைவர்க்குந் தலைவிக்கும் உறுதிபயக்குமாறு கூறலும்: இறைச்சியும்-ஆண்டுமாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை அவ் விருவர்க்குமாயினுந் தலைவற் கேயாயினுங் காட்டியும் ஊறு செய்யுங் கோண்மாக்களை அகற்றியுங் கூறுவனவும்: தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும் - அங்ஙனம்*

---

1. ஆற்றது பண்பு என்றது, வெம்மை, தண்மை, நடத்தற்கு அருமை எளிமை முதலிய வழியின் பண்புகளை,

கருமத்து விளைவு என்றது, செய்யத்தொடங்கிய வினையால் உளவாகும் பயன்.

ஏவல் முடிவு – ஏவிய பணியினை முடித்தல்.

வினா – தாம் செயதற்குரிய பணியாது என வினவித்தெரிந்து கொள்ளுதல்.

செப்பு — சொல்லுதற்குரியவற்றை உரிய விடத்தில் உரியகாலத்தில் உரியவர்களுக்குக் கூறுதல்.

ஆற்றிடைக்கண்ட பொருள் – தாம் வரும் வழியிற்கண்ட பொருள்களின் நிகழ்ச்சி.

இறைச்சி – விலங்கு பறவை முதலிய அந்நிலத்துக்கருப்பொருள்கள்.

தோற்றஞ் சான்ற அன்னவை – வழிச்செல்வார்க்குப் புலப்பட்டுத் தோன்றும் சிறப்பினவாகவுள்ள அவை போல்வனவாகிய பிறபொருள்கள்.

*அவற்குத் தோற்றுவித்தற்கமைந்த அவைபோல்வன பிற கூற்றுக்களும்; இளையோர்க்கு உரிய கிளவி என்ப - இளையோர்க்கு உரிய கூற்றென்று கூறுவர் ஆசிரியர் (எ -று).*

*தலைவியது செய்தி அறிந்துவந்து கூறுவனவும் பிற பொருளுணர்ந்து வந்துரைப்பனவும் ஒற்றர்கண் அடங்கும்*[1] *ஏவன் முடிவிற்கும் இஃதொக்கும். 'சான்ற' வென்றதனான் ஆற்றது பண்பு கூறுங்கால் இதுபொழுது இவ்வழிச்சேறல் அமையா தென விலக்கலுங் கருமங்கூறுங்காற் சந்துசெய்தல் அமையு மெனக் கூறுதலும் போல்வன அமையவாம், அவர் அவை கூறப்பெறாராகலின். பிறவாவன, தலைவன் வருவனெனத் தலைவி மாட்டுத் தூதாய் வருதலும், அறிந்து சென்ற தலைவற்குத் தலைவி நிலை கூறுதலும், மீளுங்கால் விருந்து பெறுகுவள் கொல்லெனத் தலைவி நிலையுரைத்தலும் போல்வன. இலக்கியம் வந்துழிக் காண்க.*

*"விருந்தும் பெறுகுநள் .. ..*

**முல்லை மாலை நகர்புக றந்தே"** **(அகம் 324)**

*அவர்கள் தங்களுக்கு வளராப்பிள்ளை யென்றலுமாம் இது பெறுவளென்றது.*

*ஆற்றது பண்பும், ஆற்றிடைக்கண்ட பொருளும் இறைச்சியும் உடன்போக்கிலுங் கற்பிலுங் கூறுவனவாதலின் இச்சூத்திரங் கைகோள் இரண்டற்கும் பொதுவிதி*[2] *(29)*

***ஆய்வுரை :*** *இஃது இளையோர்க்குரிய திறம் உணர்த்துகின்றது.*

*(இ—ள்) தலைவன் செல்லுதற்குரிய வழியின் வெப்பதட்பம் முதலிய பண்புகளும், எண்ணித் தொடங்கப் பெற்று நிகழும்*

1. அகப்பொருளொழுகலாற்றில் ஒற்றர்க்கு இடமின்மையால், தலைவியது செய்தி அறிந்துவந்து கூறுவனவும், பிறபொருளுணாந்து வந்து கூறுவனவும் இளையோர்க்குரியகிளவி களாகவே கொள்ளத்தக்கனவாதலின், இவற்றை ஒற்றர்க் குரியவாகக் கூறுதல் பொருத்த முடையதாகத் தோன்றவில்லை.

2. இளையோர்க்குரிய கிளவியில் இடம்பெறுதற்குரிய பொருள்களுள் ஆற்றது பண்பும் ஆற்றிடைக்கண்ட பொருளும் இறைச்சியும் களவின் வழியமைந்த உடன் போக்கிலும் கற்பின் வழியமைந்த ஏனைப்பிரிவுகளிலும் கூறுதற் குரியனவாதலின் இச்சூத்திரம் களவு கற்பு என்னும் இருவகையொழுகலாறுகட்கும் பொதுவாகவமைந்த விதியாகும் என்பதாம்.

தொழிலின் விளைவும் முன்னர் ஏவப்பெற்ற வினையின் முடிவும், இனி யாது செய்ய வேண்டும் என வினவியறிதலும், வினாவப் பட்டவற்றிற்குரிய விடையும், தாம் வரும் வழியிடையே கண்ட பொருள்களும் கருப்பொருள்களின் நிகழ்ச்சியும் தம் கண்ணெதிரே தோன்றுதலமைந்த அவை போல்வன பிறவும் இளை,யோர்க்குரிய கிளவிகளாம் எ—று.

இளையோராவார் பெருமக்கள் சொல்வழியொழுகும் ஏவ லிளைஞர் "யான்கண்டனையர் என் இளையரும்" (புறநா. 191) என்புழி இளையர், என்னும் சொல் ஏவலிளைஞரைக் குறித்து நிற்றல் இங்கு நோக்கத்தகுவதாகும்.

30. **உழைக்குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்**
**நடக்கை யெல்லா மவர்கட் படுமே.**

***இளம்பூரணம் :*** இதுவும் இளையோர்க்குரிய திறன் உணர்த்திற்று.

(இ - ள்.) இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய் காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க் குளதாகிய நடையெல்லாம் இளையோர்கட்படும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க. (30)

***நச்சினார்க்கினியம்:*** இது முற்கூறியவற்றிற்கு உரியார் இங்ஙனஞ் சிறந்தாரென மேலதற்கோர் புறனடை.

(இ-ள்) உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு நடக்கை[1] எல்லாம் - அவரிடத்து நின்று கூறிய தொழில் செய்தலும் போற்றீடு முதலிய பாதுகாவலும் பிறவும் உயர்ந்தோர்க்குச் செய்யும் தொழிற்பகுதியெல்லாம்; அவர்கட்படும்—முற்கூறிய இளையோரிடத்து உண்டாம் எ—று).

என இவ்விரண்டிற்குமுரியர் அல்லாத புறத்திணையர்[2] முற் கூறியவை கூறப்பெறாரென்பது பொருளாயிற்று.

---

1. உயர்ந்தோர்க்கு நடக்கை – உயர்தோர்க்குப் பணிசெய்தலாகிய தொழிற்பகுதி. இது நச்சினார்க்கினியர் கொண்டபாடம்.

2. இவ்விரண்டற்கும் உரியரல்லாதாரைப் புறத்திணையர்எனவே இவ்விரண்டற்கும் உரியராகிய இவ்விளைஞர் அகத்திணையர் என்பது நச்சினர்க்கினியர் கருத்தாதல்புலனாம்.

**ஆய்வுரை:** *இதுவும் அது.*

*(இ—ள்) பக்கத்தேயிருந்து குற்றேவல் புரிதலும், மெய் காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க்கு நாளும் செய்தற்குரிய பணிகள் யாவும் இளையோர்க்குரியனவாய் அடங்கும் எ—று.*

*உழை—பக்கம். குறுந்தொழில்—குற்றேவலாகிய பணி.*

*நடக்கை—நாளும் செய்தற்குரிய பணிகள். அவர் என்பது, மேலே கூறப்பட்ட இளையோரைச் சுட்டி நின்றது.*

31. **பின்முறை ஆகிய பெரும்பொருள் வதுவைத்**
**தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினு**
**மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்**
**இறந்த துணைய கிழவோன் ஆங்கட்**
**கலங்கலு முரியன் என்மனார் புலவர்.**

**இளம்பூரணம் :**

*இது தலைமகற் குரியதொரு மரபுணர்த்திற்று* [1]

*உ - ம் : "இம்மை உலகத் திசையொடும்......*

**அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே" (அகம் 19)**

*எனவரும்.* *(31)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, மேல் அதிகாரப்பட்ட வாயில் பரத்தையிற்பிரிவொடும் பட்டதாகலின் அதுகூறி இனித் தலைவன் பரத்தைமை நீங்குமிடங் கூறுகின்றது.*

*(இ - ள்.) பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவை- மூவகை வருணத்தாரும் முன்னர்த் தத்தம் வருணத்தெய்திய வதுவை*

1. பின்முறையாக்கிய பெரும் பொருள் வதுவை – தலைவியை முதன் முறையாக மணஞ்செய்து கொண்டபின்னர் இரண்டாந்தாரமாக மணந்துகொள்ளப்பட்ட மனைவி.

தொன்முறை மனைவி – முதன்மையாக மணந்து கொள்ளப் பெற்றமையால் தொன்றுதொட்டுவரும் மனையறவுரிமைக்குரிய தலைவி.

எதிர்ப்பாடு' – எதிர்பாராத வகையில் எதிர்ப்பட்டுக் கண்டுகொள்ளுதல்

'இறந்ததுணைய' என இளம்பூரணருரையிற்கண்ட பாடத்தினும் 'இறந்தது நினைஇ' என நச்சினார்க்கினியருரையிற்கண்ட பாடமே பொருட் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

*மனைவியர்க்குப் பின்னர் முறையாற் செய்துகொள்ளப்பட்ட பெரிய பொருளாகிய வதுவை மனைவியரை; தொன்முறை மனைவி, எதிர்ப்பாடாயினும் - பழையதாகிய முறைமையினையுடைய மனைவி விளக்கு முதலிய மங்கலங்களைக் கொண்டு எதிரேற்றுக் கோடற் சிறப்பினும். இன் இழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும் - இனிய பூண்களையணிந்து தொன்முறை மனைவி புதல்வனைக் கோலங்காட்டிய செல்வாள்போலப் பின்முறை வதுவையரிடத்து வாயிலாகக் கொண்டு செல்லினும் கிழவோன் இறந்தது[1] நினைஇ - தலைவன் இங்ஙனம் செய்கையுடைய இருவகைத் தலைவியரையுங் கைவிட்டுப் பரத்தைமை செய்து ஒழுகியவற்றை நினைந்து; ஆங்கட் கலங்கலும்[2] உரியன் என்மனார் புலவர் - அப்பரத்தையர்கண் நிகழ்கின்ற காதல் நிலை குலைந்து மீளுதலும் உரியன் எனக் கூறுவர் புலவர் (எ - று).*

*உம்மை எதிர்மறையாகலான் மீளாமையும்[3] உரித்தாயிற்று; என்னை; இளமைப்பருவங் கழியாத காலத்து அக்காதன் மீளாதாகலின் - பெரும்பொருளென்றார், வேதநூல், அந்தணர்க்குப் பின்முறை வதுவை மூன்றும் அரசர்க்கிரண்டும் வணிகர்க் கொன்றும் நிகழ்தல் வேண்டுமெனக் கூறிற்றென்பது உணர்த்துதற்கு.[4]*

1. 'இறந்தது' என்றது, தலைவன், தன்னைமணந்துகொண்ட தொன் முறை மனைவி பின்முறைமனைவியாகிய இருவகைத் தலைவியரையுங் கைவிட்டுப் பரத்தையரொடு கூடியொழுகிய செய்தியை. நினைஇ—நினைந்து.

2. 'ஆங்கட்கலங்கல்' என்றது, அப்பரத்தையர்கள் நிகழ்கின்ற காதல் நிலை சூலைந்து அவர்களை விட்டு மீளுதலை.

3. 'கலங்கலும்' என்புழி உம்மை எதிர்மறையாதலால், இளமைப்பருவம் சுழியாதகாலத்து அக்காதல் குறையாமையின் பரத்தையரைவிட்டு மீளாமையும் அவனுக் குரியதாயிற்று' எனக் கருத்துரைப்பர் நச்சினார்க்கினியர்.

4. "பின்முறையாக்கிய பெரும் பொருள்வதுவை' என்ற தொடரில் உள்ள 'பெரும் பொருள்' என்பதற்கு 'வேதநூல்' எனப்பொருள்கொண்டு, அந்தணர்க்கு மூன்றும், அரசர்க்கு இரண்டும், வணிகர்க்கு ஒன்றும் ஆகப் பின்முறைவதுவை நிகழும் என வேதநூல் கூறிற்று என்னும் விளக்கம், தொல்காப்பியர் காலத்தில் இல்லாத நால்வகை வருணவேற்றுமையினைப் புகுத்துதலால், பண்டைத்தமிழ்ப் பொருளிலக்கணமரபுக்குச் சிறிதும் ஒவ்வாததாகும்.

5. இனி, இத்தொடரிலுள்ள 'பெரும்பொருள்' என்பதற்கு 'பெருமையமைந்த மகவு' எனப்பொருள் கொண்டு, "இனி மகப்பேறு காரணத்தாற் செய்யும்வதுவை யென்றுமாம்" என நச்சினார்க்கினியர் கூறும் இரண்டாவது பொருளே தொல்காப்பியனார் கருத்துக்கு ஏற்புடையதெனத் தெளிதல் வேண்டும். தாம் பெற்ற மகவினைப் பொருள் என வழங்கும் இம்மரபினைத் 'தம் பொருள் என்ப தம்மக்கள்' (திருக்குறள்—63) எனத் திருவள்ளுவர் தம் முன்னோர் வழங்கும் மரபாக எடுத்தாண் டுள்ளமையும் இங்கு ஒப்புநோக்கி யுணரத் தகுவதாகும்.

*[1]இனி, மகப்பேறு காரணத்தாற் செய்யும் வதுவையென்று மாம். 'ஆக்கிய' வென்றதனானே வேளாளர்க்கும் பின் முறை வதுவை கொள்க. தொன்மனைவி யென்னாது 'முறை' யென்றத னானே அவரும் பெருஞ்சிறப்புச்செய்து ஒரு கோத்திரத்தராய் ஒன்று பட்டொழுகுவரென்பது கூறினார். இங்ஙனந் தொன்முறையார் பின்முறையாரை மகிழ்ச்சிசெய்தமை கண்ட இத் தன்மை யாரை இறந்தொழுகித் தவறுசெய்தேமே யென்றும் பின்முறையார் அவர் புதல்வரைக் கண்டு மகிழ்ச்சி செய்து வாயில் நேர்ந்தகுணம் பற்றி இவரை இறந்தொழுகித் தவறுசெய்தேமேயென்றும் பரத்தைமை நீங்குவனென்றார். 'புகினு' மெனவே பிறர்மனைப் புதல்வரென்பது பெற்றார் [2] தொன்முறை மனைவி எதிர்ப்பட்டதற்கு இலக்கியம் வந்துழிக் காண்க.*

*இனி, பரத்கைமையிற் பிரிவொழிந்து மனைக்கண் இருந்த தற்கு.*

**" மாக ருண்கண் மகன் விளை யாடக்**
**காதலிற் றழீஇ யினிதிருந் தனனே**
**தாதார் பிரச முரலும்**
**போதார் புறவின் நாடுகிழ வோனே."** **(ஐங்குறு 406)**

*இன்னும் இவ்வாறு வருவன பிறவும் உய்த்துணர்ந்து கொள்க (31)*

***ஆய்வுரை :*** *இது, தலைவன் தனது புறத்தொழுக்கின் தீமை நினைந்து உள்ளந் திருந்துமாறு கூறுகின்றது.*

*(இ—ள்) பெரும்பொருளாகிய மக்கட்பேறுகருதிப் பின்பு முறைப்பட மணந்து கொள்ளப்பெற்ற மனைவியரைத் தொன்முறை மனைவியாகிய தலைவி எதிர்ப்பட்ட நிலையிலும், இனிய அணிகலன்களையணிந்த புதல்வனை வாயிலாகக் கொண்டு புக்க*

1. புகுதல்—தொன்முறைமனைவியின் தொழில்.

இத்தொடர், ''புகினும் எனவே பின்முறைவதுவையர் மனைப் புதுவரென்பது பெற்றாம்'' என்றிருத்தல் பொருத்தமாகும்.

*நிலையிலும் தலைவன் தன் தொன்முறை மனைவியையும் பின் முறை மனைவியையும் கைவிட்டுப் பரத்தையரொடு கூடியொழுகிய தன் தவறுணர்ந்து வருந்திப் பரத்தையர்கண் நிகழ்கின்ற வேட்கை நிலைகுலைந்து மீளுதற்கும் உரியன் எ—று.*

*ஈண்டுக் கலங்கல் என்றது, தலைவன் தான் மேற்கொண்ட பரத்தைமையொழுக்கத்தில் வைத்த வேட்கை நிலை குலைதலை*

**32. தாய்போற் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
**கவவொடு மயங்கிய காலை யான.**

**இளம்பூரணம் :** *இது, தலைமகட் குரியதொரு கிளவி யுணர்த்திற்று.*

*(இ—ள்.) காமக்கிழத்தி மாட்டுத் தாய்போற் கழறித்தழீ இக்கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து, கவவால் வருத்த முற்றகாலத்தென்றவாறு; (அஃதாவது) புலவாவழி என்றவாறு.*

*இவ்வாறு கூறுவது தலைமகன் முதிர்ந்தவழி என்று கொள்க[1] உம்மை இறந்தது தழீஇயிற்று.[2]*

**“வயல்வெள் ளாம்பல் சூடுதரு புதுப்பூக்**
**கன்றுடைய புனிற்றா தின்ற மிச்சில்**
**ஓய்விடு நடைப்பக டாரும் ஊரன்**

1. காமக்கிழத்தி தலைமகனால் வருத்தமுற்றகாலத்துத் தாய்போன்று இடித் துரைத்துத் தழுவிக் கொள்ளுதல் மனைக்கிழத்திக்கும் உரியதாகும் என்பதும், இவ்வாறு கழறிக்கூறித் தழுவிக் கொள்ளுதல் காமக்கிழத்தியினும் மனைக் கிழத்தி வயது முதிர்ந்த வளாகிய நிலைமைக்கண் என்பதும் இச்சூத்திரத்திற்கு இளம்பூரணம் கூறும் பொருள் விளக்கமாகும்.

இவ்வுரைத்தொடர் ‘இவ்வாறு கூறுவது தலைமகள் முதிர்ந்தவழி என்று கொள்க என்றிருத்தல் வேண்டும், ‘தலைமகன்முதிர்ந்தவழி’ என்றிருப்பது பிழை.

2. “காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையின்
தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தல்” (கற்பியல்—10)

காமக்கிழத்தியர்க்குரிய அன்புரிமைச் செயலாக முன்னர்கூறப் பெற்றமையின், அத்தகையகெழுதகைமைச்செயல் மனைக்கிழத்திக்கும் உண்டு என ஈண்டுக் கூறுகின்றாராதலின் ‘ஆய்மனைக்கிழத்திக்கும்’ என்புழி ‘உம்மை இறந்த தழீஇயிற்று’ என்றார், இளம்பூரணர்.

**தொடர்புநீ வெஃகினை யாயின் என்சொற்**
**கொள்ளல் மாதோ முள்ளெயிற் றோயே**
**நீயே பெருநலத் தகையே அவனே**
**நெடுநீர்ப் பொய்கை நடுநா ளெய்தித்**
**தண்கமழ் புதுமலர் ஊதும்**
**வண்டென மொழிப மகனென்னாரே.”** **(நற்றிணை. 260)**

*என்பது கொள்க ‘கவவொடு மயங்கிய காலை’ என்பதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.* *(32)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, தலைவி புலவி கடைக் கொள்ளும்[1] காலம் உணர்த்துகின்றது.*

*(இ - ள்.) தாய்போற் கழறித் தழீஇக் கோடல் - பரத்தையிற் பிரிவு நீங்கிய தலைவன் தன்னினும் உயர்ந்த குணத்தினளெனக் கொள்ளுமாற்றான் மேல்நின்று மெய்கூறும் கேளிராகிய தாயரைப் போலக் கழறி அவன் மனக்கவலையை மாற்றிப் பண்டு போல மனங்கோடல்; ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப - ஆராய்ந்த மனையற நிகழ்த்துங் கிழத்திக்கும் உரித்தென்று கூறுப; கவவொடு மயங்கிய காலையான - அவன் முயக்கத்தால் மயங்கிய காலத்து (எ - று.)*

*என்றது, தலைவன் தவற்றிற்கு உடம்பட்டுக் கலங்கினமை கண்ட தலைவி அதற்கு ஆற்றாது தன் மனத்துப் புலவியெல்லாம் மாற்றி இதற்கொண்டும் இனையை யாகலெனத்[2] தழீஇக் கொண்டமை கூறிற்று. தலைவன் தன் குணத்தினும் இவள் குணம் மிகுதிகண்டு மகிழவே தலைவி தன்னைப் புகழ்ந்த குறிப்பு உடைய ளென்பதூஉங் கொள்க.* *(32)*

***ஆய்வுரை :*** *இது தலைவிக்குரியதோர் இயல்புணர்த்து கின்றது.*

*(இ—ள்) ஈன்ற தாயினைப் போன்று தலைவனை இடித்துரைத்து, அவனது மனக்கவலையை மாற்றி அன்பினால் தழுவிக் கொள்ளுதலும் ஆராய்தலையுடைய மனையறக்கிழமை பூண்ட*

1. கடைக்கொள்ளுதல்—முடிதல்; நிறைவுபெறுதல்.
2. இதற்கொண்டும் இனையை ஆகல்––இதனால் வருத்தமுறுவாயல்லையாகுக.

தலைவிக்கும் உரியதாகும் என்பர்; அவன் தன்னை முயங்கி மகிழுங்காலத்து. எ—று.

தாய்போற் கழறித் தழீஇக் கோடல் என்றது, தான் பெற்ற மக்கள் அறியாமையாற் குற்றஞ்செய்தவழி அவர்களை வெறுத்து விலக்காது இடித்துரைத்து, ‘மேலும் இத்தகைய குற்றங்களைச் செய்யற்க’ என்று அறிவுரைகூறி அவர்தம் மனத்துயரைமாற்றி முன்போல் அன்பினால் ஏற்றுக்கொள்ளுதலாகும்.

தன்கணவனுக்கு உண்டாகும் நன்றும் தீதும் ஆராய்ந்து தீதகற்றி நன்றின்பால் ஒழுகும்படி மனையறம் நிகழ்த்தவல்ல மனைவி என்பார். ஆய்மனைக்கிழத்தி, என்றார்.

சுவவொடுமயங்கிய காலை என்றது, தலைவன் மயக்கத்தால் தலைவியுடன் உளங்கலந்து கூடியிருக்கும் காலத்தினை. தாய்போற் கழறுதல் முற்குறித்த வண்ணம் காமக்கிழத்தியர்க் கேயன்றி மனைக் கிழத்தியாகிய தலைவிக்கும் உரியதாகும் என்பார் ‘மனைக்கிழத்திக்கும்’ என உம்மை கொடுத்துக் கூறினார்.

**33. அவன்சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்**
**மகன்தா யுயர்புந் தன்னுயர் பாகுஞ்**
**செல்வன் பணிமொழி இயல்பாக லான.**

**இளம்பூரணம் :** இதுவும் தலைமகட்குரிய கிளவியுணர்த் திற்று. மேலதற்கோர் புறனடை :

(இ - ள்) தலைவனது சோர்வுகாத்தல் தலைமகட்குக் கடனாகலால் தன்மகனுக்குத் தாயாகிய காமக்கிழத்தி யுயர்புந் தன்னுயர்பாகும்; இருவருந் தலைமகன் பணித்த மொழிகோடல் இயல்பாகலான் ; என்றவாறு.[1]

சோர்**வாவது** ஒழுக்கத்திற்சோர்வு. அது பரத்தையிற்பிரிவு. அதனை மறையாது காமக்கிழத்தி யாற்றின் றலைமகற்குக் குறைபாடும் வரும் என்பதனால், அவளை யுயர்த்தி யவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாமை யேற்றுக் கோடல் வேண்டுமெனக் கூறுதலுந் தனக்கு

1. ‘மகன்தாய்’ என்றது, காமக்கிழத்தியை. ‘தன்’ என்றது, தலைவியை, செல்வன்’ என்றது, தலைவனை.

*இழிபு ஆகாது உயர்ச்சியாம் என்றவாறு, இது மேலதற்குக் காரணங் கூறிற்று.* *(33)*

***நச்சினார்க்கினியம் :*** *இதுவுந் தலைவி குணச் சிறப்புக் கூறுகின்றது.*

*(இ-ள்.) அவன் சோர்பு காத்தல் கடன்*[1] *எனப்படுதலின்-தான் நிகழ்த்துகின்ற இல்லறத்தால் தலைவற்கு இழுக்கம் பிறவாமற் பாதுகாத்தல் தலைவிக்குக் கடப்பாடென்று கூறப்படுதலால், மகன் தாய் உயர்பும் தன் உயர்பு ஆகும் - மகன் தாயாகிய மாற்றாளைத் தன்னின் இழிந்தாளாகக் கருதாது தன்னோடு ஒப்ப உயர்ந்தாளாகக் கொண்டொழுகுதல் தனது உயர்ச்சியாம்; செல்வன் பணிமொழி இயல்பு ஆகலான - தலைவன் இவ்வா றொழுகுகவென்று தமக்குப் பணித்த மொழி நூலிலக்கணத்தான் ஆன மொழியாகலான் (எ - று).*

*ஈண்டு 'மகன்றா' யென்றது பின்முறையாக்கிய வதுவை யாளை. இன்னும் அவன் சோர்பு காத்தல் தனக்குக் கடனென்று கூறப்படுதலாலே முன்முறையாக்கிய வதுவையாளைத் தம்மின் உயர்ந்தாளென்றும் வழிபாடாற்றுதலும் பின்முறை வதுவை யாளுக்கு உயர்பாஞ் செல்வன் பணித்த மொழியாலென்றவாறு. ஈண்டு 'மகன்றா' யென்றது உயர்ந்தாளை, உய்த்துக்கொண்டுணர்த லென்னு முத்தியால் இவை யிரண்டும் பொருள்.*[2] *'செல்வ' னென்றார், பன்மக்களையுந் தன்னாணை வழியிலே இருத்துந் திருவுடைமைபற்றி. இவை வந்த செய்யுட்கள் உய்த்துணர்க* *(33)*

---

1. 'அவள் சோர்புகாத்தல்கடன்' என்பது, தொல்காப்பியனார் காலத்து வழங்கிய மூதுரையெனத் தெரிகின்றது.

'அவன் சோர்பு காத்தல் கடன்' என்ற தொடர்ப்பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

எனவரும் திருக்குறளாகும்.

2. 'மகன்தாய்' என்றது, மகனுக்குத் தாயாகிய பின்முறையாக்கிய மனைவியையும், மகன்தாய்உயர்பு என்றதனால், மூத்த மனைவியையும் குறிக்கும் என உய்த்துக் கொண்டுணர்தல் என்னும் உத்தியாற் கொள்வர் நச்சினார்க்கினியர்.

உய்த்துக் கொண்டுணர்தலாவது, ஒன்றற்கு இலக்கணம் கூறியவழி அதனை உய்த்துணர்ந்து கொண்டமைபோலவே அதனையொத்த மற்றொன்றற்கும் அவ்விலக்கணத்தினை

**ஆய்வுரை :** *இது, மேற்கூறியதன்கண் எழுவதோர் ஐயம் அகற்றுதல் நுதலிற்று.*

*(இ—ள்) தலைவனது வாழ்க்கையிற் சோர்வு பிறவாமற் காத்தல் வாழ்க்கைத்துணைவியாகிய தலைவியின் கடமையென நூல்களிற் கூறப்படுதலால் தாய் போன்று தலைவனை இடித்துரைக்கும் உயர்வினை மகனைப்பெற்ற தலைவி பெற்றிருத்தலும் தலைவனது உயர்ச்சியாகவே கருதப்பெறும் : எல்லாச் செல்வங்களுக்கும் உரிமையுடையனாகிய தலைவன், தன்பால் அன்புடையார்கண் பணிந்த மொழியினனாக ஒழுகுதல் அவனுக்குரிய இயல்பாகலான் எ—று.*

*'செல்வன் பணிமொழி இயல்பாகலான், மகன்தாய் உயர்பும் தன் உயர்பாகும்' என இயையும். 'செல்வன் பணிமொழி இயல் பாகலான' எனவரும் இத்தொடர்ப்பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்ததே,*

**'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து'** (125)

*எனவரும் திருக்குறளாகும். குற்றங்கண்ட நிலைமைக்கண் தாய்போல முன்னின்று கண்டித்தற்குரிய தகுதி மனைவிக்கும் உண்டு என்பதனை வற்புறுத்துவார், 'மனைக்கிழத்தி' என்னாது 'மகன்தாய்' எனத் தாயாந் தன்மையினைக் குறித்தார். 'தன்னுயர் பாகும்' என்புழித் 'தன்' என்றது தலைவனை.*

## 34. எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்.[1]

**இளம்பூரணம் :** *இது தலைமக்கட் குரியதொரு மரபு உணர்த்திற்று.*

*(இ—ள்.) நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு.*

---

உய்த்துணர்ந்து கொள்ளுதல். 'மகன்தாய்' எனப் பின் முறையாக்கிய மனைவிக்குரிய உயர்பினை ஏற்றுக்கொள்ளுதல் தலைவிக்குரிய உயர்பாதலோடு பின்முறையாக்கிய மனைவியும் முன்முறைமணந்த தலைவிக்கு உரிய உயர்பினை ஏற்றுக்கொள்ளுதல் உயர்பாகும் என உய்த்துக்கொண்டுணர்ந்தவாறு காண்க.

1. ஈண்டுப் 'பெண்' என்றது, அகன்ஐந்திணை யொழுகலாற்றுக்குரிய காதல் மகளிரை.

*நினைத்தற்கருமை - மாற்றாரை வெல்லுங் கருத்து மேற் கோடலிற் றலைமகளிரை நினைக்கலாகாதாயிற்று. 'பாசறை என விசேடித்தவதனால் ஏனைப் பிரிவுக்குமாமென்று கொள்க. (34)*

***நச்சினார்க்கினியம் :*** *இஃது எய்தியது விலக்கிற்று; 'முந்நீர் வழக்கம்' (தொல். அகத். 34) என்பதனாற் பகைதணி வினைக்குங் காவற்குங் கடும்பொடு*[1] *சேறலாமென்று எய்தியதனை விலக்கலின்.*

*(இ - ள்) எண் அரும் பாசறை - போர் செய்து வெல்லுமாற்றை எண்ணும் அரிய பாசறையிடத்து; பெண்ணொடு புணரார்- தலைவியரொடு தலைவனைக்கூட்டிப் புலநெறிவழக்கஞ் செய்யார் (எ - று)* [2]*.*

*இரவும் பகலும் போர்த்தொழின் மாறாமை தோன்ற அரும் பாசறை யென்றார்.*

**"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"**
**(பத்து. நெடுநல். 186 - 188)**

*எனவும்,*

**"ஒருகை பள்ளி யொற்றி யொருகை**
**முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிது நினைந்து"**
**(பத்து-முல்லை. 75, 76)**

*எனவும் வருவனவற்றான் அரிதாக உஞற்றியவாறு காண்க.*

*இனிக் காவற்பிரிவுக்கு முறைசெய்து காப்பாற்றுதலை எண்ணு மெனப் பொருளுரைக்க.* [3] *(34)*

1. கடும்பு – சுற்றம்; மனைவிமுதலிய சுற்றத்தார்.

2. 'எண்ணரும் பாசறை' என்ற தொடருக்குப் பகைதணிவினையாகிய பிரிவிற் கேற்ப உரையிற்பொருள் வரையப்பட்டது. இனிக் காவற்பிரிவிற்கேற்ப உரை வரையுங்கால், 'முறை செய்து காப்பாற்றும் நெறிமுறைகளை எண்ணும் அரிய பாசறையிடத்து' எனப்பொருளுரைக்க என்பதாம்.

3. 'பெண்ணொடுபுணரார்' என்ற தொடர்க்கு, 'தலைவியரொடு தலைவனைக் கூட்டிப் புலனெறிவழக்கஞ்செய்யார்' எனப் புலனுடைமாந்தர் செயலாகப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். புணர்த்தல் – பாசறையிடத்துத்தலைவனுந் தலைவியும் உடனிருந்தாராகச் சேர்த்துச் செய்யுள் செய்தல். புணரார் – சேர்த்துச் செய்யுள் செய்யார். புணரார் என்னும் பயனிலைக்கு எழுவாயாக நல்லிசைப் புலவர் என்பதனை இயைத்துப் பொருள்கொள்க.

**ஆய்வுரை :** இது போர்த்தொழில் மேற்கொண்ட தலை மக்கட்கு உரியதோர் இயல்புணர்த்துகின்றது.

(இ-ள்) பகைவரைவென்றடக்குதற்குரிய நெறிமுறைகளை ஆராய்தற்குரிய அரிய இடமாகிய பாசறையின்கண் மகளிரொடு உள்ளம் பொருந்தார் (தலைமக்கள்) எ—று.

போர்க்களத்தில் தம் படைமறவர்களும், யானை குதிரையாகிய சேனைகளும் ஆற்றிய போர்ச் செயல்களையும் அவற்றால் இருதிறப்படைகளுக்கும் ஏற்பட்ட அழிவுகளையும் எண்ணிப் பகைவரை வென்றடக்குதற்கு இனி நாம் மேற்கொள்ள வேண்டிய நடை முறைகள் யாவையென மனம் ஒன்றி ஆராய்ந்து துணிதற்குரிய இடமாய் நாட்டுமக்களின் எதிர்கால வாழ்க்கையினை உருவாக்கும் அருமையுடையது பாசறையாதலால், அத்தகைய சூழ்ச்சித்திறத்திற்கு இடனாயமைந்த பாசறைக்கண்ணே உள்ளத்தையீர்க்கும் காதல் மகளிரொடும் மனத்தால் பொருந்துதலும் உடனுறைதலும் கூடார் என அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது இச்சூத்திரமாகும்.

போரிற் பகைவரை வெல்லுதற்குரிய நெறிமுறைகளை எண்ணி ஆராய்தற்குரிய அருமையுடையது பாசறை என்பதனை,

**மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது**
**எடுத்தெறியெஃகம் பாய்தலிற் புண் கூர்ந்து**
**பிடிக்கண மறந்த வேழம், வேழத்துப்**
**பாம்புபதைப்பன்ன பரூஉக்கை துமியத்**
**தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்**
**சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியும், தோல்துமிபு**
**வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்**
**துண்ணா துயங்கு மா சிந்தித்தும்,**
**ஒருகை பள்ளியொற்றி யொருகை**
**முடியொடுகடகஞ்சேர்த்தி நெடிதுநினைந்து**
**பகைவர்ச் சுட்டிய படைகொள்நோன்விரல்**
**நகைதாழ் கண்ணி நல்வலந்திருத்தி**
**அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை"**

**(முல்லைப்பாட்டு 67-78)**

என நப்பூதனாரும்,

**"ஓடையொடுபொலிந்த வினைநவில்யானை**
**நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்**
**களிறு களம்படுத்த பெருஞ்செய் யாடவர்**
**ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து**
**வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்**
**தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்**
**பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல**
**வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு**
**முன்னோன் முறைமுறை காட்டப்பின்னர்**
**..............................................................................**
**நூல்கால் யாத்த மாலைவெண் குடை**
**தவ்வென் றசைஇத் தாதுளிமறைப்ப**
**நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத்தொழிலே."**

**(நெடுநல்வாடை-169-188)**

*என நக்கீரனாரும் கூறிய பாசறை நிகழ்ச்சிகள், 'எண்ணரும் பாசறை' எனவரும் இத்தொல்காப்பியத் தொடர்க்கு உரிய விளக்கமாக அமைந்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத்தகுவதாகும்.*

*மனைவாழ்க்கைக்குரிய பெண்மைத் தன்மையினராய மகளிர் என்பதுபடப் 'பெண்' என்றார். புணரார் என்புழிப் புணர்தல் என்னுஞ்சொல் இணைவிழைச்சினைச் சுட்டாது மனத்தாற்பொருந்து தலைச் சுட்டிநின்றது.*

**35. புறந்தோ ராங்கட் புணர்வ தாகும்.**

---

1. இந்நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'புணர்வது' என்னுஞ் சொல்லுக்குப் 'புணர்ச்சி பொருந்துவது' என இளம்பூரணர் கூறும் பொருள், மாற்றாரை வெல்லும் வழிதுறைகளைக் கூர்ந்து ஆராயும் ஆராய்ச்சியினை மேற்கொண்டுறையும் பாசறைச் சூழலுக்கு ஏற்றதாக அமைய வில்லை. இங்குப்புறத்தோர் என்றது பரத்தையரைச் சுட்டாது. போர்த்தொழிலுக்கு உதவி புரியும் புறத்திணைக்குரிய மறமுடைய புறப்பெண்டிரைக் குறிக்குமெனக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

'புறத்தோராங்கட் புரைவதென்ப' என நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் இக் கருத்துக்கு ஏற்றதாக அமைந்துள்ளமையும் இங்கு நினைத்தற்குரியதாகும். புரைவது—பொருந்துவது,

***இளம்பூரணம் :*** *இது மேலதற்குப் புறனடை.*

*(இ—ள்) மேற் சொல்லப்பட்ட பாசறைக்கட் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது என்றவாறு.*

*பொருந்துவது என்றதனாற் கூட்டமென்று கொள்க. அவராவார் தாதியருங் கணிகையரும்.*

**35. புறத்தோர் ஆங்கண் புரைவ தென்ப**

***நச்சினார்க்கினியம்:*** *இஃது எய்தியது இகந்து படாமற் காத்தது.*

*(இ-ள்) புறத்தோர் ஆங்கண்- அடியோரும் வினைவலயாங்கி னோருமாகிய அகப்புறத் தலைவருடைய [1] பாசறையிடத்தாயில்; புரைவது என்ப-அவரைப் பெண்ணோடு புணர்த்துப் புலனெறி வழக்கஞ் செய்தல் பொருந்துவது என்று கூறுவர் ஆசிரியர் (எ-று).*

*இப் பாசறைப்பிரிவை வரையறுப்பவே ஏனைப் பிரிவுகளுக்குப் புணர்த்தலும் புணராமையும் புறத்தோர்க்கு வரைவின்றாயிற்று.*

***ஆய்வுரை:*** *இது, மேற்கூறியதற்தோர் புறனடை கூறுகின்றது.*

*(இ—ள்) புறத்திணைப் பணிகளுக்குரிய பெண்டிராயின் பாசறையில் தங்கியிருத்தல் பொருந்துவதாகும் என்பர் ஆசிரியர் எ-று.*

*புறத்தோர் என்றது. மனைவாழ்க்கையாகிய அகத்திணைத் தொடர்பின்றி போர்த்தொழிலுதவியாகியபுறத்திணைப்பணியினை மேற்கொண்ட புறப்பெண்டிரை. போரிற் புண்பட்ட வீரார்க்கு மருந்திட்டுப் பேணுதலும் பாதுகாத்தலும், எண்ணெய்ப்பீலி ஏந்திக் கையிற் பந்தங் கொண்டு பாசறையில் விளக்கேற்றி அவை இரவு முழுவதும் அவியாமற் பார்த்துக் கொள்ளுதலும் முதலாகவுள்ள போர்த்தொழிலுதவிப் பணிகள் பாசறையில் உறையும் புறப் பெண்டிர்க்குரியனவாகும். பாசறையிற் புறப்பெண்டிர்க்குரிய பணிகள் சிலவற்றை,*

---

1. புறத்தோர் — அகன் ஐந்திணை யொழுகலாற்றுக்கு உரியரல்லாத அடியோர், வினை வலபாங்கினோர், ஏவன்மரபின் ஏனோர் ஆகிய அகப்புறவொழுக லாற்றுக்குரிய மாந்தர்கள்.

புறத்தோர் ஆங்கண்—அகப்புறத் தலைவருடைய பாசறையிடத்து. புரைஎது—பெண்ணொடு சேர்த்துப்புலனெறி வழக்கஞ்செய்தல் பொருந்துவது.

**“குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்**
**திரவுபகற் செய்யுந் திண்பிடியொள்வாள்**
**விரவுவரிக் கச்சிற் பூண்டமங்கையர்**
**நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇ**
**கையமை விளக்கம் நந்துதொறு மாட்ட”**

**(முல்லைப்பாட்டு—45-49)**

என நப்பூதனார் விரித்துக் கூறியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

‘புரைவதென்ப’ என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். புரைவது—பொருந்துவது. ‘புணர்வதென்ப’ எனப்பாடங் கொண்டு, ‘பாசறைக்கட் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது’ எனப் பொருள் வரைந்து ‘அவராவார் தாதியருங்கணிகையரும்’ என விளக்கம் தருவர் இளம்பூரணர். மாற்றார் சேனைகளை வென்றடக்கும் போர்த்தொழிற் றிறங்களைக் கூர்ந்து சிந்தித்து ஆராய்தற்கு நிலைக்களைமாகிய அரிய பாசறையிலே அவ்வாராய்ச்சிக்கு ஊறுவிளைக்கும் நிலையில் காமமயக்கத்தை விளைக்கும் கணிகையரொடும் தாதியரொடும் கூடிக் காமநுகர்தல் என்பது எவ்வாற்றானும் பொருந்தாது. எனவே இங்குப் புறத்தோர் எனச்சுட்டப்பட்டோர் போர்த்தொழிலுதவிப்பணி மகளிராகிய வீரப்பெண்டிர் எனக் கொள்ளுதலே ஏற்புடையதாகும். ஆகவே, ‘புணர்வது’ என்னும் பாடத்திற்கும் ‘பொருந்துவது’ எனப்பொருள் கொள்ளுதலே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும்.

இனி, ‘புறத்தோர். என்பதற்கு “அடியோரும் வினைவல பாங்கினோரும் ஆகிய அகப்புறத்தலைவருடைய பாசறையிடத்தாயின் அவரைப் பெண்ணொடு புணர்த்துப் புலனெறி வழக்கஞ் செய்தல் பொருந்துவது” என நச்சினார்க்கினியர் கூறும் பொருளும், பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை; உலகியலிற்புறத் திணை யொழுகலாறாகிய போர்த்தொழில் நிகழ்த்தும் தலைவர்களை அன்பினைந்திணைக்குரிய தலைவர்கள் என்றும் கைக்கிளை பெருந்திணைக்குரிய அகப்புறத்தலைவர் என்றும் பிரித்துக்கூறல் மரபின்மையானும், பாசறையில் உள்ளோர் யாவராயினும் தாம் பகைவரை வென்றடக்குதற்குரிய போர்த்திறங்களை ஆராய்தற்குரிய பாசறையில் அகவாழ்க்கைக்குரிய மகளிரொடு தங்கியிருத்தலோ

*அவர்களை மனத்தால் எண்ணுதலோ கூடாதென அறிவுறுத்தலே மேலைச் சூத்திரத்தின் நோக்கமாதலானும் ஈண்டுப் 'புறத்தோர்' என்றது அகவாழ்க்கை யுணர்வின்றிப் போர்த் தொழிலுதவியாகிய புறத்திணைக் கடமையினை மேற்கொண்டுள்ள வீர மகளிரைக் குறித்தது எனக் கொள்ளுதலே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்துக்கும் சங்க விலக்கியங் கூறும் போர் நெறி மரபிற்கும் ஏற்புடையதாகும்.*

**36. காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலுங்**
**கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்***
**ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்**
**செலவுறு கிழவியும் செலவழுங்கு கிளவியும்**
**அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய.**

***இளம் பூரணம் :*** *இது, பார்ப்பார்க்குரிய கிளவி யுணர்த்திற்று.*

*(இ—ள்.) காமநிலை யுரைத்தலாவது—நீ பிரியின் இவள் காமமிகும் என்று கூறுதல்.*

*"அறனின்றி அயல்தூற்றும் அம்பலை" என்பதனுள்.*

**"உடையிவ ளுயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல**
**இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை**
**கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை**
**அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன" (கலித். 3)**

*எனவரும்.*

*தேர்நிலை யுரைத்தலாவது—ஆராய்ச்சி நிலையாற் கூறுதல்.*[1] *அது வருமாறு:-*

**"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு......**
**முயன்று செய்பொருளே" (கலி--7)**

*கிழவோன் குறிப்பினை யெடுத்துக் கூறலும் என்பது–தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறலும் என்றவாறு.*

---

* எடுத்தனர் மொழிதலும் பா. வே.

1. தேர்தல்—ஆராய்தல்

*ஆவொடு பட்ட நிமித்தங் கூறுதலும் என்பது—ஆவொடு பட்டநிமித்தங் கூறலும் என்றவாறு. 'பட்ட நிமித்தம்' என்றதனால் எல்லா நிமித்தமுங் கொள்க.*

*செலவுறு கிளவி என்பது—செலவுற்ற சொல்லும் என்றவாறு. அஃதாவது தலைமகன் போயினான் என்று கூறுதல் இவற்றிற்கு இலக்கியம் வந்தவழிக் காண்க.*

*செலவழுங்கு கிளவி என்பது—செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல்.*

**"நடுவிகந்தொரீஇ......அதுமனும் பொருளே" (கலித்.8)**

*எனவரும்.*

*இவை பார்ப்பார்க்குரிய வென்றவாறு. 'ஒருபாற்கிளவியேனைப் பாற்கண்ணும்' (பொருளியல் - 27) வரும்என்பதனால் தோழி மாட்டும் பாங்கன் மாட்டும் கொள்க.*[1] *(36)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, பார்ப்பார்க்குரிய கிளவி கூறுகின்றது.*

*(இ—ள்.) காமநிலை உரைத்தலும்—தலைவனது காமமிகுதி கண்டு இதன் நிலை இற்றென்று இழித்துக் கூறுவனவும்; தேர்நிலை உரைத்தலும் — அங்ஙனங் கூறி அவன் தேருமாறு ஏதுவும். எடுத்துக் காட்டுங் கூறலும்; கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும் - தலைவன் தாழ்ந்தொழுகியவற்றை அவன் குறிப்பான் அறிந்து வெளிப்படுத்தி அவற்கே கூறுதலும்; ஆவொடுபட்ட நிமித்தம் கூறலும்—வேள்விக்கபிலை பாற்பயங்குன்றுதலானுங், குன்றாது கலநிறையப் பொழிதலானும்; உளதாய நிமித்தம் பற்றித் தலைவற்கு வரும் நன்மை தீமை கூறுதலும்; செலவுறு கிளவியும்—அவன் பிரியுங்கால் நன்னிமித்தம் பற்றிச் செலவு நன்றென்று கூறுதலும்; செலவு அழுங்கு கிளவியும்–தீயநிமித்தம் பற்றிச் செலவைத்*

1. ஒருபாலின்கண் வைத்துக்கூறிய பொருளின்தன்மை ஏனைய பாலின்கண் ஒத்துவரும் திறத்தினதே வழக்குநெறி' என்ற பொருளியல் விதிப்படி பார்ப்பார்க்கு உரியனவாக இந்நூற்பாவிற் கூறப்பட்ட கிளவிகள் தோழிக்கும் பாங்கனுக்கும் உரியனவாகவும் கொள்ளப்படும் என்பது இளம்பூரணர் கருத்தாகும்.

*தவிர்த்துக் கூறுதலும்; அன்ன பிறவும் அவை போல்வன பிறவும்; பார்ப்பார்க்கு உரிய–அந்தணர்க்கு[1] உரிய (எ—று.)*

*'தேர்நிலை' யென்றதனால் தேர்ந்து பின்னும் கலங்கினுங் கலங்காமல் தெளிவுநிலை காட்டலுங் கொள்க. 'அன்னபிறவும் என்றதனான். அறிவர் இடித்துக் கூறியாங்குத் தாமும் இடித்துக் கூறுவனவும், கொள்க. 'மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியா ததனை முட்டின்று முடித்தல்' என்பதனாற் களவியலிற் கூறாதனவும் ஈண்டே கூறினார். அஃது இப்பேரறிவு உடையையாயின் இனையையாகற்பாலை யல்லையெனக்காமநிலை யுரைத்தலுங் கற்பினுள் "இல்லிருந்து மகிழ்வோற் கில்லையாற் புகழே"§ எனத் தலைவன் நினையுமாற்றாற் காமநிலை யுரைத்தலும் அடங்கிற்று. ஏனையவற்றிற்கும் இருவகைக் கைகோளிற்கும் ஏற்பன கொணர்ந்து ஒட்டுக 'பார்ப்பான் பாங்கன்" என உடன் கூறினமையிற் பாங்கற்கும் ஏற்பனவும் கொள்க. இவையெல்லாந் தலைச்சங்கத்தாரும் இடைச் சங்கத்தாருஞ் செய்த பாடலுட் பயின்ற போலும். இக்காலத்தில் இலக்கியமின்று பாங்கன்[2] கூறுவன 'நோய்மருங் கறிநரு' ளடக்கிக் கொண்டு எடுத்து மொழியப்படுதலன்றிக் கூற்று அவண் இன்மை உணர்க. அது,*

---

1. அகத்திணையொழுகலாற்றுக்குரிய வாயில்களுள்ஒருவராகிய பார்ப்பார்க்குரிய தொழில்களை அவரின் வேறுபட்டுயர்ந்த அந்தணர்க்கு உரியனவாகக் கூறுதல் பொருந்தாது, பார்ப்பார் என்போர் இல்லறத்தினின்றொழுகுவோர்.

அந்தணர் என்போர் எவ்வுயிர்க்கும் அருளாளராய்த் துறவறத்தில் நின்றொழுகும் அறவோராவர். எனவே இங்குப் பார்ப்பார் என்பதற்கு 'அந்தணர்' எனப் பொருளுரைத்தல் பொருந்தாதெனத் தெளிதல் வேண்டும்.

> "அந்தணர்திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்
> அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
> ஒழுக்கங் காட்டியகுறிப்பினும்"
>
> (தொல் – கற்பியல் – 5)

எனத் தொல்காப்பியனாரும்,

> அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மைபூண் டொழுகலான்

எனத்திருவள்ளுவரும் அந்தணரைக்குறித்துக்கூறும் இலக்கணங்கள் இங்கு மனங் கொள்ளத் தக்கனவாகும்.

2. 'பாகன்' என்றிருத்தல் பொருத்தமாகும்.

**"வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனும்**
**நீட்டித்தா யென்று கடாங்கடுந் திண்டேர்**
**பூட்டு விடாஅ நிறுத்து"** **(கலி. 66)**

*எனவும் வரும்.*

*இன்னும் சான்றோர் கூறிய செய்யுட்களில் இது போல வருவன பிற அனைத்தும் உய்த்துணர்ந்து கொள்க. (36)*

***ஆய்வுரை :*** *இது, பார்ப்பார்க்குரிய கிளவிகளைத் தொகுத்துக் கூறுகின்றது.*

*(இ—ள்) காதலரிடையே வேட்கை நிலையினை எடுத்துரைத்தலும் தலைவன் ஊர்ந்து வரும் தேரின் நிலைமையைக் கூறுதலும், தலைவனது உள்ளக்குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறுதலும், பசு முதலாகப் பொருந்திய நன்னிமித்தங்களை உணர்ந்து கூறுதலும், தலைமகன் பிரிந்து சென்ற செய்தியைக் கூறுதலும், பிரியக்கருதிய தலைவனை நோக்கி, நீ செல்லாது சில நாட்கள் தாமதித்தல் வேண்டும் எனக்கூறுதலும் அவைபோல்வனபிறவும் பார்ப்பார்க்குரிய கூற்றுக்களாகும். எ-று.*

*செலவு அழுங்குதல்- பிரிந்து செல்லக்கருதிய தலைவன் உடனே புறப்படாது சிலநாட்கள் தாமதித்தல். தேர்நிலையுரைத்தல் என்பதற்கு 'ஆராய்ச்சி நிலையாற் கூறுதல்' என இளம்பூரணரும், 'தலைவன் தேருமாறு ஏதுவும் எடுத்துக்காட்டுங்கூறல்' என நச்சினார்க்கினியரும் பொருள் கொள்வர். நல்லது தேர்ந்து கொள்க.*

**37. எல்லா வாயினும் இருவர் தேஎத்தும்**
**புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப.**

***இளம்பூரணம்:*** *இது வாயில்கட் குள்ளதொரு மரபு உணர்த்திற்று.*

*(இ—ள்) வாயில்கள் எல்லாம் இருவர் மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடைய என்றவாறு.* [1]

*இருவராவார் தலைவனுந் தலைவியும். எனவே வெகுட்சிப் பொருண்மை கூறப்பெறார் என்றவாறு. (37)*

1. 'எல்லாவாயினும்' என்பது எழுவாய், 'மகிழ்ச்சிப் பொருள' என்பது பயனிலை. மகிழ்ச்சிப்பொருள – மகிழ்ச்சிப் பொருண்மையையுடையன. இருவர் தேஎத்தும்–இருவரிடத்தும். தேம் – இடம்.

***நச்சினார்க்கினியம்:*** *இது வாயில்களின் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ-ள்) எல்லாவாயிலும்—பார்ப்பான் முதலிய வாயில் களெல்லாம்; இருவர் தேஎத்தும் புல்லிய–தலைவன் கண்ணுந் தலைவிகண்ணும் பொருந்திய; மகிழ்ச்சிப் பொருள் என்ப- மனமகிழ்ச்சிப் பொருளினை நிகழ்த்துதலைத் தமக்குப் பொருளாகவுடையர் (எ—று).*[1]

*எனவே, மகிழ்ச்சி கூறப்பெறாராயிற்று,*[2] *புல்லிய, என்றதனானே விருந்தும் புதல்வரும் ஆற்றாமையும் வாயிலாகுப என்று கொள்க. வாயில்கள் "தோழி தாயே" (தொல்,பொருள், 193) என்பதனுட் கூறுப. உதாரணம் வந்துழிக் காண்க.(37)*

***ஆய்வுரை:*** *இது வாயில்கள் எல்லார்க்கும் உரிய பொது விலக்கணம் கூறுகின்றது.*

*(இ-ள்) மனைவாழ்க்கைக்கண் கணவன் மனைவி என்னும் இருவர்க்குமிடையே பழகும் தோழி முதலிய வாயில்கள் எல்லோரும் அவ்விருவர்பாலும் பொருந்தி அமையவேண்டிய மகிழ்ச்சியைப் பொருளாகக்கொண்டே உரையாடுதற்கு உரியர் எ—று.*

*புல்லுதல்– பொருந்துதல், மகிழ்ச்சிப் பொருள்– மகிழ்ச்சியைப் பொருளாகவுடையன.*

*பிரிவிடையாற்றாளாகிய தலைமகளை வாயில்கள் ஆற்றுவிக்கு மாறு உணர்த்தும் நிலையிலமைந்த*

**"எல்லாவாயிலும் இருவர்தேஎத்தும்**
**பல்லாற்றானும் வன்புறை குறித்தன்று"** **(இறையனார்-53)**

1. பார்ப்பான் முதலிய எல்லாவாயில்களும் தலைவன் தலைவி என்னும் இரு வரிடத்தும் பொருந்திய மனமகிழ்ச்சியைப் பொருளாகக் கொண்டு கூற்று" நிகழ்த்தற்குரியர் என்பார், 'இருவர்தேஎத்தும் புல்லிய மகிழ்ச்சிப் பொருள், என்றார். புல்லுதல் பொருந்தல்.

2. மனமகிழ்ச்சிப்பொருளினை நிகழ்த்துதலைப் பொருளாகவுடையர். எனவே அத்தகைய மகிழ்ச்சியினைத் தம் கூற்றுக்களில் வைத்துப் பலர்க்கும் வெளிப்படக் கூறப்பெறார் என்பது புலப்பட "எனவே மகிழ்ச்சி கூறப்பெறாராயிற்று" எனக் கருத்துரைவரைந்தார் நச்சினார்க்கினியர்.

எனவரும் இறையனார் களவியற் சூத்திரம் இத்தொல்காப்பியச் சூத்திரத்தைச் சொற்பொருள் வகையால் அடியொற்றி யமைந்துள்ளமை இங்கு ஒப்புநோக்கற்பாலதாகும்.

**38. அன்புதலைப் பிரிந்த [1] கிளவி தோன்றின சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்.**

***இளம்பூரணம்:*** இது மேலதற்கொரு புறனடை.

*(இ—ள்) வாயில்கண் மகிழ்ச்சிப் பொருண்மை கூறுதலன்றியன்பு நீங்கிய கிளவி கூறினாராயிற் றலைவன் சிறைப்புறத்தானாகப் பெறுவர் எனச் சொல்லுவர் என்றவாறு.*

*இதுவும் ஓரிலக்கணங் கூறியவாறு.*

***நச்சினார்க்கினியம்:*** *இது, மகிழ்ச்சிப் பொருளன்றி வாயில்கள் இவ்வாறு கூறப்பெறுவர் என்றலின் எய்திய திகந்துபடாமற் காத்தது.*

*(இ—ள்) அன்பு தலைப்பிரிந்த கிளவி [2] தோன்றின்- அன்பு இருவரிடத்தும் நீங்கிய கடுஞ்சொல் அவ் வாயில்களிடத்துத் தோன்றுமாகில்; சிறைப்புறங் குறித்தன்று என்மனார் புலவர்— ஒருவர்க்கொருவர் சிறைப்புறத் தாராகக் [3] கூறல்வேண்டு மென்று கூறுவர் புலவர் (எ—று).*

*'தோன்றி' னென்பது படைத்துக் கொண்டு கூறுவரென் பதாமாகலின், 'குறித்தன்று' என்பது 'போயின்று' என்பதுபோல றகரம் ஊர்ந்த குற்றியலுகரம் "அறியாமையின், என்னும் (50) நற்றிணைப்பாட்டும் உதாரணமாம்; அது சிறைப் புறமாகவுங் கொள்ளக் கிடந்தமையின். (38)*

***ஆய்வுரை:*** இது, மேலதற்கோர். புறனடை.

1. தலைப்பிரிதல்—நீங்குதல். 'பண்பிற் றலைப்பிரியாச் சொல் (திருக்குறள் 97) என்புழி இச்சொல் இப்பொருளிற் பயின்றுள்ளமை காண்க.

2. அன்புதலைப்பிரிந்த கிளவி – அன்புநீங்கிய கடுஞ்சொல். 'தோன்றின்' என்னும் செயினென்வாய்பாட்டுவினையெச்சம் அவ்வாயில்கள்பால் அன்பு நீங்கிய கடுஞ்சொல் தோன்றாது என்பதனையும், அன்புநீங்கியது போன்று படைத்துக் கொண்டு கூறுவர் என்பதனையும் புலப்படுத்தி நின்றது.

3.. சிறைப்புறமாவது, தம்கூற்றினைக்கேட்டற்குரியவர்கள் தம்முன்னிலை யிலன்றித் தடுப்பமைந்த வேறோரிடத்தில் மறைந்து நின்ற நிலை. 'குறித்தன்று என்பது ஒன்றன்பாலுணர்த்தும் இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று.

*(இ—ள்) தலைவன் தலைவியாகிய அவ்விருவரிடத்தும் அன்பு நீங்கிய கடுஞ்சொற்களைக் கூறவேண்டிய இன்றியமையாமை நேர்ந்தால், அக்கூற்று நேர்நின்று கூறப்படாது, சிறைப்புறமாகக் கூறும் குறிப்பினதாக அமைதல் வேண்டும் எ—று.*

*தோன்றின் என்னும் செயின் என்னும் வாய்பாட்டு வினை யெச்சம் அங்ஙனந்தோன்றுதல் அரிது என்பதனைப்புலப்படுத்தியது, குறித்தன்று- குறித்தது.*

**வன்புறை குறித்த கிளவியெல்லாம்**
**அன்புதலைப்பிரிந்த கிளவிதோன்றின்**
**சிறைப்புறங்குறிததன் றென்மனார் புலவர்.**

**(இறையனார் -53)**

*எனவரும் இறையனார் களவியற் சூத்திரம் இத்தொல்காப்பிய நூற்பாவை அவ்வாறே தன்னகத்து எடுத்தாண்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணர்தற்குரியதாகும்.*

**39. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்**
**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை**
**முற்பட வகுத்த இரண்டலங் கடையே.**

**இளம்பூரணம்:** *இது தலைவிக் குரியதோர் மரபுணர்த்திற்று.*

*(இ—ள்) தலைவன் முன்னர்த் தன்னைப் புகழுங் கூற்று எவ்வழியானுங் கிழத்திக்கு இல்லை; முற்படக் கூறிய இரண்டிடமும்[1] அல்லாத வழி யென்றவாறு.*

*அவையாவன தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலுந் தெளித்தலும் என அகத்திணையியலுட் கூறிய இரண்டும். அவ்வழிப் புகழ்தலாவது:*

**ஒரூஉநீ எம்கூந்தல் கொள்ளல் யாம் நின்னை**
**வெரூஉதுங் காணுங் கடை"** **(கலித்.78)**

---

1. முற்பட வகுத்த இரண்டாவன.

"பரத்தையின் அகற்சியிற் பரிந்தோட்குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இருவகை" (அகத்திணை – 33) என அகத்திணையியலிற் கூறப்பட்ட இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டுமாகும்.

*என்றவழித் தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்; நின்னை வெருவாதார் பிறர் என்னும் உள்ளக்கருத்தினால்.*

**“நீ கூறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி**
**யார்மேல் விளியுமோ கூறு”** **(கலித். 88)**

*என்றவழியும் பெண்டிர் பலர் உளராயினும் அவர் எல்லார் மாட்டுஞ் செல்லாது தன்மேல் வருமெனக் குறித்தாளாதலின், தன்னைப் புகழ்ந்தாளாம். பிறவுமன்ன.*

***நச்சினார்க்கினியம்:*** *இது, தலைவியிலக்கணங் கூறுகின்றது.*

*(இ-ள்) தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்—தன்னைப் புகழ்ந்துரைத்தலைக் கிழவன் முன்னர்ச் சொல்லுதல்; எத்திறத்தானுங் கிழத்திக்கு இல்லை-நனிமிகு சீற்றத்துனியினும் தலைவிக்கு இல்லை; முற்பட வகுத்த இரண்டலங்கடையே-முன்பு கூறுபடுத்தோதிய ‘தாய்போற் கழறித் தழீஇக் கோடலும்’ ‘அவன் சோர்பு காத்தற்கு மகன்றா யுயர்பு தன்னுயர் பாதலும்’ அல்லாவிடத்து (எ-று).*

*கிழத்திக்கில்லையென முடிக்க, அவ்விரண்டிடத்துந் தனது குணச்சிறப்பைக் குறிப்பால் தலைவன்முன்னே புகழ்வாள்போல ஒழுகினாளென் றுணர்க.*

*இனி ‘முற்படவகுத்த இரண்டு’ என்பதற்கு, ‘இரத்தலுந் தெளித்தலும்’ (தொல். அகத் 41) என அகத்திணையியலுறா கூறியனவென்றுமாம்.[1] தலைவன் முன்னர் இல்லையெனவே அவன் முன்னர் அல்லாதவிடத்துப் புகழ்தல் பெற்றாம். அவை காமக் கிழத்தியரும் அவர்க்குப் பாங்காயினாருங் கேட்பப் புகழ்தலாம்.*

**“பேணுதகு சிறப்பிற் பெண்ணியல் பாயினும்**
**என்னோடு புரையுந வல்லள்**
**தன்னோடு புரையுநர்த் தானறி குநளே.”**

*எனப் பதிற்றுப்பத்தில் வந்தது.*

---

1. முற்படவகுத்த இரண்டு என்பன :

கவவொடு மயங்கிய காலை தாய்போற்கழறித் தழீஇக் கோடலும்

அவன்சோர்புகாத்தல் கடனெனப்படுதலின் மகன்தாயுயர்பு தன்னுயர் பாதலும் என இரண்டிடங்கள் என நச்சினார்க்கினியரும்,

“பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலும்
தெளித்தலும் என அகத்திணையியலுட் கூறிய இரண்டு”

**ஆய்வுரை:** இது, மனையறத்தினை நிகழ்த்தும் தலைவிக்கு இன்றியமையாததோர் திறம் கூறுகின்றது.

(இ—ள்) தலைவன் முன்னர்த் தன்னைப் புகழ்ந்துரைக்குங் கூற்று எவ்வகையாலும் தலைவிக்கு இல்லை, முன்னர் வகுத்துரைத்த இரண்டிடங்களும் அல்லாதவிடத்து எ—று.

முன்னர் வகுத்துரைத்த இரண்டிடங்களாவன: தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி தலைமகளை அணுகி இரத்தலும் தெளித்தலும் என முன்னர் அகத்திணை 44 ஆம் சூத்திரத்திற் குறிக்கப்பட்ட இரண்டிடங்கள் என இளம்பூரணரும், 'தாய்போற் சுழறித்தழீக்கோடலும்' (34) என இவ்வியலில் முற்கூறப்பட்ட இரண்டிடங்கள் என நச்சினார்க்கினியரும் குறிப்பிடுவர். "முற்பட வகுத்த இரண்டு" என்பதற்கு 'இரத்தலும் தெளித்தலும்' என அகத் திணையியலுட் கூறியனவென்றுமாம்' என நச்சினார்க்கினியர் இளம்பூரணர் கருத்தினையும் ஏற்றுக்கொள்ளுதலால், பரத்தையிற் பிரிந்து வந்துழித் தலைவன் தலைவியை இரத்தலும் தெளித்தலும்ஆகிய இரண்டிடங்கள் எனக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். இவ்விரண்டிடங்களிலும் தலைவி தன்னைப்புகழ்தலும் தகும் என்பது கருத்து.

இத்தொல்காப்பிய நூற்பாவின் பொருளை உளங்கொண்டு கிழத்தி கிழவோன் முன்னர்த் தன்னைப் புகழ்தல் புலவிக்காலத்திலும் தக்கதன்று என வற்புறுத்தும் முறையில் அமைந்தது,

> **"கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல்**
> **புலவிக் காலத்தும் புரைவதன்றே."** (37)

எனவரும் இறையனார்களவியற் சூத்திரமாகும்.

## 40. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
## கிழவோன் வினைவயின் உரிய என்ப.

**இளம்பூரணம்:** இது, தலைவற்குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ—ள்) தலைவி முன்னர்த் தலைவன் றன்னைப் புகழுங் கூற்று வினைவயிற் பிரியும் வழி யுரிய என்றவாறு. [1]

1. வினைவயிற்பிரியுந் தலைவன் தனது பிரிவினைத் தலைவி ஆற்றியிருத்தற் பொருட்டுத் தான் எடுத்துக் கொண்ட வினையை எளிதில் முடித்து விரைவில் திரும்புதல்

**"இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவு" (கலித். 3)**

*என்றும்,*

**"இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையால் புகழ்"**

*என்றும் இவ்வாறு கூறுதல். இவ்வாறு கூறவே "யான் செய்யேன்"[1] எனத் தன்னைப் புகழ்ந்தவாறாம். (40)*

***நச்சினார்க்கினியம்:*** *இது, தலைவன் தன்னைப் புகழ்ந் துரைக்கும் இடம் இன்னுழி என்கின்றது.*

*(இ—ள்) கிழவி முன்னர்க் கிழவோன் தற்புகழ் கிளவி- தலைவிமுன்னர்த் தலைவன் தன்னைப் புகழ்ந்து கூறுங் கூற்று; வினைவயின் உரிய என்ப- காரியங்களை நிகழ்த்துங் காரணத்திடத்து [2] உரியவென்று கூறுவார் ஆசிரியர் (எ—று.)*

*அக் காரணமாவன, கல்வியுங், கொடையும், பொருள்செயலும், முற்றகப்பட்டோனை[3] முற்றுவிடுத்தலுமாகிய[4] காரியங்களை நிகழ்ந்துவலெனக் கூறுவன. இவ் வாள்வினைச் சிறப்பை யான் எய்துவலெனத் தன்னைப் புகழவே அதுபற்றித் தலைவி பிரிவாற்றுதல் பயனாயிற்று.*

**"இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை யிளிவென"**

**(கலி.2)**

*என்றவழி யான் இளிவரவு எய்தேனென்றலிற் புகழுக்குரியேன் யானேயெனக் கூறியவாறு காண்க. ஏனையவும் வந்துழிக் காண்க. (40)*

***ஆய்வுரை :*** *இது, தலைவற்குரியதோர் திறம் உணர்த்துகின்றது.*

---

திண்ணம் என்பதனைத் தலைவி மனங்கொள்ளுதல் வேண்டித் தனது வினையாண்மையைத் தலைவிமுன்னர்ப்புகழ்ந்து கூறுதல் தவறாகாது என்பதாம்,

1. "யான் இளிவெய்தேன்" என்றிருத்தல் பொருத்தமாகும்.

2. 'வினை' என்றது, காரியங்களை நிகழ்த்தும் காரணம் என்ற பொருளில் இங்கு ஆளப்பெற்றது.

3. முற்றகப்பட்டோன் – பகைவேந்தரால் மதிலைச் சூழ்ந்து அகப்படுத்திக் கொள்ளப்பட்ட மதிலகத்து வேந்தன்.

4. முற்றுவிடுத்தல் – மதிற்புறத்தே சூழ்ந்து வளைத்து நிற்கும் பகைவர் சேனையை வென்று அதன் பிடிப்பினின்றும் விடுவித்தல்.

*(இ—ள்) தலைவியின் முன்னர்த் தலைவன் தன்னைப் புகழ்ந்துரைக்குஞ் சொல், தலைவன் வினைவயிற் பிரிந்து செல்லுங்கால் கூறுதற்கு உரிய எ—று.*

*பொருளீட்டுதலும் போரிற் பகைவரைவென்றிகோடலும் முதலாக வுள்ள வினையினை நிறைவேற்றுதல் வேண்டித் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன், தனது பிரிவுக்கு ஆற்றாளாய்ச் சென்றவிடத்துத் தலைவற்கு என்ன தீங்குநேருமோ என அவன்பால் வைத்த அன்பு காரணமாக அஞ்சுத லியல்பாதலின் அவள் மனத்துத் தோன்றிய அச்சத்தினை அகற்றும் நோக்கத்துடன் தனது ஆற்றலையெடுத்துக் கூறித் தான் வினைமுடித்து வருதல் உறுதி எனத் தன்னைப் புகழ்ந்துரைத்தல் தவறாகாது என்பதாம்.*

**41. மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே.**

**இளம்பூரணம் :** *இது, பாங்கற் குரியதோர் மரபுணர்த்திற்று.*

*இது களவிற்கும் கற்பிற்கும் பொது; ஒப்பக்கூறல்*[1] *என்னும் உத்திவகையாற் கூறப்பட்டது.*

*(இ-ள்.) தலைவன் கூறியவழி எதிர்கூறுதல் பாங்கற்கு உரித்து என்றவாறு. எதிர் கூறுதலாவது மாறுபடக் கூறுதல். அவை களவுக் காலத்துக் கழறலுங் கற்புக்காலத்துப் பரத்தையிற் பிரிவிற்கு உடம்படாது கூறலும் இவை போல்வனவும்.*

*உ—ம்*

**"காமங் காமம் என்ப காமம்**
**அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்**
**கடுத்தலும் தணித்தலும் இன்றே யானை**
**குளகு மென்று ஆள்மதம் போலப்**
**பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே"** **(குறுந். 136)**

*என்றும்,*

1. 'ஒப்பக்கூறல்' என்பது, ஒருபொருளைக் குறித்து இலக்கணங் கூறும்போது, அதனையொத்த பிறபொருளுக்கும் அவ்விலக்கணம் ஒத்தமையும்படி கூறும் ஓர் உத்தியாகும்.

கற்புக் காலத்திற் பாங்கனுக்குரியதாகச் சொல்லப்படும் இவ்விலக்கணம் களவுக் காலத்திற்கும் ஒத்ததாக அமைதலின் இஃது 'ஒப்பக்கூறல்' என்னும் உத்தியாயிற்று.

**"பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்**
**ஆயும் அறிவி னவர்"** **(குறள். 914)**

*என்றும் வரும்.* *(41)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, மேற் பார்ப்பார்க்குரியன பாங்கற்கு மாமென எய்துவித்ததனை ஒருமருங்கு மறுக்கின்றது.*

*(இ-ள்.) மொழியெதிர் மொழிதல்[1]—பார்ப்பானைப்போலக் காமநிலை உரைத்தல்போல்வன கூறுங்கால் தலைவன் கூறிய மொழிக்கு எதிர் கூறுதல்; பாங்கற்கு உரித்து - பாங்கனுக்கு உரித்து (எ-று)*

*இது களவிற்கும் பொது[2]; அது பாங்கற்கூட்டத்துக் காண்க.*

*கற்பிற் புறத்தொழுக்கத்துத் தலைவன் புகலாமற் கூறுவன வந்துழிக் காண்க. 'உரித்'தென்றதனால் தலைவன் இடுக்கண் கண்டுழி எற்றினான் ஆயிற்றென அவன் மொழிக்கு முன்னே வினாதலுங் கொள்க.* *(41)*

***ஆய்வுரை :*** *இது, பாங்கற்குரியதோர் திறம் உணர்த்துகின்றது.*

*(இ ள்) தலைவன் கூற்றினை எதிர் மறுத்துக் கூறுதல் பாங்கனுக்கு உரியதாகும் (எ—று.)*

*பாங்கனாவான் தலைவனுடன் நட்புரிமைகொண்ட தோழன். எனவே தலைவன்பால் தவறுகண்ட வழி அதனை எடுத்துக் கூறித் திருத்துதற்கும் தலைவன் கூற்றினை எதிர்மறுத்துரைத்தற்கும் ஏற்ற நட்புரிமையுடையோன் பாங்கன் என்பது தொல்காப்பியனார் கருத்தாதல் இனிதுபுலனாம்.*

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென் றிடித்தற் பொருட்டு"** **(784)**

*எனவரும் திருக்குறள் இங்கு நினைத்தற்குரியதாகும்.*

---

1. மொழியெதிர் மொழிதல் – கூறிய மொழியினை ஏற்றுக் கொள்ளாது அதற்கு எதிர்மறுத்து மொழிதல்.

2. இவ்விதி களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளுக்கும் பொது வென்பதாம்.

## 42. குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்.

**இளம்பூரணம் :** இதுவுமது.

(இ—ள்) மேற்குறித்ததற் கெதிர் கூறுதல் அருகித் தோன்றும்[1] என்றவாறு. அது வந்தவழிக் காண்க. (42)

**நச்சினார்க்கினியம் :**

இதுவும் பாங்கற்குரியதோ ரிலக்கணங் கூறுகின்றது.

(இ—ள்.) குறித்து எதிர்மொழிதல்[2] தலைவன் குறிப்பினை அவன் கூறாமல் தான் குறித்துணர்ந்ததற்கு எதிர்மொழி கொடுத்தல்; அஃகித் தோன்றும்[3] - சுருங்கித் தோன்றும் (எ—று).

அவன் குறிப்பறிந்து கூறல் சிறுவரவிற்றெனவே 'காமநிலை யுரைத்தல்' (தொல். பொ. 177) என்னுஞ் சூத்திரத்தின்கட் கூறிய ஆவொடு பட்ட நிமித்தம்' ஆயின் பார்ப்பான் கூறக்கேட்டுத் தான் கூறவும்பெறுமெனவும்' ஏனையவுங் கிழவன் கூறாமல் தானே கூறவும்பெறுமெனவுங் கூறியவாறாயிற்று. (42)

**ஆய்வுரை :** இதுவும் அது

(இ-ள்) தலைவன் கூற்றினைப் பாங்கன் எதிர்மறுத்துக் கூறுங் கூற்று சிறுபான்மையாகவே தோன்றும் எ—று.

மொழிதலாவது தலைவன் குறித்ததனை எதிர்மறுத்துக் கூறதல். அஃகித்தோன்றுதலாவது சிறுபான்மையாகச் சுருங்கித் தோன்றுதலாம்.

தலைவன் கூறுங் கூற்றுக்கள் யாவும் யாவராலும் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளுதற்குரியனவாகவே அமையும் என்பதும், சிறுபான்மை மறுத்தற்குரியனவாகத் தோன்றின் அவற்றை எதிர் மறுத்து உணர்த்துங் கடமையுடையவன் தலைவனுடைய உயிர்த்தோழனாகிய பாங்கன் என்பதும் இச்சூத்திரத்தாற் புலனாகும்.

## 43. துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
## வன்புறுத் தல்லது சேறல் இல்லை.

1. பாங்கன் தலைமகன் கூறுவதனை எதிர்மறுத்து மொழிதல் சிறுபான் மையாய்ச் சுருங்கித் தோன்றும் என்பதாம்.

2. குறித்து எதிர்மொழிதல்—தான் குறிப்பினால் அறிந்ததற்கு எதிர்மொழி பகர்தல்.

3. அஃகித் தோன்றல்—சிறபான்மையாய்ச் சுருங்கித் தோன்றுதல்.

**இளம்பூரணம் :** இது, தலைவற்குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ—ள்.) துன்புறு பொழுதினும் எல்லாப்பிரிவினும் தலைவன் தலைவியை வற்புறுத்தியல்லது சேறலில்லை என்றவாறு.

துன்புறு பொழுதாவது களவுக்காலம். களவினும் கற்பினும் பொது[1] என்றவாறு. *(43)*

**நச்சினார்க்கினியம் :** இது முன்னர்க் 'கிழவிமுன்னர்' (தொல். பொ. *181*) என்பதனாற் குறிப்பினான் ஆற்றுவித்துப் பிரிதல் அதிகாரப்பட்டதனை ஈண்டு விளங்கக்கூறி. வற்புறுத்துமென்கின்றது.

(இ-ள்.) துன்பு உறு பொழுதினும் - உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும்; உம்மையான் உணர்த்திப் பிரிந்து துன்பம் மிகாத பொழுதினும் ; எல்லாம்-சுற்றமுந் தோழியும் ஆயமுந் தலைமகள் குணமாகிய அச்சமும் நாணமும் மடனு மாகியவற்றையெல்லாம் ; கிழவன் வன்புறுத்து அல்லது சேறல் இல்லை — தலைவன் வலியுறுத்து அல்லது பிரியான் (எ-று.)

எனவே இவற்றை முன்னர் நிலைபெறுத்திப் பின்னர்ப் பிரியுமாயிற்று. சொல்லாது பிரியுங்கால், 'போழ்திடைப் படாமன் முயங்கியும்' அதன்றலைத் 'தாழ்கதுப் பணிந்து முள்ளூறழ் முளை எயிற்றமிழ்தூறும் தீநீரைக் கள்ளினு மகிழ்செய்யு மெனவுரைத்தும்'' இவை முதலிய தலையளிசெய்து தெருட்டிப் பிரிய அவை பற்றுக் கோடாக ஆற்றுதலின் அவள் குணங்கள் வற்புறுத்துவன ஆயின.

இனி உலகத்தார் பிரிதலும் ஆற்றியிருத்தலுமுடையரென உலகியலாற் கூறலும் பிரிவுணர்த்திற்றேயாம். இனிப் பிரிவினை விளங்கக்கூறி ஆற்றியிருவென்றலும் அவற்றை வற்புறுத்தலாம்.

**"யாந்தமக் கொல்லேம் என்ற தப்பற்குச்**
**சொல்லா தகறல் வல்லு வோரே."** **(குறுந். 79)**

இது சொல்லாது பிரிதல்.

"அரிதாய வறனெய்தி" (கலி. *11*) இது சொல்லிப் பிரிதல் *(43)*

---

1. தலைவன் பிரிந்து செல்லுங்கால் தலைவியை வற்புறுத்திப் பிரிதல் வேண்டும் என்னும் இவ்விதி களவு கற்பு என்னும் இருவகை யொழுகலாறுகட்கும் பொது என்பதாம்.

**ஆய்வுரை :** *இது, தலைவனுக்குரியதோர் திறம் கூறுகின்றது.*

*(இ—ள்) காவல்முதலிய தடைகளையும் இருள்வழியிடையே யுளவாம் இடையூறுகளையும் எண்ணித் தலைமகள் துன்புறுதற் குரிய களவுக்காலத்தும் மனைவாழ்க்கைக்கண் உளவாம் எல்லாப் பிரிவுகளிலும் ஆற்றாமை நீங்கத் தலைவியை வற்புறுத்தி யல்லது தலைவன் பிரிந்து செல்லுதல் இல்லை எ—று.*

*'துன்புறுபொழுது என்றது, களவுக்காலத்தையும்' எல்லாம என்றது எல்லாப்பிரிவுகட்கும் இடனாகியகற்புக்காலத்தையும் குறித்தன எனக்கொண்டார் இளம்பூரணர்.*

**44. செலவிடை அழுங்கல்[1] செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்.**

**இளம்பூரணம் :** *இதுவு மது.*

*(இ - ள்.) தலைவன் போகக் கருதித் தவிர்தல் போகாமையன்று; தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியாம் என்றவாறு.*

*எனவே வினைமேற் செல்லுங்காலத்துத் தலைவி பொறாள் எனப் போகாமை இல்லை; வற்புறுத்திப்போம் என்றவாறாம்.*

*(44)*

**நச்சினார்க்கினியம் :** *இது செலவழுங்கலும் பாலையா மென்கின்றது.*

*(இ-ள்.) செலவிடை அழுங்கல்[2] செல்லாமை அன்றே. தலைவன் கருதிய போக்கினை இடையிலே தவிர்ந்திருத்தல் பிரிந்துபோதல் ஆற்றாமைக்கன்று; வன்புறைகுறித்தல் தவிர்ச்சி ஆகும். தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்குத் தவிர்ந்த தவிர்ச்சியாகும். (எ - று.)*

---

1. செலவிடை அழுங்கல்—பிரியக்கருதிய பிரிவின்கண் குறித்த வண்ணம் புறப்பட்டுச்செல்லாது தாமதித்துத்தங்குதல்.

2. செலவு இடை—போக்கின் நடுவே. அழுங்கல் – செல்லாது தவிர்தல், செல்லாது தாமதித்தல் இனிப்பிரியும் பிரிவுக்கு நிமித்த மாதலின் பாலையாயிற்று.

*செலவழுங்கி ஆற்றுவிக்க அவள் ஆற்றியிருத்தல் இப்பிரிவிற்கு நிமித்தமாதலிற் பாலையாயிற்று.*

**"மணியுரு விழந்த அணியுழி தோற்றங்**
**கண்டே கடிந்தனஞ் செலவே ஒண்தொடி**
**உழைய மாகவும் இனைவோள்**
**பிழையலள் மாதோ, பிரிதும்நாம் எனினே"** **(அகம்.5)**

**"களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்**
**இழந்த நாடு தந்தன்ன**
**வளம்பெரிது பெறினும் வாரலெ னியானே."** **(அகம் 198)**

*இவை வன்புறைகுறித்துச் செலவழுங்குதலிற் பாலையாயிற்று.* *(44)*

***ஆய்வுரை :*** *இதுவும் அது.*

*(இ—ள்) வினைமேற் பிரிந்துசெல்லுந் தலைவன் உடனே புறப்படாது காலந்தாழ்த்தல், செல்லாமைக்குறிப்பினையுடையதன்று; அங்ஙனம் குறித்த காலத்திற்செல்லாது காலந்தாழ்த்தல் பிரிவு கருதி ஆற்றாளாகிய தலைவியை வற்புறுத்தலைக் குறித்துத் தங்கிய தவிர்ச்சியாகும் எ—று.*

*அழுங்குதல் - தாமதித்தல் ; குறித்தகாலத்திற் புறப்படாது காலந்தாழ்த்தல். தவிர்தல் - பிரியாதுமனைக்கண் தங்கியிருத்தல்.*

**45. கிழவி நிலையே வினையிடத் துரையார்**
**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.**

***இளம்பூரணம் :*** *(இ-ள்.) உரையாமை யாவது உருவு வெளிப் பாடு. அதனை வினைநிகழு மிடத்து உரைக்கப் பெறார்; தலைமக்கள் தமதுவினை முடிந்த காலத்து விளங்கித் தோன்று மென்றவாறு.*

*எனவே வினையிடத்துள் நினைப்பராயினும் அமையும்; உரைக்கப் பெறார் என்பதூஉம். வென்றிக்காலத்துக் குற்றமறத் தோன்றும் என்பதூஉம் கொள்ளப்படும்.*[1] *உ-ம்:*

1. 'கிழவிநிலை' என்பது தன்னை நினைக்கும் தலைவனது உள்ளத்தே தலைவி உருவெளித் தோற்றமாத் தோன்றி நிற்றல் எனவும், வினை நிகழுமிடத்துத் தலைமக்கள் தலைவியை நினைக்கப் பெறாராதலின் வினைநிகழ்ச்சியில் அவள் நிலை பற்றி

**"தங்கிய ஒள்ளொளி யோலைய தாய்த்தட மாமதியின்மேல்**
**பொங்கிய வேந்தர் எரிமுகந் தோன்றின்று போதுகண்மேற்**
**பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றாரைப் பணித்ததென்னன்**
**செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே"**
**(பாண்டிக்கோவை)**

*எனவரும். (45)*

***நச்சினார்க்கினியம்*** *: இஃது, அகத்திணையியலுட் 'பாசறைப் புலம்பலும்' (தொல். அகத். 41) என்றார், ஆண்டைப்புலம்பல் இன்னுழியாகாது இன்னுழியாமென வரையறை கூறுகின்றது.*

*(இ-ள்.) கிழவி நிலையே[1] 'வினையிடத்து உரையார்- தலைவியது தன்மையை வினை செய்யா நிற்ற லாகிய விடத்து நினைந்து கூறினானாகச் செய்யுள் செய்யப்பெறார்; வென்றிக் காலத்து[3] விளங்கித் தோன்றும்[2] வெற்றி நிகழுமிடத்துந் தான் குறித்த பருவம் வந்துழியுந் தூதுகண்டுழியும் வருத்தம் விளங்கிக் கூற்றுத் தோன்றிற்றாகச் செய்யுள் செய்ப (எ-று.)*

*உரையாரெனவே நினைத்தலுள தென்பதூஉம், அது போர்த் திறம்புரியும் உள்ளத்தாற் கதுமென மாயுமென்பதூஉங் கொள்க வினையிடம்—வினைசெய்யிடம். காலத்து மென்னும் எச்சவும்மை தொக்குநின்றது, அன்றி அங்ஙனம் பாடங் கூறலும் ஒன்று.*

உரைக்கப்பெறார் எனவும், தலைவர்கள் தாம் எடுத்துக்கொண்டவினை, நிறைவேறிய வென்றிக்காலத்துத் தலைவியை நினைத்தலின் தலைவியது உருவு அவர் முன் வெளிப்பட்டுத் தோன்றும் எனவும் இந்நூற்பாவுக்கு இளம்பூரணர் பொருள் கொண்டார் என்பது அவரது உரைப்பகுதியால் உய்த்துணரப்படும்.

1. கிழவி நிலையாவது, தலைவியின் பிரிவாற்றாநிலை. வினையிடம்—தலைவன் நிகழ்த்தும் வினை நிகழ்ச்சியாகிய இடம்,.

2. 'வென்றிக்காலத்து' என்பதனை வென்றியினும் காலத்தும் எண் உம்மை கொடுத்துப் பிரித்து, 'வெற்றி நிகழுமிடத்தும் தான் குறித்த பருவம் வந்துழியுந் தூது கண்டுழியும்' எனப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர்.

3. விளங்கித் தோன்றுதலாவது, தன்பிரிவினால் துயருறும் தலைமகளது வருத்தம் தலைமகனுள்ளத்தே நினைவில் தோன்றித் தலைமகளைப்பற்றிய கூற்று அவன்பால் நிகழ்தல்.

தலைவியது தன்மையை வினை செய்யா நிற்றலாகிய இடத்தில் தலைவன் கூறினானாகச் செய்யுள் பெறாரெனவும் தலைமகன் வினைமுடித்த வென்றிக்காலத்துத் தலைவியது நிலை அவன் முன் விளங்கித் தோன்றும் எனவும் முன்னைய உரையாசிரியர்கள் இந்நூற்பாவுக்கு உரைவரைந்தனர்.

**"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த"** **(அகம் 24)**

*இதனுட் கணையுதைப்ப முரசொடு மயங்கும் யாமத்துத் துயின்மடிந்து வாளுறை செறியாத் தானையையுடைய வேந்தனெனவே வென்றிக்காலங் கூறியவாறுங் கிழவிநிலை உரைத்தவாறுங் காண்க.*

*பருவங் கண்டுந் தூதுகண்டுங் கூறியவை 'பாசறைப் புலம் பலும்' (தொல். அகத் 41) என்புழிக் காட்டினாம். (45)*

***ஆய்வுரை :*** *வினைவயிற் பிரிவின்கண் ஆவதோர் மரபு உணர்த்துகின்றது.*

*(இ-ள்) தலைவியின் ஆற்றாநிலையினைத் தலைவன் போர்த் தொழிலில் ஈடுபட்டிருக்குமிடத்து (நினைவுகூர்ந்ததாக) உரைக்கப் பெறார் : தலைவன் தான் மேற்கொண்ட வினையில் வெற்றி பெற்ற காலத்துத் தலைவியைப் பற்றிய நினைவு அவனுள்ளத்தில் தானே விளங்கித் தோன்றுமாதலின் என்க. எ—று.*

*ஈண்டு வினையிடம் என்றது, தலைவன் போர்த்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இடத்தினைச் சுட்டி நின்றதென்பது, 'வென்றிக் காலத்து' என்னும் சொற்குறிப்பினால் இனிதுபுலனாம். வென்றிக் காலத்து விளங்கித்தோன்றுதலாவது, தலைவன் மாற்றாரைப் பொருது வெற்றி எய்திய காலத்தே தலைமகளது உருவு அவனது உள்ளத்தே வெளிப்பட்டுத் தோன்றுமாறு அவனது உள்ளத்தே தலைவியைப்பற்றிய நினைவு விரைந்து தோன்றுதல். 'வென்றிக் காலத்து' என்பதற்கு 'வென்றிநிகழுமிடத்தும் தான் குறித்த பருவமாகிய காலம் வந்துழியும்' என உம்மைத்தொகையாகக் கொண்டு பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். 'வினையிடத்து உரையார்' என்பதற்குத் தலைவன் போர்த்தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிலைமைக்கண் வாயில்கள் சென்று உரைக்கப் பெறார்" எனப்பொருள் கூறுதலும் ஏற்புடையதாகும்.*

**46. பூப்பின் புறப்பா டீரறு நாளும்**
**நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்**
**பரத்தையிற் பிரிந்த காலை யான.**

***இளம்பூரணம் :*** *இதுவுமது.*

*(இ - ள்) பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் விட்டு அகன்றுறைவா ரல்லர் என்று சொல்லுவர் பரத்தையிற் பிரிந்த காலத்து என்றவாறு.*

*பரத்தையர் சேரியா னாயினும் பூப்புத்தோன்றி மூன்றுநாள் கழித்தபின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு. இதனாற் பயன் என்னையெனின் அது கருத் தோன்றுங்காலம் என்க.* **(46)**

***நச்சினார்க்கினியம் :*** *இது, பரத்தையிற் பிரிவின்கண் தலைவற்குந் தலைவிக்கும் உரியதோர் இலக்கணங் கூறுகின்றது.*

*(இ - ள்.) பரத்தையிற் பிரிந்த காலை யான - பரத்தையிற் பிரிந்த காலத்தின்க ணுண்டான; பூப்பின் நீத்து - இருதுக் காலத்தின்கட் சொற்கேட்கும் அணுமைக்கண் நீங்கியிருந்து; புறப்பாடு ஈராறு நாளும் அகன்று உறையார் என்மனார் புலவர்- அவ் விருதுக்காலத்தின் புறக்கூறாகிய பன்னிரண்டு நாளும் இருவரும் பிரிந்துறையாரென்று கூறுவர் புலவர் (எ - று)*[1]

*என்றது பூப்புத்தோன்றிய மூன்றுநாளுங் கூட்டமின்றி அணுக விருந்து அதன் பின்னர்ப் பன்னிரண்டு நாளுங் கூடியுறைப் என்றதாம்.*

*தலைவியுந் தலைவனுந் துனித்தும்*[2] *இருத்தலிற் 'பிரிந்துறையா' ரெனப் பன்மையாற் கூறினார்.*

*இனிப், பூப்பின் முன்னாறு நாளும் பின்னாறு நாளுமென்றும், பூப்புத் தோன்றிய நாள் முதலாகப் பன்னிரண்டு நாளுமென்றும், நீத்தல் தலைவன் மேல் ஏற்றியும், அகறலைத் தலைவி மேல் ஏற்றியும் உரைப்பாருமுளர்*[3] *பரத்தையிற் பிரிந்த காலத்துண்டான பூப்பெனவே,*

1. 'நீத்தகன்று' என்பதனை நீத்து எனவும் அகன்று எனவும் இருவினை களாகப்பகுத்து பூப்பின் நீத்து, புறப்பாடு ஈராறுநாளும் அகன்றுஉறையார் என இயைத்துப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். பூப்பின் நீத்தலாவது, பூப்புத் தோன்றி மூன்று நாட்களும் தலைமகளொடு கூட்டமின்றி விலகி அணுக இருத்தல், புறப்பாடு ஈராறுநாளும் அகன்றுறையாமையாவது, பூப்புத்தோன்றி மூன்று நாட்கழிந்தபின் அதன்புறக்கூறாகிய பன்னிரு நாட்களிலும் தலைவியை அகலாது மனைக்கண் கூடியுறைதல்.

2. 'தனித்து' என்றிருத்தல் பொருத்தமாகும்.

3. 'பூப்பின்புறப்பாடு ஈராறுநாளும்' என்பதற்குப் பூப்புப் புறப்படட நாள் முதல் பன்னிருநாளும்' எனப் பொருள்கொண்டார் இறையனார் களவியலுரையாசிரியர்.

*தலைவி சேடியர் செய்ய கோலங்கொண்டு பரத்தையர் மனைக்கட் சென்று தலைவற்குப் பூப் புணர்த்துதலுங் கொள்க. இது,*

**“அரத்தம் உடீஇ யனிபழுப்புப் பூசிச்**
**சிரத்தையாற் செங்கழுநீர் சூட்டிப்—பரத்தை**
**நினை நோக்கிக் கூறினு நீ மொழியல் என்று**
**மனை நோக்கி மாண விடும். (திணை, நூற்144)**

*தோழி செல்வணியணிந்து விட்டமை தலைவன் பாங்காயினார் கூறியது.*

*இக்காலத்தின்கண் வேறுபாடாக வருவனவெல்லாம் ஈண்டு அடக்கிக் கொள்க.*

*பூப்புப்புறப்பட்ட ஞான்றும் மற்றைநாளுங் கருத தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்றாநாள் தங்கில் அது சில் வாழ்க்*

---

நீத்தலைத் தலைவன் மேல் ஏற்றியும் அகறலைத்தலைவிமேல் ஏற்றியும் உரைக்கும் உயைாசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை. இளம்பூரணர் இங்ஙனம் உரையாமையால் இங்கு நச்சினார்க்கினியர் சுட்டும் உரை கற்பியலுக்கமைந்த வேறோருரையென எண்ணவேண்டியுளது.

‘‘பூப்புஉணர்த்தப்பட்ட தலைமகன்’. வாயில்களோடுஞ் சென்று தலை மகளிடத்தானாய் முந்நாளுஞ் சொற்கேட்கும் வழி உறைவானாவது. உறைந்த பின்னை ஒன்பதுநாளுங்கூடி உறைவானாவது. முந்நாளுஞ் சொற்கேட்கும் வழி உறைதற்குக் காரணம் என்னையெனின். தலைமகன் பரத்தையர் மாட்டானாக மூன்னின்ற பொறாமை உண்டென்று எய்தும், முந்நாளுஞ் சொற்கேட்கும் வழி உறையவே நீங்கும். நீங்கிய பின்றைக்கூடும். ஆகவே, கருநின்றது மாட்சிமைப்படும். அது நோக்கி உணர்த்தப்பட்டது. அதனான் அறமெனப்பட்டது. அல்லாவிடில் தலைமகள்மாட்டு ஓர் பொறாமை தோன்றும், பரத்தையர்மாட்டு நின்று வந்தானென; அப்பொறாமை ஒரு வெகுளியைத் தோற்றுவிக்கும்; அவ்வெகுளி பெரியதோர் வெம்மையைச் செய்விக்கும்; அவ்வெப்பத்தினால் கரு மாட்சிமைப் படாதாம்; படாதாமாகவே அறத்தின் வழுவாம் என்பது. அதனான், முந்நாளுஞ் சொற்கேட்கும் வழி உறையல்’ வேண்டுமென்பது, பூப்புப்புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிருநாளும் என்பது துணிவு என்றார்க்கு, முந்நாளும் கூடியுறையப் படுங்குற்றங் என்னோ எனின், பூப்புப்புறப்பட்ட ஞான்றுநின்ற கரு வயிற்றில் அழியும்; இரண்டாம் நாள் கரு வயிற்றிலே சாம்; மூன்றாம் நாள் நின்ற கரு குறுவாழ்க்கைத்தாம்; வாழினுந்திருவின்றாம். அதனாற் கூடப்படாதென்பது.

‘பூப்புமுதல் முந்நாள் புணரார், புணரின்
யாப்புறு மரபின் ஐயரும் அமரரும்
யாத்த கரணம் அழியும் என்ப’

எனப், பிறரும் ஓதினாராகலின் அமையாதென்பது.’’

...எனவரும் இறையனார்களவியலுரைப் பகுதி இங்கு ஒப்புநோக்கற்பாலதாகும்.

*கைத்தாகலும் பற்றி முந்நாளுங் கூட்டமின்றென்றார். கூட்ட மின்றியும் நீங்காதிருத்தலிற் பரத்தையர் பிரிந்தானெனத் தலைவி நெஞ்சத்துக் கொண்ட வருத்தம் அகலும். அகல வாய்க்குங் கரு மாட்சிமைப் படுமாயிற்று. இது மகப் பேற்றுக் காலத்திற்குரிய நிலைமை கூறிற்று. இதனாற் பரத்தையிற் பிரியுநாள் ஒரு திங்களிற் பதினைந்தென்றாராயிற்று.[1] உதாரணம் வந்துழிக் காண்க. "குக்கூ' (குறுந் 157) என்பதனைக் காட்டுவாரு முளர். (46)*

***ஆய்வுரை :*** *இது, தலைமக்களுக்குரியதோர்திறம் உணர்த்து கின்றது.*

*(இ — ள்) பரத்தைகாரணமாகப் பிரிந்தபிரிவின்கண் தலைவிக்குப் பூப்புத்தோன்றிய பன்னிருநாட்களும் தலைவியை விட்டுப் பிரிந்துறையமாட்டார்கள் தலைமக்கள் என்பர் புலவர் எ—று.*

**"பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்தகன் றுறைதல் அறத்தாறன்றே"** **(43)**

*எனவரும் இறையனார் களவியல் நூற்பா இத்தொல்காப்பிய நூற்பாவை அடியொற்றியமைந்ததாகும்.*

*'பூப்பின்புறப்பாடு ஈராறுநாளும்' என்ற தொடர்க்குப் 'பூப்புத் தோன்றி மூன்றுநாள் கழிந்த பின்பு பன்னிரண்டுநாளும்' என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பொருள்கொண்டனர். பூப்புப்புறப்பட்ட நாள்முதல் பன்னிருநாளும், எனப்பொருள் கொள்வர் இறையனார் களவியலுரையாசிரியர்.*

*பரத்தையிற்பிரிந்த தலைமகன் தலைமகள்பால் பூப்பு நிகழ்ந்தது உணர்ந்து வாயில்களோடும் சென்று தலைமகளிடத் தானாய்ப் பூப்புநிகழும் மூன்றுநாட்களிலும் தலைவியை அணுகாது அவளது சொற்கேட்கும் அணிமையிடத்தானாய் உறையவே பரத்தையிற் பிரிந்தானென்றபொறாமை தலைமகள் மனத்தை*

1. பரத்தையிற் பிரிந்த தலைவன் பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும் மனைக்கண் தலைவியுடன் உறையுங்கடமையுடையான் என வற்புறுத்த எழுந்ததே இச்சூத்திரமாகும். இது கொண்டு பூப்புமூன்று நாளும் புறப்பாடுபன்னிரு நாளும் மனைக்கண் கழிய, "இதனாற் பரத்தையிற் பிரியுநாள் ஒருதிங்களிற்பதினைந்தென்றாராயிற்று" எனக் கருத்துரைத்தல் பொருத்தமற்றதென்றுணர்தல் வேண்டும்.

*விட்டுநீங்கும். அதன்பயனாக மூன்று நாட்கழித்துத் தலைமகளைக் கூடப்பெறுவன். அந்நிலையில் தோன்றிய கரு மாட்சிமைப்படும். பூப்பு நிகழும் மூன்றுநாட்களிலும் தலைமகன் மனைக்கண் வாரானாயின் தலைமகள் உள்ளத்தே வெகுளிதோன்றி உடல் வெப்பத்தையுள தாக்கும். அந்நிலையிற் கரு மாட்சிமைப்படாது. ஆகவே பூப்புத் தோன்றிய மூன்று நாட்களிலும் தலைவியைத் தலைவன்கூடின் முதல் நாளில் கரு உருப்பெறாது அழியும்; இரண்டாம்நாளில் கரு வயிற்றிலே சாகும்; மூன்றாம் நாளில் கரு வாழ்நாள்குறைந்த குறுவாழ்க்கையினதாம்; அது தப்பி வாழ்ந்தாலும் திருத்தகவுடைய தாகாது என இறையனார்களவியலுரை யாசிரியர் தரும் விளக்கம் இங்கு மனங்கொளத் தகுவதாகும்.*

**47. வேண்டிய கல்வி[1] யாண்டுமூன் றிறவாது.**

***இளம்பூரணம் :*** *இதுவுமது.*

*(இ—ள்) விரும்பப்பட்ட கல்விக்கட் பிரியுங் காலம் மூன்றி யாண்டின் மிகாது என்றவாறு. எனவே, ஓரியாண்டாயினும் ஈரியாண்டாயினும் ஆமென்பது கொள்ளப்படும். (47)*

1. தன்னைப் பயில்வாருள்ளத்திற்கு இன்பம் பயப்பது கல்வியாதலின் கற்றோர் அக்கல்வியினையே மேலும் மேலும் காமுறுவர் என்பார், 'வேண்டிய கல்வி' என அடைபுணர்த் தோதினார். வேண்டுதல்——விரும்புதல், இத்தொடர்ப் பொருளை விரித்துரைக்கும் நிலையில் அமைந்தது,

> ''தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்'' **(399)**

எனவரும் திருக்குறளாகும். விலங்கு முதலிய அஃறிணையுயிர்களோடு உயர்திணை' மக்களைப் பிரித்து உயர்த்துதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது கல்வி என்பதனை வற்புறுத்துங் கருத்துடன் 'வேண்டிய கல்வி' என அடைபுணர்த்தோதினா ரென்றலும் பொருந்தும்.

> ''விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்'' (திருக்குறள்——410)

என்பது இக்கருத்துக்கு அரண் செய்தல் காணலாம்.

உயர்திணை மக்கள் எல்லார்க்கும் இன்றியமையாது வேண்டப் பெறுவதாய் அவர்தம் இளமைப்பருவத்தே பயிலப்பெறும் பொதுக்கல்வியுடன், தலைமக்கள் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் மீண்டும் தனிமுறையிற் கற்றுத் தெளிதற்குரிய சிறப்புமுறைக்கல்விப் பயிற்சியினையே ஓதற்பிரிவில் ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்துள்ளார் என்பது, கற்பியலிற் இந்நூற்பாவமைப்புக்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

***நச்சினார்க்கினியம் :*** *இஃது 'ஓதலுந் தூதும்' (தொல். அகத். 26) என்னுஞ் சூத்திரத்திற் கூறிய ஓதற்பிரிவிற்குக் கால வரையறை யின்றென்பதூஉம் அவ்வோத்து இதுவென்பதூஉம் உணர்த்துகின்றது.*

*(இ - ள்.) கல்வி வேண்டிய யாண்டு இறவாது—துறவறத்தினைக் கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது; மூன்று இறவாது. அக் கல்வியெல்லாம் மூன்று பதத்தைக் கடவாது (எ - று.)*[1]

*இறவாதென்பதை இரண்டிடத்துங் கூட்டுக. மூன்று பதமாவன அதுவென்றும் நீயென்றும் ஆனாயென்றுங் கூறும் பதங்களாம். அவை பரமுஞ் சீவனும் அவ்விரண்டும் ஒன்றாதலும். ஆதலின் இம்மூன்று பதத்தின் கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்துகொள்க. இது மூன்று வருணத்தார்க்குங் கூறினார். ஏனைய வேளாளரும் ஆகமங்களானும் அப் பொருளைக் கூறிய தமிழானும் உணர்தல் 'உயர்ந்தோர்க் குரிய' (தொல், அகத். 31) என்பதனான் உணர்க. இஃது இல்லறம் நிகழ்த்தினார் துறவறம் நிகழ்த்துங் கருத்தினராக வேண்டுதலின் காலவரையறை கூறாராயினார். முன்னர்க் காட்டிய "அரம்போ ழுவ்வளை" (அகம். 124) என்னும் பாட்டினுட் 'பானாட் கங்குலின் முனிய வலைத்தி- கடவுளர் சான்ற செய்வினை மருங்கிற்*

1. 'கல்வி வேண்டிய யாண்டு இறவாது, மூன்று, இறவாது' என இந்நூற்பாவை இரு தொடராகப் பிரித்து, "துறவறத்தினைக் கூறும்வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது" எனவும் "அக்கல்வியெல்லாம் (தத்——துவம் ——அசி என்னும்) மூன்று பதத்தைக் கடவாது" எனவும் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். 'துறவற்தத்தினைக் கூறும் வேதாந்த முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது' எனக்கூறின், அக்கல்வி விரும்பிய (ஓர்) யாண்டாகிய) எல்லைக்குள் அடக்கும் என்பதன்றி நச்சினார்க்கினியர் கூறுமாறு ஓதற்பிரிவுக்குக் காலவரையறையில்லை' என்பது அத்தொடரால் தெளிவாகப் புலப்படாமையாலும், தலைவன் கற்பியல் வாழ்க்கையில் மேற்கொள்ளும் பிரிவு கட்குரிய காலவரையறை கூறும் அதிகாரத்துட்பட்ட இச்சூத்திரத்தில் வரும் மூன்று என்னும் தொகை, 'யாண்டு மூன்று' எனத் தான் சார்ந்துள்ள யாண்டின் தொகையினைக் குறித்ததன்றி, வடநூலிற் கூறப்படும் தத் (அது), துவம் (நீ), அசி (ஆகின்றாய்) என்னும் மகாவாக்கியத்திலுள்ள பதங்கள் மூன்றினையும் குறித்ததென்றற்கு யாதொரு தொடர்பும் இன்மையானும் இவ்வுரை இந்நூற்பாவுக்கு நச்சினார்க்கினியர் வலிந்தெழுதியவுரையாவதன்றி இந்நூற்பாவுக்குரிய உண்மைப் பொருளைப் புலப்படுத்துவதன்றெனவுணர்க.

- சென்றோர் வலவரின் ஓடுவை' என்றது இராப்பொழுது அகலாது நீட்டித்ததற்கு ஆற்றாளாய்க் கூறினாளென்று உணர்க. (47)

**ஆய்வுரை :** இஃது ஓதற்பிரிவுக்குரிய காலவரையறை கூறு கின்றது.

(இ—ள்) இன்றியமையாது வேண்டற்பாலதாகிய சிறப்புடைய கல்விகருதிப்பிரியுங் காலம் மூன்றாண்டாகிய எல்லை யைக்கடவாது எ—று.

வேண்டிய கல்வி—வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப் படுவதாய சிறப்பு முறைக்கல்வி. இறத்தல்—கடத்தல்.

தலைவியுடன் கூடி இல்வாழ்க்கைக் கடமையினை மேற் கொண்ட தலைவன், சிறப்புடைய கல்வி கருதிச் சென்றானாயினும் மூன்றாண்டுகளுக்குமேல் தனக்குரிய மனைவாழ்க்கைக் கடமையினை நெகிழ விட்டு மனைவியைப் பிரிந்து வேற்றிடத்தே தங்குதல் கூடாது என அறிவுறுத்தும் முறையில் அமைந்தது இந் நூற்பாவாகும்.

**48. வேந்துறு தொழிலே யாண்டின தகமே.**

**இளம்பூரணம் :** இதுவு மது.

வேந்துறு தொழிலாவது பகைதணி வினை.

(இ-ள்.) வேந்தற்குற்றவழி, தூது காவல் என அவ்வழிப் பிரிவிற்கும் ஆண்டினது அகமே சுாலம் என்றவாறு.[1]

எனவே அறுதிங்கள் முத்திங்கள் எல்லாங் கொள்ளப்படும். (48)

**நச்சினார்க்கினியம் :** இது வரையறையுடைமையிற் பகை வயிற்பிரிவிற்கு வரையறை கூறுகின்றது.

(இ-ள்.) வேந்து உறு தொழிலே - இருபெரு வேந்தருறும் பிரிவும், அவருள் ஒருவற்காக மற்றொரு வேந்தனுறும் பிரிவும்; யாண்டினது அகமே - ஓர் யாண்டினுட்பட்டதாம் (எ—று.)

1. பகைவயிற்பிரிவு என்னாது 'வேந்துறுதொழில்' எனப்பொதுப்படக் கூறினமையால். வேந்தற்குற்றுழிநிகழும் பகைவயிற்பிரிவுக்குப் போல வேந்தர் பணியாகிய தூது, காவல் ஆகிய பிரிவுகட்கும் ஓராண்டின் அகமே காலஎல்லை எனக் கொண்டார் இளம்பூரணர்.

'வேந்துறுதொழி லென்பதனை இரட்டுற மொழிதலென் பதனான்[1] வேந்தனுக்கு மண்டிலமாக்களுந் தண்டத் தலைவரு முதலியோர் உறும் பிரிவும் யாண்டின தகமெனவும் பொருளுரைக்க. 'தொழி'லென்றது அதிகாரத்தாற் பிரிந்து மீளும் எல்லையை அது, 'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு' (தொல் அகத்.9) என்பதனாற் பிரிவிற்கோதிய இருவகைக் காலத்துள்ளும் முதற்கணின்ற சித்திரை தொடங்கித் கையீறாகக்கிடந்த பத்துத் திங்களுமாம். இனிப் பத்தென்னாது யாண்டென்றதனாற். 'பின்பனி தானும்' (தொல்.அகத்.10) என்பதனாற் கொண்ட சிறப்பில்லாத பின்பனிக்குரிய மாசிதொடங்கித் தையீறாக யாண்டுமுழுவதூஉங் கொள்ளக் கிடந்ததேனும் அதுவும் பன்னிருதிங்களுங் கழிந்ததன்மையின் யாண்டினதகமாமாறுணர்க. இதற்கு இழிந்த எல்லை வரைவின்மையிற் கூறாராயினார்: அது,

**"இன்றே சென்று வருவது நாளைக்**
**குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக." (குறுந். 189)**

எனச் சான்றோர் கூறலின்.

**"நிலநாவில் திருதரூஉம் நீண்மாடக் கூடலார்**
**புலநாவில் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதன்றோ**
**பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்**
**சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை." (கலி.35)**

இது, பின்பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல் குறித்தலின் இருதிங்கள் இடையிட்டது.

**"கருவிக் காரிடி யிரீஇய**
**பருவ மன்றவர் வருதுமென் றதுவே." (அகம்.139)**

இது கார்குறித்து வருவலென்றலின் அறுதிங்கள் இடை யிட்டது.

1. 'வேந்து உறுதொழில்' என்பது, இரட்டுறமொழிதல் என்பதனால், இரு பெருவேந்தருள் ஒருவர் மற்றவர்க்குத் துணையாய்ப் பிரியும் பிரிவையும், வேந்தனுக்கு மண்டிலமாக்களும் தண்டத்தலைவரும் முதலாயினோர் உறும் பிரிவையும் குறித்தது எனவும், வேந்தறுதொழில் எனவே அவனது ஆணையால் ஏனையோர் நாடு காத்தற்குப்பிரியும் காவற் பிரிவும் அடங்கிற்று எனவும் கொள்வர் நச்சினார்க்கினியர் யாண்டினது அகம் பன்னிருதிங்களாகிய ஓர்யாண்டிற்கு உட்பட்ட காலஎல்லை.

*'வேளாப் பார்ப்பான்' (அகம்.24) என்பது தைஇ நின்ற தண்பெயற் கடைநாட் பனியிருங் கங்குல்" என்றலின் யாண்டென்பதூஉம், அது கழிந்ததன்மையின் அஃது அகமெனவும் பட்டதென்பதூஉம், தலைவன் வருதுமென்று காலங் குறித்ததற் கொத்த வழக்கென்றுணர்க, காவற்பிரிவும் வேந்துறுமொழி யெனவே அடங்கிற்று, தான்கொண்ட நாட்டிற்குப் பின்னும் பகை யுளதாங்கொ லென்று உட்கொண்டு காத்தலின். (48)*

***ஆய்வுரை:*** *இது, வேந்தற்கு உற்றுழிப்பிரியும் பிரிவிற்குரிய காலவரையறை கூறுகின்றது.*

*(இ—ள்) வேந்தனுக்குரிய தொழில்கருதிப் பிரியும் பிரிவு ஓர் யாண்டிற்கு உட்பட்ட கால எல்லையினை யுடையதாகும்.*

*வேந்துறு தொழிலாவது, வேந்தனுக்கு உதவியாய்ச் சென்று பகைவரைப் பொருது அடக்குதல் கருதிப்பிரியும் பகைவயிற் பிரிவு வேந்துறுதொழில் எனப் பொதுப்படக்கூறினமையால் வேந்தனது ஆணையிற்பிரியும் தூது காவல் என்ற பிரிவுகளும் இதன்கண் அடங்குதலின் அவையும் ஓர்யாண்டிற்கு உட்பட்ட கால எல்லையினை யுடையவெனக் கொண்டார் இளம் பூரணர். இதன்கண் காவற்பிரிவினை மட்டும் அடக்குவர் நச்சினார்க்கினியர்.*

## 49. ஏனைப் பிரிவும்[1] அவ்விய னிலையும்.

***இளம்பூரணம்:*** *இதுவுமது.*

*(இ-ள்.) ஒழிந்த பொருள்வயிற் பிரிவிற்குங் காலம் யாண்டின தகம் என்றவாறு. (49)*

***நச்சினார்க்கினியம்:***

*இஃது எஞ்சிய பிரிவிற்கு வரையறை கூறுகின்றது.*

1. 'ஏனைப்பிரிவு' என்றது, காலவரம்பு கூறப்படாது எஞ்சிய பொருள் வயிற் பிரிவினை.

அவ்வியல் நிலையலாவது, ஓர்யாண்டின் அகமாகிய காலவரம்புக்குள் நிகழ்தல் வேண்டும் என்பது. 'அவ்வயின்' என்பது நச்சினார்க்கினியர் உரையிற் கண்டபாடம்.

*(இ-ள்) ஏனைப் பிரிவும்[1] அவ்வயின் நிலையும் [2] கழிந்து நின்ற தூதிற்கும் பொருளிற்கும் பிரிந்து மீளும் எல்லையும் யாண்டினதகம். (எ-று.)*

**"மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல்."** **(அகம். 23)**

*இது பொருட்பிரிவின்கட் கார்குறித்து ஆறு திங்கள் இடையிட்டது.*

*"நெஞ்சு நடுக்குற" (கலி.24) என்னும் பாலைக்கலியுள் 'நடுநின்று செய்பொருண் முற்று மளவென்றார்" என்றலின் எத்துணையும் அணித்தாக மீள்வலென்றதாம். இவற்றிற்குப் பேரெல்லைவந்த செய்யுள் வந்துழிக் காண்க. (49)*

***ஆய்வுரை :*** *இஃது எஞ்சிய பிரிவிற்கும் காலவரையறை கூறுகின்றது.*

*(இ—ள்) சொல்லாது ஒழிந்த பொருள்வயிற்பிரிவும் ஓராண்டுக்கு உட்பட்ட காலவெல்லையாகிய அவ்வியல்பில் நின்று நிகழும் எ—று.*

*வேந்துறு தொழில் என்பதனுள் வேந்தற்காக வேண்டிப பிரியும் பகைவயிற்பிரிவு, தூதிற்பிரிவு, காவற்பிரிவு என்னும். மூன்றும் அடங்கினமையால் இந்நூற்பாவில் 'ஏனைப்பிரிவு என்றது, சொல்லாது எஞ்சியதாய்த் தலைவன் தன்பொருட்டுப் பிரிந்து செல்வதாய் அமைந்த பொருள்வயிற்பிரிவு ஒன்றே என இளம்பூரணர் கொண்டது மிகவும் பொருத்தமுடையதாகும்.*

**50. யாறுங் குளனுங் காவும் ஆடிப்**
**பதிஇகந்து நுகர்தலும் உரிய[3] என்ப.**

1. ஏனைப்பிரிவு என்பன. இதுவரைகாலவரையறை கூறப்படாது எஞ்சியுள்ள தூதிற்பிரிவும் பொருள்வயிற்பிரிவும்.

2. அவ்வயின் நிலையலாவது, முற்கூறியவாறு ஓர்யாண்டின் அகமாகிய காலவரை யறைக்கண் அடங்கி நிகழ்தல். 'அவ்வியல்' என்பது இளம்பூரணவுரையிற் கண்ட பாடம்.

3. பதி – ஊர். இகத்தல் – கடந்து செல்லுதல். பதியிகந்து நுகர்தலாவது. தமக்குரிய ஊரினைக் கடந்து நாட்டிற் பல்வேறிடங்களிலும் சென்று இயற்கைச் சூழலில் திளைத்து இன்புறுதல்.

**இளம்பூரணம் :** இது, தலைவற்குங் கிழத்திக்கு முரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ-ள்.) யாறுங் குளனும் காவும் ஆடிய என்பது --- விளை யாட்டு என்று கொள்க.

உ—ம்.

"அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோ லணிகொள" என்னும் பாலைக்கலியுள்,

**"துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி**
**மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ."**
**(கலித். 30)**

என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமை தலைவி கூறியவாறு காண்க.

**நச்சினார்க்கினியம் :** இது தலைவற்குங் காமக்கிழத்தி யர்க்குந் தலைவியர்க்கும் உரியதோர் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) யாறும் குளனும் காவும் ஆடி - காவிரியுந் தண் பொருனையும் ஆன்பொருனையும் வையையும் போலும் யாற்றிலும், இருகாமத்திணையேரி போலுங் குளங்களிலுந், திருமருதந் துறைக் காவேபோலுங் காக்களிலும் விளையாடி ; பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப. உறைபதியைக் கடந்துபோய் நுகர்ச்சி யெய்துதலுந் தலைவற்குங் காமக்கிழத்தியர்க்குந் தலைவியர்க்கும் உரிய (எ-று)[1]

ஏற்புழிக்கோடலால், தலைவியர்க்குச் சிறுபான்மை யென்றுணர்க.

**"கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி**
**மதில்கொல் யானையிற் கதழ்வுநெரி தந்த**

1. யாறு, குளம், கா இவற்றைக்குறித்து நச்சினார்க்கினியர் தரும் இவ்வுரை விளக்கம், தமிழ் மூவேந்தர் நாடுகளிலும் சென்று வந்த பயிற்சியுடையாம் அவர் என்பதனை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

'ஆடி' என்னும் வினையெச்சம் யாறு, குளங்களில் நீராடுதலையும் காக்களில் விளை யாடுதலையும் குறித்தது. பதிஇகந்து நுகர்தலாவது, மனைவாழ்க்கையினை மேற்கொண்டு ஒரூரில் வாழும் தலைவனும் தலைவியும் தாம் வாழும் ஊரைக்கடந்து இயற்கைக்காட்சிகளைக் கண்டு யாறு குளம் முதலியவற்றில் நீராடி அழகிய சோலை முதலியவற்றில் தங்கி அன்பினால் இன்பம் நுகர்தலாகும்.

**சிறையழி புதுப்புனல் ஆடுகம்**
**எம்மொடுங் கொண்மோவெந் தோள்புரை புணையே.''**
**(ஐங்குறு. 78)**

*இது, காமக்கிழத்தி நின் மனைவியோடன்றி எம்மொடு புணை கொள்ளின் யாமாடுதுமென்று புனலாட்டிற்கு இயைந்தாள் போல மறுத்தது.*

**''வயன்மல ராம்பற் கயிலமை நுடங்குதழைத்**
**திதலை யல்குற் றுயல்வருங் கூந்தல்**
**குவளை யுண்க ணேஎர் மெல்லியன்**
**மலரார் மலிர்நிறை வந்தெனப்**
**புனலாடு புணர்துணை யாயினள் எமக்கே.'' (ஐங்குறு. 72)**

*இது, தலைவி புலவிநீங்கித் தன்னொடு புனலாடல்வேண்டிய தலைவன். முன் புனலாடியதனை அவள் கேட்பத் தோழிக் குரைத்தது.*

*''வண்ண வொண்டழை'' (ஐங்குறு. 73) ''விசும்பிழி தோகை'' (ஐங்குறு. 74) இவையும் அது. ''புனவளர் பூங்கொடி என்னும் மருதக்கலியுள்.*

**அன்ன**
**நான்மாடக் கூடன் மகளிரும் மைந்தருந்**
**தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமார்**
**ஆனா விருப்போ டணியயர்ப காமற்கு**
**வேனில் விருந்தெதிர் கொண்டு (கலி. 92)**

*என்னுஞ் சுரிதகத்துக் காவிற் புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவன் தலைவிக்குக் கூறியவாறு காண்க. (50)*

***ஆய்வுரை :*** *இது, தலைவற்கும் மனைக்கிழத்திக்கும் உரியதோர் மரபு உணர்த்துகின்றது.*

*(இ-ள்) தாம் உறையும் ஊரைக்கடந்து சென்று யாறு குளம் ஆகிய நீர்த்துறைகளிலும் சோலைகளிலும் விளையாடி நுகர்ச்சி யெய்துதல் கணவன் மனைவியாகிய இருவர்க்கும், உரிய வாழ்க்கைச் செயல்களாம் (எ-று.)*

*பதி - நிலையாகத் தங்கிவாழும் ஊர். இகத்தல்-கடத்தல். பதியிகந்து நுகர்தலாவதுஊரின் எல்லையைக் கடந்து வெளியூர்களுக்குச் சென்று அங்குள்ள இயற்கை வனப்புக்களைக் கண்டு இன்பம் நுகர்தல்.*

**51. காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.**

***இளம்பூரணம் :*** *இது, தலைவற்கும் தலைவிக்கு முரியதோர் மரபுணர்த்திற்று.*

*(இ-ள்.) சிறந்தது பயிற்றலாவது — அறத்தின்மேல் மன நிகழ்ச்சி[1].*

*சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (51)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, முன்னர் இல்லறநிகழ்த்திய தலைவனுந் தலைவியும் பின்னர்த் துறவற நிகழ்த்தி வீடுபெறுப என்கின்றது.*

*(இ-ள்.) கிழவனும் கிழத்தியும் - தலைவனுந் தலைவியும்; சுற்றமொடு துவன்றி அறம்புரி மக்களொடு - உரிமைச்சுற்றத்தோடே கூடிநின்று இல்லறஞ்செய்தலை விரும்பிய மக்களோடே; சான்ற காமங்' கடைக்கோட்காலை - தமக்கு முன்னரமைந்த காமத்தினையுந்*

---

1. இந்நூற்பாவில் உள்ள 'சிறந்தது' ஏன்னுஞ்சொல்லுக்கு 'இன்பமும் பொருளும் அறனும்' ஏனக்கூறப்பட்ட உறதிப் பொருள் மூன்றனுள்ளும் முதன்மை முடையதாய்ச் சிறந்து விலங்கும் 'அறம்' எனப்பொருள் கொண்டார் இளம்பூரணர் என்பது,

"சிறந்தது பயிற்றலரவது, அறத்தின்மேல் நிகழும் மனநிகழ்ச்சி" எனவரும் உரைத்தொடரால் இனிது விளங்கும்.

2. 'காமம் சான்ற கடைக்கோட்காலை' என்ற தொடரில் உள்ள 'காமம் சான்ற' என்பதனைச் 'சான்றகாமம்' என மாற்றின் சான்ற என்னும் பெயரெச்சம் 'காலை' என்னும் பெயர் கொண்டு முடியாது நின்றவற்றும்.

3. முந்த முடிந்த உறுதிப்பொருட்கொள்கையைக் கடைப்பிடித்து காலம் என்ற பொருளுடைய 'கடைக்கோட்காலை' என்பதற்குத் 'திதரசுவுட்கொண்ட காலம்' எனப் பொருள் கோடல் பொருந்தாது.

*தீதாக உட்கொண்ட காலத்திலே; சிறந்தது ஏமஞ் சான்ற பயிற்றல் - அறம் பொரு ளின்பத்திற் சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏமஞ் சான்றவற்றை அடிப்படுத்தல் ; இறந்ததன் பயனே - யான் முற்கூறிய இல்லறத்தின் பயன் (எ-று).*

*'சான்றகாமம்' என்றார், நுகர்ச்சியெல்லாம் முடிந்தமை தோன்ற. இது கடையாயினார் நிற்கும் நிலையென்று உரைத்தற்குத் 'கடை' யென்றார்.*[1] *ஏமஞ்சான்றவாவன. வானப் பிரத்தமுஞ் சன்னியாசமும் :*[2] *எனவே, இல்லறத்தின் பின்னர் இவற்றின்கண்ணே நின்று பின்னர் மெய்யுணர்ந்து வீடுபெறுப என்றார். இவ்வீடுபேற்றினை இன்றியமையாது இவ்வில்லற மென்பது இதன் பயன். இது காஞ்சியாகாதோ வெனின் ஆகாது; (தங்குறிப்பினானன்றி நிலையாமை தானே வருவதுதான். சிறந்து நிலைபெற்று நிற்குமெனச் சான்றோர் கூறுதலும். அது தானேவந்து நிற்றலுங் காஞ்சி; இஃது அன்னதன்றிச் சிறந்த வீட்டின்ப வேட்கையால் தாமே எல்லாவற்றையும் பற்றறத் துறத்தலின் அகப்பொருட் பகுதியாம்) இதனானே, இவ்வோத்தினுட் பலவழியுங் கூறிய காமம், நிலையின்மையின்மேல் இன்பத்தை விளைத்தே வருதலிற் காஞ்சியாகாமை யுணர்க.*[3]

**" அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன**
**பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும்—விரும்பிப்**

1. நுகர்ச்சியெல்லாம் முடிந்தமை தோன்றச் சான்றகாமம் என்பது ஆசிரியர் சுருத்தாயின், நுகர்ந்து தீர்ந்த அந்நிலையினையே கடையாயினார் நிற்கும் நிலை யென்றுரைத்தற்குக் 'கடை – தீது' என்று கூறமாட்டார் ஆசிரியர். எனவே 'கடைக்கோட்காலை' என்ற தொடர்க்கு 'தீதாக உட்கொண்ட காலம்' என நச்சினார்க்கினியர் கூறும் பொருள் பொருந்தாதென்பது புலனாம்.

சிறந்தது – சிறந்த வீட்டின்பம். பயிற்றல் – அடிப்படுத்தல் ; அஃதாவது பலகாலும் மனமொழி மெய்கள் பயிலுமாறு ஒருநெறிப்பட்டு ஒழுகுதல்.

2. 'ஏமஞ்சான்ற' என்பது மக்களுக்கு அடைமொழியாதலின். அத்தொடர் பானப்பிரத்த சந்நியாச நிலைகளைக் குறித்ததென்றல் பொருந்தாது, இல்லறம் துறவறம் என இருநிலைகளே தமிழர்க்கு உடன் பாடாதலின், ஆரியர் கூறும் நரல்வகை ஆச்சிரமங்களைப் புகுத்திப் பொருள்கூறுதற்கு இந்நூற்பா இடக்தராமையுணர்க.

3. தம்குறிப்பினான் அன்றி நிலையாமைதானே வரும் எனச் சான்றோர் அறிவுறுத்துங் குறிப்பினது காஞ்சி என்னும் புறத்திணையெனவும், மனையறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தோர், சிறந்த வீட்டின்பவேட்கையால் தாமே எல்லாப் பொருள்களையும் பற்றறத்துறத்தல் அன்பின் ஐந்திணையொழுகலாற்றின் முடிந்த பயனாகிய அகப்பொருட் பகுதியாம் எனவும் நச்சினார்க்கினியர் உய்ந்துணர்ந்து கூறும் விளக்கம் மிகவும் பொருத்தமுடையதாகும்.

**பெறுநசையாற் பின்னிற்பார் இன்மையே பேணும்**
**நறுநுதலாள் நன்மைத் துணை"** **(நாலடி 381)**

இதனுள், அருந்ததியைப்போலுந் தமக்குப் பெரும் பொருள்களை நச்சுதலாலே இரப்பாரது வறுமையே விரும்பிப் பாதுகாத்து. அவர்க்கு வேண்டுவன கொடுக்கும் மகளிர், நாஞ் செல்கின்ற வானபிரத்த காருகத்திற்குத் துணையாவரெனத் தலைவன் கூறவே தலைவியும் பொருள்களிற் பற்றற்றாளாய் யாமுந் துறவறத்தின்மேற் செல்வாமெனக் கூறியவாறு காண்க. பிறவும் வந்துழிக் காண்க. *(51)*

***ஆய்வுரை :*** இது, கணவன் மனைவி இருவர்க்கு முரிய தோர் திறம் உணர்த்துகின்றது.

*(இ—ள்) மனைவாழ்க்கையினை நிகழ்த்திய கணவன் மனைவி என்னும் இருவரும் தாம் விரும்பிய நுகர்ச்சிகளை நுகர்ந்து மனநிறைவு பெற்று மனையறத்தினை முடிவுபோக நிறை வேற்றிய நிலையிலே தமக்குப் பாதுகாவலமைந்த பிள்ளைகளுடன் நிறைந்து அறத்தினை விரும்பிய சுற்றத்துடனே (உயிரினும்) சிறந்ததாகிய செம்பொருளை இடைவிடாது எண்ணிப்போற்றும் நன்னெறியிற் பழகுதல் இதுகாறும் மேற்கொண்டு நிகழ்த்திய மனையறத்தின் முடிந்த பயனாகும். எ—று.*

*காமம் —விரும்பிய நுகர்ச்சி. சான்ற—நிறைந்த கடைக் கோட்காலை - மேற்கொண்ட செயலின் முடிவாகிய நிறைவினைக் கொண்ட காலம். ஏமம்- பாதுகாவல் துவன்று—நிறைவு. புரிதல் விரும்புதல். சிறந்தது—உயிரினும் சிறந்ததாகிய செம்பொருள். சிறப்பென்னுஞ்செம்பொருள்' (திருக்குறள் 358) என்றார் தெய்வப் புலவரும் 'செம்பொருளாய சிவமெனலாமே' (2573) என வரும் திருமூலர் வாய்மொழி இங்கு ஒப்புநோக்கற்பாலதாகும். பயிற்றல்- இடைவிடாது சிந்தித்துப்போற்றுதல் இறந்தது—செய்த முடிவுற்றதாகிய மனையறம். ஒத்த அன்பினராகிய கணவனும் மனைவியும் மனையறக்கடமைகளைக் கடைபோக நிறைவேற்றியதன்பயன் உயிர்க்குயிராய்ச் சிறந்துள்ள அன்புருவாகிய செம்பொருளை இடைவிடாது சிந்தித்துத் தெளிந்து இன்புறுதலேயாகும் என்ற வாறு.*

**52. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.**

***இளம்பூரணம் :*** *இது, கற்பின்கண் வாயில்க ளாவாரை உணர்த்திற்று.*

*(இ - ள்.) பாட்டி யென்பது பாடினி யென்றவாறு.*

*தோழிமுதலாகச் சொல்லப்பட்ட பன்னிருவரும் வாயில் களாவார் என்றவாறு.* *(52)*

***நச்சினார்க்கினியம் :*** *இது, வாயில்களைத் தொகுத்து அவருந்துறவிற்கு உரிய ராவர் என்கின்றது.*

*(இ—ள்.) தோழி — அன்பாற் சிறந்த தோழியும்; தாய்— அவளே போலுஞ் செவிலியும்; பார்ப்பான்–அவரின் ஆற்றலுடைய பார்ப்பானும்; பாங்கன்— அவரேபோலும் பாங்கனும்—பாணன் - –பாங்குபட்டொழுகும் பாணனும்; பாடினி –தலைவி மாட்டுப் பாங்காயொழுகும் பாடினியும்; இளையர்— என்றும் பிரியா இளையரும்; விருந்தினர்–இருவரும் அன்பு செய்யும் விருந்தினரும்; கூத்தர்—தலைவற்கு இன்றியமையாக் கூத்தரும்; விறலியர் — தாமே ஆடலும் பாடலும் நிகழ்த்தும் விறலியரும்; அறிவர்-முன்னே துறவுள்ளத்தராகிய அறிவரும்; கண்டோர்- அவர் துறவு கண்டு கருணைசெய்யுங் கண்டோரும்; யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப- இந்தத் தலைவனுந் தலைவியும் பெற்ற துறவின்கண்ணே மனம் பிணிப்புண்ட சிறப்பினையுடைய வாயில்களென்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)* [1]

---

1. 'யாத்த சிறப்பு' என்றது, 'தலைவன் தலைவி என்னும் காதலர் இருவரது வாழ்க்கை வளத்துடன் பிரிவின்றிப் பிணிக்கப்பெற்று, உலக வாழ்க்கையில் ஒருவர்க்கொருவர் கொண்டுங் கொடுத்தும் அறிவுரையுதவி வாழ்தலாகிய சமுதாயச் சிறப்பினை.

தலைவனும் தலைவியும் சிறப்பென்னும் வீடுபேற்றிற்கு ஏதுவாகிய துறவின் கண்ணே மனம் பிணிப்புண்டு அவர்களைப் பின்பற்றித் துறவறநெறிநின்றொழுகும் சிறப்பினையுடையார் இவ்வாயில்கள் என்பது புலப்படுத்துவார், 'யாத்த சிறப்பின் வாயில்கள்' என்றார் நச்சினார்க் கினியர்.

*என்றது, இவர் அத்துறவிற்கு இடையூறாகாது முன் செல்வர், தாமும் அவரைப் பிரிவாற்றாமையி னென்பதாம். இதனைக் கற்புங் காமமும் (தொல். கற், 11) என்னுஞ் சூத்திரத்து முன்னாக வாயில்களைத் தொகுத்துக் கூறிய சூத்திரமாக வைத்தல் பொருத்த முடைத்தேனும் யாத்த சிறப்பினென்று துறவு நோக்குதலின் இதன் பின் வைத்தார். இதற்குக் கோப்பெருஞ்சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும் பொத்தியாரும் போல்வார் துறந்தாரென்று கூறும் புறச்செய்யுட்கள் உதாரணம் (எ-று.) (52)*

***ஆய்வுரை:*** *இது, கற்பின்கண் வாயில்களாவார் இவரெனத் தொகுத்துக் கூறுகின்றது.*

*(இ—ள்) தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகிய இப்பன்னிருவரும் தலைவன் தலைவியாகிய இருவரும் நிகழ்த்தும் மனையறத்தின்கண் அன்பினாற்பிணிக்கப் பெற்ற சிறப்பினையுடைய வாயில்கள் என்பர் ஆசிரியர் எ—று.*

*வாயில் என்னும் சொல் காதலர் இருவரும் ஒருவர் கருத்தினை மற்றவர்க்கு விளங்க எடுத்துரைக்கும் வழியாய்நின்று மனைவாழ்க்கை செம்மையுற நடத்துதற்கு உதவிபுரிவோர் என்னும் கருத்தில் இங்கு ஆளப்பெற்றது.*

**53. வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை**
**இடைச்சுர மருங்கில் தவிர்தல்[1] இல்லை**
**உள்ளம் போல உற்றுழி உதவும்**
**புள்ளியற் கலிமா[2] உடைமையான.**

***இளம்பூரணம்:*** *இது, வினைமுற்றி மீண்ட தலைவற் குரியதோர் மரபு உணர்த்திற்று.*

1. தவிர்தல் – தங்குதல்

2. தலைமக்கள் ஊர்ந்து நடத்தும் ஊர்திகளின் விரைவுக்கு அவர்தம் உள்ளத்தின் விரைவினையே உவமையாகச் சொல்லுதல் மரபு. இம்மரபுக்கு.

'உள்ளம்போல உற்றுழியுதவும்
புள்ளியற்கலிமா''

என்மரும் தொல்காப்பியத்தொடர் இலக்கியமாக அமைந்துள்ளமையும் இதன்கண் குதிரையின் உற்றுழியுதவுந்தன்மைக்கு உள்ளத்தினையும் விரைவு நடைக்குப் பறவையின்

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

'இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை' என்பது வழியில் இடையிற்றங்காது. இரவும் பகலுமாக வருமென்பது கருத்து. தங்குவானாயின் மனையாள்மாட்டு விருப்பின்றாம்.

**உ—ம் " இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தென" (அகம் 384)**

எனவரும், பிறவும் மன்ன.

***நச்சினார்க்கினியம்:*** இது பிரிந்து மீளுங்காற் செய்யத் தகுவதோர் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) வினைவயின் பிரிந்தோன் மீண்டு வரு காலை- யாதானுமோர் செய்வினையிடத்துப் பிரிந்தோன் அதனை முடித்து மீண்டுவருங் காலத்து; இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை. எத்துணைக்காதம் இடையிட்டதாயினும் அவ்விடையின் கணுண்டாகிய ஒருவரு வழியிடத்துத் தங்கிவருதலில்லை; உள்ளம் போல உற்றுழி உதவும்- உள்ளஞ் சேட்புலத்தை ஒருகணத்திற் செல்லுமாறு போலத் தலைவன் மனஞ் சென்றுற்றவிடத்தே ஒரு கணத்திற் சென்று உதவிசெய்யும்; புள் இயல் கலிமா உடைமையான- புட்போல நிலந்தீண்டாத செலவினையுடைய கலித்த குதிரை யுடையனாதலான் (எ-று.)

தேருங் குதிரையாலல்லது செல்லாமையிற் குதிரையைக் கூறினார், இஃது இடையில் தங்காது, இரவும்பகலுமாக வருதல் கூறிற்று. இதனை மீட்சிக்கெல்லை கூறிய சூத்திரங்களின் பின் வையாது, ஈண்டுத் துறவு கூறியதன் பின்னர் வைத்தார். இன்ப நுகர்ச்சியின்றி இருந்து அதன்மேல் இன்பமெய்துகின்ற நிலையாமை நோக்கியும், மேலும் இன்பப் பகுதியாகப் பொருள் கூறுகின்றதற்கு அதிகாரப்படுத்தற்கு மென்றுணர்க.

**"வேந்துவினை முடித்த காலை" (அகம். 104)**

---

பறத்தற்றொழிலினையும் உவமையாகச் சொல்லப் பெற்றுள்ளமையும் காணலாம். இத்தொல் காப்பியத் தொடரை அடிபொற்றியதே,

'மானுருவாக்கின்மனம் பூட்டினையோ'

எனவரும் சங்கச் செய்யுளாகும்.

இதனுள் வினைமுடித்த காலைத் தேரிளையர் செலவிற்கேற்ப ஊராது கோலூன்றின் உலகிறந்தன செலவிற்குப் பற்றாத குதிரைத் தேரேறி இடைச்சுரத்தில் தங்காது மாலைக்காலத்து வந்து பூச்சூட்டினை இனிதுசெய்தனை எந்தை வாழிய எனத்தோழி கூறியவாறு காண்க.

"இருந்த வேந்த னருந்தொழின் முடித்தென" என்னும் அகப்பாட்டினுள்,

**"புரிந்த காதலோடு பெருந்தேர் யானும்**
**ஏறிய தறிந்த தல்லது வந்தவாறு**
**நனியறிந் தன்றோ விலனே**
**இழிமி னென்றநின் மொழிமருண் டிசினே**
**வான்வழங் கியற்கை வளிபூட்டினையோ**
**மானுரு வாகநின் மனம்பூட்டினையோ**
**வுரைமதி வாழிநீ வலவ"** **(அகம்.384)**

என உள்ளம்போல உற்றுழி உதவிற்றெனத் தலைவன் கூறியவாறு காண்க.

நான்காவது கற்பியற்கு
ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த
காண்டிகையுரை முடிந்தது.

**ஆய்வுரை:** இது, வினைமுற்றிமீளும் தலைவற்குரியதோர் இயல்பு கூறுகின்றது.

(இ—ள்) ஆள்வினை மேற்கொண்டு தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் வினைமுடித்து மீளுங்காலத்து இடைச் சுரமாகிய வழியிடையே தங்கித் தாமதித்தல் இல்லை; தலைவி பின்பால் விரைந்து செல்லும் தனது உள்ளத்தைப் போன்று அதற்கு உற்றவிடத்து உறுதுணையாய் விரைந்து உதவும் இயல்பினையுடைய பறவையின் வேகத்தையுடைய மனச்செருக்கமைந்த குதிரையை ஊர்தியாகப் பெற்றுள்ளமையால் எ—று.

வினைவயிற்பிரிந்தோன் புள் இயற்கலிமா உடைமையான் இடைச்சுரமருங்கில் தவிர்தல் இல்லை என இயையும். தவிர்தல்- தங்குதல்; இளைப்பாறிக் காலந்தாழ்த்தல், 'இடைவழியில்

*தங்கிக்காலந்தாழ்த்தல் இல்லை எனவே வினைமுற்றியதலைவன் தன் ஆருயிர்த்தலைவியின் பிரிவாற்றாமையைத் தவிர்த்தற்பொருட்டு வினைமுடிந்த அந்நிலையிலேயே மனைவியைக்காண விரைந்து மீள்வன் என்பதாயிற்று. இதனால் தலைவன் தன் ஆருயிர்த்தலைவிபால் வைத்துள்ளபேரன்பின் திறத்தையும் அவளது ஆற்றாமைத்துயரினைப் போக்குதற்கு முந்தும் அவனது அருளின் நீர்மையினையும் ஆசிரியர் புலப்படுத்தியவாறு காண்க.*

* * *

தவிர்தல் – தங்குதல். மா – குதிரை. உள்ளம் போல உற்றுழி உதவும் மா, புள்ளியல்மா, கலிமா எனத்தனித்தனி இயையும். உள்ளம் – மனம். குதிரையின் விரைந்த செலவுக்கு மனத்தினையுவமையாகக் கூறும் மரபுண்மை 'மானுருவாக மனம் பூட்டினையோ' எனவரும் பாடலாற்புலனாம். புள்இயல்மா – பறவை போன்று நிலத்திற்படியாத செலவினையுடைய குதிரை. கவிமா – மனச் செருக்கால் துள்ளிச் செல்லும் இயல்பினையுடைய குதிரை.

# தொல்காப்பிய நூற்பா



| | | நூற்பா எண் | பக்க எண் |
|---|---|---|---|
| *1.* கற்பெனப் படுவது | ... | *18* | *1* |
| *2.* கொடுப்போர் இன்றியுங் | ... | *26* | *7* |
| *3.* மேலோர் மூவர்க்கும் | ... | *44* | *9* |
| *4.* பொய்யும் வழுவும் | ... | *44* | *12* |
| *5.* கரணத்தின் அமைவது | ... | *14* | *17* |
| *6.* அவனறி வாற்ற | ... | *3* | *59* |
| *7.* புணர்ந்துடன் போகிய | ... | *38* | *94* |
| *8.* தோழியுள் ளுறுத்த | ... | *34* | *97* |
| *9.* பெறற்கரும் பெரும் பொருள் | ... | *43* | *98* |
| *10.* புல்லுதல் மயக்கும் | ... | *40* | *121* |
| *11.* கற்புங் காமமும் | ... | *17* | *133* |
| *12.* கழிவினும் நிகழ்வினும் | ... | *19* | *137* |
| *13.* சொல்லிய கிளவி | ... | *28* | *140* |
| *14.* இடித்துவரை நிறுத்தலும் | ... | *8* | *141* |
| *15.* உணர்ப்புவரை இறப்பினும் | ... | *9* | *143* |
| *16.* புலத்தலு மூடலு | ... | *39* | *145* |
| *17.* பரத்தை மறுத்தல் | ... | *36* | *147* |
| *18.* அவன்குறிப் பறிதல் | ... | *4* | *149* |
| *19.* காமக் கடப்பினுட் | ... | *19* | *150* |
| *20.* அருண்முந் துறுத்த | ... | *4* | *152* |
| *21.* களவுங் கற்பும் | ... | *16* | *154* |
| *22.* அலரில் தோன்றும் | ... | *2* | *156* |
| *23.* கிழவோன் விளையாட் | ... | *24* | *157* |

| | | | |
|---|---|---|---|
| *24.மனைவி தலைத்தாட்* | ... | *45* | *159* |
| *25.மனைவி முன்னர்க்* | ... | *46* | *160* |
| *26.முன்னிலைப் புறமொழி* | ... | *32* | *162* |
| *27.தொல்லவை உரைத்தலும்* | ... | *35* | *163* |
| *28.நிலம் பெயர்ந்துரைத்தல்* | ... | *7* | *165* |
| *29.ஆற்றது பண்பும்* | ... | *10* | *167* |
| *30.உழைக்குறுந் தொழிலுங்* | ... | *37* | *170* |
| *31.பின்முறை ஆகிய* | ... | *30* | *171* |
| *32.தாய்போற் கழறித்* | ... | *5* | *174* |
| *33.அவன்சோர்வு காத்தல்* | ... | *11* | *176* |
| *34.எண்ணரும் பாசறை* | ... | *14* | *178* |
| *35.புறத்தோ ராங்கட்* | ... | *41* | *181,182* |
| *36.காமநிலை யுரைத்தலும்* | ... | *21* | *184* |
| *37.எல்லா வாயினும்* | ... | *12* | *187* |
| *38.அன்புதலைப் பிரிந்த* | ... | *6* | *189* |
| *39.தற்புகழ் கிளவி* | ... | *29* | *190* |
| *40.கிழவி முன்னர்த்* | ... | *23* | *192* |
| *41.மொழிஎதிர் மொழிதலும்* | ... | *49* | *194* |
| *42.குறித்தெதிர் மொழிதல்* | ... | *25* | *196* |
| *43.துன்புறு பொழிதினும்* | ... | *31* | *196* |
| *44.செலவிடை அழுங்கல்* | ... | *27* | *198* |
| *45.கிழவி நிலையே* | ... | *22* | *199* |
| *46.பூப்பின் புறப்பா* | ... | *42* | *201* |
| *47.வேண்டிய கல்வி* | ... | *52* | *205* |
| *48.வேந்துறு தொழிலே* | ... | *53* | *207* |
| *49.ஏனைப் பிரிவும்* | ... | *13* | *209* |
| *50.யாறுங் குளனும்* | ... | *30* | *210* |
| *51.காமஞ் சான்ற* | ... | *20* | *213* |
| *52.தோழி தாயே* | ... | *33* | *216* |
| *53. வினைவயிற் பிரிந்தோன்* | ... | *51* | *271* |


* * *